



150வது ஆண்டு நிறைவு சிறப்பு மலர்

Special Souvenir to Commemorate 150 Years

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

Uduppiddy American Mission College

1852 2002





உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவு மலர்

Uduppiddy American Mission College

150th Anniversary Souvenir

பதிப்பாசிரியர்கள் :

கிருஷ்ணபிள்ளை நடராசா

கந்தையா நீலகண்டன்

Editors:

Krishnapillai Nadarajah

Kandiah Neelakandan

வெளியீடு அனுசரணை:

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
(கொழும்புக் கிளை)

Publication Sponsored by :

Uduppiddy American Mission College
Past Pupils Association
(Colombo Branch)

LIGHT DISPELS DARKNESS

1852 2002

ISBN No. 955 - 8808 - 00 - 8



கல்லூரிக் கீதம்

இராகம்: கல்யாணி *தாளம்: ஆதி*

பல்லவி

வாழிய வாழிய வாழியவே உடுப்பிட்டி
அமெரிக் கன்மிஷன் கல்லூரி - வாழிய

அனுபல்லவி

ஏழிசை போலவும் இன்றமிழ் போலவும்
இசைபல திசைதொறும் இசைவுற - வாழிய

சரணம்

ஓது கலைத்துறை யோடுவிஞ் ஞானமும்
ஓங்கு முயிர்நலந் தாங்குமெய்ஞ் ஞானமும்
நாத இசையொடு நங்கள் சமூகமும்
நாடும் வளம்பெறப் பீடும் பெருக்கி - வாழிய

உத்தம ஒழுக்கமும் உண்மை விழுப்பமும்
உயிரினும் மேலாய் உன்னு தகவதும்
சுத்த மனத்தொடு தொண்டுசெய் ஊக்கமும்
சோம்பலில் லாவுழைப் போம்பலும் பெருக்கி - வாழிய

தன்னலம் நீக்கி இன்னலைப் போக்கித்
தாய்த்திரு நாட்டினுக் காய்த்தினம் வாழ்ந்திடும்
உன்னத வீரரை ஓய்விலா தாக்கி
ஊழிதொ றூழி ஊழிதொ றூழி - வாழிய



அர்ப்பணம்

நூற்றைம்பது ஆண்டுகளில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு - உயர்ச்சிக்கு உதவியவர்கள், காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் பலர்.

வேதனைகளும், சோதனைகளும் மிகுந்த கால கட்டங்களிலும் தியாக உணர்வுடன் கல்லூரிக்கு அளப்பரிய பணியாற்றிய செம்மல்கள் பலர். கல்லூரியின் அதிபர்களாக, துணை அதிபர்களாக, ஆசிரியர்களாக கல்விப் பணியாற்றிய அறிஞர்கள், கல்லூரியின் மாணவ சமுதாயத்தின் பலதலைமுறைகளின் உள்ளங்களில் அணையாத விளக்குகளாக ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் தெய்வங்கள்.

இப்படி இக்கல்லூரியின் 150 ஆண்டுகால வரலாற்றின் பங்காளிகளாகிவிட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி
இம்மலரை அர்ப்பணிக்கிறோம்.





LIGHT DISPELS DARKNESS

1852 2002

இருளை அகற்றும் ஒளியாக விளங்கிவரும் எங்கள் அறிவாலயத்தின் நூற்றைம்பது ஆண்டு வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. எமது கல்லூரி நூற்றைம்பது, வருடங்களைத் தாண்டி பல துறைகளில் சாதனைகள் நிலைநாட்டி பொலிவுற்று விளங்குகின்றது.

ஒரு கல்விக் கூடத்தின் 150ஆண்டு வரலாற்றினை எதிரொலிக்கும் மலராக இதனைப் படைக்க வேண்டும் என முயன்றோம். எங்களுக்குக் கிடைத்த மட்டுப்படுத்த வசதிகளுடனும் தகவல்களுடனும், பலரின் உதவியுடனும் ஆதரவுடனும் பல தலைமுறைகளுக்கு அறிவினை ஊட்டிய அமெரிக்கன் மிஷன் கல்லூரி அன்னைக்கு இம்மலரினைச் சமர்ப்பிப்பதில் மன திருப்திகாண முயன்றிருக்கின்றோம்.

1987 வடமராட்சி படையியக்க நடவடிக்கையினால் கல்லூரியின் வரலாற்று ஆவணங்கள் முற்றாக எரிந்து நாசமாகின. அயல் வீடுகளில் பேணிப்பாதுகாக்கப்பட்ட ஆவணங்கள் கூட அழிவுக்குள்ளாயின. இந்நிலையில் வரலாற்றினை வெளிக்கொணர்வதற்கு தடங்கல்கள் ஏற்பட்டது மறுக்க முடியாத உண்மை. உடுப்பிட்டி தென்னிந்தியத் திருச்சபை, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி போன்ற நிறுவனங்களிலிருந்து ஒருசில ஆதாரங்கள் பெறப்பட்டன. தற்பொழுது நூறு வயதுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சில பெரியார்களின் மூலமும் தகவல்கள் எடுக்கப்பட்டன. கல்லூரியின் 1950, 1951ம் ஆண்டு வருடாந்த சஞ்சிகையிலிருந்தும் சில தகவல்கள் பெறப்பட்டன. கல்லூரியின் பழைய மாணவர்கள் பலரை விசாரித்து சில தகவல்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. முன்னாள் அதிபர் திரு. எஸ். செல்லத்துரை அவர்களின் இல்லத்தில் புகைப்படப் பிரதிகள் சில பெற்றுக்கொள்ளப்பட்டன. உண்மையில் இம்மலரை வெளியிடும் முயற்சி கத்தி முனையில் நடப்பது போலவே இருந்தது. கொழும்பு பழைய மாணவர் சங்கம் சில தகவல்களைத் திரட்டி உதவியது.

கல்லூரியின் நூற்றைம்பது ஆண்டு நிறைவினை நினைவு கூர்ந்து எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை அரசாங்கம் விசேட முத்திரை வெளியிடுகின்ற இச்சந்தர்ப்பத்தில் உயர்நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு சி. வி. விக்னேஸ்வரன் அவர்களை பிரதம விருந்தினராகக் கொண்டு நடக்கின்ற 150ம் ஆண்டு நிறைவு விழாவில் இந்த விசேட மலரும் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் அனுசரணையுடன் வெளியிடப்படுகின்றது.

மேலும் பல ஆண்டுகள் எங்கள் கல்லூரியின் புனிதப் பணி தொடர எல்லாம் வல்ல இறைவனை வணங்கி எங்கள் கல்லூரிஅன்னையின் பாதாரவிந்தங்களில் இம் மலரினை நன்றியுணர்வோடு சமர்ப்பித்து நிற்கின்றோம்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி குடும்பத்தின் சார்பில்

உடுப்பிட்டி
19-10.2002

பதிப்பாசிரியர்கள்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

உள்ளடக்கம் Contents

A ஆசியுரைகள் - Messages

நல்லை ஆதீன முதல்வர்	A 8
யாழ். பேராயர்	A 9
பிரதம விருந்தினர்	A 10
Hon. Minister of Human Resources Development, Education & Cultural Affairs	A 11
கல்லூரி முதல்வர்	A 12
கல்வியமைச்சு மேலதிகச் செயலாளர்	A 13
வ-கி மாகாண கல்வியமைச்சுச் செயலாளர்	A 14
வ-கி மாகாண கல்விப் பணிப்பாளர்	A 15
வ-கி மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்	A 16
வ.கி. மாகாண முன்னைநாள் கல்விப் பணிப்பாளர்	A 17
வ-கி மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர்	A 18
கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர்	A 19
தலைவர், பழைய மாணவர் சங்கம்	A 20
தலைவர், பழைய மாணவர் சங்கம் (கொழும்புக் கிளை)	A 21
தலைவர், பழைய மாணவர் சங்கம் (கனடாக் கிளை)	A 22
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்	A 23
பண்டிதர் க. முத்துவேலு	A 24
செல்வி சீதா வேலுப்பிள்ளை	A 25
H. E. Ambassador for U.S.A. in Sri Lanka	A 26

B கல்லூரி வரலாறும் அனுபவங்களும் - History and Experences of the College

*	உடுப்பிட்டி அ.மி. கல்லூரி - வரலாற்றுச் சுருக்கம் - கி. நடராசா	B 1
*	சில வரலாற்றுத் தகவல்கள் - யாழ். பேராசிரியர் கலாநிதி S. ஜெபநேசன்	B 9
*	திரு. K. T. ஜோன் அவர்களும் கல்லூரியும் - இ. பஞ்சநாதன்	B 11
*	அ. மி. கல்லூரி என் நினைவில் - செல்வி சீதா வேலுப்பிள்ளை	B 14
*	சிரஞ்சீவியாக வாழும் என் கல்லூரி - ந. அனந்தராஜ்	B 18
*	என்னை ஆளாக்கிய அ. மி. கல்லூரி - இ. வே. செல்வரட்னம்	B 23
*	என்னை வளர்த்த பாடசாலை இப்படி மாறிடுமா? - வை. சொர்ணலிங்கம்	B 27
*	அ..மி. கல்லூரி நினைவலைகள் - உடுவை எஸ். தில்லைநடராஜா	B 29
*	இளமை குன்றாதென்றுமுள ஏ.எம்.சி. - வ அழகலிங்கம்	B 32
*	'இருளை அகற்றும் ஒளியிலிருந்து' - சில அனுபவக் கீற்றுகள் - கந்தையா நீலகண்டன்	B 35
*	உ.அ.மி. கல்லூரியில் எனது அனுபவங்கள் - ச. தேவதாசன்	B 40
*	உ.அ.மி. கல்லூரியும் சாரணீயமும் - சி. கனகசபாபதி	B 45
*	'இருளை அகற்றிய ஒளி' - அதிபர் சிதம்பரப்பிள்ளை - ச. மதிரூபன்	B 48
*	உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும் திரு. ந. அனந்தராஜ் அவர்களும் - சி. நந்தகுமார்	B 53
*	கல்லூரி வரலாற்றில் புதுயுகம் - செல்லத்துரை சுதர்சன்	B 55
*	அறிவுப்பசி தூண்டிய உ.அ.மி. கல்லூரி - சதானந்தன் சொலமன்	B 60
*	இடுக்கண் வரத் தகர்ந்தவள் மிடுக்குடன் மீள நிமிர்ந்தனள்! - கனக. மனோகரன்	B 63
*	உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும், கணிதமும் - எஸ். தில்லையம்பலம்	B 64
*	Teaching of English at U.A.M.C. - P. Sinnathamby	B 66
*	Thanks to Amercan Missionaries - Kandiah Vallipuranathan	B 68
*	The Teachers who taught me..... - Dr. M. Kopalasuntharam	B 69
*	My Memorable days at the U.A.M.C. - M. Kanapathipillai	B 71

* Going down the Memory Lane - Kanapathippillai Mahadeva B 73
* Recollection of my early days at A.M.C. - K. Mahalingam B 77
* கல்லூரிக் கீதம் - ஒரு நயப்புரை - க. நவரத்தினம் B 80
* பழைய மாணவர் உள்ளத்திலிருந்து.... - திருமதி. இ. தில்லையம்பலம் B 83
* 150 years of Uduppiddy A. M. C. B 85
* வரலாறு கூறும் படங்கள்

C புகழ் பூத்த பழைய மாணவர்கள் - ILLUSTRIOUS SONS

* பேராசிரியர் அழகையா துரைராசா C 2
* Hon. T. Ramalingam M.P. C 7
* Mr. K. Kandiah O.B.E. C 10
* Hon. Justice P. Sriskandarajah C 12
* Mr. Arumugam Arulpiragasam C.C.S. C 13
* படங்களில் சமீபகால நிகழ்வுகள்

D சிறப்புக் கட்டுரைகள் - Special Articles

* திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோழப் பேரரசிற் சமயமும் அரசியலும் - பேராசிரியர் சி. பத்மநாதன் D 1
* தனியார் உயர் கல்வியின் உலகளாவிய எழுச்சி - பேராசிரியர் சோ. சந்திரசேகரன் D 9
* ஆரம்பக்கல்வி - அன்றும் இன்றும் - ஆ. விமலராஜா D 12
* விமர்சன நோக்கில் எண்பதுகளுக்கு மேற்பட்ட ஈழத்து நூல்கள் - கலாநிதி செ. யோகராசா D 16
* மிதக்கும் நாணயமாற்றுமுறை - ஒரு கோட்பாட்டு ரீதியான விளக்கம் - த. இராஜேஸ்வரன் D 21
* சிந்தனை செய் மனமே - கலாநிதி ப. சரவணகுமார் D 26
* பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் - ஒரு நோக்கு - பேராசிரியர் க. அருணாசலம் D 28
* கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள் - கலாநிதி துரை, மனோகரன் D 38
* தமிழ்த் திரைப்பாடல்களில் வைரமுத்து - சு. முரளிதரன் D 42
* தேசவழமைச் சட்டத்தின் குறை நிறைகள் - சட்டத்தரணி கந்தையா நீலகண்டன் D 47
* Mankind - Past, Present and Future - Prof. K. D. Arulpragasam D 54
* Eight Flowers of Offering - V. Kamalanathan
* சாதனை படைத்த மாணவர்கள் D 58

E மாணவர் ஆக்கங்கள் - Contributions by Students

* Where are they going? - K. Senthuran E 1
* ஞாயிறு எம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் - த. கௌரீஸ்வரன் E 3
* எமது கல்லூரி - வி. ஆதுரன் E 4
* படங்கள் - இன்றைய மாணவ தலைமை & விளையாட்டுத்துறை

F பழைய மாணவர் சங்க நடவடிக்கைகள்

* கனடாக்கிளை பழைய மாணவர் சங்கம் - தோற்றமும் பணிகளும் F 1
* Uduppiddy A.M.C. Past Pupils' Association (Colombo Branch) F 6
* நினைவில் மறவா நிகழ்வுகள் F 9
* Staff 2002
* நன்றி நவிலல்

அட்டை-முன்புறம்: - K. T. ஜோன் நினைவுக் கட்டிடத் தொகுதியும், சரஸ்வதி சிலையும் செயலகக் கட்டிடமும் முன்வாசலும். (கல்லூரிக் கொடி பின்னணியில்)

பின்புறம்: வகுப்புகள் நடந்த கொட்டகைகள்

Cover: Front : K. T. John Memorial Block Saraswathie Statute and Secretariat and front entrance in the background of the College Flag.
Back: Cottages in which classes were conducted

LIGHT DISPELS DARKNESS

1852 2002

உ

சிவமயம்

குருபாதம்



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை

தொலைபேசி: 021-2222870

அருளாசிச் செய்தி



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 150வது ஆண்டு விழாவினை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். தமிழரின் சொத்து கல்விக்கு பணியாற்றிக் கொண்டிருக்கும் பாடசாலைகளும் அமெரிக்க மிஷன் பாடசாலையும் தன்நிகரில்லா பணியாற்றியமை அனைவருடைய நன்மதிப்பை பெற்றுள்ளது.

மனித வாழ்வை உயர்வடையச் செய்வது கல்வியாகும். இக்கல்வியை இளமையில் கற்றுக் கொள்வது தர்மமாகும். கல்வி உடையவனுடைய வாழ்வு உயர்நிலையை அடைகிறது.

இக்கல்லூரி மூலமாக வெளிவந்த மாணவ சமூகத்தினர் அன்றும் இன்றும் பல துறைகளில் இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் சாதனை படைத்தமை பெருமைக்குரியது.

150 ஆண்டுகள் இக்கல்லூரி பணியாற்றியமை வரலாற்று பெருமைக்குரியதாகும். இப்பணிக்காக சேவை செய்த அதிபர், ஆசிரியர் அனைவரையும் வாழ்த்துகின்றோம். இக்கல்லூரி கல்விக்கும் வேறு பணிகளுக்கும் சேவையாற்ற இறைவன் அருள் புரிவாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்







1852 2002

Jaffna Diocese of the Church of South India

(Inaugurated 1947)

The American Ceylon Mission

(Established 1816)

Bishop's House
Vaddukoddai
Sri Lanka (Ceylon)

Jaffna Office:
41, 4th Cross Street
Jaffna
Sri Lanka
Jaffna T. Phone
+94-21-2029

யாழ். பேராயர் அதி. வண. எஸ். ஜெபநேசன் அவர்களின் வாழ்த்து



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியினை அதனுடைய 150-வது வருட நிறைவின் போது வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரி நன்றியுணர்வையும், சர்வசமய சன்மார்க்கத்தையும் பேணி வளர்ப்பது கண்கூடு. பல கல்லூரிகள் 1960 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமது பெயர்களை மாற்றிக் கொண்டன. ஆனால் இன்றுவரை அமெரிக்கன் மிஷன் என்ற பெயரை தாங்கி ஓங்கி வளர்ந்து கெம்பீரமாக இந்த கல்லூரி நிற்கின்றது.

அதுமட்டுமன்றி இங்கு கற்ற மாணவர்கள் சமயங்களுக்கிடையான நல்லுறவையும் பேணி வளர்த்திருக்கின்றனர். முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜாவிடம் இந்த சமரச நோக்கினை நான் பரக்க பரக்க கண்டேன். அரசாங்கம் கல்லூரிகளை சுவீகரித்த பின்னரும் திரு. எஸ். எஸ். செல்லத்துரை அங்கு மிகு நீண்ட காலமாக அதிபராக பணியாற்றி வந்தார். ஆகவே உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிக சிறப்புக்களை கொண்டது என்பது மறக்க முடியாத உண்மையாகும்.

இங்கு காணப்படும் கட்டுப்பாடும் ஒழுங்கும் சர்வசமய சமரச நோக்கும், மிஷனரிமாரின் பணி ஒன்றுமே வீண்போகவில்லை என்பதனை எடுத்துக் காட்டுகின்றன.

கல்லூரி அதிபருக்கும், நினைவு மலர் ஆசிரியர்களுக்கும் இன்றைய ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்

எஸ். ஜெபநேசன்
பேராயர்

LIGHT DISPELS DARKNESS

1852 2002



150ம் ஆண்டு பூர்த்தி விழாப் பிரதம விருந்தினர் உயர் நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு க. வி. விக்னேஸ்வரன் அவர்களின் ஆசியுரை

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் 150வது வருட விழாக் கொண்டாட்டங்களில் என்னையுங் கலந்து கொள்ளுமாறு அழைத்த கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் அலுவலர்களுக்கு என் மனமார்ந்த நன்றி முதற்கண் உரித்தாகுக.

வயதில் கூடியவர்களிடந்தான் ஆசி பெறுவது வழக்கம். அந்த வித்தில் 167 வருடங்களுக்கு முன் 1835ம் ஆண்டில் பிறந்த கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவனான எனக்கு அதை உங்கள் கல்லூரிக்கு வழங்குந் தகுதி இருக்கின்றது என நம்புகிறேன்.

இலங்கைத் தமிழர்கள் திரைகடல் கடந்து, வானூர்தி பவனி சென்று இன்றைய உலகில் பல பாகங்களிலும் பொறுப்புடன் வசித்து வருகிறார்கள். எந்தத் தொழிலும் கைவரப் பெற்றவர்கள் அவர்கள். சீனர்கள் சில்லறை வியாபாரிகளாக உலகை வலம் வந்தார்கள். யூதர்கள் பெரு வியாபாரிகளாக ஆங்காங்கே சென்று தம்மை நிலைநிறுத்திக் கொண்டார்கள். ஆனால் பல்தொழில் விற்பன்னர்களாக, அறிவாற்றல் மிக்கவர்களாக, ஆன்மிகத்தை மறக்காதவர்களாக ஆழிசூழ் உலகின் பல பாகங்களிலும் இலங்கைத் தமிழ் மக்கள் இன்று சிறப்புடன் வசிதது வருகின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கு அவர்கள் மண்ணில் கிடைத்த கல்வியறிவே. கல்வி என்பது உம் தமிழ் மக்கள் விரும்பி வரித்துக் கொண்ட விலை மதிக்க முடியாத பொக்கிஷம். தலைசிறந்த ஆசிரியர்கள் தமது ஒளி மிகுந்த ஞானக் கதிர்களினால் எங்கள் இருண்ட உள்ளக் கமலங்களை மலரச் செய்து கல்வி நறுமணம் வீச வைத்ததால்தான் உலகெங்கணும் எந்த வேலையையுஞ் சிறப்பாகச் செய்யும் ஆற்றலை நாம் பெற்றுள்ளோம். அதை நினைவுறுத்துவதாகவே உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியினர் **"ஒளி இருளை அகற்றுகிறது"** என்ற மகுட வாசகத்தை உருவாக்கியுள்ளனர் போலும்.

150 வருட காலம் கல்வி ஒளி பரப்பி வந்த உங்கள் கல்லூரி மேன்மேலும் இக் கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்து வர வேண்டும் என்று வாழ்த்துகிறேன். ஆரம்ப காலத்தைய அமெரிக்கன் மிஷனரிமார்களின் பங்களிப்பை இன்று நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவோமாக! எவ்வளவு தான் நுண்ணறிவு பெற்றவர்களாக எங்கள் தமிழினம் இருந்திருந்தாலும் கல்வி என்ற ஒளியை எம் மத்தியில் அம்மிஷனரிமார்கள் ஏற்றாத பட்சத்தில் நாங்கள் வன்பாற்கண் வற்றல் மரந் தளிர்த்தாற் போன்று பயன் அற்றவர்களாக இருந்திருப்போம். ஆன்மீக அடிப்படையில் அறிவுக் கதிர் பரப்பி அனைவரையும் வாழ வைக்கும் அருள் விருட்சமாக அமெரிக்கன் மிஷன் கல்லூரி உடுப்பிட்டியில் எஞ்ஞான்றும் நிலைத்து நிற்க எண்குணத்தான் என்றுந் துணைபுரிவானாக!

நீதியரசர் தனியறை
உயர் நீதிமன்றம், கொழும்பு 12.

க. வி. விக்னேஸ்வரன்
நீதியரசர்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍ය

மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர்

Minister of Human Resources Development, Education & Cultural Affairs



American Mission in Sri Lanka and the other Religious Missionaries have rendered yeoman service to this country in the educational sphere.

Uduppiddy American Mission College is a leading school in Vadamaradchy well known for its high standards for 150 years. It has a proud record of having prepared several generations of students to be disciplined, honourable and respected citizens.

The contributions made by the Uduppiddy American Mission College in teaching English has been remarkable and admired by many and in particular those hailing from Vadamaradchy.

Since 1962 this College has been a government school. Although it has suffered badly due to unfortunate incidents in the eighties and nineties, all the possible steps are being taken to restore it to its original glory.

On this historic occasion as the Minister in Charge of Education, I am pleased to send the best wishes of our Government to the Principal. Staff, students and past pupils of the College through the Souvenir which is being sponsored by the Colombo Branch of the College's Past Pupils' Association, with dedication and gratitude to their alma mater.

Karunasena Kodituwakku
Minister of Human Resources Development,
Education and Cultural Affairs.

LIGHT DISPELS DARKNESS

1852 2002

கல்லூரி முதல்வரின் செய்தி



ஆரம்பத்தில் சுதேசமொழிப் பாடசாலையாகவும், ஆங்கில மொழிப் பாடசாலையாகவும் ஒரே வளவிற்குள் இயங்கி, காலப்போக்கில் அமெரிக்கன் மிஷன் கல்லூரி என்ற நாமத்தைப் பெற்று, பல கல்வியியலாளர்களையும், நற்பிரஜைகளையும் உருவாக்கிய நம் அன்னைக்கு நூற்றிஐம்பது வயது பூர்த்தியாகிவிட்டது. காலவளர்ச்சியைத் திரும்பிப்பார்க்கின்றபோது நாம் பெற்ற அரிய சாதனைகள், ஏற்பட்ட இடையூறுகள் என்பன வரலாற்று முறையில் வெளிக்காட்டும் சாதனமாக இம்மலர் அமைகின்றது. 1987 ஆம் ஆண்டு படை இயக்க நடவடிக்கைகள், பின் ஏற்பட்ட அகதிவாழ்வு, இடப்பெயர்வு, அவலங்கள் மத்தியில் கல்வி நடவடிக்கை போன்ற காரணங்கள் எம் கல்லூரியை மட்டுமன்றி குடாநாட்டிலுள்ள எல்லாக் கல்லூரிகளையும் பாதித்தது.

"இச்சை கொண்ட பொருளெல்லாம் இழந்துவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே."

என்ற பாடல் வரிகள் எமக்குக் தெம்பூட்டி, தற்காலிக கொட்டகைகளில் கல்விப்பெரும் பொருள் இடையீடு இன்றி மாணவர்க்கு வழங்கப்படுகின்றது. அண்மைக் காலத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் எமது கல்லூரி வளர்ச்சிக்கு பாரிய திட்டத்தின் ஊடாக தாராள மனப்பாங்குடன் உதவி அளித்துள்ளது. கல்லூரி வளர்ச்சியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி, யாழ் மாவட்டப் பாடசாலைகளின் பிரதம பொறியியலாளர் திரு. ஜி. சிவபாலன் போன்றோருக்கு எமது கல்லூரித்தாய் நன்றி உடையவளாவாள். தற்போதைய வளர்ச்சியில் திணைக்கள அதிகாரிகள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யாவும் ஒன்றுசேர்ந்து உழைத்து வருகின்றனர். மீண்டும் பழைய நிலைமைக்கு புத்துயிர் அளித்து, எமது கல்லூரி வானென ஒளிபெறுமென எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிபர்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
Ministry of Human Resources Development, Education & Cultural Affairs

"ඉසුරුපාය", ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල.
"இசுருபாயா", ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை, பத்தரமுல்ல.
"Isurupaya" Sri Jayawardhanapura Kotte, Battaramulla.

உன்னருளால் உயர்ந்தோம்



வசதி வாய்ப்புக் குறைந்த ஊரவர் பலரின்
அறிவுப்பசிக்கு விருந்தளித்த அம்மா நீ!

உன் உன்னத விருந்தை உண்டு உயர்ந்திட
ஊர்மக்களுடன் அயலூராரும் இணைந்து வந்தனர்.

உன்னை நாடிவந்தோர் எல்லோரும்
உன்னருளால் உயர்ந்து வாழ்கின்றோம்.

உயர்ந்த கல்விச்செல்வத்தினை உள்ளம் குளிரத்தந்து
சிறந்து நல்லொழுக்கத்தை சொல்லி நல்லவராக்கி

உயர் வீரத்தை எம்முள் விதைத்து
நேர் வழியையும் காட்டித்தந்தாய் அம்மா

காரியம் பலதையும் சாதிக்க வைத்தாய்
காலமெல்லாம் உன்புகழ் பாடவும் வைத்தாய்

நன்றியுடன் வாழ்த்தி மகிழும் உன் மாணவருள்
நானும் ஒருவன்.

S. Thillainadarajah

(உடுவை எஸ். தில்லைநடராஜா)
மேலதிகச் செயலாளர்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
උතුරු - නැගෙනහිර පළාත් අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු සහ ක්‍රීඩා අමාත්‍යාංශය
MINISTRY OF EDUCATION, CULTURAL AFFAIRS & SPORTS, NORTH - EAST PROVINCE

ஆசிச் செய்தி



யாழ்/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி தனது கல்விப் பயணத்தில் நீண்டதோர் வளமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அதன் வரலாறு வடமாகாணத்தில் அமெரிக்கன் மிஷனரிமார் தமது கல்விப் பணியைத் தொடர்ந்ததிலிருந்து ஆரம்பமானது. இப்பாடசாலை உடுப்பிட்டி மக்களின் பக்திக்குரிய கல்விப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாப்பதோடு இன்று சிறந்ததோர் கல்விக்கூடமாக மிளிர்வதைக் கண்டு பெருமகிழ்வடைகின்றேன். அதன் உயர்வுக்கும், வளர்ச்சிக்கும் ஊன்றுகோலாக நின்றுழைத்து வந்த - வருகின்ற கல்வியியலாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் இவ்வேளையில் பாராட்டுகின்றேன்.

150வது அகவையில் காலடி வைக்கும் இக்கல்லூரி கடந்த காலங்களின்போது பல சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்து, இன்று மீண்டும் நிமிர்ந்து நிற்கின்றது.

பேராசிரியர் அழகையா துரைராஜா போன்ற அறிவியல் அறிஞர்களைத் தோற்றுவித்த இக்கல்லூரி வடமராட்சியில் பல கல்விமான்களையும், அறிஞர் பெருமக்களையும் உருவாக்குவதற்குக் காரணமாக இருந்துள்ளது.

இக்கல்லூரி தனது 150 ஆவது அகவை நிறைவைப் பூர்த்திசெய்யும் வேளையில் இக்கல்லூரியில் வெளியிடப்படும் நூலும், முத்திரை வெளியீடும், அவை தொடர்பான வைபவங்களும் சிறப்பாக நடைபெற என் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. சண்முகலிங்கம்
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.

LIGHT DISPELS DARKNESS

1852 2002

மாகாண கல்வித் திணைக்களம் வடக்கு-கிழக்கு மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව උතුරු - නැගෙනහිර පළාත
Provincial Education Department North-East Province

ஆசிச் செய்தி



ஒரு கிராமத்து மக்களின் பண்பாட்டு விழுமியங்களை அங்கே உள்ள பாடசாலைகளின் வளர்ச்சியைக் கொண்டு அளவிட்டுக் கொள்ளலாம்.

அந்த வகையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி உடுப்பிட்டிக் கிராமத்தில் மட்டுமல்ல அதனைச் சூழ்ந்துள்ள ஏனைய கிராமங்களிலும் வாழ்கின்ற மக்களிடையே கல்வி, பண்பாட்டு விழுமியங்களை வளர்த்து வருகின்றது.

ஒரு கல்விச் சாலையின் வளர்ச்சியானது அது சார்ந்த கிராமத்து மக்களின் உணர்வுபூர்வமான எழுச்சியின் பிரதிபலிப்பே என்பதை கல்விச் சமூகம் இன்று உணர்ந்துள்ளது.

அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் காலூன்றிய வேளையில், கல்வியூடாகத் தமது மதத்தைப் பரப்புவதற்காகக் கல்விச் சாலைகளைக் கட்டியபோதும், அது வேறொருவகையில் யாழ்ப்பாண மக்களின் கல்வி வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்திருந்தது.

யாழ்ப்பாணத்தில், வட்டுக்கோட்டையிலும், உடுவிலும், உடுப்பிட்டியிலும் உயர்தர பாடசாலைகளை அமைத்து அந்தப் பிரதேச மக்களின் கல்வி அபிவிருத்தியில் அமெரிக்கன் மிஷனரிமார் ஆற்றிய பணியின் ஒரு வெளிப்பாடாக இன்று உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி தனது 150ஆவது ஆண்டு நிறைவை விழாவாகக் கொண்டாடும் வேளையில் பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்துவரும் பாடசாலைச் சமூகத்தை வாழ்த்துகின்றேன்.

இக்கல்லூரி மேலும் பல சிறப்புக்களைப் பெற்று உயர்வடைய வேண்டும் என்று ஆசி கூறுகின்றேன்.

ஐ. எம். இஸ்ஸதீன்,
மாகாண கல்விப் பணிப்பாளர்
வடக்கு - கிழக்கு மாகாணம்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



தென்னிந்தியத் திருச்சபையினருக்கும், மிஷனறிமாருக்கும் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் தனியானதோர் இடம் உண்டு. குடாநாட்டின் பல இடங்களில் பெரும் கல்லூரிகளை உருவாக்கி அறிவுக்கண் திறந்தவர்கள். உடுப்பிட்டியில் தென்னிந்திய திருச்சபை ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளின் பின்னர் 1852இல் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கில போதனா பாடசாலையாகவும், கட்டணம் அறவிடும் பாடசாலையாகவும் வளர்ச்சியடைந்து படிப்படியாகக் கல்வித்துறையில் உயர்ந்து அகில இலங்கையிலும் இக்கல்லூரி தனித்துவமானதோர் இடத்தினைப் பெற்றுக்கொண்டது. பொறியியலாளர், மருத்துவர், பேராசிரியர், நீதியரசர், கல்வியியலாளர் எனப் பல்துறை விற்பனர்களை இக்கல்லூரி உருவாக்கி உள்ளது. விளையாட்டு சாரணீயத்தில் அகில இலங்கையிலும் இக்கல்லூரி முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கின்றது. அகில இலங்கையில் மிகச்சிறந்த சாரணீயக் குழுவினராக இக்கல்லூரி பலதடவை தெரிவு செய்யப்பட்ட காலமும் உண்டு.

கல்லூரியின் சாதனையைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் தபாற்தலை ஒன்றை வெளியிட இருப்பதாகவும் அறியப்படுகின்றது. எதிர்காலத்தில் மேலும் நல்ல வளங்களைப் பெற்று கல்விப் பணியாற்ற எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. சிவராஜா
மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்.
வடக்கு-கிழக்கு மாகாணம்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

மாகாண கல்வித் திணைக்களம் வடக்கு - கிழக்கு
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව උතුරු - නැගෙනහිර පළාත
Provincial Education Department North - East Province

ஆசிச் செய்தி

அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் பல ஆங்கில மொழிமூல பாடசாலைகளை நிறுவி, அவற்றினூடாக கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். அவ்வாறான பாடசாலைகளில் 1852 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட யாழ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் ஒன்று. இப்பாடசாலை கல்லூரியாக வளர்ச்சிபெற்று உடுப்பிட்டியிலும், அதனைச் சூழ்ந்துள்ள கிராமங்களிலும் வாழ்ந்த மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்புச் செய்துள்ளது.

1852ல் ஆரம்பிக்கப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பல கல்விமான்களையும், அறிஞர்களையும் உருவாக்கி வந்துள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக 1986, 1987, 1988 ஆகிய காலப்பகுதிகளில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இக்கல்லூரி, இன்று மீண்டும் அதன் பழைய நிலையை அடைந்திருப்பது மனநிறைவைத் தருகின்றது.

நீண்ட கல்விப் பாரம்பரியத்தை உடைய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இன்று 150வது ஆண்டில் காலடிவைத்து வடமராட்சியில் கல்வி ஒளிபரப்பி வருகின்றது.

கல்லூரியின் வளர்ச்சியில் உழைத்து வரும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் அளப்பரிய சேவையை நெஞ்சாரப் பாராட்டுகின்றேன்.

ஒன்றரை நூற்றாண்டாக கல்வி ஒளிபரப்பும் இக்கல்லூரி இன்னும் பல நூற்றாண்டுகள் கல்வி உலகில் ஓங்கிவளர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இ. சிவானந்தன்,
முன்னைநாள் மாகாண கல்விப் பணிப்பாளர்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

உயிர்வாழும் கலைக்கூடம்



நூற்றியைம்பது ஆண்டுகள் ஒரு மனிதன் உயிர்வாழ முடியாது. ஆனால் மனிதர்களை உருவாக்கி அதன் மூலம் சமூகத்தைப் பொலிவுறச் செய்த கல்வி ஸ்தாபனம் பல லட்சம் ஆண்டுகள் வாழும். ஏனெனில் இன்னல்கள், இடையூறுகளின் மத்தியிலும் உருவாக்கியவர்களின் தோள் மீது நின்று வானைத் தொடக் கூடியதாக, யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நிற்கின்றது. இப்பெருமை இங்கு கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெருமையுடையதாக உள்ளது. இக்கலைத்தாய் இனிவரும் காலங்களில் மெருகூட்டப்பட்டு அதன் சேவையை மேற்கொள்ள எனது பிரார்த்தனைகள்.

வே. தி. செல்வரத்தினம்
பழைய மாணவன், முன்னாள் அதிபர்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

வாழ்த்துச் செய்தி



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் கல்விச் சேவையின் நூற்றைம்பது வருட நிறைவையொட்டி வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 04.01.1852இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1908 ஆம் ஆண்டில் அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரைப் பெற்றது. 1939ஆம் ஆண்டுவரை ஆரம்ப வகுப்புக்களைக் கொண்ட இப்பாடசாலையில் திறமை மிகுந்த கே. ரி. யோன் அதிபர் பதவியை ஏற்றதும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எனப் பெயர் மாற்றப்பட்டு க.பொ.த. (சா.த.) வகுப்புக்கள் வரை கல்வி போதிக்கப்பட்டது. 1959 ஆம் ஆண்டு க.பொ.த. (சா.த) வகுப்புக்கள் வரை கல்வி போதிக்கப்பட்டது. 1959 ஆம் ஆண்டு க.பொ.த. (உ.த) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதும் முழு நிறைவான கல்லூரியாக வளர்ச்சி பெற்றது.

உடுப்பிட்டி பிரதேச மக்களுக்குத் தரமான மேலைத் தேசக் கல்வியை வழங்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன் அமெரிக்க மிஷனரிச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பலதுறைசார்ந்த அறிஞர் பெருமக்களை உருவாக்கியிருக்கின்றது. அணுவிஞ்ஞானி கந்தையா, பேராசிரியர் துரைராசா, நீதியாளர் ஸ்ரீஸ்கந்தராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ரி. இராமலிங்கம் போன்ற அறிஞர் பெருமக்களை இக்கல்லூரி உருவாக்கியிருக்கின்றது.

1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இக்கல்லூரி பலத்த சேதமடைந்தது. இடம் பெயர்ந்து கொட்டில்களில் இயங்கியபோதும் தனது கல்வித் தரத்தைப் பேணி வந்திருக்கின்றது. பழம் பெருமையும் சிறப்பும் மிக்க இனம் மறுமலர்ச்சியடைவதைப் போன்று இக்கல்லூரியும் பலவழிகளிலும் மறுமலர்ச்சியடைந்து வருவதனை என்னால் காண முடிகின்றது. இக்கல்லூரியின் வரலாற்றையும் சாதனைகளையும் தாங்கிவரும் இம்மலரானது இக்கல்லூரிச் சமூகத்திடையே புதுவேகத்தை உருவாக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை. இக்கல்லூரியை நாடிவரும் அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்கி ஆன்றமைந் தடங்கிய கொள்கைச் சான்றோர் பலரை உருவாக்கும் கல்லூரியின் இலட்சியம் நிறைவேற வாழ்த்துகின்றேன்.

க. அம்பலவாணர்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கரவெட்டி

LIGHT DISPELS DARKNESS

1852 2002

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கத் தலைவரின் செய்தி



எமது கல்லூரியின் நூற்றைம்பது ஆண்டு நிறைவினைக் கொண்டாடி, அதன் ஞாபகார்த்தமாக ஒரு நூல்மலர் வெளியிடுதல் உள்ளத்திலே உவகையையும், பெருமிதத்தையும் ஒருங்கே ஏற்படுத்துகிறது. இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வரையக் கிடைத்தவை மேலும் மகிழ்ச்சியளிக்கிறது.

நூற்றைம்பது ஆண்டுகள் என்பது ஒரு நீண்டகாலம். ஏறக்குறைய ஆறேழு தலைமுறைகளின் வரலாறு. அந்தத் தலைமுறைகளில் ஏதோவொன்றின் அங்கத்தவராக - நாமெல்லோரும் இந்த வரலாற்றைத் தரிசித்திருக்கிறோம்; அந்த வாழ்வில் கலந்துகொண்டிருக்கிறோம். இன்று நாம் எங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் கையளவேயான எங்கள் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் நாங்கள் தரிசித்த அந்த வரலாறு, கல்லூரியோடு நாங்கள் கழித்த இளமை நாட்கள் பசுமையான நினைவுகளாகப் பதிந்திருக்கும். அங்கு நாங்கள் பெற்ற கல்வி, வழிகாட்டல்கள், அனுபவங்கள் - இவைதான் இன்று எங்களை எங்கள் நிலைகளுக்கு கொண்டு சென்றிருக்கின்றன. வாழ்வுக்கு முகம் கொடுக்க உறுதுணையாக நின்றன; நிற்கின்றன.

இக்கல்லூரியும், அதன் வளர்ச்சியும் இற்றைவரை இங்கு பணியாற்றிய அதிபர், ஆசிரியர், ஊழியர் ஒவ்வொருவரினதும் ஆற்றல், அர்ப்பணிப்பு, கடமையுணர்வு, கடின உழைப்பு என்பனவற்றை உள்ளிட்டு, உரமிட்டு அடுக்கடுக்காக அழகுறக் கட்டப்பட்டதாகும். இந்த வளர்ச்சிப் படிகளில் முன்னோடிகளாய் திகழ்ந்தவர் பலர் இன்று மறைந்து விட்டனர். ஆனால் அவர்கள் வாய்மொழிகள் அழியவில்லை. நிரந்தர அதிர்வுகளாக அவை இன்றும் - என்றும் எங்கள் வானை நிறைத்திருக்கும்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் எமது கல்லூரி நிலைகுலையும் நிலையேற்பட்டபோது பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் யாவரும் பாடசாலை நிர்வாகத்தோடு தோள் கொடுத்துத் தாங்கினார்கள். குறிப்பாகக் கனடா கிளை பழைய மாணவர் சங்கத்தின் பணியும் பங்களிப்பும் பாராட்டுதற்குரியது. இன்று எமது கல்லூரியின் பௌதிக வளங்கள் அபிவிருத்தியடைவது கண்டு அகமகிழ்கிறோம். எமது கல்லூரி நூற்றிஐம்பது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பம் பழைய மாணவர்கள் அனைவரும் தங்கள் கல்லூரி நினைவுகளை மீட்கவும், ஒன்றிணைக்கவும் நல்வாய்ப்பினை அளிக்கிறது. உள்ளூரிலும், வெளியூரிலும், வெளிநாட்டிலும் வாழ்கின்ற பழைய மாணவர்கள் யாவருக்கும் ஒரு அன்பான அழைப்பை, வேண்டுகோளை விடுக்கின்றேன். உங்கள் உயர்விலும், நினைவிலும் கலந்த கல்லூரி அன்னையோடு தொடர்பு பேணுங்கள். எங்கள் வாழ்வின் பின்னும் வாழும் எங்கள் கல்லூரி வளர்ச்சிக்கு வளம் சேருங்கள்.

எமது கல்லூரியின் நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் இனிதே நிகழ்ந்தேறவும், இளையோரின் அறிவுக்கண் திறக்கும் ஆலயமாக எமது கல்லூரி என்றென்றும் வளர்ந்தோங்கவும் எல்லாம் வல்ல இறையருள் வேண்டி விடைபெறுகிறேன்.

பேராசிரியர் அ. நவரத்தினராசா
தலைவர்,
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
உடுப்பிட்டி

LIGHT DISPELS DARKNESS

1852 2002

UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE
PAST PUPILS' ASSOCIATION
(COLOMBO BRANCH)

Patron	President	Vice Presidents	Secretary	Treasurer	Asst.Secretary
The Principal	Dr. R.Mahalingasivam	Dr.M.Kopalasundaram Kandiah Neelakandan T. Ragunathan K. Sabaratnam S.Thillainadarajah	K.Mahadeva	V. Mahadevan	V. Navaratnam

Vice Patrons
R.Ponnampalam
E.Panchanathan
K.Neelakandan
V.Rajah
K.Sithamparapillai

Asst.Treasurer
M. Kanapathippillai



It gives me great pleasure as the President of the Past Pupils' Association (Colombo Branch) to offer our greetings and send this message of facilitations to the publication of the Special Souvenir published to celebrate the 150 years (1852-2002) of successful existence.

My greetings and pleasure are not only due to the long existence of our college or due to the buildings constructed but due to the quality of education our college imparted over the years.

Our College has been offering training in diversified fields of education without concentrating only in academic teaching only. Thus, over the years our college has been fairly successful in advancing towards its goal of creating the image of "whole man" for each student. The success can be seen from our past pupils being able to place themselves productively in various fields of activities in different parts of the world.

For such a transformation of our students over the years, the contributions of teachers of our college have been remarkable. We should, in particular, be grateful to the teachers from Kerala such as Messrs K.T. John, K.C. Jacob, T. Abraham and K.M.Mathew who during mid nineteen fifties have demonstrated to those in the teaching profession what a nation expects from them.

The great virtue and secret of successes of our teachers are due to the love and affection shown by them to the students as that shown by them to their children. We observed that the students too reciprocated by their actions and thus complemented their teachers' efforts to produce capable and trustworthy citizens.

We wish the school every success in their efforts to perform fruitful and dedicated services in the years to come.

R. Mahalingasivam

President
U.A.M.C.P.P.A (Colombo Branch)

LIGHT DISPELS DARKNESS

1852 2002

Uduppiddy American Mission College
Old Boys Association (Canada)

Patron :
E. V. Chelvaratnam

President :
M. Ketheeswaranathan

Vice Presidents :
Kanaha Manoharan
Miss. Geetha Velupillai

Secretary:
S. Amalkumar

Asst. Secretary:
N. Asokumar


Treasurer :
N. Selvaratnam

Asst. Treasurer :
E. Satgunarajah

Committee Members :
S. Balendran
B. Bohan
M. Mohanathas
M. S. Perinbanayakam
V. Tharmakularajah

Auditor :
K. Selvaratnam

Board of Trustees :
V. Sornalingam
Dr. T. Vasanthakumar
V. Puvanachandran



எமது கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு ஞாபக மலரிற்கு, கனடா பழைய மணவர் சங்கத்தின் சார்பாக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

முதலில் சிறிய பாடசாலையாக உருக்கொண்டு, கால வளர்சியில் பெரிய கல்லூரியாக பரிணமித்து நின்று நிலைத்திருக்கிற இந்த நீண்ட வரலாறு, ஞாபக மலராக ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியமே. பல்லாயிரம் மாணவர்கள் இங்கு எண் எழுத்து அறிந்தனர். எண்ணில் கலை பயின்றனர். ஏற்றமிகு தகமைகள் பெற்றனர். எங்கள் கிராமங்கள் இங்கு ஒன்று கூடின. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி என்ற ஒரு தாயின் மக்களாக எண்ணற்ற மாணவர்களை வளர்த்தெடுக்கும் பணியே வாழ்வாக இந்த ஒன்றரை நூற்றாண்டுகள் கழிந்திருக்கின்றன. எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் முகம் கொடுத்து, சாதனைகளையும் சோதனைகளையும் சந்தித்து இன்றும் ஓய்விலாது சோர்விலாது இக்கல்லூரியின் பணி தொடர்கிறது. இந்த நிகழ்வுகளை, நினைவுகளை எழுத்துருவில் எதிர்காலத்திற்கு வழங்க வேண்டிய கடப்பாடு நிறைவுறுதல் கண்டு பெருமகிழ்வோடு, இச் சீரிய முயற்சியாளர்களை பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

என்னைப் போலவே எங்கள் எல்லோரதும் பசுமையான, குதூகலமான மாணவப் பருவம் அந்த வளாகத்திலேயே கழிந்திருக்கிறது. அதன் முற்றமும் மூலைகளும் மைதானமும் எங்கள் கால்களால் அளையப்பட்டவை. எங்கள் நினைவுகளில் பதிந்தவை. அது எங்கள் தாய்வீடு, எங்கள் ஆலயம். உலகின் எந்த மூலையில் வாழுகின்ற போதும் எங்கள் கல்லூரி என்றும் எங்கள் நினைவுக்கு, வணக்கத்திற்கு, நன்றிக்குரியது. அந்நன்றிக் கடனை நிறைவேற்றுகின்ற கடப்பாடு எங்களுக்கு என்று முரியதாகும். இன்று எமது கல்லூரியின் 150 ஆண்டுகள் நிறைவினை யாவரும் இணைந்து கொண்டாடுகின்றமையறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். காலமெல்லாம் எங்கள் கல்லூரித் தாயின் பணி தொடரவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். அரும்பாடுபட்டு அதை வளர்த்தெடுப்பதில் தமது சிந்தையையும் செயலையும் தன்னலமற்று அர்ப்பணித்தவர்கள், கடமையும் காருண்ணியமும் கண்ணாகக் கொண்டு பல்லாயிரம் மாணவரின் ஏற்றத்திற்கு தம்மை ஏணியாக நிறுத்திய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்லூரி வளர்ச்சிக்கு விசுவாசமாகப் பங்களித்த ஊழியர்கள் யாவருக்கும் நன்றியோடு சிரம் தாழ்த்துகிறேன். இன்றும் முன்னின்றுழைக்கின்ற அதிபர், ஆசிரியர் ஊழியர்களை பாராட்டி வாழ்த்துகிறேன்.

கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தினையும், மலர் வெளியீட்டினையும் ஊக்கத்தோடு செயற்படுத்துமனைவருக்கும் எமது பாராட்டுகளுரியன. இந்த விழா வெற்றியும் சிறப்பும் பெற இறையருள் கிட்டுவதாக. இம்மலர் எங்கள் கல்லூரியின் 150 ஆண்டு கால நினைவுப் பூக்களின் தணியாத வாசத்தை என்றும் வீசி நிற்பதாக.

நன்றி. வணக்கம்


தலைவர்

Office: **'Vaanavil'**, 145 Brenda Crescent, Scarborough, Ontario MIK 3C8 Canada.
• President: 416-261-0866 • Secretary : 416-755-4115 • Treasurer : 416-693-1975

LIGHT DISPELS DARKNESS

1852 2002

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் ஆசியுரை



நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுள்ள எமது கல்லூரியின் வளர்ச்சியில் கிராமத்து மக்களின் பங்களிப்பு சோடை போவதில்லை. மக்களின் பங்களிப்புடன் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், சிதைந்து போன கல்லூரியை புனரமைக்க முற்பட்ட போது மக்களுடைய பங்களிப்பு மகத்தானதாக அமைந்தது. மக்களின் ஆதரவை பெறுவதில் அதிபரின் பங்களிப்பு மெச்சத்தக்கது.

புதுப்பொலிவோடு வளர்ந்து வரும் எமது கல்லூரி பழைய நிலைக்கு வருவதற்கு நாட்கள் அதிகம் இல்லை. கடின உழைப்பு, விடாமுயற்சியும் கொண்ட எமது அதிபரும் ஆசிரியர் குழாமும் காட்டிவரும் அக்கறையினால் பல்கலைக் கழகத்திற்கு செல்லுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. கல்லூரி பல நூற்றைம்பது ஆண்டுகளைக் காண வேண்டும் என நல்லாசியைக் கூறுகின்றேன்.

க. பாலசுப்பிரமணியம்
செயலாளர்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

குன்றிலிட்ட தீபமென மிளிர்மிஷன் கல்லூரி

பண்டிதர் க. முத்துவேலு

முன்னாள் ஆசிரியர் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

1. எத்தனை ஆயிரவர் மக்களை ஈன்றெடுத்தோய்
என்றென்றும் இளமையுடன் இனிதாக வாழ்ந்திருப்பாய்
சித்தம் நிறைவாகத் திரிகரண சுத்தியுடன்
தினம்தோறும் வாழ்த்துகின்றோம் சிரஞ்சீவி என வாழ்வாய்

2. அணுவா ராய்ச்சித்துறை விஞ்ஞானி அவர்தன்னை
அவனிக்கு ஈன்றளித்த அன்னையுமைப் போற்றுகின்றோம்
நுணுகிய ஆய்வாளர், நுண்ணாய்வுச் சோதகர்கள்
நுமது புத்திரரே நுமையென்றும் வாழ்த்துகின்றோம்

3. பூதபௌ திகத்துறைசார் பொறியியலர் பற்பலரைப்
பூதலம் எங்கும் புகழ்பெற வைத்து உள்ளோய்,
மேதகு நின்புகழ் விளம்புதற்கு வார்த்தையில்லை
மென்மேலும் புகழ்பரப்பி மிகவாக வாழியவே!

4. பிரபல வைத்திய நிபுணர்கள் பற்பலரைப்
பெரிதாக உருவாக்கிப் பேர்புகழுக் காக்கிவைத்தோய்
சிரந்தாழ்த்தி உந்தனின் மலர்ப்பாதம் போற்றுகின்றோம்
சித்தத்தில் உமையேநாம் தியானித்து வாழுகின்றோம்.

5. அழகியற் கலைவல்லார், இரசஞானக் கலைவல்லார்
ஆயிரர், ஆயிரவர் அனைவரும் நினதுமக்கள்
உளபதும மலரிருத்தி உமையென்றும் வாழ்த்துகிறோம்
ஊழூழி காலமாய் உமதுபுகழ் வாழியவே

6. எமதருமைத் தமிழன்னை என்றென்றும் இளமையுள்ளாள்
என்னவே நீயுமிங்கு எழிலாக விளங்குகின்றாய்
எமதாவி உடல்பொருளை அர்ப்பணிப்போம் உமக்காக
இன்னுமின்னும் புகழ்பரப்பி இனிதாக வாழியவே!

7. ஆளுமையும் அறிவும்மிக்க அதிபர்கள், ஆசிரியர்
அனைவரும் நினைப்பேணி அருந்தொண்டு ஆற்றுநராம்
வாழ்நாள் பூராவும் ஜோன் செல்லத் துரையதிபர்

மன்னதிபர் நடாதனையும் மறவோம்! மறவோமே

8. கனடாவாழ் உமதுமக்கள் இலட்சோப இலட்சமதை
கனகதா ரகையாக் காலமெல்லாம் வழங்குகிறார்
அனவரதம் நின்பெருமை அகமிருத்தி வாழுகின்றோம்
ஆழிசூழ் உலகமெல்லாம் புகழ்பெருக்கி வாழியவே

9. சமரச நிலைபேணிச் சாதிமத பேதமின்றி
சகலரையும் இணைக்கின்ற தாயே உமைமறவோம்
எமக்கெல்லாம் அறிவொளி ஊட்டியஎம் தாய்நினக்கு
இறுத்தற்காம் கைம்மாறு ஏதுமே இல்லையம்மா!

10. நூற்றைம்ப தாம் அகவை நிறைவுநாள் இந்நாளில்
நுமது அருமை பெருமைதனை நாம் நினையும்
ஆற்றவும் எங்கள் ஆசிதனை வழங்குகின்றோம்
அன்பறிவு மிகப்பெருக்கி வாழிய வாழியவே!

வாழ்த்துரை



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி தனது 150வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடுவதை அறிந்து பேருவகையடைவதில் முன்னிற்போரில் நானும் ஒருவர். அமெரிக்கன் மிஷனரிமாரினால் 1852ம் ஆண்டு உடுப்பிட்டியில் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு கற்பித்தல் நடைபெறாதிருந்திருப்பின் எம்ஊர் மக்கள், அயலூரவர்கள் கல்வியில் எவ்வகையில் பின்தங்கி இருந்திருப்பார்கள் என்பதை நினைத்து பார்க்க முடியவில்லை.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றையவை"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கமைய எம்கல்லூரி மாதாவாகிய அருப்பெருஞ் செல்வமாகிய கல்வியைப் பெற்ற நாம் பெரும் பாக்கியவான்கள். உலகில் அ. மி. கல்லூரியிற் படித்த மாணவர்கள் எல்லா நாடுகளிலும் பரந்து வாழ்கிறார்கள். ஆரம்பித்த காலம் முதல் 1963 வரை ஆங்கில மொழியில் கல்வி கற்றோர் தமக்குக் கிடைத்த ஆங்கிலத்துடன் சேர்ந்த பேரறிவு புதிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும்போது பேருதவியாக இருக்கின்றது எனப் பெருமையுடன் கல்லூரி மத்தியில் வாழ்த்துவர்.

பல இன்னல்கள் மத்தியில் தலைநிமிர்ந்து சகல துறைகளிலும் மிளிர்வதற்கு அரும்பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், மாணவர்கள் பெற்றோர் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன். எம்கல்லூரி பேராசிரியர் அமரர் அ. துரைராசா, விஞ்ஞானி கந்தையா போன்ற பெரும் மேதைகளை மேலும் உருவாக்கிச் சீரும் சிறப்புடன் கற்றல், கற்பித்தல் நடைபெற்று சமூகத்துக்கும், நாட்டுக்கும் சகல துறைகளிலும் உதவுவதில் முன்னின்று மிளிர வேண்டும் எனவாழ்த்தி எல்லாம் வல்ல இறைவனின் அருளும் கிடைக்கப் பிரார்த்தித்து என் வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

சீதா வேலுப்பிள்ளை
பழைய மாணவி, முன்னாள் ஆசிரியை
ப.மா.ச. நிர்வாக சபை அங்கத்தவர்

LIGHT DISPELS DARKNESS


1852 2002

The Ambassador

EMBASSY OF THE
UNITED STATES OF AMERICA

Colombo, Sri Lanka.

October 8, 2002



I salute Uduppiddy American Mission college on the 150th Anniversary of its establishment. Uduppiddy A.M.C. has contributed enormously to Sri Lanka's development over a century and a half, instilling high academic standards and the English language in thousands of young pupils. As the motto of the college states - Light Dispels Darkness - so it appears Sri Lanka is at last emerging from a dark period in its history towards a justifiably sunny future. It is my belief that Uduppiddy A.M.C. will continue its noble service to the reunited nation of Sri Lanka and to the people of this great country.

E. Ashley Wills

LIGHT DISPELS DARKNESS

1852 2002


LIGHT DISPELS DARKNESS
150th Anniversary
கல்லூரி வரலாறும்
அனுபவங்களும்
History
and
Experiences
of the
College
Special Souvenior
1852
2002
Uduppiddy
American
Mission College

B

150ம் ஆண்டில் எங்கள் அதிபர்
Our Principal in the 150th Anniversary



திரு. கி. நடராசா
Mr. K. Nadarajah



கல்லூரியின் முகாமைத்துவக் குழுவினர்



இ-வ : திரு. ஆ. விமல்ராஜ் *(பகுதித் தலைவர் - ஆரம்பப் பிரிவு)*, திரு. K. தர்மலிங்கம் *(பகுதித் தலைவர் - இடைநிலைப் பிரிவு)* திரு. K. நடராசா *(அதிபர்)*, திரு. S. தங்கராசா *(உப-அதிபர்)*, திருமதி. S. பாலேந்திரன் *(பகுதித் தலைவர் - உயர்தர வகுப்பு)*

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நிர்வாகக் குழு 2001-2002



இ-வ : திருமதி. ச. அமிர்தலிங்கம், திருமதி. T. இராஜேஸ்வரன், திரு. க. பாலசுப்பிரமணியம் *(செயலாளர்)* திரு. கி. நடராசா *(அதிபர்)*, திருமதி. ம. சிவராசா

இ.வ. : திரு. ஆ. விமலராசா, திரு. P. அரியரட்ணம், P. சந்திரலிங்கம், K. தர்மலிங்கம், P. வடிவேலு.



STAFF - 20

SEATED LEFT TO RIGHT

Mrs. C. Sachchithanantham, Mrs. V. Kailayangiriselvam, Mr. K. Soundararajah, Mr. P. Jotheewaran, Mr. S. Jeyanantnakuma
Mr. S. Thangarajah (*Deputy Principal*), Mr. K. Nadarajah (*Principal*), Mr. A. Vimalarajah (*Sectional Head*), Mr. R. Jegarath

STANDING LEFT TO RIGHT

1st Row : Mrs. A. Jegatheeswaran, Miss. N. Viyagesu, Miss. K. Pushpalingam, Mrs. V. Rajendram, Mrs. R. Subramaniam, Mrs.
Mrs. S. Pathmakumaran, Miss. S. Thirunavukkarasu, Miss. S. Shanmugathas, Miss. S. Ramalingam, Mrs. U. Thevaht

2nd Row Mr. S. Muraleetharan, Mr. R. Sivashakar, Mr. T. Gowrinathan, Mr. P. Thavanathan, Mr. K. Sivaranjan, Mr. K. Kanagesv
Mr. A. D. Ariyaranjan, Mr. K. Sebanesan, Mr. K. Partheepan, Mr. S. Ganeshalingham.

3rd Row : Mr. T. Velummylum, Mr. M. Balasingam, Mr. M. Maheswaran, Mr. S. Selvakumaran, Mr. T. Rajasegaran, Mr. P. Sive

Absentees : Miss. S. Thuraisamy, Mrs. S. Thavakumar



STAFF - 2001

S. Jeyanantnakumar, Mr. K. Baskaran, Mr. K. Tharmalingam (*Sectional Head*), Mrs. R. Thillaiyambalam,
d), Mr. R. Jeganathan, Mr. M. Logasingham, Mr. S. Pathmanathan, Mrs. B. Kumarasamy, Mrs. S. Balendran (*Sectional Head*)

ubramaniam, Mrs. M. Maheswaran, Mrs. A. Sivakumaran, Mrs. R. Ranganathan, Mrs. S. Ramachandran, Mrs. P. Arulvelnathan,
. Mrs. U. Thavathurai, Mrs. M. Sivarajah, Miss. J. Arudselvam, Mrs. P. Sureshkumar, Miss. V. Anandarajah, Mrs. S. Ranganathan.

n, Mr. K. Kanageswaran, Mr. S. Nagendran, Mr. K. Yogendran, Mr. V. Senthuran, Mr. K. Kuganesan, Mr. R. Yasotharan, Mr. R. Thamilmaran,

garan, Mr. P. Sivarajah, Mr. S. Thavaraj, Mr. S. Kathiravel, Mr. V. Navaratnam.

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரி
வரலாற்றுச் சுருக்கம்

கிறிஸ்தவ மதப் பிரச்சாரத்தின் பொருட்டு இலங்கைக்கு விஜயம் செய்த கிறிஸ்தவ மதக் குழுக்களினால் யாழ் மாவட்டம் கல்வித் துறையில் பாரிய முன்னேற்றங்களைக் கண்டு இருந்தது. அகில இலங்கையிலும் யாழ் மாவட்டம் இன்றும் கல்வித்துறையில் முதன்மை வகிப்பதற்கு கிறிஸ்தவ மத குழுக்களின் பங்களிப்பு மகத்தானது. உடுப்பிட்டியிலும் மிசனரிமாரின் வருகையினால் தலைசிறந்த இரண்டு கல்லூரிகள் உருவாகியுள்ளன. 1852 ஆம் ஆண்டில் எமது கல்லூரியும் 1868ம் ஆண்டில் மகளிர் கல்லூரியும் அவர்களால் ஆக்கப்பட்டது.

1847 இல் அமெரிக்க - இலங்கை மிஷன் உடுப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்டதாயினும் 1850 ஆம் ஆண்டு தென்னிந்திய திருச்சபை பொறுப்பினை ஏற்றுக்கொண்டது. 1848 ஆம் ஆண்டு உடுப்பிட்டி திருச்சபை ஆரம்பிக்கப்பட்டபோது கோப் ஐயர் போதகராக நியமிக்கப்பட்டார். தென்னிந்திய திருச்சபையின் கனம் பெஞ்சமின் டமெக்ஸ் அவர்கள் ஊழியம் செய்த காலத்திலே 4.1.1852 இல் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. சுதேச கல்வியை கற்பிப்பதற்கு விரும்பிய தென்னிந்தியச் திருச்சபை ஆங்கிலக் கல்வியையும் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கில் இக்கல்லூரி ஆரம்பகாலத்தில் இருபகுதிகளாக இயங்கி வந்தது.

1. சுயபாஷா அபிவிருத்திப் பாடசாலை

2. ஆங்கில மொழிப் பாடசாலை.

மிஷன் ஊழியத்திற்கு ஆட்களை பயிற்றவும் திருச்சபையின் விருத்திக்கு அனுகூலமாக இருக்கவும் உயர்ந்த வேத அறிவு, தமிழ் மொழியறிவு, சாத்திர அறிவு ஆகியனவற்றை இக்கிராம மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்ற அடிப்படையிலும் இப்பாடசாலை அமைக்கப்பட்டது. சுய மொழிப் பாடசாலை 8ம் வகுப்புவரை மிகக் குறுகிய காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தது. J. S. அம்பலவாணர் போன்ற தலைமை ஆசிரியர்களினால் சுயமொழிப் பாடசாலை நன்கு விருத்தியடைந்து சென்றது. ஆங்கில மொழிப் பாடசாலை 5ம் வகுப்புவரையே இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.




கி. நடராசா
கல்லூரி அதிபரும் மலராசிரியரும்

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்



திரு. S. K. இராசையா

கல்லூரி வளர்ச்சியில் திரு. V. K. சின்னத்தம்பி, திரு. கணபதிப்பிள்ளை, திரு. இராமலிங்கம், திரு. பிலிப் போன்றவர்கள் தலைமையாசிரியர்களாக இருந்தவர்கள் என அறியப்படுகின்றது. திரு. V. K. சின்னத்தம்பி அதிபராக இருந்த காலத்தில் முதலாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை 100 மாணவர் ஆங்கில மொழிக் கல்வி கற்றதாக அறியப்படுகின்றது. 1932 ஆம் ஆண்டிலிருந்து 38 ஆம் ஆண்டுவரை S. K. இராசையா அதிபராக இருந்தபோது 5ம் வகுப்புவரை இயங்கி வந்த ஆங்கிலக் கல்வி 8ம் வகுப்புவரை விஸ்தரிக்கப்பட்டது. இதே சமயம் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுத்தவரை 1868 இல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதும் இரு கல்லூரியினது நிருவாகமும் ஒரு முகப்பட்டதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

திரு. S. K. இராசையா அதிபராக இருந்த காலத்தில் உருவாக்கப் பட்ட மாணவர்களில் மறைந்த உயர் நீதிமன்ற நீதியரசர் P.சிறீஸ்கந்தராசா, அண்மையில் காலமாகிய அணுசக்திதுறை விஞ்ஞானி பேராசிரியர் கந்தையா போன்றவர்கள் இவரது காலத்திலேயே உருவாக்கப்பட்டவர்கள். 1938ம் ஆண்டு திரு. S. K. இராசையா இடமாற்றம் பெற்று தெல்லிப்பளைக்குச் சென்றதும் திரு. K. T. ஜோன் பாடசாலையின் அதிபர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். இக்குறிப்பிட்ட காலங்களில் கல்லூரியின் முகாமையாளராக பணியாற்றியவர் விபரம் வருமாறு.

1.	திரு. G. G. பிரௌண்	1890 - 1905
2.	வணக்கத்திற்குரி J. பிக்னல்	1920 - 1936
3.	திரு. J. V. செல்லையா	1937 - 1941
4.	வணக்கத்திற்குரிய S. K. பங்கர்	1941 - 1947

திரு. K. T. ஜோன் அவர்களின் வருகை, கல்லூரி வளர்ச்சியில் ஓர் திருப்பு மையமாகும். இந்தியாவின் கேரளப் பகுதியை சார்ந்த இவர் 1939 ம் ஆண்டிலி ருந்து 1956ம் ஆண்டு வரை கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக விளங்கியவர். இவரைப்பற்றி இந்நூலில் பலர் எழுதியிருக்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவருடைய காலத்தில் ஏற்பட்ட கல்லூரி வளர்ச்சிப் படிமுறையில் பின்வருவனவற்றை மாற்றங்களாக கொள்ள வேண்டும்.

1. சுயபாஷா அபிவிருத்திப் பாடசாலையாகவும் ஆங்கில மொழிப் பாடசாலையாகவும் இயங்கிவந்த இருபகுதிகளையும் ஒன்றிணைத்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி என்ற நாமத்தைச் சூட்டி கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தமை (இந்நிகழ்வு 1941ல் இடம்பெற்றது)



Mr. G. G. Brown



Rev. J. Bicknell



Rev.S. K. Bunker

2. கல்லூரி வளர்ச்சியில் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர வகுப்புகளை (S.S.C.) உள்ளடக்கியதாக கல்லூரியின் தரத்தினை உயர்த்தியமை.

   கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததனால் வகுப்பறைகள், ஆய்வுகூட வசதிகள், நூலகம், குழாய் நீர் விநியோகம், மலசலகூட வசதிகள் போன்ற பௌதிக வளங்கள் அதிகரிக்கப்பட்டமை (இக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய சிவப்பிரகாசம் என்பவர் சில வகுப்பறைக் கட்டிடங்களை தனது சொந்தச்செலவில் கட்டிக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.)

4. கல்லூரிக்கு ஓர் அருமையான மகுடவாசக மொன்றை உருவாக்கினார். "ஒளி இருளை அகற்றும்" (Light Dispels Darkness) இம் மகுட வாசகம் ஆழ்ந்த தத்துவ கருத்துக்களை கொண்டிருந்தது. அஞ்ஞானமாகிய இருளை கல்வியாகிய ஒளி அகற்றி மனித வாழ்வை பிரகாசிக்கச் செய்கிறது என்பதே அதன் பொருளாகும். "மாணவர்களின் உள்ளமாகிய தாமரை மலரின் ஒவ்வொரு இதழையும் ஆசிரியனாகிய சூரியன் தனது ஞானக்கதிர்களால் மலரச் செய்தல் வேண்டும்" என்ற தாகூரின் கல்விச் சிந்தனையோடு ஒப்பு நோக்கத்தக்கது.


5. மாணவரின் தொகை அதிகரித்ததன் காரணமாக பாடசாலைக் காணியின் பரப்பளவை அதிகரிக்கும் நோக்கில் பாடசாலைக்கு பின்புறமாக உள்ள காணியை திரு. V. இளையகுட்டி, திரு. V. இராமலிங்கம் என்போரிடம் இருந்து சலுகை விலையில் பெற முயன்று நிறைவேற்றியது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

6. இக்கல்லூரியின் முதல் சிரேஷ்ட தராதரப்பத்திர பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களில் திரு. R. விஜயரட்ணம், திரு. K. அன்னலிங்கம், திரு. V. K. அரியரட்ணம், திரு. V. செல்வரட்ணம், திரு. V. அரியரட்ணம் போன்றவர்கள் திறைமைச் சித்தி பெற்ற மாணவர்கள் ஆவர்.

தியாகசிந்தனை, கடமை உணர்வு, நேர்மை, துணிவு, அர்ப்பணிப்பு போன்ற அருங்குணங்களை கொண்ட K T. ஜோன் அவர்கள் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையே நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்துவதற்காக பழைய மாணவர் சங்கம், பெற்றார்



Late Mr. K. T. John



Late Mr. S. S. Selladurai

ஆசிரியர் சங்கம் போன்றவற்றை உருவாக்கி இருந்தார், 1.1.1949ல் பழைய மாணவர் சங்க மொன்று இவரது முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது.

தலைவர்	அதிபர் K. T. ஜோன் (பதவி வழியாக)
உப-தலைவர்கள்	திரு. T. இராமலிங்கம் பாராளுமன்ற உறுப்பினர்
	திரு. A. அருட்பிரகாசம் உதவி அரசாங்க அதிபர்
	திரு. N. R. சுப்பிரமணியம்
	திரு. N. R. வீரகத்திப்பிள்ளை
இணைச் செயலாளர்	திரு. K. சின்னத்தம்பி
	திரு. S. நவரட்ணம்
பொருளாளர்	திரு. S. R. அரியரட்ணம்

7 பேர் கொண்ட நிருவாகக் குழுவினரும் தெரிவு செய்யப்பட்டனர்.


சமூகத்துடன் பாடசாலையை இணைப்பதற்காக பரிசளிப்பு விழா வொன்று நடாத்தப்பட்டது. முதற்பரிசளிப்பு விழா 1946ம் ஆண்டு பங்குனி மாதம் இடம்பெற்றது. இக்கல்லூரி அக்காலத்தில் ஒரு கலவன் பாடசாலையாகவே இயங்கி வந்தது. 1950ம் ஆண்டு இக்கல்லூரியில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் திரு. K. T. ஜோன் அவர்களுடைய உரையிலிருந்து சிலபகுதிகள் கல்லூரி வளர்ச்சி தொடர்பாகத் தரப்படுகின்றது.

> "This college has grown in numbers. The number on roll now stands at 630. Last year it was 530. For Lack of accommodation we had to refuse admission to a good number of boys and to the large number of girls that sought admission. The question has often been asked why there should be girls here when there is a girl's school under the same management nextdoor. I cannot answer this question except by saying that some parents insist on their children being admitted here. In these days when we make much of the parents' freedom to choose the schools for their children, I dont' know how we can refuse admission except for lack of space. I am not going to nor am I competent to discuss the merits or otherwise of co-education."

மேற்குறிப்பிட்ட உரையை படிக்கும்போது, அக்காலத்தில் கல்லூரி எத்தன்மையான வளர்ச்சி நிலையில் இருந்ததென்பதை ஓரளவு அறியக்கூடியதாக உள்ளது. இவருடைய காலத்தில், சாரணர், பெண்கள் சாரணியம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் என பல்துறை இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் மெய்வல்லுனர் செயற்பாடுகளும் தாராளமாக இடம்பெற்றிருந்தன. இவற்றின் சாதனைகள் பற்றிய விபரங்கள் மலரின் உள்ளே இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1951ம் ஆண்டு கல்லூரியில் கடமையாற்றிய ஆசிரியர்கள் விபரம் வருமாறு :-

1. Mr. K. T. John B. A. (Madras) Principal.
2. Mr. S. S. Selvadurai B.Sc. (Loud.) Dip. Ed. (Birm.) Vice-Principal.
3. Mr. S. Navaratnam B. Se. (Madras)
4. Mr. K. M. Mathew B. A. (Madras)
5. Mr. N. R. Balasingam B. A. (London)
6. Mr. S. Thillainadarajah B. A. (Madras)
7. Mr. B. Raghavan B. A. (Hon.) (Madras)
8. Mr. R. Vijayaratnam B. Sc. (Ceylon)
9. Mrs. S. Raghavan B. A. (Travancore) Trained.
10. Mr. S. Thissaveerasingam (First Class Secondary)
11. Mr. S. S. Kanapathippillai Second Class Secondary Trained.
12. Mr. N. S. Ratnasingam – do –
13. Mr. V. Thambirajah – do –
14. Miss P. Gnanapragasam – do –
15. Mr. Y. R. Rajaratnam (Second class Eng. Teacher Certificate.)
16. Mr. V. Sittampalam (First class Eng. Teacher Certificate.)
17. Mr. K. Senthinathan (Eng. Third class Certificate.)
18. Mr. M. Veluppillai (Eng. Teacher Second class Certificate & Tamil Trained.)
19. Mr. S. Veluppillai (Tamil First class Trained Certi. Tamil Pundit.)
20. Miss S. Kathirgamathamby Drawing First class Certificate.
21. Mr. C. Krishnar
22. Mr. M. Arulanandam, (London Matriculation.)
23. Mr. P. B. L. Leelawansa (Sinhalese Teacher Certificate.)
24. Miss L. Sinnadurai (S. S. C. English.)
25. Miss S. Sinnathamby (Tamil Trained.)
26. Mr. S. R. Thuraiayah – do –
27. Mr. E. Panchanatham (London Matriculation.)


திரு. K. T. ஜோன் காலத்தில் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பலர், விஞ்ஞானிகளாக, பேராசிரியர்களாக, விரிவுரையாளர்களாக, உபவேந்தராக, பொறியியலாளர்களாக, மருத்துவர்களாக, கணக்கியலாளராக, நல்லாசிரியர்களாக, திணைக்களங்களிலும், நிறுவனங்களிலும் தலைமைத்துவப் பொறுப்புக்களை வகிப்பவர்களாக கடமையாற்றியுள்ளார்கள். சட்ட அறிஞர்களையும் இக்கல்லூரி உருவாக்கத் தவறவில்லை. நாட்டுக்கு ஏற்ற நல்ல பிரஜைகளையும் இக்கல்லூரி உருவாக்கியிருக்கிறது. K. T. ஜோன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றபோது கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 256 ஆகும். அவர் ஓய்வு பெறுகின்றபோது (1956) 608 ஆகக் காணப்பட்டது. இக்காலத்தில் திரு. S. S. செல்லத்துரை, திரு. றொபேட் நவரட்ணம், K. M. மத்தியூ, திரு. S. S. கணபதிப்பிள்ளை, திரு. K. நேசதுரை, திரு. ஏபிரகாம் போன்ற ஆற்றல் மிக்க அறிஞர்கள் ஆசிரியர்களாக அமர்ந்திருந்தனர்.




Late Mr. Robert Navartnam



Mr. K. Sithamparapillai



திரு. சி. விநாயகமூர்த்தி



திரு. வெ. தி. செல்வரத்தினம்



திரு. ந. அனந்தராஜ்



திரு. எஸ். தில்லையம்பலம்

பிகு. ஏனைய முன்னைநாள் அதிபர்களின் படங்களைப்பெற முயன்றும் கிடைக்காத காரணத்தினால் பிரசரிக்க முடியவில்லை. அதற்காக வருந்துகிறோம்.

– பதிப்பாசிரியர்குழு

திரு. K. T. ஜோன் அவர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெற்று தனது சொந்த ஊரான கேரளத்திற்கு சென்ற பின்னர் அவர் காலத்தில் அவரால் வழிநடத்தப்பட்ட உப அதிபரான, திரு. சாமுவேல் சரவணமுத்து செல்லத்துரை அவர்கள் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். விஞ்ஞானப் பட்டதாரியான செல்லத்துரை பதவியை ஏற்றதன் பின்னர், விஞ்ஞானக்கல்வி விருத்தியை மையமாகக் கொண்டு ஆய்வு கூட வசதிகளும், நூலக வசதிகளும் விஸ்தரிக்கப்பட்டன. வடமராட்சியில் மற்றக் கல்லூரிகளில் இல்லாத அளவுக்கு இவை விஸ்தரிக்கப்பட்டன.

இக்கல்லூரியில் கல்விபயின்ற அமரர். பேராசிரியர் துரைராஜா போன்றவர்கள் உயர்தர வகுப்பு வசதியின்மை காரணமாக வேறு பாடசாலைகளுக்குச் சென்றமை அதிபரின் உள்ளத்தில் பல மன உளைச்சல்களை ஏற்படுத்தியது. தன் கல்லூரி மாணவர்கள் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியையும், அதே கல்லூரியில் பயில வேண்டும் என்ற இலட்சியத்திற்காக அயராது உழைத்து 1959ம் ஆண்டு உயர்தர வகுப்புக்களை நடாத்துவதற்கும் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. முதலாந்தரப் பாடசாலையாக கல்லூரி தரம் உயர்த்தப்பட்டது. திரு. K. சண்முகசுந்தரம், திரு. R. பொன்னம்பலம், திரு. S. தில்லையம்பலம், திரு. K. செல்வநாயகம், திரு. ரியூசியஸ், திரு. ஏபிரகாம் போன்ற ஆற்றல் மிகு அறிஞர்களினால் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை நோக்கி மாணவர் படை எடுத்தனர். பல்கலைக்கழகத்திற்கு செல்வோர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. அவர் காலத்து சாதனைகள் பற்றியும் மலரின் உள்ளே இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திரு. செல்லத்துரை அவர்கள் ஓய்வு பெற்றதன் பின்னர் கல்லூரி வளர்ச்சியில் ஒரு பின்னடைவு ஏற்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்காக பல காரணங்களை நாம் கூறிக் கொள்ளலாம். இக்காரணங்களில் சில யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு பொதுவானதாகவும் அமையலாம்.

1. பல்கலைக்கழக அனுமதிக்கு தரப்படுத்தல் முறை அறிமுகப்படுத்தியதால் பல்கலைக்கழக அனுமதியால் பாதிப்பு ஏற்பட்டமை.

2. பல மாணவர்கள் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியை கற்காமல் வெளிநாடுகளுக்கு சென்று கல்வி கற்க முயன்றமை.

3. அரசியல் வாதிகளினால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றங்கள்.

4. உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகித், தொடர்ந்து சென்றமை.

5. பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் காட்டிய அக்கறை குறைந்து சென்றமை.

6. வேறு சில புலக்காட்சிகள் மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தமை.

7. 1971ம் ஆண்டின் பின் 14 அதிபர்கள் அடிக்கடி இளைப்பாறியமை அல்லது மாற்றப்பட்டமை கல்லூரி வளர்ச்சியை பாதித்தது. திரு. குணரட்ணம், ரட்ணம், திரு. நவரட்ணம், திரு. பொன் கணேசன், திரு. மயில்வாகனம், திரு. விநாயகமூர்த்தி, திரு. சச்சிதானந்தம் போன்றோர் அவர்களில் சிலர். இவ்வாறாக உறுதியற்ற பாடசாலை நிர்வாக முகாமைத்துவம் கல்லூரி வளர்ச்சியை நன்கு பாதித்தது.

இத்தகையதொரு சூழ் நிலையில் திரு. K. சிதம்பரப்பிள்ளை அதிபராகப் பொறுப்பேற்றதன் பின்னர் எவ்வாறாயினும் கல்லூரியை முன்னைய நிலைக்கு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற அவரது அயராத உழைப்பினால் மீண்டும் மறுமலர்ச்சி ஒன்று உருவாயிற்று. இவர் பாடசாலையைப் பொறுப்பேற்ற காலத்தில் வான்வழித் தாக்குதலினால் அனைத்துக் கட்டிடங்களும் அழிந்து போயின. மாணவர் சமுதாயம் இடம் பெயர்ந்தது போல, கல்லூரியும் இடம்பெயர வேண்டியதாயிற்று. உடுப்பிட்டி வர்த்தக சங்கத்தினரதும், பழைய மாணவ சங்கத்தினரதும் உதவிகளைப் பெற்று தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு போதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவருக்குப் பின்னர் திரு. V. T. செல்வரத்தினம் சிறிது காலமும் அதைத் தொடர்ந்து அவரது பணியை ஏற்ற திரு. ந. அனந்தராஜ் அவர்களும், பல சிரமங்களின் மத்தியில் கல்லூரியை முன்னேற்றுவதில் மும்முரமாக முயன்றவர். தனது அனுபவங்களை இம்மலரின் உள்ளே ஒரு கட்டுரையாக ஆக்கித் தந்திருக்கின்றார். சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் காரணமாக யாழ் மாவட்ட மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்த நேரத்தில் திரு. அனந்தராஜ் அவர்களும் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் அவர் காலத்தில் உப அதிபராக இருந்த திரு. S. தில்லையம்பலம் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாலும், அவரது உடல்நலக் குறைபாடு காரணமாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உப அதிபராக இருந்த திரு. கிருஷ்ணபிள்ளை நடராசா அவர்கள் 9.6.1997 முதல் அதிபராகக் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

This is our school
Make it Proud of me
Make me Proud of it.


கி. நடராசா
அதிபர்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சில வரலாற்றுத் தகவல்கள்

1816ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்த அமெரிக்கன் மிஷனரிமார் 1847ம் ஆண்டு உடுப்பிட்டியில் தமது பணியை ஆரம்பித்தனர். வட்டுக்கோட்டை செமினரியில் பேராசிரியராக இருந்த Rev. Edward Cope இங்கு முதலாவது மிஷனரியாக பணியாற்றத் தொடங்கினார். ஆரம்பத்தில் அறுவர் மட்டும் கிறிஸ்தவ அங்கத்தவர்களாக இருந்தனர். மிஷனரிமார் தொடக்க காலத்தில் தமது வழக்கத்தின்படி ஆரம்ப சுதேச மொழிப் பாடசாலைகளை அமைத்து தமது பணிகளைத் தொடங்கினர். உடுப்பிட்டி ஸ்தாபன பாடசாலை, கம்பர்மலை, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, கொற்றாவத்தை, கரணவாய் ஆகிய இடங்களில் தமிழ் பாடசாலைகள் தொடங்கப்பட்டன. இப்பாடசாலைகளை வளர்த்தெடுப்பதற்கும், பராமரிப்பதற்காகவும் சுதேச தொண்டர்கள் அடங்கிய ஒரு கலாசங்கம் 1870ம் ஆண்டு அமைக்கப்பட்டது.


உடுப்பிட்டி ஆங்கில பாடசாலை 1852ம் ஆண்டு அமைக்கப்பட்டு அதற்கு உபாத்தியாராக Charles Jenkins என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவரின் மாதாந்த சம்பளம் $22^{1}/_{2}$ சிலிங்காக இருந்தது. உடுப்பிட்டி திருச்சபையின் வரலாற்றை நோக்குங்கால் இந்தப் பாடசாலையின் வளர்ச்சி மிகத் தெளிவாக விளங்குகின்றது. ஆரம்பதில் இருந்து இங்கு படித்தவர்கள் பணம் செலுத்தியே படிக்க வேண்டிய நிலை இருந்தது. ஆங்கில பாடசாலை பற்றிய குறிப்பிலேயே கட்டணமாக சேகரிக்கப்பட்ட தொகை போன்ற விபரங்கள் காணப்படுகின்றன. சுதேசமொழிப் பாடசாலைகளில் கட்டணம் அறவிடப்பட்டது பற்றிய செய்திகள் காணப்படவில்லை.

ஆங்கில மொழப் பாடசாலை என வளர்ந்த இக்கல்வி நிறுவனத்தில் சில வளர்ச்சிப் பரிமாணங்கள் பற்றிய விபரம் வருமாறு.



பேராயர் கலாநிதி S. ஜெபநேசன்
(தென்னிந்தியத் திருச்சபை,
யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்



1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

ஆண்டு	மாணவர் தொகை		ஆசிரியர் தொகை	வசூலிக்கப்பட்ட பணம்
	ஆண்	பெண்		ரூ. சதம்.
1908	64	03	04	287/39
1909	147	03	03	500/=
1910	59	02	04	412/24
1911	49	01	04	434/43
1915	60	07	03	522/49
1925	60	08	05	1016/45
1929	102	13	09	2725/45
1930	110	17	10	3200/=
1937	108	15	10	3159/=
1941				

1941ம் ஆண்டு தான் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆங்கிலக் கல்லூரி என்ற பெயர் காணப்படுகின்றது. தொடர்ந்தும் இப்பாடசாலை கட்டணம் அறவிடும் பாடசாலையாகவே காணப்பட்டது.

1941ல் ரூபா 4639/=
1943ல் ரூபா 6370/=
1944ல் ரூபா 8500/=
1945ல் ரூபா 12500/=

கட்டணமாக வசூலிக்கப்பட்டது. 1944ம் ஆண்டு கல்வி அமைச்சராக இருந்த C.W.W. கன்னங்கரா இலவசக் கல்வித் திட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தினார். படிப்படியாக பல பாடசாலைகள் இவ் இலவசக் கல்வித் திட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டன, அவ்வகையில் அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் உதவி நன்கொடைபெறும் கல்லூரியாக இலவசக் கல்வித் திட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டது.

1945ம் ஆண்டு 12500/= கல்விக் கட்டணமாக பெற்றுக் கொண்ட இக்கல்லூரி 1946ம் ஆண்டு 2000/= மட்டும் பெற்றுக்கொள்ளப்பட்டதாக அறிக்கை கூறிற்று. 1947ம் ஆண்டு ஒரு சதமாயினும் கட்டணமாக சேர்த்துக் கொள்ளப்பட்டதற்கு குறிப்புகள் எதுவும் இல்லை. 1947ல் இக்கல்லூரியில் 360 ஆண்களும் 56 பெண்களும் கல்வி கற்றனர். ஆசிரியர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்தது. 1951ம் ஆண்டில் 541 மாணவர்களும் 66 பெண்களும் கல்வி கற்றனர். கற்பித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்தது. 1947ம் ஆண்டு கல்வி கற்பித்த ஆசிரியர்களின் பெயர்கள் வருமாறு.

திரு. K. T. ஜோன் (அதிபர்)
திரு. M. அருளானந்தம்
திரு. K. கணபதிப்பிள்ளை
திரு. S. சூசைப்பிள்ளை
திரு. K. C. ஜெக்கப்
திரு. K. M. மத்யூ
திரு. V. சிவப்பிரகாசம்
திரு. C. கிருஷ்ணர்
திரு. K. செந்தில்நாதன்
திரு. V. சிற்றம்பலம்
திரு. S. A. நாதன்
திரு. S. ஆறுமுகம்
திரு. E. R. சபாரத்தினம்
திரு. C. இரத்தினசிங்கம்
திரு. T. ஏபிரகாம்
திரு. N. S. சாமுவேல்
திருமதி S. திருநாவுக்கரசு
செல்வி S. கதிர்காமத்தம்பி
செல்வி T. கிருஷ்ணர்

1960ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளை சுவீகரிக்கும் திட்டத்தினைக் கொண்டு வந்தது. இதன் பிரகாரம் அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் அரசாங்க நிறுவனமாகியது. 1960ம் ஆண்டு 5ம் இலக்க சட்டப்படி கல்வி அதிகாரியின் முகாமைத்துவத்தின் கீழ் இப்பாடசாலை கொண்டவரப்பட்டது. பாடசாலையின் சொத்துக்களை சுவீகரிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் கல்வி அதிகாரிக்கு உரித்தளிப்பதற்கும் இச்சட்டம் வகை செய்தது. அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் கிறீஸ்தவ அதிபர்கள் மாற்றப்பட்டு சைவ அதிபர்கள் நியமிக்கப்பட்டனர் எனினும் திரு. S. S. செல்லத்துரை அமெரிக்கன் மிஷன் கல்லூரிச் சமூகத்தின் செல்வாக்கும் நன் மதிப்பும் பெற்றிருந்ததனால் அவர் தொடர்ந்தும் இக்கல்லூரியின் அதிபராக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தமை குறிப்பிடத்தக்கது. கல்லூரி வளர்ச்சியில் அவரது காலம் ஒரு பொற்காலம் ஆகும்.

திரு. K. T. ஜோன் அதிபர் அவர்களும்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும்

அமரர் திரு. K. T. ஜோன் ஐயா அவர்கள் இப்பாடசாலைக்கு வந்த நாள் தொடக்கம் அதைவிட்டுப் போன நாள் வரையும் மாணவனாகவும், அங்கு ஆசிரியராகவும், தொடர்புடையவனாக இருந்தேன். எனவே அவர் வடமராட்சியில் குறிப்பாக உடுப்பிட்டியிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் எவ்வித தொண்டுகள் ஆற்றினார், மதிப்புடன் வாழ்ந்தார் என்பது பற்றிச் சுருக்கமாகத் தருகிறேன்.


உடுப்பிட்டியையும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களையும் கல்வியறிவில் மேம்படச் செய்த பெருந்தகை திரு. K. T. ஜோன் ஐயா அவர்கள் 1939ம் ஆண்டு ஜனவரி மாதம் உடுப்பிட்டி ஆங்கிலப் பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக வந்தார். அப்போது பாடசாலை ஒரு சிறிய கட்டிடம். ஆங்கில எழுத்து T வடிவத்தில் பாடசாலை வளவின் முன்புறத்தில் இருந்தது. 1A, 1B, 2ம் வருடம் 5, 6, 7, 8 என ஏழு வகுப்புக்களைக் கொண்டிருந்தது.

256 மாணவர்கள், ஏழு ஆசிரியர்கள் கொண்ட ஆங்கிலப் பாடசாலை. பெரிய வகுப்பு கனிஷ்ட பாடசாலைத் தராதரமாகும் (J.S.C.) அப்போதும் பெயரான பாடசாலைதான். அக்கால அரசாங்கப் பாடசாலைகள் அல்லாதனவற்றில் அடங்கும். சிறந்த தரமான ஆங்கிலக்கல்வி பயிற்றுவிக்கப்பட்டது.

பிரித்தானியாவில் ஆரம்ப அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி கொண்டவர்களில் ஒருவரான கலாநிதி கதிர்காமத்தம்பி கந்தையா அவர்களும் இப்பாடசாலையில் ஆரம்பக் கல்விகற்றார் என்ற பெருமையைக் கொண்டது.

இந்தியாவின் ஒரு மாநிலமான கேரளத்திலிருந்து வந்த திரு. K. T. யோன் ஆசிரியர் அவர்கள் வடமராட்சியில் பல பகுதிகளை வாழ வைத்தார். வடமராட்சிக்கும் கேரளவிற்கும் பழைய வரலாறு சம்பந்தமான தொடர்புகள் இருந்தன எனக் கூறுவர்.

ஆசிரியர் இங்குவந்தகாலம் இரண்டாம் உலக மகா யுத்தகாலம். யப்பானிய குண்டுவீச்சு, பிரித்தானியக் காப்பிலி பட்டாளம், யுத்தவாகனத் தளபாடங்கள் என்பனவற்றால் மக்கள் பீதியுற்ற காலம்



இ. பஞ்சநாதன்
(பழைய மாணவரும்
இளைப்பாறிய ஆசிரியரும்)
உப-போஷகர்
பழைய மாணவர் சங்கம்,
கொழும்புக் கிளை.

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 LIGHT DISPELS DARKNESS 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

திருவாளர்கள்

V. R. இராசரத்தினம் – உடுப்பிட்டி
V. சிவப்பிரகாசம் – வல்வெட்டித்துறை
K. கணபதிப்பிள்ளை – தம்பசிட்டி
K. றிச்சேட் சுப்பிரமணியம் – ஊரிக்காடு
C. கிருஷ்ணர் – வல்வெட்டி
S. திருஞானசம்பந்தர் – ஆனைக்கோட்டை
S. தம்பு – அச்சுவேலி
(கிழமையில் 2 நாட்கள் சித்திர ஆசிரியர்)
செல்வி பவளம் கதிர்காமத்தம்பி – இமையாணன்

ஆகிய அதி உன்னதமான ஆசிரியப் பெருந்தகை களுடன் திரு. K. T. ஜோன் அதிபர் பாடசாலையை முன்னேற்றப் பாதையில் பீடுநடைபோட வைத்தார். அன்று தொடக்கம் இன்று வரை வடமராட்சியில் ஹாட்லிக் கல்லூரிக்கு அடுத்த சிறந்த பாடசாலையாகத் திகழ்கிறது. அந்தப் பெருமை அதிபர் ஜோன் அவர்களையே சாரும்.

1942ம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலை தராதரம் (S.S.C.) வகுப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தராதரப் பரீட்சைக்கு அதேவருடத்தில் தோன்றி நான்கு மாணவர்களில் மூவர் திறமைச் சித்திகள் பெற்றனர். அவர்களில் ஒருவர்மட்டும் இப்போது அமெரிக்காவில் வாழ்கிறார்.

பொறியிலாளராக மிளிர்ந்த திரு. குழந்தைவேலு, யாழ் பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற உபவேந்தர் பேராசிரியர் துரைராஜா போன்றவர்கள் அக்காலத்துச் சிறப்புமிக்க மாணவராவர்.

1945ம் ஆண்டு கல்விப் பெரியார் திரு. C. W. W. கன்னங்கரா அவர்களால் இலவச கவ்வித்திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆங்கிலப் பாடசாலைக்கு அருகில் தமிழ்ப் பாடசாலையாக இயங்கிவந்த பாடசாலையும் ஆங்கிலப் பாடசாலையுடன் இணைக்கப்பட்டது. அயற்கிராமங்களில் இருந்து மாணவர் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். எவருக்கும் சேர்ந்து கொள்ள இடம் இல்லை எனக் கூறாது ஆயிரத்து ஐந்நூறாக மாணவர் தொகையைக் கூட்டினார்.

பெற்றார், ஊரார், வசதிபடைத்த பரோபகாரிகளின் உதவியுடன் தற்காலிகமாகப் போதிய கட்டிட வசதிகளை அளித்தார். சுண்ணாம்புக்கல், விறகு மரங்களைச் சம்பாதித்தார். விளையாட்டு மைதானத்தில் சுண்ணாம்புச் சூளை அமைத்து கட்டிடத்திற்குப் போதிய சுண்ணாம்பைப் பெற்றார். பனை மரங்கள், வேறு மரங்களை ஊரவர் கொடுத்து உதவினர். அப்போதைய மாணவர்களின் பெற்றார் அவற்றைப் பாடசாலையில் கொண்டுவந்து சேர்த்தனர். ஒரு வருடத்தில் நிலையான கட்டிடங்களை ஆக்கினார். ஆசாரிகள், செல்லையா, சிவக்கொழுந்து ஆகியவரின் உதவியுடன் சிறப்பான தளபாடங்களைச் செய்வித்தார்.

மிக்க போதிய ஆசிரியர்களையும் தேடி எடுத்தார். திருவாளர்கள் S. S. செல்லத்துரை, நவரத்தினம், ஆறுமுகநாதன் (காரைநகர்), சூசைப்பிள்ளை (இளவாலை) N. R. பாலசிங்கம், T. ஏபிறகாம், R. சிங்கரத்தினம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். ஆசிரியர்கட்கு மிக்க மதிப்பளித்து, ஆசிரியகுழாத்தை உருவாக்கி ஆசிரியர்களை ஒற்றுமையுள்ள விழுமிய குடும்பமாகத் திகழச் செய்தார். மாணவரும் பெற்றாரும் ஆசிரியர்களுக்கு வேண்டிய மதிப்பையும் மரியாதையும் அளித்தனர்.

ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டன. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய துறைகளின் படிப்பு மேலோங்கியது. காலப்போக்கில் உடுப்பிட்டி ஆங்கிலப் பாடசாலை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எனப்பெயர் சூட்டப்பட்டது. திரு. K. T. ஜோன் ஆசிரியர் அவர்கள் முதலாவது அதிபராக முடிசூட்டப்பட்டார். திரு. S. S. செல்லத்துரை அவர்கள் உப அதிபராகவும் மாணவர் ஒழுக்கம், நடத்தை எனபனவற்றிற்குப் பொறுப்பாகவும் இருந்தார்.

நாளொருவண்ணம் முன்னேற்றம் கண்டபடியே பாடசாலை திகழ்ந்தது. மேற்படிப்பிற்காக உயர்தர வகுப்புகளில் கற்க வேறு பிரசித்தி பெற்ற கல்லூரிகளுக்குச் சென்று பயின்று தற்போது பொயிறியலாளர்கள், வைத்தியர்கள், கல்விமான்கள், அரசியலில் உயர் பதவிகளை வகிப்பவர்கள் போன்றவர்களுக்கு அத்திவாரக் கல்வியை மிகச் சிறப்பாக வழங்கியது நம் கல்லூரி என்பதை மறுக்க முடியாது.

மாணவருக்கு ஊக்கத்தையும், ஆக்கத்தையும் அளிக்கத் தவறவில்லை. அதிபர் K. T. ஜோன் அவர்கள் வருடாவருடம் ஒரு பெரிய விழா எடுப்பார். பெற்றார் தினக் கொண்டாட்டம், பரிசளிப்பு விழா, சிறந்த கலை நிகழ்ச்சிகள் என்பனவற்றை நடத்தி தம் மாணவரின் முன்னேற்றத்தை அவர்களின் பெற்றோருக்கு எடுத்துக்காட்டி பெருமை அடையச் செய்வார்.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிறிக்கற், கூடைப்பந்து, மெய்வல்லுனர்ப் போட்டிகள், சாரணியம் என்பனவற்றில் மாணவர் பங்கேற்கப் பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. பாடசாலைக்குக் குழாய் மூலம் நீர் வசதியும் ஏற்படுத்தப்பட்டது. அதிபர், ஆசிரியர்கள் கிராமம் தோறும் சென்று பெற்றார், நலன் விரும்பிகளிடம் பெற்ற பணத்தைக் கொண்டு நீர் வசதி செய்யப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் காரணமாய் இருந்தவர்கள் அதிபர் ஜோன் அவர்களும் அவருடைய ஊக்கம் மிகுந்த ஆசிரியர் குழாமும் ஆகும்.

அதிபரின் வாசஸ்தலம், பாடசாலை வளவினுள் ளேயே அமைந்திருந்தது. அது அவருக்கும், ஆசிரியர்கட்கும், மாணவருக்கும்

வசதியாக அமைந்தது. அவரது கம்பீரமான தோற்றம், சிரித்த முகம், அன்பான சுபாவம் எல்லாம் பாடசாலையின் எழுச்சிக்குத் துணை செய்தன. ஆளுமைமிக்க இவ்வதிபரைப் பெற்றாரும், ஊராரும் நன்கு மதித்து வரவேற்றனர். உடுப்பிட்டி இமையாணன், கரணவாய் வடக்கு, கரணவாய் தெற்கு, நவிண்டில், பொலிகண்டி, கொற்றாவத்தை, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, சமரபாகு, கம்பர்மலை, ஊரிக்காடு, கெருடாவில், தொண்டைமானாறு ஆகிய கிராமங்களில் அதிபரை அறியாதவர் அக்காலத்தில் இல்லை.

மாணவர் ஒவ்வொருவரின் பெயரையும் அறிந்தவர். பெயர் சொல்லியே அழைப்பார், அவர்கள் குடும்பங்களில் நடைபெறும் சுகதுக்கங்களில் பங்குகொள்வார். சுற்றாடலில் உள்ளவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். நோய்வாய்ப்பட்டவர் சிகிச்சைபெற வழிமுறைகளைக் கூறி உதவுவார். தானே ஒரு வைத்தியராகச் சிறுகாயங்கள், தேள் கடி என்பனவற்றிற்குச் சிகிச்சை அளிப்பார்.

ஊரவர் மத்தியில் நற்பண்புகளை வளர்க்கக்கூடிய பிரசங்கங்கள், படக் காட்சிகள், யோகாசனப் பயிற்சிகள் என்பனவற்றை ஒழுங்கு செய்வார். கமச் செய்கை, கோழி வளர்ப்பு, நல்ல இன ஆடு, மாடு வளர்ப்பு போன்றவற்றில் கிராமவாசிகள் அறிவுபெற வழிவகுப்பார். கிராமத்தைச் சுத்தமாக வைத்திருத்தல், தெருக்கள், ஒழுங்கைகள் செப்பனிடல், கிணறுகள், மலசல கூடங்கள் அமைத்தல் என்பனவற்றையும் கவனித்தார். அவர் காலத்தில்தான் உடுப்பிட்டியில் தபால் கந்தோர் ஆரம்பிக்கப்பட்டது.

அவர் ஒரு கிறிஸ்தவர். உடுப்பிட்டி தேவாலயத்தின் மிகப் பெரியவர். பெரிய தூண் என்பர். ஆனால் ஏனைய சமயங்களை வெறுக்கவும் இல்லை, குறைவாக நினைத்ததும் இல்லை. அவர் காலத்தில் உடுப்பிட்டித் தேவாலயம் மிகப் பொலிவுடனும், புகழுடனும் திகழ்ந்தது. சாதி, மத பேதமின்றி மாணவரையும், ஊரவரையும் வழிநடத்திய செம்மலவர்.

இப்படி எல்லாம் நடைபெறச் செய்வதற்கு அவருக்கு உறுதுணையாக இருந்தவர் திருமதி அ. யோன் ஆவர். அதிபரை ஒத்த மனப்பாங்குடன் மகிழ்வான இன்முகத்துடன் எம் மாணவரையும் தம்பிள்ளைகளாக மதிப்பவராக இருந்தார்கள். அதிபரையும், அம்மாவையும் போற்றி வணங்குபவர்களாகவே மாணவரும், ஊராரும் இப்போதும் இருக்கின்றனர்.

கேரளத்திலிருந்து ஆசிரியப் பெரியோர்கள் வந்து விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பித்து கல்லூரியின் எழுச்சிக்காகப் பாடுபட்டனர். இதுவும் அதிபரது முயற்சியே. திருவாளர் K. M. மதியூ, K. C. ஜேகப், E. J. பிலிப், C. இராகவன் ஐயர் ஆகிய ஆசிரியப் பெருந்தகைகள் சிறந்த கல்வியூட்டினர். திரு P. B. லீலவன்ச ஆசிரியர் அவர்கள் இங்கு வந்து சிங்களம் ஒருபாடமாகக் கற்பித்ததும் எமது அதிபர் காலத்திலேயே.

திரு. K. M. மதியூ, சாரண ஆசிரியராகவும், திரு. P. B. லீலவன்ச உதவி ஆசிரியராகவும் நூற்றுக்கு மேற்பட்ட சாரணர்களை கொண்ட குழுவை நிறுவினர். திறம்படக் கடமையாற்றி அகில இலங்கைச் சாரணர் விழாவில் தொடர்ந்து மூன்று முறை வெற்றிக் கொடியைப் பெற்றனர்.

ஏறத்தாழ இருபது வருடங்களில் அதிபர் ஆற்றிய நற்காரியங்கள் பல தமக்குப்பின் குறைவின்றி வினைத்திறனுடன் செயற்படக்கூடிய ஓர் அதிபராக திரு. S. S. செல்லத்துரை அவர்களையும் கல்வியில் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கக் கூடிய சூழலையும் விட்டுச் சென்றார். கல்லூரி தொடர்ந்தும் பெருமையுடன் மிளிர்கிறது.

அதிபர் திரு. K. T. ஜோன் ஐயா அவர்களையும் திருமதி ஜோன் அம்மா அவர்களையும் இச்சூழலிலுள்ள நாம் தெய்வங்களாக உயர்த்தி வைத்துள்ளோம். அதிபரது உபதேசங்கள் தெய்வ வாக்குகளாக அமைகின்றன.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

என்னும் பொய்யா மொழிப் புலவரின் கூற்றுக்கொப்ப வாழ்ந்தவர் நம் அதிபர். பார்வையிலே எளியவராக, பண்பிலே தெய்வமாக, பணியிலே தன்னலமற்றவராகத் திகழ்ந்த K. T. ஜோன் அவர்களை அதிபராகப் பெற்ற நாம் பெரும் பாக்கியசாலிகள்.

நாம் அமைக்கும் கல்வி, நாடு முழுவதற்கும் பொதுவாக விளங்கும் கல்வியாக ஆன்மீகத்தைக் கொண்டதாகாவும், உலக நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். மேலும் தேசியப் பண்பாட்டிற்கு ஏற்றதாகவும், வாழ்கையில் கடைப்பிடிக்கக் கூடிய பண்பாட்டுக் கல்வியாகவும் இருப்பது அவசியம்.

– சுவாமி விவேகானந்தர்

அமெரிக்கன் மிஷன் கல்லூரி
என் நினைவில்....

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே

என்பதற்கமைய பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகளை எதிர்காலச் சிற்பிகளாகச் செதுக்கி, எட்டுத்திக்கிலும் புகழ்பரப்பி, மகுடமணிந்து மாண்புடன் வீற்றிருக்கும் எம் கல்லூரி மாதாவாகிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் பெற்றதாய், பிறந்த பொன்னாட்டோடு ஒப்பிடுகையில் இம்மியளவும் குறைந்ததல்ல. வடமராட்சியில் பல அறிஞர்களை உருவாக்கிய பாசறை என்ற பட்டத்தோடு திகழ்கின்ற கிராமம் உடுப்பிட்டி. அக்கிராமத்தின் இருகண்கள் போன்று இருகல்லூரிகள் அமெரிக்கன் மிஷனரிமாரால் அமைக்கப்பட்டன. எமது கல்லூரி ஆரம்பத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் ஆங்கிலக் கலவன் பாடசாலை என்ற திருநாமத்தோடு திகழ்ந்தது. 1852ம் ஆண்டு எம் பாடசாலை அமைக்கப்பட்ட பின் பெண்களுக்கு விடுதிப் பாடசாலை தேவையெனக் கருதி மகளிர் கல்லூரிக்கும் அத்திவாரமிட்டனர். இக்கல்லூரியை அமைப்பதற்கு காணி வழங்கியோர் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர்கள்.

நான் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 5ம் வகுப்பு சித்தியடைந்து 1945ம் ஆண்டில் இங்கு ஆறாம் வகுப்பில் சேர்ந்தேன். 26 ஆங்கில எழுத்துக்களைத் தவிர கடுகளவேனும் ஆங்கில அறிவற்ற என்போன்றோர் ஆறாம் வகுப்பு விசேட (Special) வகுப்பிற் சேர்க்கப்பட்டனர். தமிழ்மொழி தவிர்ந்த அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்பட்டன. ஆங்கிலம் கற்பித்த திரு. சிற்றம்பலம், திரு. செந்தில்நாதன், திரு. தில்லை நடராஜா, திரு. N. R. பாலசிங்கம் எம் முன்னைய அதிபர் K. T. ஜோன் ஆகியோரின் கற்பித்தலால் ஆங்கில அறிவு "ஆல்போல் தழைத்து, அறுகுபோல்" வேரூன்றியது.

திரு. K. T. ஜோன் அதிபராகவும், திரு. S. S. செல்லத்துரை அவர்கள் உப அதிபராகவும் எண்கணித இரசாயனவியல் ஆசிரியராகவும், திரு. றோபேட் நவரட்ணம் விளையாட்டுத்துறை ஆசிரியராகவும், கேரள நாட்டைச் சேர்ந்த திரு. K. M. மத்தியூ தாவரவியல் ஆசிரியராகவும், திரு. பிலிப்ஸ் பௌதீகவியல் ஆசிரியராகவும், பண்டிதர் வேலுப்பிள்ளை தமிழ்மொழி இலக்கிய ஆசிரியராகவும் இருந்து கல்வி போதித்த முறை இன்றும் "கணீரென" என் காதுகளில் ஒலிக்கின்றது. எனது கல்வி 1953இல் க.பொ.த. சா/த. சித்தியடையும் வரை இக்கல்லூரியிலேயே தொடர்ந்தது.



செல்வி சீதா வேலுப்பிள்ளை
(பழைய மாணவியும் முன்னைநாள் ஆசிரியையும்)
கனடா

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 LIGHT DISPELS DARKNESS 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

கல்லூரியின் பரிசளிப்பு விழா ஒரு தனிரகம். ஆசிரியர்களின் கலைப்படைப்புக்கள், மாணவ மாணவியரின் நடனங்கள், நாடகங்கள் மற்றும் இன்னோரன்ன நிகழ்ச்சிகளும் மேடை ஏற்றப்பட்டன. வருடா வருடம் பரிசில்களும் வழங்கப்படும். போட்டிகளின்போது, போட்டியாளர்களைத் தெரிவு செய்வதற்கான சிறப்புத் தேர்ச்சிபெற்ற நடுவர்கள் வேறு முன்னணிப் பாடசாலைகளிலிருந்து வரவழைக்கப் படுவர். அமரர் பூரணம்பிள்ளை அவர்கள் ஹாட்லிக் கல்லூரியிலிருந்து ஆங்கில நிகழ்வுத் தேர்வுக்கு வருகை தந்தமை பசுமையான நினைவாக நெஞ்சில் நிழலாடுகின்றது.

சாரணியத்தில் மிகுந்த அக்கறை கொண்ட திரு. K. M. மத்தியூ, திரு. கோ. செல்வநாயகம் போன்றோரை மறக்க முடியாது. திரு. K. M. மத்தியூ காலத்தில் சர்வதேச மட்டத்தில் சாரணியப் பாசறையில் பங்கு பற்றுவதற்காக திரு. பாஸ்கரன் தேர்ந்தெடுக்கப் பட்டமை கல்லூரிக்கு அழியாப் புகழை ஈட்டித்தந்தது. விளையாட்டுப் போதனாசிரியராக திரு. ஜெயராஜா அவர்களின் காலத்தில் எமது மாணவர்கள் பலமுறை உடற்கல்வி போட்டிகளில் பங்குபற்றி கேடயங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராசா, அணு ஆராய்வில் பங்கு கொண்ட திரு. கந்தையா போன்றோர் எம் கல்லூரி பிரசவித்த ஆடகப் பொற் சிகரங்கள்.

நாம் மாணவராக இருந்த காலத்தில் மகளிர் கல்லூரியில் கல்விபயின்ற சில மாணவிகள் கடைசி பாட வேளைகளில் தமது கல்லூரியில் போதிக்கப்படாத பாடங்களை எம் கல்லூரியில் வந்து பயின்றனர். எமது காலத்தில் பெண்பிள்ளைகள் ஆறாம் வகுப்பிலிருந்து சேர்க்கப்பட்டனர். பின்னர் இந்நிலையானது எட்டாம் வகுப்புக்கும், க.பொ.த. உ/த வகுப்புக்கும் என பரிணாம வளர்ச்சியடைந்தது. இன்றும் க.பொ.த. உ/த வகுப்பில் பெண்கள் கலை, விஞ்ஞானம், கவின்கலை ஆகிய துறைகளில் இணைந்து பயில்கின்றனர். எம்கல்லூரியில் சிறந்த பௌதீகவியல் இரசாயனவியல் ஆய்வு கூடங்கள், வடமாராட்சியிலேயே சிறந்த நூலகம் என்பன இருந்தன. எம் பாடசாலைக் காணி கட்டிடங்களிற்கே போதுமானதாக இருப்பதனால், மைதானம் சற்றுத் தூரத்தில் அமைந்திருக்கின்றது. தற்போது அம் மைதானம் விஸ்தரிக்கப்பட்டு குறுகிய தூரத்தில் செல்லக் கூடிய ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளது. மேலும் கல்லூரிக் கிணறு ஆழமாகவும், உவர்நீரைக் கொண்டதாயுமிருந்ததால் சண்முக வளவுக்கருகிலுள்ள போதகரின் வீட்டுக் கிணற்றிலிருந்து குடிநீர் குழாயினாற் பெறப்பட்டது. எமது கல்லூரியில் பயின்ற மாணவிகளும் சற்றும் சளைத்தவர்கள் அல்லர். தையற்கலை, மனைப்பொருளியல் போன்ற போட்டிகளில் வட்டார, மாவட்ட அளவில் பங்கு கொண்டனர். அதுமட்டுமன்றி வலைப்பந்தாட்டம், பாட்மின்ரன் முதலிய விளையாட்டுக்களிலும் பங்குபற்றினர். எம் மாணவச் செல்வங்களின் விளையாட்டுச் சாதனைகள் தமிழின் வார்த்தைகளுக்குள் சிறைப்பிடிக்க முடியாத சிறப்புப் பெற்றவை.

என் மாணவப் பருவம் நிறைவெய்தியபோது அறிவூட்டிய அன்னையின் நிழலிலேயே ஆசிரியராகப் பணிபுரியும் பேறு கிடைத்தது. 1974 - 1979 வரை உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய காலங்களில், பல்வேறுபட்ட அதிபர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நான் வந்த போது திரு. R. திலகரட்ணம் தொடர்ந்து திரு. K. குணரட்ணம், திரு. நவரட்ணம், திரு. பொன். கணேசன், திரு. மயில்வாகனம், திரு. றொபேட் இறுதியில் திரு. சச்சிதானந்தம் ஆகிய 7 அதிபர்களுக்குக் கீழ் 5 வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தேன். திரு. மயில்வாகனம், சச்சிதானந்தம் தவிர்ந்த ஏனைய அதிபர்கள் காலமாகி விட்டார்கள்.

திரு. K. T. ஜோன் அவர்கள் அதிபராகிய போதே எம் கல்லூரியின் பெயர் அமெரிக்கன் மிஷன் கல்லூரி என அழைக்கப்பட்டது. திரு. S. S. செல்லத்துரை திரு. றொபேட் நவரட்ணம், திரு. ஏப்ரகாம் ஆகியோரும் அதிபராக இருந்ததாக அறிந்தேன். நான் 1979இல் அயற் கல்லூரிக்கு மாற்றலாகிப் போனேன். அங்கு 1991 வரை கடமையாற்றிய காலத்தில் எமது கல்லூரியுடனான தொடர்புகளைச் சிறப்புடனே பேணி வந்தேன்.

1987இல் இலங்கை அரசபடையானது "ஒபரேசன் லிபரேசன்" எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. இதன்போது தொண்டமானாறுப் பகுதியூடாகப் படையினர் வடமாராட்சியினை முற்றுகை இட்டனர். எமது மக்கள் வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். போர்க்காலப் படையெடுப்புக்களின் போது ஆலயங்கள், கல்விச்சாலைகள், புனிதச் சின்னங்கள் என்பன திட்மிட்டு அழிக்கப்படுவது போரியல் வரலாறு புடம்போட்டுக் காட்டும் நிஜம். இந்த வகையில் யூலை 11ம் திகதி நள்ளிரவு மனிதாத்மாக்களின் மனங்களைப் புண்படுத்திய எங்கள் அறிவாலயமும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. அனைத்துக் கட்டிடங்களும் ஆதிக்க வெறியின் அடையாளச் சின்னங்களாயின. தளபாடங்கள், ஆய்வுகூடங்கள், நூல்கள், ஆவணங்கள் எல்லாம் "சரித்திர நாயர்"களின் சாணக்கியத்தால் சாம்பல் மேடாகியது. கோடி அறிவு கொட்டித்தந்த கோபுரத்தை, ஆசை ஆசையாய் எமை வளர்த்த ஆலயத்தை தீயின் நாக்குகள் தின்று தீர்த்தன. இன்று நினைத்தாலும் எம் நெஞ்சம் கொதிக்கிறது. காலங்கடந்தென்ன...? விழியில் கண்ணீர் கசிகிறது.

சாம்பலில் சங்கமித்த கட்டிடங்கள் மீண்டும் புதிய மிடுக்கோடு பூத்தாலும், அழிந்துவிட்ட ஆவணங்களோடு எமது கல்லூரியின் வரலாறு மற்றும் சாதனங்கள், சேவையாற்றிய அதிபர் ஆசிரியரின் விபரங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம். இன்றும்

கல்லூரியின் வரலாறும் கர்ணபரம்பரைக் கதையாகி விட்டதே என்ற கவலை தோய்ந்த கண்ணீரே மிகுதியாக உள்ளது. எமது கல்லூரியில் கல்வி கற்றோர், அயலவர்கள், மிஷனரிமார் போன்றோருடன் கலந்துரையாடிப் பெற்ற வாய்மொழிச் சான்றுகளைக் கொண்டே வரலாற்றை வரைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இலங்கை அரச படைகளுக்கு பின்பு இந்திய அமைதி காக்கும் படையின் செயற்பாடுகள் கல்லூரியின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு பாதகமான சூழலையே தோற்றுவித்தன. கல்லூரி வளவில் ஆடுகள் இறைச்சிக்காக உரிப்பதும், ஆயுதத்துடன் வாசலில் காவல் நிற்பதும் தொடர்ந்தன. காவலுக்கு நின்ற படைவீரனொருவனின் துப்பாக்கி தவறுதலாக வெடித்து இருபாடசாலை மாணவ மாணவியரும், அருகிலுள்ள சந்தை மக்களும் சிதறி ஓடிப் பின்பு படையினரால் உண்மை எடுத்துரைக்கப்பட்டு சமாதானப்படுத்தப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது. இதைப் போலவே உடுப்பிட்டிச் சந்திக்கருகாமையில் போக்காலை ஒழுங்கையில் விமானக் குண்டுதாக்கி மரணமானதும் ஞாபகத்திலுள்ளது.

இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் எமது கல்லூரி முற்றாக இடம்பெயர்ந்து சண்முகவளவில் கொட்டில்கள் அமைத்தும், திரு. பொ. வியாகேசு அவர்களின் "பீக்கன்" கல்வி நிலையத்திலும், அயல் வீடுகளிலும், திரு. தில்லையம்பலம் ஆசிரியர் இல்லத்திலும் கற்றல், கற்பித்தல் நிகழ்வுகள் தொடர்ந்தன. அமைதிப்படையின் அட்டகாசத்தினால் மக்களின் மனங்களில் அச்ச உணர்வே அரங்கேறியதால் அவர்கள் தம்பிள்ளைகளை வேறு கல்லூரிகளில் இணைப்பதில் ஈடுபாடு காட்டத் தலைப்பட்டனர். இவ்விறுக்கமான சூழ்நிலைக்கு முகங்கொடுக்கத் தயக்கமுற்ற அதிபர் திரு. சச்சிதானந்தம் திருமலைக்குச் செல்ல ஆயத்தமானார். இந்நிலையில் எம்கல்லூரியைப் பொறுப்பெடுக்க எந்த அதிபரும் விருப்பம் காட்டவில்லை. எனினும் எம்பழைய மாணவனும், முன்னைநாள் கல்லூரி நூலகரும், அப்போதைய யாழ் மாவட்டக் கணித ஆலோசருமாகிய திரு. க. சிதம்பரப்பிள்ளை "சிங்கத்தினை அதன் குகையிலேயே சந்திப்பது" என்ற தீரத்தோடு கடமையைப் பொறுப்பேற்றார். துணைவேந்தர் துரைராசாவின் உதவியோடு பழைய மாணவர் சங்கத்தினை உருவாக்கி தலைமைப் பதவியையும் தாமே ஏற்று நடாத்தினார்.

வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துவாழும் எம் பழைய மாணவர்களின் உதவியைப் பெறுவதெனத் தீர்மானித்து கனடாவில் வாழும் அ. வசந்தகுமார், வை. சொர்ணலிங்கம் போற்றவர்களுடன் தொடர்பு கொண்டு கல்லூரியின் அவலத்தினை கனதியான கருத்துக்களினால் எடுத்துரைத்தார். இதன் பயனாகக் கிடைத்த நிதி உதவியால் சண்முகவளவு விளையாட்டுத் திடலிலும், போதகர் வளவிலும் திரு. தில்லையம்பலம் ஆசிரியர் இல்லத்திலும் போதுமான கொட்டில்கள் அமைக்கப்பட்டு கற்றல், கற்பித்தல் நிகழ்வுகள் தொடர்ந்தன. இக்காலகட்டத்திலும் விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலத்தினப்போட்டி போன்ற யாவற்றிலும் பங்கு பற்றினர். சிலவேளைகளில் படையினரால் அதிபர் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவார். "பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது" என்ற பழமொழிக்கு அமைவாகவே அதிபர் அந்நேரங்களிலே செயற்பட்டார். வான் தாக்குதல்கள் நிகழ்ந்த காலங்களில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாதுகாப்பதில் பெரும்பாடுபட்டார்.

திரு. க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றபோது அவரது மாணவனும், கல்லூரியின் பழைய மாணவனுமாகிய திரு. அனந்தராஜ் அதிபராகப் பதவியேற்றார். இராணுவ முகாம்கள் அகற்றப்பட்ட போதும், பலாலியிலிருந்து எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் என்பன நிகழ்ந்த வண்ணமேயிருந்தன. துணைவேந்தர் துரைராசா தமது யாழ் பல்கலைக்கழக பதவியில் இருந்து கொழும்பு செல்லவேண்டி ஏற்பட்ட போது, கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், அயற்கிராமங்களிலுள்ள சனசமூக நிலையங்களும் ஒன்றிணைந்து சண்முகவளவுத் திடலிலே 20-02-94 அன்று பிரியாவிடை நிகழ்வொன்றை ஒழுங்கு செய்தன. வல்லைவாஸிய பிள்ளையார் கோயிலில் இருந்து சுமக்கமுடியாத மாலைகளுடன் பாரியார் சகிதம் இன்முகத்துடன் அவர் நடந்த காட்சி இன்றும் மனக்கண்முன் மலர்கின்றது. அவ்வருடம் வைகாசி மாதக் கூட்டத்திற்கு வருவதாகச் சொல்லிச் சென்ற "மாமனிதனின்" மரணச்செய்தி 11-06-94 அன்று எம்செவிகளில் ஈயங்காய்ச்சி ஊற்றியது. கல்லூரி சோபை இழந்தது. சூரியனை இழந்த சோகம் சொல்லில் அடங்கக்கூடியதா...?

1992, 1993 காலப்பகுதியில் பாடசாலையை முற்றாக பாடசாலை வளவில் இயங்கச் செய்ய வேண்டும், இடிபாடுகள் யாவும் அகற்றப்பட்டுக் கொட்டில்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கல்வித் திணைக்களத்தின் வற்புறுத்தலால் புனருத்தாரண நிதியை உபயோகித்து இடிபாடுகள் அகற்றப்பட்டு 1994ன் இறுதியில் பாடசாலை வளவிலேயே எம்கல்லூரி முற்றாக இயங்கியது.

1995, 1996ம் ஆண்டில் யாழ் நிலத்தில் மீண்டும் படையினரின் படையெடுப்பு படிப்படியாக நிகழ்ந்தது. 1996 வைகாசி மாதமளவில் வடமராட்சிக்கும் பரவியது. இதனால் அதிபர் அனந்தராஜ் வன்னிப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து செல்ல, உப அதிபரான திரு. ச. தில்லையம்பலம் அவர்கள் பதில் அதிபராகப் பொறுப்பினை ஏற்றார். பதில் அதிபர் பதவியை தொடர முடியாத வகையில் இருதயநோய் வந்ததால் மருத்துவமனையில் சில மாதங்கள் சிகிச்சை பெற்றார். இக்காலங்களில் திரு. தங்கராஜா அவர்கள் அதிபரின் கடமையைச் செய்து வந்தார்.

சூரியனில்லாத வானம் போலவும், மன்னனில்லாத நாடு போலவும், சாரதியில்லாத வாகனம் போலவும், இலக்கற்ற அம்பு போலவும் தடுமாறிக் கொண்டிருந்த எம் கல்லூரியின் நிலைகண்ட பழைய மாணவர் சங்கம் கல்வித் திணைக்களத்தினை நச்சரித்ததன் பலனாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் உப அதிபராகக் கடமை புரிந்த திரு. கி. நடராசா புதிய அதிபராக நியமிக்கப்பட்டார்.

காய்ந்திருக்கும் வேருக்கு நீரூற்றி பின்தான் கனிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்ற கொள்கைக் கிணங்க அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் அறிவின் அறுவடையை சிறப்புற நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். புதிய இருமாடிக் கட்டிடம், மேற்குப்புறமாகக் கட்டப்பட்டு 6-7-1998 இல் G.T.Z இனால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் நவீன மலசலகூடம், சரஸ்வதி சிலையை மையமாகக் கொண்ட தடாகம், நூலகம், கணனி அறை, செயற்பாட்டறை, சிறுவர் பூங்கா, குடிநீர் விநியோகம் என்றவாறாக வசதிகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது. சிற்பியின் கையில் கிடைக்கும் போதுதான் கல் சிலையாகிறது என்பதற்கேற்ப கல்லூரி புதிய மெருகேறிக்கொண்டிருக்கிறது.

பாடசாலையின் வளாச்சியில் கண்ணும் கருத்துமாக பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சபை ஆகிய இரண்டும் செயற்படுகின்றன என்றால் மிகையாகாது.

போர் மேகங்கள் கலையாத நிலையிலும் கல்லூரி புதுப்பொலிவுடன் விளங்குவதைப் பார்க்க மனம் பூரிக்கின்றது. எமது கல்லூரிக்கு கலையரங்கம் (Auditorium) கட்டாய தேவையாக உள்ளது. அது நிறைவேற சகலரினதும் ஒத்துழைப்பும், ஆண்டவனின் அருளும் கிடைக்க வேண்டும்.

புதிதாக வேறு பாஷையைக் கற்றுக் கொள்பவன், தான் பேசும் போதெல்லாம், அப்பாஷையின் வார்த்தைகளை உபயோகித்துத் தனது விற்பத்தியை வெளியே காட்டிக் கொள்வான். அந்தப் பாஷையை நன்றாய் கற்றுக் கொண்டவனோ அதன் வார்த்தைகளை, தன்னுடைய தாய்ப் பாஷையில் சம்பாசிக்கும் போது உபயோகிப்பதில்லை. சமய வாழ்க்கையில் வெகுதூரம் முன்னேற்றமடைந்தவர் களுடைய சுபாவமும் இப்படிப்பட்டது. அவர்கள் இப்படிப்பட்டவர்களே.

– ஸ்ரீ ராமகிருஷ்ணர்

குடும்பம் ஒரு தருவைப் போன்று. அதற்கு வேர் மனைவி; அடிமரம் கணவன்; கிளைகள் மக்கள்; இலைகள் அன்பு; மலர்கள் கருணை; பழங்கள் தருமம். பல பல பறவைகட்கும் மனிதர்கட்கும் நிழல் தந்து ஒரு உறைவிடமாக உதவுவது போல், இல்லறத்தான் எப்போதும் பிறருக்கு உதவியாக இருக்க வேண்டும். மனத்தாலும் வாக்காலும் உடம்பினாலும் பிறர்க்கு நன்மை செய்.

– திருமுருக கிருபானந்தவாரியார்.

சிரஞ்சீவியாக வாழும் என் கல்லூரி

என்னை ஒரு முழுமை பெற்ற மனிதனாகவும், ஆற்றலுள்ள ஒரு நிர்வாகியாகவும், நாடறிந்த படைப்பிலக்கிய வாதியாகவும் உருவாக்குவதற்குக் கால்கோளாக இருந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு இருபத்தைந்து ஆண்டுகளின் அதிபராகவும், உடுப்பிட்டிக் கொத்தணி அதிபராகவும் (Cluster Principal) பேர் ஊன்ற வைத்த அந்த நாளை எப்படி மறக்க முடியும்?

அந்தநாள்...! 1992 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 2 ஆம் நாள். என் வாழ்க்கையின் புதிய ஒரு அத்தியாயத்தில் சுவடுகள் பதித்த நாள்.

ஓடியும், விளையாடியும், பாடியும், ஆடியும் படித்தும் திரிந்த அந்தக் கல்லூரியிலேயே, அதுவும் எனக்குக் குருவாக இருந்த ஆசிரியப் பெருந்தகைகள் அதே கல்லூரியிலேயே கற்பித்துக் கொண்டிருந்த காலப் பகுதியிலேயே அந்தப் புனிதமான அறிவாலயத்தில் அதிபராக வருவது என்பது வாழ்வின் மறக்க முடியாத ஒன்றல்லவா?

பருத்தித்துறைக் கொத்தணியின் பிரதி கொத்தணி அதிபராகவும், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் அதிபராகவும் இருந்து சேவையாற்றிக் கொண்டிருந்தபோது, அப்போதைய யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் அவர்கள் ஒருநாள் என்னை அழைத்து,

> "தம்பி!... உம்மை உடுப்பிட்டிக்கு அதிபராக நியமனம் செய்யப்போறன்... வடமராட்சியிலே அதுவும் ஒரு பெரிய கல்லூரிதானே... அங்கை போய் இன்னும் உம்முடைய திறமையைக் காட்டி அந்தக் கல்லூரியைப் பழைய நிலைக்கு உயர்த்தி வைக்க வேணும்..."

அவர், சிரித்துக் கொண்டே, எனக்குரிய இடமாற்றக் கடிதத்தையும், உடுப்பிட்டிக் கொத்தணி அதிபருக்கான நியமனக் கடிதத்தையும் என்னிடம் தந்தபோது அதிர்ச்சியாகவும், ஒருவித மகிழ்ச்சியாகவும் இருந்தது.

அந்த இரு கடிதங்களையும் கையில் வைத்துக்கொண்டே, திரும்பத் திருப்பப் பார்த்துக் கொண்டிருந்தேன்.


> "என்ன தம்பி ஆனந்தராஜ்! கடுமையாக யோசிக்கிறீர் போல..."

அவர் வழமையான கலகலப்புடன் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்.



ந. அனந்தராஜ்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு கிழக்கு மாகாணம்
திருகோணமலை
(பழைய மாணவனும், முன்னைநாள் அதிபரும்)

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்



1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

"அப்படி ஒன்றுமில்லை சேர்...எனக்குப் படிப்பித்த ஆசிரியர்கள் சிலர் இப்பவும் அங்கையே படிப்பிக்கினம். அதுவும் அந்த ஊரவர்கள் என்னை ஏற்றுக் கொள்வார்களா?"

எனது கேள்வியின் அர்த்தம் அவருக்கும் புரிந்திருக்க வேண்டும். அவர் பலமாகச் சிரித்துக்கொண்டே,

"தம்பி!...பெரிய இடத்திலேயேயிருந்துதான் உமக்கு அழைப்பு வந்திருக்கிறது. ஆர் தெரியும் தானே... உங்கடை பழைய மாணவர் சங்கத் தலைவர் பேராசிரியர் துரைராசா தான் உமது பெயரைக் குறிப்பிட்டு அதிபராக நியமிக்கச் சொல்லியிருக்கிறார்... அவருடைய வாயிலே இருந்து வந்தது எனக்கும் வலு சந்தோசமடா தம்பி... பயப்படாமல் பொறுப்பேற்றுச் செய்யும். என்ன தேவையோ அதை நான் செய்து தருவன். இனிமேல் தான் உடுப்பிட்டிக்கு நல்ல காலம் வரப்போகுது..."

அதற்கு மேல் என் மனதில் இருந்த அச்சம், சந்தேகம் எல்லாமே பறந்து போய்விட்டன. அவர், ஆசி கூறித்தந்த இடமாற்றக் கடிதத்தையும், உடுப்பிட்டிக் கொத்தணி அதிபர் நியமனக் கடிதத்தையும் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினேன்.

அங்கிருந்து வீடு வந்து சேரும் வரைக்கும் ஏதோ ஒரு இனம் புரியாத மகிழ்ச்சியும், கற்பனையும் என்னை முழுமையாக ஆட்கொண்டிருந்தது.

அன்று இரவே, எனது சைக்கிளில் ஏறி நவிண்டிலில் உள்ள "ஆர்பி சேர்" வீட்டை அடைந்தேன். "ஆர்பி" என்று செல்லமாக பௌதிக உலகில் பிரசித்தமானவர்தான் திரு. ஆர் பொன்னம்பலம் அவர்கள். எனது பௌதிகவியல் பாட குருவாக இருந்து என்னை அறிவுலகத்திற்கு இட்டுச் சென்ற பெருந்தகை. இன்றும் எமது கல்லூரியிலேயே ஆசிரியராகக் கற்பித்துக் கொண்டிருந்தார். அந்த ஆசானிடம் இடமாற்றத்தைக் கூறி ஆசிபெறச் சென்றபோது, அவரது முகம்மலர்ந்த வாழ்த்துரையும், ஆசியும் எனக்கு ஒரு நெஞ்சுரத்தைக் கொடுத்தது போல் இருந்தது.

அவர் தந்த மனோதைரியம், என்னை பெப்ரவரி இரண்டாம் நாள் எனது கல்லூரி இயங்கும் சண்முகா வெட்டை மைதானத்திற்கு இழுத்துச் சென்றது.

அழகான கட்டிடங்கள், ஆயிரக் கணக்கான நூல்கள் நிறைந்திருந்த நூலகம், முழுமையான வசதிகளைக் கொண்டமைந்த இரசாயனவியல் ஆய்வுகூடம், உயிரியல் ஆய்வுகூடம், பௌதிகவியல் ஆய்வு கூடம், தொழில்நுட்ப அறைகள், சாரணிய அறை, அழகியல் கூடம் என்று வானளாவி ஓங்கி நின்று ஒளிபரப்பிய எனது கல்லூரியின் பழைய தோற்றம், அப்பொழுது என் மனக்கண்முன் தோன்றி மறைந்தது.

"ஒளி இருளை அகற்றும்" என்ற அந்த மகுட வாசகத்திற்கமைய எத்தனை மேதைகளையும், விஞ்ஞானிகளையும், விளையாட்டு விற்பன்னர்களையும், நீர்வாகிகளையும் உருவாக்கித்தந்த எனது கல்லூரியின் அன்றைய அந்தத் தோற்றத்தை நினைத்துப் பார்த்ததும், நெஞ்சில் ஒரு சுமை அழுத்தியது போல் இருந்தது.

இன்று போரின் அனர்த்தங்களினால் முழுமையாகவே அழிக்கப்பட்டுச் சின்னாபின்னப் படுத்தப்பட்டு முகவரி இழந்து அகதியாக்கப்பட்ட நிலையில், நாங்கள் விளையாடித் திரிந்த சண்முகா வெட்டையில் எனது **"கல்லூரிகள்"** அங்கொன்றும், இங்கொன்றுமாகக் காணப்பட்டன.

எல்லாமே வெறும் ஓலைக் கொட்டில்கள். சண்முகா வெட்டை மைதானத்தில் மூன்று கொட்டில்கள், உப அதிபர் தில்லையம்பலம் சேர் வீட்டில் இரண்டு கொட்டில்கள், நீலகண்டன் சேரின் வளவில் இரண்டு கொட்டில்கள், அயல்வீடுகளில் ஆறு வகுப்புகள், கொலமன் சேர் வீட்டிலும், எதிர் வீட்டிலுமாக இரண்டு வகுப்புகள். வியாகேசுவின் பீக்கன் ஸ்ரடி சென்ரரில் இரண்டு வகுப்புகள்... இப்படி உடுப்பிட்டிக் கிராமமே பள்ளிக் கூடங்களாக மாறிவிட்டிருந்தன! அந்தக் கல்லூரியின் முழுவகுப்புகளையும் ஒரு தடவை மேற்பார்வை செய்துவிட்டு வருவதென்றால் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து முடிக்க வேண்டும்.

கட்டிடங்கள்தான் ஒரு கல்லூரியல்ல, அவை எந்த நேரமும் மாற்றி அமைக்கப்படலாம். ஆனால் ஆற்றலும் வளமும் நிறைந்த ஆசிரியர் சமூகம், நல்லதொரு மாணவர் குழாமும் இருந்தால் பெரும் சாதனையையே படைத்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன், சண்முகா வெட்டையின் பாதை ஓரமாக இருந்த சுந்தரலிங்கம் அவர்களின் வீட்டின் ஒரு அறையில் இயங்கிய கல்லூரியின் அலுவலகத்தை அடைந்தேன். அங்கே சென்று எனது கடமையை முறைப்படி பொறுப்பேற்று, சம்பவ திரட்டுப் பதிவேட்டிலும் அன்றைய நாள் சம்பவத்தைப் பதிந்துவிட்டு அதிபரின் கதிரையையே ஒரு கணம் பார்த்தபடி நின்றேன்.

எனது அதிபர் அமரர் எஸ். எஸ். செல்லத்துரை அவர்கள் இளைப்பாறியதைத் தொடர்ந்து 1971 இல் இருந்து, 1992 வரையுள்ள 21 வருடங்களில் 13 அதிபர்கள் அலங்கரித்துச் சென்ற கதிரையில் பதினான்காவது அதிபராக நான் அமரப்போகின்றேன்.

"சிலர் கதிரைகளால் பெயர் பெறுவார்கள், சிலரால் கதிரைகள் பெருமையடைகின்றன" என்று நிர்வாகம் தொடர்பாக வர்ணிக்கப்படும் அந்தக் கதிரையை நான் தொட்டு வணங்கிவிட்டு அதில் அமர்ந்து கொண்டேன்.

அங்கே அலுவலகத்தில் நான் மாணவனாக இருந்த காலத்தில் இருந்தே கடமை பார்க்கும் எழுதுவினைஞர் செல்லத்துரை அண்ணையும்,

சிற்றூழியர் சண்முகமும் என்னை முகம் மலர வரவேற்று வேண்டிய ஒத்துழைப்புக்களை வழங்கியது, புதிய சூழல் என்ற உணர்வை ஏற்படுத்தவில்லை.

அன்று புதிதாக நான் கடமை ஏற்றதும், என்னை வாழ்த்திச் சென்று கொண்டிருந்த பல அன்பு நெஞ்சங்களின் கண்களும், இதயங்களும் ஆசீர்வதித்துக் கொண்டிருந்ததை என்னால் உணர முடிந்தது. அதேவேளை சிலரது நெஞ்சில் எழுந்த நெருடல்களையும் கூட என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

மாணவனாக இருந்து அக்கல்லூரியின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் நன்கு அறிந்து வைத்திருந்த எனக்கு அந்தச் சூழல் புதிதாக இருக்கவில்லை. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பாரம்பரிய நடைமுறைகளையும், நவீனத்துவ மாற்றங்களையும் காலச் சூழலுக்கேற்ப நடைமுறைப்படுத்தி வந்தேன். சமார் 16 ஆண்டுகள் சரியான வழிகாட்டல் இன்றிக் குழம்பிப் போய் இருந்த கல்லூரியை ஒரு ஒழுங்குக்கு கொண்டு வந்த அதிபர் திரு. க. சிதம்பரப்பிள்ளை, திரு. வே. தி. செல்வரட்ணம் ஆகியோரின் அர்ப்பணிப்புக்களின் வெளிப்பாடுகள் எனக்கு அதிக சிரமத்தைக் கொடுத்திருக்கவில்லை.

நான் கடமை ஏற்ற சில நாட்களுக்குள் விரைவான மாற்றங்களை ஏற்படுத்தியதும் கல்லூரியின் போக்கிலும் ஒரு எழுச்சி ஏற்படத் தொடங்கியது.

ஆரம்பத்தில் எனது வருகையை விரும்பாதவர்களும் கூட நெஞ்சம் மலர என்மீது அன்புகாட்டத் தொடங்கினர். ஆம்... உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபராக அங்கே நான் உலா வரவில்லை. உடுப்பிட்டிக் கிராமத்தின் அதிபராகவே எல்லோராலும் மதிக்கப்பட்டேன். "எங்கடை அதிபர்" என்று பிள்ளைகள் தொடக்கம் முதியவர்கள் வரை என்னை அழைக்கத் தொடங்கியதும் எனக்கும், அந்தக் கல்லூரிக்கும் இடையிலான நெருக்கமும், பிடிப்பும் மேலும் மேலும் அதிகரித்தது.

எனது கல்லூரியில் உடனடியாகச் செய்ய வேண்டியது ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பதை உணர்ந்து கொண்டேன். எந்தெந்தப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்தனரோ, அந்தந்த வெற்றிடங்களை நிரப்புவதில் எனது முழுச் சக்தியையும் பயன்படுத்தினேன். எவராவது நல்ல திறமையான ஆசிரியர்கள் வெளியில் இருந்தாலோ அல்லது புதிதாக நியமனம் பெற்றாலோ அவர்களைத் தனியாகச் சந்தித்து அவர்களை எப்படியும் எனது கல்லூரிக்கு எடுத்து விடுவேன். அந்த வகையில் எனது கல்லூரிக்குத் தேவையான வள ஆளணியினரை நிரப்பி வந்த அதே நேரத்தில் பற்றாக் குறையாக உள்ள ஆரம்ப ஆசிரியர்களை 'தொண்டர்' அடிப்படையில் நியமித்து, அவர்களுக்கான வேதனங்களையும் பழைய மாணவர் சங்கம் வழங்கி வந்தது. இதற்காக அவர்கள் மாதம் ஒன்றுக்கு 9,000 ரூபாவை வழங்கி வந்தமை, இன்று நினைக்கும் பொழுது ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது.

கல்லூரியின் வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்களை எனது ஆசிரியர் குழுவினருடனும், பழைய மாணவர் சங்கத்தினருடனும் பேசி, முறைப்படி திட்டமிட்டுச் செயற்படுத்த முனைந்தபோது நிதி, உடல் உழைப்பு, மனோதைரியம் ஆகியவற்றை வழங்கி உந்துசக்தியாக இருந்தது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமே. யாழ் மாவட்டத்தில் செயற்படும் ஏனைய பழைய மாணவர் சங்கங்களுக்கு எல்லாம் முன் மாதிரியாகச் செயற்படும் எமது பழைய மாணவர் சங்கம் அப்போது பேராசிரியர் அ. துரைராசா (முன்னாள் யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர்) அவர்களின் தலைமையில் உயிர்ப்புடன் இயங்கியது. இரு வேறு பரீட்சைகள் காரணமாக தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத் தெரிவில் பாதிக்கப்பட்டபொழுது அரசின் நடவடிக்கையை எதிர்த்து மனித உரிமை மீறல் வழக்கைத் தொடுப்பதற்கு முதன் முதலில் பத்தாயிரம் ரூபாவை வழங்கிய பெருமைக்குரிய சங்கமல்லவா அது!

எனது கல்லூரியை வளர்த்தெடுப்பதில் எனக்கு முன் எழுந்த பல்வேறு பிரச்சினைகளும், நெருக்குதல்களும் எனது பண்பட்ட முகாமைத்துவத்துக்கே ஒரு சவாலாக இருந்தன. அதிகரித்து வரும் மாணவர்களின் இடப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், தற்காலிக கொட்டில்களின் எண்ணிக்கையை அதிகரித்து, வகுப்பறைகளின் அளவுகளை அதிகரித்ததும் மாணவர்களின் கற்றலுக்கான கவிநிலைச் சூழல் ஏற்பட்டது.

இவற்றைவிட கற்றல், கற்பித்தல், மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக்கும் வகையில் பல வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவற்றுக்கமைய,

1. மண் கொட்டிலால் ஆன ஒரு ஆய்வு கூடம் அழகாக அமைக்கப்பட்டது.

2. தற்காலிக நூலக வசதி ஏற்படுத்தப்பட்டதுடன் நூல் சேகரிப்புத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கென பாடசாலை வசதிகள் சேவைகள் கட்டணம், பழைய மாணவர் சங்கம் என்பனவற்றில் இருந்து நிதி உதவிகள் பெறப்பட்டன. நூலக உதவியாளராக திரு. தர்மசோதி அவர்களைப் பழைய மாணவர் சங்கம் நியமித்தது.

3. பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் கிரிக்கற் உபகரணங்களைப் பெற்று மாணவர்களுக்குப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இதற்காகப் பழைய

மாணவர் சங்கம் திரு. வேதாபரணம் அவர்களைப் பயிற்சியாளராக நியமித்து வேதனங்களையும் வழங்கியது.

4. கல்விப் பணிப்பாளரின் உதவியினால் கல்லூரிக்கென பான்ட் வாத்தியக் கருவிகளைப் பெற்று, முதன் முறையாக எமது கல்லூரிக்கென பான்ட் வாத்திய அணி உருவாக்கப்பட்டது. இதன் மூலம் எமது பாடசாலைக்கு மட்டுமன்றி எமது பான்ட் வாத்திய அணி அயல்பாடசாலைகட்கும் சேவைகளை வழங்கி வந்தது.

5. மாணவர்களின் கற்றல் மேம்பாட்டை உயர்த்துவதற்காக Shift முறையில் மாலை நேர வகுப்புகள், மற்றும், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான 'அறிவூட்டல்' வகுப்புகளை ஒழுங்கு செய்த பொழுது எமது ஆசிரியர்கள் விருப்புடன் முன்வந்து கல்வி இலக்கை அடைய உழைத்தனர்.

6. 1971 வரை உன்னத நிலையில் இருந்த எமது சாரணர் இயக்கம் பின்னர் மந்தமான நிலையில் சென்றது. இதனைப் புனரமைப்புச் செய்து ஒழுங்கான கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்தமை.

7. சர்வதேச அங்கீகாரத்துடன் செயல்பட்டுவரும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவை ஆரம்பித்து அவை தொடர்பான பயிற்சிகளை மாணவர்களுக்கும், பொறுப்பாசிரியர்களுக்கும் வழங்கியதுடன் அவசரகால முதலுதவிக்குத் தயார் படுத்தியமை.

8. மாணவர்களின் எழுத்தாற்றலையும், வாசிப்புத் திறனையும் அதிகரிக்கும் நோக்குடன் 'அரங்கம்' கையெழுத்துச் சஞ்சிகையை உயர்தர மாணவர் ஒன்றியத்தின் மூலமாக வெளியிடச் செய்து அவை தொடர்பான வெளியீட்டு நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

9. மாணவர்களின் கணித அறிவை மேம்படுத்தும் வகையில் பழைய மாணவர் சங்கத்தின் நிதி உதவி மூலம் 'கணித மூலவள நிலையம்' அமைக்கப்பட்டது.

இவ்வாறு இடம்பெயர்ந்து தற்காலிக கொட்டில்களில் வகுப்புகள் இயங்கிய போதும் படிப்படியாக எமது கல்லூரியின் தரத்தையும் வினைத்திறனையும் அதிகரித்து வந்தோம். இந்த நிலையில் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஒழுங்கு கட்டுப்பாடுகளிலும் கவனம் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து "கட்டுப்பாடுள்ள மாணவர்கள்' என்றால், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்களே என்று வடமராட்சி எங்கும் பேச்சுக்கள் அடிபடத் தொடங்கியது. அதுவே எமது கல்லூரியை சமூகத்தின் முன் தலைநிமிர வைத்தது என்றால் மிகையாகாது.

எமது கல்லூரியின் ஒழுங்கும், கல்விச் செயற்பாடுகளும், இணைப் பாடவிதான முயற்சிகளும் பழைய நிலையை அடையத் தொடங்கியதும், அயல் கிராமத்தவர்களின் பிள்ளைகளும், வேறு பிரபல பாடசாலைகளில் படித்துக் கொண்டிருந்தவர்களும், இடைக்காலத்தில் நம்பிக்கையிழந்து விட்டுச் சென்றவர்களும் எமது கல்லூரியில் மீண்டும் சேரத் தொடங்கினர்.

அதேவேளை எமது கல்லூரி சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஒரு கலவன் பாடசாலையாகவே இயங்கி வந்தமை இன்றுள்ள சந்ததியினால் மறக்கப்பட்டுவிட்டது. கடந்த பத்து வருடங்களுக்குள்ளாக மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது எனக்கு வியப்பைத்தான் தந்தது. அதற்கான அடிப்படைக் காணங்களாக இருந்த அரசியல் அடாவடித்தனங்கள், வேறு தனிப்பட்ட செல்வாக்குகள் போன்றவற்றால் அந்த நேரம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஒடுக்கப்பட்டு வந்தது. அத்தகைய கட்டுப்பாடுகளுக்கும், தடைகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்து மாணவிகளின் சுதந்திரமான கற்றலுக்கும் விரும்பிய இடத்தில் சென்று படிப்பதற்குமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். எனது கருத்தை பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த நண்பர்களான தவேஸ்வரன், கனகசபை இருவரிடமும் கூறியபொழுது அவர்கள் முதலில் அதிர்ச்சியடைந்தாலும் பின்னர் முகமலர்சியுடன்,

> "நல்லதொரு யோசனைதான்....நாங்களெல்லாம் படிக்கிற காலத்தில் எவ்வளவு பெண் பிள்ளைகள் படித்தார்கள்... ஆனால் இந்த முடிவினால் நீங்கள் ஒரு சிலரின் சாபத்திற்குக் கூட ஆளாக வேண்டி நேரிடும்... இந்த விடயத்தில் எங்களால் முடிந்த ஒத்துழைப்பையும் வழங்குவோம்...."

என்று கூறி எனது யோசனையை நடைமுறைப் படுத்துவதற்கேற்ற உந்து சக்தியாகவும் செயற்பட்டனர். அதனைத் தொடர்ந்து மூன்று மாணவிகள் மட்டும் க.பொ.த. உயர்தர வகுப்பில் சேர்ந்த பொழுது, தவேஸ்வரன் கூறியது போலவே, உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்த திருமதி. இராஜேந்திரசிங்கம் அவர்கள் எனது அலுவலகத்திற்கு வந்து அந்தப் பிள்ளைகளையும் ஏசிச் சாபம் இட்டுச் சென்றதை இன்னமும் என்னால் மறக்க முடியவில்லை.

இன்று அவர்கள் மூவரும் மருத்துவத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டுப் படித்துக் கொண்டிருப்பது சாதனைக்குரிய விடயமாகும்.

அந்த மூவரையும் தொடர்ந்து மூன்று, பத்தாகிப் பின்னர் முப்பதாகிப் பெண்களின் தொகையும் அதிகரித்தபொழுது, கூடைப்பந்துக்கெனத் தனியான ஒரு குழுவையே அமைக்கக் கூடிய ஒரு வலிமையை

எமது கல்லூரி பெற்றுக்கொண்ட பொழுதுதான், எமது "சக்தியையும்" கல்விச் சமூகம் புரிந்து கொண்டது. எத்தனையோ எதிர்ப்புக்கள், தடைகள், உயர்மட்ட முறைப்பாடுகளின் நெருக்குதல்களின் மத்தியிலும் நான் எடுத்த தீர்மானத்தில் உறுதியாகவே நின்றதால் உடுப்பிட்டி இமையாணன், கம்பர்மலை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஆகிய கிராமங்களில் இருந்தும் மாணவிகள் சேரத் தொடங்கியதும் உடுப்பிட்டி பழைய நிலையை அடைந்தது போல் இருந்தது.

படிப்படியாக பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் தொகையும் அதிகரிக்க மாணவர்கள் சேரும் தொகையும் உயர்ந்தது. அத்துடன் கல்வித்தரம், கற்றலுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட இடைவிலகும் மாணவர்கள் தொகையும் குறையத் தொடங்கியது. இதனால் எமது கல்லூரியின் உள்ளக மேற்பார்வை, நிர்வாக வசதிகருதி அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த வகுப்பறைகளை ஒன்றிணைத்து ஒரே இடத்தில் இயங்கச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த நிலையில் தான் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் உதவியுடன் அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண பாடசாலை வேலைகள் பணிப்பாளராக இருந்த திரு. சுந்தரமூர்த்தி அவர்கள் மூலம் மாகாணக் கல்வி அமைச்சில் இருந்து ஆறுலட்சத்து நாற்பத்து மூவாயிரம் ரூபா நிதியைப் பெற்று எமது பழைய கல்லூரியின் இடிபாடுகளை அகற்றி, இடிந்துபோன சில கட்டிடங்களைப் புனரமைப்புச் செய்து, தற்காலிக கொட்டில்களையும் புதிதாக அமைத்து தரம் 8 இல் இருந்து தரம் 13 வரையான வகுப்புகளை 1995 ஆம் ஆண்டில் இருந்து எமது கல்லூரியின் தாயகத்திற்குக் கொண்டுவந்தபொழுது உடுப்பிட்டி மண் பூரித்தது! அந்தக் கிராமத்தின் சலசலப்பும், உற்சாகமும் மீண்டும் அந்த மக்களின் உள்ளங்களை நிறைத்தது.

1996 ஆம் ஆண்டில் க.பொ.த.ப. உயர்தர தேர்வுக்குத் தோன்றவுள்ள மாணவர்கள் பத்து வருடங்களின் மின் புதிய சூழலில், புதிய வகுப்பறைகளில் உற்சாகத்துடன் கற்கத் தொடங்கியபொழுது அன்று நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்தப் பள்ளியில் என்னுடன் தோள்கொடுத்து உழைத்த பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த திரு. வே. தவேஸ்வரன் செயலாளர் சீதா ரீச்சர், எனது ஆசிரியர் குழுவினர் ஆகியோரின் அர்ப்பணிப்புகளை எவ்வாறு மறக்க முடியும்?

இந்த நிலையில் தான் 1996 ஆம் ஆண்டில் இரண்டு முக்கியமான நிகழ்வுகளை எனது கல்லூரி சந்தித்தது!

1. பல ஆண்டுகளின் பின்னர் முதன் முறையாக க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களில் ஒரே தடவையில் 21 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுச் சென்றமை. இது 1997 இலும் தொடர்ந்து கல்லூரியின் பெயரை நிலைநாட்ட உதவியது.

2. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தமிழர்களின் இடப்பெயர்வுகளின் காரணமாக நிகழ்ந்த எனது இடப்பெயர்வும், எதிர்பாராத இடமாற்றமும்.

ஆம்!... அந்த இருவேறுபட்ட உணர்வுகளுடன், எனது கல்லூரியின் 175 வருட நினைவுகளை மீட்டிப் பார்க்கும்பொழுது, ஒரு தந்தையின் புகழையும், பிள்ளையின் கீர்த்தியையும் ஒரு சேரப் பார்த்து மகிழும் புளகாங்கிதத்தில் என் நினைவுகளைத் தொடர்கின்றேன். எனது கல்லூரி வாழ்வு எனக்குத் தந்த மனநிறைவும், திருப்தியும் என் நெஞ்சமெலாம் இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

எனது கல்லூரியின் வரலாற்றில் 175 ஆண்டுகள் அல்ல, இன்னும் பல நூற்றாண்டுகள் எனது கல்லூரி நிலைத்து நின்று கல்வி ஒளிபரப்பி வாழும்!...

என்னை நல்லதொரு நிர்வாகியாக உருவாக்கியதுடன், எனது மகளையும் பட்டதாரியாக்கிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி இன்னும் எனக்குப் பின்னால் பிறக்கப்போகும் என் பேரக் குழந்தைகளையும், பூட்டக் குழந்தைகளையும் விடியலைத் தேடிவிடும் இந்த மண்ணுக்கு ஆற்றல் மிக்க கல்விமான்களாக உருவாக்கித் தரும் என்பதில் எனக்கு என்ன சந்தேகம்! என்றும் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் என் கல்லூரியின்,

"வாழிய வாழிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி..." என்ற அந்த இனிய கீதம் நெஞ்சை நிரப்ப உணர்வுகள் நீங்கா நினைவுகளுடன்,

இளையவர், மூத்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் இளையவர் கற்பதற்கு ஆர்வமாகவும், மூத்தவர் கற்பிப்பதற்கு ஆர்வமாகவும் இருக்கும் போது அறிவு வெளிப்படுகின்றது.


—டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன்

என்னை ஆளாக்கிய அமெரிக்கன் மிஷன் கல்லூரி

கல்லூரி! இது வார்த்தை மட்டுமல்ல வாழ்க்கையும் கூட. கல்லூரி வாசலிலேதான் கற்கள் வைரங்களாகப் பட்டை தீட்டப் படுகின்றன. கல்வித் துறையிலும், பொறியியற் துறையிலும், மருத்துவத் துறையிலும், சட்டத்துறையிலும், அரசியற் துறையிலும் ஏனைய சமூகத்துறைகளிலும் மிளிருகின்ற நட்சத்திரங்களான மாணவர்களின் திசைகளைத் தீர்மானித்ததில் பெரும்பங்கு கல்லூரியைச் சார்ந்ததே. கல்வி, ஒரு தனி மனிதனுக்கு, ஒரு சமூகத்திற்கு, ஒரு நாட்டிற்குத் தேவையான மூலதனங்களில் மேலோங்கியதும் அடிப்படையானதுதாகும். கண்ணுக்குத் தெரிந்த மற்றெல்லா மூலதனங்களின் கணியமும் தரமும், கண்ணுக்குத் தெரியாத கல்வி எனும் அடிப்படை மூலதனத்திலேயே தங்கியுள்ளன. அதாவது, ஒரு தனிமனிதனின், அல்லது ஒரு சமூகத்தின், அல்லது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அவையவை பெறும் அல்லது அவையவைக்கு அளிக்கப்படும் கல்வியைப் பொறுத்ததே. அந்த வகையில் பழைய மாணவர்கள் தமது வேருக்கு நீரூற்றி விழுதிறக்கி வைத்த கல்விக் கூடங்களுக்கு கடமைப்பாடும் நன்றிக் கடனும் உடையவர்களாகின்றார்கள்.

ஒரே உளி செதுக்கினாலும் சிலைகளின் அழகு வேறு வேறு தான். பழைய மாணவர்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் ஆளாக்கப்பட்டவர்கள்தான் என்றாலும், நான் ஆளாக்கப்பட்டமை தனிரகமானதும் தனித்துவமானதும் ஆகும். நான் இங்கு படிக்க நேர்ந்தது தற்செயலானது. அமெரிக்கன் மிஷன் தமிழ்ப் பாடசாலை எமக்கு கூப்பிடு தூரத்திலிருந்தமையாலும், எமது சொந்தக்காரர்கள் இங்கே படித்தமையாலும் 1936 இல் இங்கு எனது ஆரம்பக் கல்வியை ஆனந்தமாக ஆரம்பித்தேன். எனது பெற்றோர்கள் என்னை இப்பாடசாலையில் சேர்த்தார்கள் என்பதைவிட மற்றைய சொந்தக்காரப் பிள்ளைகளோடு அனுப்பி வைத்தார்கள் என்றே கூறவேண்டும். இதை இங்கு சற்றே அழுத்திக் கூறுவதற்கான காரணம் பெற்றோருக்கும், மற்றும் சொந்தக்காரர்களுக்கும் கல்வி பற்றிய தூரநோக்கு இருக்கவில்லை என்பதேயாகும். எழுத வாசிக்கவும், கையெழுத்துப் போடவும் தெரிந்தாற் போதும் என்ற அடிப்படை எதிர்பார்ப்பே அவர்களின் கல்விச் சிந்தனையாக இருந்தது. இதற்கான காரணங்கள் இல்லாமல் இல்லை.

இப்பாடசாலையில் ஏழாம் வகுப்பு படிப்பை முடித்துக் கொண்டு எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் பொழுது என் கல்விப் பயணத்தில் எதிர்பாராத முனையில் திருப்பம் ஏற்பட்டது. அதன்



இ. வே. செல்வரட்ணம் (செட்டி)
கனடா

உருப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

விளைவாக அருகிலிருந்த அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்கும் முயற்சி கை கூடியது.

1944 ஜனவரியில் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்த பொழுது, அப்பொழுது அதிபராயிருந்த கே. ரி. ஜோன் ஆங்கில வாசிப்புப் புத்தகம் ஒன்றை தந்து எனது ஆற்றலை மதிப்பிட்டு முதலாம் வருட வகுப்பிற் சேர்க்காது, இரண்டாம் வருட வகுப்பிற் சேர்த்தார். வழமையாக தமிழ்ப் பாடசாலையில் நான்காம் வகுப்பை முடித்தவர்கள் தான் ஆங்கில பாடசாலையில் முதலாம் வருட வகுப்பிற் சேர்க்கப்படுவது வழக்கமாயிருந்ததென்பது எனக்கு ஞாபகம். நான் தமிழ்ப் பாடசாலையில் 7 ஆம் வகுப்பை முடித்தபடியாலும் ஆங்கில வாசிப்புத் திறன் இருந்தமையாலுந்தான் ஆங்கிலப் பாடசாலையில் இரண்டாம் வருட வகுப்பிற் சேர்க்கப்பட்டேன் என நினைக்கின்றேன். அதே வகுப்பில் தமிழில் எஸ். எஸ். சி. முடித்த, படித்த "பிள்ளையினார்" போன்றோரும் சேர்க்கப்பட்டமை ஞாபகம். தமிழ்ப் பாடசாலையில் தமிழ், கணிதம், ஆங்கிலப் பாடங்களை படிப்பித்த, மறைந்த தாமோதரம்பிள்ளை, M. வரத்துங்கம், ஹென்றி இராசரத்தினம், ஆறுமுகம் ஆகிய ஆசிரியர்களின் முகம் இன்றும் நெஞ்சக் கடலில் நீந்தி வருகின்றது. இதேபோல் பாலர் கீழ்ப்பிரிவிலும், பாலர் மேற்பிரிவிலும் என்னைக் கற்பித்த நேசமணி அக்கா, சின்னத்தங்கம் அக்கா ஆகியோரையும் நினைவு கூறுதல் அவசியமான தொன்றாகும். ஆயிரம் சிகரங்களைத் தொட்டாலும் அகரத்தை அடக்கியாளும் வித்தையை அறிமுகஞ் செய்த, ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் ஆராதனைக்கு உரியவர்களே.

1944 இல் ஆங்கிலப் பாடசாலையிற் சேர்ந்த பொழுது, மாதாந்தம் கற்பித்தற் கட்டணம் கட்டித்தான் படிக்க வேண்டிய நிலைமை இருந்தது. தமிழ்ப் பாடசாலைகளில் இந்நிலைமை இருக்கவில்லை. அப்பொழுது ஆங்கிலம் மூலம் தான் உயர்கல்வி பெறும் நிலையிருந்தது. தமிழ் மொழிக்கல்வியின் எதிர்காலம் இருட்டாகவே இருந்தது. தமிழ் ஆசிரியர்களையும், பண்டிதர்களையுந்தான் தமிழ் மொழிக்கல்வி பெற்றெடுத்தது. பல்கலைக்கழகத்திற்கும், தொழில்நுட்பக் கல்லூரிக்குமான படிக்கட்டுக்கள் ஆங்கில மொழியினாலேயே அமைக்கப்பட்டிருந்தன. இதனால் அனேக ஆங்கிலப் பாடசாலைகள் பிரத்தியேக (Private) பாடசாலைகளாகவே இருந்தன. ஆங்கிலக்கல்வி இலவசமாக வழங்கப்படவில்லை. எனினும் "ஸ்ரான்லிக்" கல்லூரி போன்ற அரச பாடசாலைகள் கல்விக்கு விலை பேசவில்லை.

1944இல் கற்பித்தற் கட்டணமாக மாதம் ரூபா 2.75 தான் இருந்தது. இது கூட என் பெற்றோரைப் பொறுத்தவரையில் முயற்கொம்புதான். ஆனால் அடுத்த வருடமே எனது அதிஷ்டம் அரசியல் வடிவிலே வந்து அணுகியது. 1945இல் C. W. W. கன்னங்கார இலவசக் கல்வித் திட்டத்தினைக் கால்கோள் செய்தார். இவ்வாய்ப்பு என்போன்றோருக்கு தவமின்றிக் கிடைத்த வரப்பயனாக அமைந்தது. அமெரிக்கன் மிஷன் ஆங்கில பாடசாலையில் தொடர்ந்து S. S. C. வரைக்கும் படிக்கும் பெரும்பேறு வந்தடைந்தது. இதற்காக கௌரவ அமைச்சர் C. W. W. கன்னங்கரா பூஜிக்கப்பட வேண்டியவர் என்பது தனி மனிதன் ஒருவரது தாழ்மையான கருத்து.

1945 இல் பிள்ளையினாரும் நானும் இரட்டை வகுப்பேற்றம் பெற்று 5ஆம் வகுப்பிற் சேர்க்கப்பட்டோம். அவ்வகுப்பில் - எம்முடன் இணைந்த தோழர்கள் மறைந்த மாமனிதர் துணைவேந்தர் துரைராஜா, அக்கல்லூரியில் பின்னர் ஆசிரியர்களாயிருந்து ஓய்வுபெற்ற திருவாளர்கள் கா. நீலகண்டன், இரா. பொன்னம்பலம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1946 இல் மேலும் பிள்ளையினாரும் நானும் இரட்டை வகுப்பேற்றம் பெற்று 7 ஆம் வகுப்பிற் படித்தோம். அப்போது கற்பித்தவர்களில் K. C. ஜேக்கப், S. S. செல்லத்துரை, M. அருளானந்தம் போன்றோர் நினைவில் நீங்காதவர்கள். திருவாளர்கள் K. C. ஜேக்கப்பும், S. S. செல்லத்துரையும் அந்த வருடத்தின் ஆசிரியர்களாக வந்து சேர்ந்தார்கள். K. C. ஜேக்கப் அதிபராயிருந்த அமரர் K. T. ஜோன் அவர்களின் சொந்தக்காரர். அப்பொழுதுதான் கேரளாவிலிருந்து வந்து சேர்ந்தார். இவ்வகுப்பில் அவர்தான் கணிதம் கற்பித்தார். கணிதத்தினை தர்க்கவியல் முறைப்படி கற்பித்தார். பலாச்சுளை தேனில் ஊறியபின் உட்கொண்டால் எப்படியிருக்குமோ அவ்வாறே அவரது கற்பித்தல் அமைந்திருந்தது. பலர் பாகற்காயென எண்ணிய கணிதத்தை பஞ்ஞாமிர்தமாக்கிக் கற்பித்தார். இதனால் கணிதம் மீது கொண்ட தீவீர விருப்பம் அதனோடு தொடர்புடைய பௌதீகம், இரசாயனம் போன்ற பாடங்கள் மீதும் என்னைப் படரவைத்து அவற்றினைக் கற்பிக்கக் கூடிய ஆற்றலைக் கருத்தரித்தது.

ஏழாம் வகுப்பில் அமரர் S. S. செல்லத்துரை பொது விஞ்ஞானமும், அமரர் எம். அருளானந்தம் குடியியலும் படிப்பித்தார்கள். குடியியல் செயல் முறைப்பாடமாக இல்லாத போதிலும், அமரர் எம். அருளானந்தம் அதை கற்பித்த இலாவகம் இருக்கிறதே...அடடா அந்த அழகை வர்ணிக்க தமிழில் வார்த்தைகளே கிடையாது. வதிரி இரும்பு மதவடிப் பகுதியிலிருந்து ஒற்றைத் திருக்கல் கூடார வண்டியில் மகனுடன் பயணஞ் செய்து வந்து... திருக்கல் வண்டியின் அசைவு போல தமிழிற்கும் புது அசைவு கொடுத்து தனக்கெனவோர் பாணியில் கற்பித்த செந்தில்நாதன் ஆசிரியரின் சிறப்பும் செப்புதற்கு அரியது.

1947 இல் மீண்டும் பிள்ளையினாரும் நானும் இரட்டை வகுப்பேற்றம் பெற்று 9 ஆம் வகுப்பில் (Prep. Senior) படித்தோம். இவ்வகுப்பில்

பாடங்களைத் தெரிவு செய்து படிக்கும் நிலை இருந்தது. பாடங்களைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டல் வசதிகள், கனடா போன்ற மேற்கு நாட்டுப் பாடசாலைகளில் இருப்பது போல இல்லாமையாலும், இதற்கான வீட்டுச்சூழல் இல்லாமையாலும் நானே பாடங்களைத் தெரிந்து படிக்க ஆரம்பித்தேன். கட்டாய பாடங்களாகிய ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களுடன் எண்கணிதம், புவியியல், சரித்திரம், தமிழ் இலக்கியம், இரசாயனம், சுகாதாரவியல் போன்ற பாடங்களைத் தெரிந்து படிக்க ஆரம்பித்தேன். இவைகளை ஏன் தெரிந்தேன் என்பது எனக்கே தெரியாத ஒன்று! தேவையின் பொருட்டு திசைகளைத் தீர்மானித்து விட்டேன், தேர்வு செய்தது சரியா? தவறா? அனுமானிக்கும் அறிவு அன்றில்லை.

ஒருநாள், சித்திரப்பாட நேரம் அப்பாட ஆசிரியராகிய இளவாலையைச் சேர்ந்த எஸ். சூசைப்பிள்ளை ஆசிரியரின் கட்டளைப்படி வெண்கட்டி எடுக்க அதிபரின் அலுவலகம் சென்றேன். அலுவலக உதவியாளர்கள் இருக்கவில்லை. அதிபர் K. T. ஜோன் தான் இருந்தார். போன விடயத்தை எடுத்தியம்பினேன். "இப்பொழுது என்ன பாடம்" கேள்விக்கணைகள் புறப்பட்டன. "சரித்திரம்" பதில்கணையைப் பத்திரமாகப் பாவித்தேன். "யார் ஆசிரியர்" "சூசைப்பிள்ளை ஆசிரியர்" என்றேன். "நீ சரித்திரபாடம் எடுக்கிறாயோ" கேள்வி என்னை மையப்படுத்திச் சுருங்கியது. "ஆம்" என்றேன். நான் எடுக்கும் மற்றைய பாடங்களையும் கேட்டறிந்த பின் "அந்தப் பாடங்களை எடுக்கச் சொன்னது யார்?" என்றார் "நான்தான்" என்றேன். அவரது அறிவுரையின்படி கணிதம், பௌதிகம், இரசாயனம் ஆகிய விஞ்ஞான பாடங்களை எடுக்க ஆரம்பித்தேன். K. C. ஜேக்கப் ஆசிரியர் பௌதிகம், கணிதம் பொறியியல் போன்ற பாடங்களைக் கற்பித்தார். S. S. செல்லத்துரை ஆசிரியர் இரசாயனம் கற்பித்தார். செந்தில்நாதன் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் என்பனவற்றைக் கற்பித்தார்.

1948 டிசம்பர் மாதம் S. S. C. பரீட்சைக்குத் தோன்றினோம். இப்பரீட்சை பருத்தித்துறை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்பரீட்சையில் பிள்ளையனார், உடுப்பிட்டி மகாலிங்கசிவம் ஆகிய இருவரே முழுமையாகச் சித்தி பெற்றார்கள். நான் முழுமைச் சித்திக்கு ஆங்கிலம் திருப்பி எடுக்க வேண்டியிருந்தது.

என்று முடிவு வந்தது, அது என்னைத் துயரத்தின் எல்லைக்கே கொண்டு சென்றது. விபரமான முடிவுக்கு விண்ணப்பித்த போது கணிதம், பௌதிகம், இரசாயனத்தில் A தரங்களும், தமிழ் மொழி, தமிழ் இலக்கியத்தில் B தரங்களும், ஆங்கிலத்தில் E தரமும் கிடைத்தன. இம்முடிவுகள் சோர்வடைந்த என்னுள்ளத்திற்கு புத்துணர்ச்சியினைத் தந்தன. இதை எனக்கேற்பட்ட மனநிலை அருட்கொடை (Blessing in disguise) என்றே கூற வேண்டும்.

1949 ஜூனில் சித்தி எய்தாதவர்களுக்கான பரீட்சையில் ஆங்கிலத்தில் மட்டும் தோற்றாமல், அனைத்துப் பாடங்களிலும் தோற்றி முதற்பிரிவிற் சித்தியடைந்து, இலண்டன் மாற்றிக்குலேஷன் பரீட்சையிலிருந்து விலக்கும் பெற்றேன்.

1949 ஜனவரியில் K. C. ஜேக்கப் மாற்றம் பெற்று யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் போய்விட்டார். இக்கால கட்டத்தில் கணிதம், பௌதீகம், இரசாயனம், பொறியியல் பாடங்களை அமரர்கள் றொபேட் நவரத்தினம், எஸ். எஸ். செல்லத்துரை ஆகியோரிடமிருந்தும், தன்னுடைய பல்கலைக்கழக விடுமுறைகாலத்தில் தற்காலிகமாக வந்து கற்பித்தவரும், அண்மையில் கலிபோனியாவில் மறைந்தவருமாகிய வே. அரியரத்தினத்திடமிருந்தும் கேட்டுப் படிப்பேன். அத்துடன் 1949 இல் எஸ். எஸ். சி வகுப்பில் இருந்த கே. சிதம்பரப்பிள்ளை, கே. தணிகாசலம் ஆகியோருடன் சேர்ந்து கலந்துரையாடிப் படிப்பதுண்டு. அக்காலத்தில் மாற்றலாகி எம்பாடசாலைக்கு வருகை தந்த அமரர் N. R. பாலசிங்கம் அவர்கள் எனது ஆங்கில பாடத்தில் தோர்ச்சியடைய மிக அக்கறை எடுத்துக் கற்பித்தவர். அவர் கல்வித் திணைக்களத்தில் ஆங்கில ஆலோசகராகிய பின் கடமையாற்றியவர். அவருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டு உள்ளேன்.

மேற்படிப்புக்கு போவதாயிருந்தால் ஹாட்லிக் கல்லூரிக்குத்தான் போக வேண்டும். வீட்டு நிலையோ அதற்குச் சாத்தியப்படுவதாக அமைந்திருக்கவில்லை. கல்விமீதுள்ள ஆசை நைல்நதியாக ஊற்றெடுத்த போதும், குடும்ப நிலையோ, சகாராவாகவே காட்சியளித்தது. பொது லிகிதர் சேவையில் சேருவதற்கென, விண்ணப்பப் பிரதியை பூரணப்படுத்திக் கொண்டு, அதை அத்தாட்சிப்படுத்துவதற்கென, 1949 நவம்பரில் ஒருநாள் அதிபர் கே. ரி. ஜோன் அவர்களிடம் போனேன். "யார் இதற்கு விண்ணப்பிக்கும்படி சொன்னது?" வினாவின் வெப்பம் என்னைத் தாக்கியது. "நானே" என்று தயக்கமாகப் பதிலிறுத்தேன். "நீ படிக்கக்கூடிய ஆள் மேலும் படிக்கலாமே" என்றார். "வீட்டுப் பண நிலைமை அதற்கேற்றவாறில்லை" என்றேன். படிவத்தில் கையொப்பமிடாது, யாழ்ப்பாணக் கல்லூரி வழங்கும் ஸ்கொலஷிப்புக்கு விண்ணப்பித்து ஒரு கடிதம் தரும்படி கேட்டார். கொடுத்தேன். 1950 ஜனவரியில் இலண்டன் இன்ரர் வகுப்பிற் சேர்ந்து ஸ்கொலஷிப்பில் (கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் ஒன்றும் இல்லாமல்) படிக்கும்படி கடிதம் வந்தது. மகிழ்ச்சிக்களிப்பில் என்னுள்ளத்தில் திருமகளும், கலைமகளும் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

நான்கு வருடங்கள் படித்து லண்டன் பட்டாதாரியானேன். நான் கிறீஸ்தவனாக இல்லாத பொழுதிலும், ஸ்கொலஷிப்பை வழங்கியமைக்கு யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், அமெரிக்கன் மிஷன் ஸ்தாபனத்திற்கும் என்றென்றும் நன்றியுடையவனாவேன்.

இந்த மூன்றாம் பிறையை முழு நிலாவாக்கிய பெருமை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையையும், அதன் அதிபர், ஆசிரியர்களையுமே சாரும்.

என் கல்விப் பயணத்தில் தகுந்த சந்தர்ப்பங்களில் வழிகாட்டி திருப்பங்களை ஏற்படுத்தியவர் பாடசாலை அதிபராகிய அமரர் கே. ரி. ஜோன் அவர்களே! இந்தத் தோணி திசை தெரியாது தவித்தபோது துடுப்பாகவும், மீகாமனாகவும் அமைந்து மீட்சி அளித்தவர். நான் காவியங்களிலே சந்தித்த நல்ல இதயங்களை கல்லூரி வாழ்விலே சந்தித்தபோது வாழ்த்தத் தோன்றவில்லை. வணங்கத்தான் தோன்றியது.

இன்று இப்பாடசாலை முதற்தரமான கல்லூரியாக மிளிரிர்வதையிட்டு என் மனதில் ஆச்சரியம் பூச்சொரியவில்லை. அனைத்தும் திசைமாறாத எனது தீர்க்க தரிசனங்களே! யுத்த வியூகங்களால் சில நலிவு, மெலிவுகளைச் சந்தித்தாலும், பழைய மாணவர் சங்கம் இருக்கும் வரை திண்தோள் வலிகொண்டு திசையனைத்தும் தன்பேர் பொறிக்கும் என்பது திண்ணம். இதற்கு உரமூட்டும் வகையில் பழைய மாணவர்களின் தாய்ச்சங்கம் அமைய வேண்டுமென்பதே புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் ஒவ்வொருவரினதும் அவாவும், ஆசையுமாகும்.

நான் தனிப்பட்ட ஜீவன் எனக் கூறுவது, கங்கைப் பிரவாகத்திற்குள் ஒரு சிறு பாகத்தை அணையிட்டுக் காட்டி அவ்வணைக்குள்ளிருக்கும் நீரை என்னுடைய கங்கை என்று கூறுவதற்கொப்பாகும்.

– ஸ்ரீ ராமகிருஷ்ணர்

"பக்கத் திருப்பவர் துன்பம் - தன்னைப்
பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி
ஒக்கத் திருத்தி உலகோர் - நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி."

– மகாகவி பாரதி

"எண்ணாயிரந்தாண்டு யோகம் இருப்பினும்
கண்ணார் அமுதினைக் கண்டறிவாரில்லை
உண்ணாடியுள்ளே ஒளி பெற நோக்கினால்
கண்ணாடி போலக் கவர்ந்து நின்றானே

- திருமூலர்

அன்பென்று கொண்டு முரசே! -மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றெனக் கொண்டால்"

– பாரதி

எனை வளர்த்த பாடசாலை இப்படி மாறிடுமா?

இன்று நான் கனடாவில் தமிழ் மக்கள் மத்தியிலே அறியப்படக்கூடிய ஒருவனாக இருக்கின்றேனென்றால் அதற்கு காரணம் எனை வளர்த்துவிட்ட எனது பாடசாலைதான் என்றால் மிகையாகாது. ஒரு பொறியியலாளனாக மட்டுமல்லாது பெரும் பொறுப்புகளை நிர்வகிக்கும் திறமையுள்ள ஒருவனாக கலாவித்தகனாக நான் வளரக் காரணமானது என் பாடசாலைதான்.

நான் சிறுவனாக வளர்ந்த காலங்களை எண்ணிப்பார்க்கின்றேன். எனக்கு ஓரளவு அறிவு தெரிந்த நாட்களில் அதிபராக இருந்தவர் ஜோன் மாஸ்டர். அவரின் முகம் எனக்கு முழுக்க முழுக்க ஞாபகமில்லாவிட்டாலும் அவர் பாடசாலையை வளைய வருவதும் ஆசிரியர்கள் மரியாதை கலந்த பயத்துடன் பாடங்களை நடத்துவதும் என் கண்முன் நிற்கின்றது. அன்று எம்பாடசாலையிலே மாணவர்கள் தங்கியிருந்து படித்தார்கள். பாடசாலை வளவுக்குள்ளேயே ரெனிஸ், கைப்பந்து, கரப்பந்து என மைதானங்கள் இருந்தன. சண்முகா வளவிலே கால்பந்து, கிரிக்கட் மெய்வல்லுனர்போட்டி என்பன நடைபெறும். ஒவ்வொரு வருடமும் நடைபெறும் பெற்றார் தின விழாவை எண்ணிப் பார்க்கின்றேன்.

எம்பெருமான் மாஸ்டர் போடுகின்ற நாடகம் பாட்டுப்போட்டியில் வெற்றி பெற்றோரின் பாட்டுக்கள் பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்றோரின் பேச்சுக்கள் எல்லாவற்றையும் இரைமீட்டுப் பார்க்கின்றேன். ஜோன் மாஸ்ரரின் பின் செல்லத்துரை மாஸ்ரர் அதிபராக பொறுப்பேற்றார். நான் சிறுவனாக இருந்த காலங்களில் சாரணீயத்திற்கு எம் பாடசாலை புகழ்போனதாக இருந்தாலும் என் அறிவு தெரிந்த நாள் தொட்டு அது மந்தமாகவே இருந்தது. ஆனால் அதற்கு முன்னால் அகில இலங்கையிலும் முதல்தர சாரணீயமாக இரு தடவைகள் பரிசு பெற்றிருக்கின்றது. பின்நாளில் நான் க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியெய்திய பின் சாரணீயத்தில் சேர்வதற்கு காரணமாக இருந்தவர் அப்போது சாரணியத்துக்கு பொறுப்பாக இருந்த செல்வநாயகம் மாஸ்ரரும் அவருக்கு உதவியான சண்முகசுந்தரம் மாஸ்ரரும்தான். கடின உழைப்பும் ஆசிரியர்களின் வழிநடத்தலும் க.பொ.த. உயர்தர பரீட்சை சித்தியெய்வதற்குள் நான் இராணிச் சாரணர் பட்டையம் பெற காரணமாயிற்று. அதுவும் இலங்கையின் மகாதேசாதிபதி வில்லியம் கோபல்லவாவின் கையினால். படிப்பில் மட்டும் என்னை உயர்த்தி விடவில்லை எனை வளர்த்த பாடசாலை. கூடவே "பி" பிரிவு சம்பியனாக வந்த



வைரமுத்து சொர்ணலிங்கம்

கனடா

உடுப்பிட்டி

அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு

சிறப்பிதழ்

கால்பந்தாட்டக் குழுவின் அங்கத்தவனாக இருந்திருக்கின்றேன். முதலாம் பரிசைதட்டிக்கொண்ட மெய்வல்லுனர் குழுவை பழக்கி நீர்வகிக்கும் பொறுப்பை பெற்றுக்கொண்டேன். வல்லையிலே கூடாரம் அடித்து தொண்டைமானாற்றுக் கால்வாயின் நீரியல் மாற்றங்களை அவதானிக்கும் நீர் உயிரியல் குழுவிலே இரசாயன பரீட்சை செய்யும் பொறுப்பை பெற்றுக் கொண்டேன். இப்படியாக நான் ஒரு முழு வாலிபனாக வளர்ந்துவர காரணமாக அமைந்தது எனது பாடசாலைதான்.

என்னை மட்டுமல்ல எத்தனையோ மாணவர்களை வாழ்வின் உச்சாரத்திற்கு ஏற்றிவைத்த பெருமை எங்கள் பாடசாலைக்குண்டு. அனேகமாக பாடசாலைக் காலம் முடிய பல்கலைக்கழகம் சென்றால் என்ன வேறு துறைக்கு சென்றாலென்ன மீண்டும் ஆசிரியராக அதே பாடசாலைக்கு படிப்பிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லையானால் எம் பாடசாலைகளின் நினைவு மனத்தோடு மட்டும் நின்றுவிடும். எமை வளர்த்த பாடசாலைக்கு சேவைசெய்ய சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடும். நான் செய்த பாக்கியம் 1977 ஆம் ஆண்டு சேக்குவேரா கலகங்களினால் இனக்கலவரம் மூண்டு தமிழர்கள் ஊருக்கு விரட்டியடிக்கப்பட்டிருந்த நேரம் நானும் ஊருக்கு வந்திருந்திருந்தேன். அப்போது சண்முகா வளவிலிருந்து எம் பாடசாலைக்கு வழங்கப்பட்ட நீர், நிலத்துக்கு கீழிருந்த குழாய்கள் பழுதடைந்த காரணத்தால் தடைப்பட்டிருந்தது. அந்தக் குழாய்களை மீளப்புதுப்பிக்க 17,000 ரூபாய்கள் தேவைப்பட்டது. ஆனால் பாடசாலையில் பணமில்லை. இதை செய்ய முடியாதா என யோசித்த எனக்கு நல்ல நிலையிலே இருக்கும் பழைய மாணவர்களை ஒன்று திரட்ட வேண்டும் என்ற எண்ணம் உதயமானது. முயற்சித்தேன். அன்று ஊரிலேயிருந்த முக்கியமான பழையமாணவர்களை ஒன்று சேர்த்தேன். பழைய மாணவர் சங்கம் பழைய அதிபர் திரு. செல்லத்துரை ஆசிரியர் தலைமையில் உதயமானது. நீர்க்குழாய்களை மாற்றுவதற்கு எப்படி பணத்தை சேகரிப்பது என யோசித்தபோது எடுத்த முடிவு கலைவிழா நடத்துவது என்பது. அதிலும் என் முழுப்பங்கையும் ஆற்றினேன். ரிக்கற் விற்கப்பட்டது. கலைவிழா நடந்தது. ரேடியோ சிலோன் புகழ் கலாவதி சின்னச்சாமி கண்ணன் குழுவின் இசையிலே கிருஷ்ணனுடன் சேர்ந்து பாடினார்கள். சங்கீத பூஷணம் பத்மலிங்கம் கர்நாட இசைக்கச்சேரி செய்தார். "பாவம் யமன்" என்கின்ற நாடகம் முத்து குழுவினரால் மேடையேற்றப்பட்டது. தேவைக்கு மேலாக நிதி சேர்க்கப்பட்டது. நீர்க் குழாய்கள் மாற்றப்பட்டு நீர் விநியோகம் மீளப்பெறப்பட்டது. அதன்பின் உத்தியோகமெனச் சென்றவன் நாடுவிட்டு நாடுபோய் இறுதியில் கனடாவில் தஞ்சமானேன்.

காலம் உருண்டோடியது. பாடசாலை நிர்வாகத்தில் மாற்றங்கள். பாடசாலையில் மாற்றங்கள். போரின் அனர்த்தத்தால் எம் பாடசாலை இடியுண்டு மாணவர்கள் தற்காலிக கொட்டகையில் சண்முகாவளவிலே கல்விகற்கும் நிலையேற்பட்டபோது கனடாவில் வாழும் பழையமாணவர்களின் உதவி நாடப்பட்டது. அன்றும் பழைய மாணவர்கள் ஒன்று கூடினோம். கலைவிழா நடாத்தி நிதிதிரட்டுவது என யோசித்தோம். அப்போது மேடையில் வளைந்ததுதான் வானவில். வருடம் தோறும் நிறைவான நிதியனுப்பி பல வழியிலும் எம் பாடசாலைக்கு உதவிவருகின்றோம். கனடாவில் மட்டுமல்ல உலகெங்கிலும் பரந்து வாழும் பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் பல சாதனைகள் புரியலாம். பழைய மாணவர்கள் திரட்டும் நிதி, காலம் கனியும்வரை சேமிப்பிலிடப்பட வேண்டும். எனக்குள் ஓர் ஆசை. இப்படியெல்லாம் எனை வளர்த்த பாடசாலை மாறவேண்டும் என எனக்குள் ஓர் ஆசை. வாயிலின் இருமருங்கிலும் இருக்கும் வகுப்பறைகள் இரண்டு மாடித் தொடர் கட்டிடங்களாக மாறவேண்டும். பாடசாலையின் மேற்குப்புறமுள்ள காணி சுவீகரிக்கப்பட்டு பெரியதோர் உள்புற விளையாட்டரங்கு கட்டப்பட்டு டெனிஸ், பூப்பந்து, கூடைப்பந்து, கரப்பந்து போன்ற விளையாட்டுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இன்னோர் கட்டிடத்தில் தொழில்நுட்ப பயிற்சி பெறுவதற்கான இயந்திரங்கள் Lathe, Milling, Grinding, Drilling, Welding போன்றவை பொருத்தப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். அதை நிர்வகிக்கும் சந்தர்ப்பம் எனக்கு அமைய வேண்டும். அப்படி அமைந்துவிட்டால் எனை வளர்த்த பாடசாலைக்கு சேவை செய்யக் கிட்டிய வாய்ப்பை எண்ணி எல்லையில்லா மகிழ்ச்சியடைவேன்.

மனிதர்கள் இருவகுப்பினர் - மனிதர் என்ற பெயர் மாத்திரம் வகித்தவர் (மனுஷ்யர்), அறிவு விளங்கப் பெற்றவர் (மன் - ஹுஷ்யர்). ஈசுவரனை அடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தை உடையவர்கள் பின்னர் சொன்ன வகுப்பினர், காமமும் பண ஆசையும் பிடித்து அலைபவர்கள் மனிதர் என்ற பெயர் மாத்திரம் வகிப்பவர்கள்.

– ஸ்ரீ ராமகிருஷ்ணர்

அமெரிக்கன் மிஷன் கல்லூரி நினைவலைகள்

நினைக்கின்றேன்... நினைக்கின்றேன் -

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 'அரிவரி' வகுப்பில் சேர்ந்த காலத்தை நினைக்கின்றேன். அப்போது ஆரம்ப வகுப்பு 'அரிவரி' எனவும், அடுத்து 'முதல்', 'இரண்டு' என வகுப்புகள் வளர்ந்து சென்று எஸ். எஸ். ஸியில் முடிவடைந்தது. பின்னர் எச். எஸ் ஸியும் சேர்ந்து கொண்டது.

ஊரைச் சேர்ந்த பெண் ஆசிரியைகள் சிறுவர் வகுப்புகளுக்கு வகுப்பாசிரியர்களாகக் கடமையாற்றினார்கள், எனவே உரிமையுடன் ஆசிரியைகளை 'அக்கா' என அழைப்பது வழக்கம். பக்கத்திலிருக்கும் மாணவனுக்கு அடி வாங்கிக் கொடுக்க விரும்பும்போது, சிணுங்கிக் கொண்டே, 'அக்கா, இவன் நுள்ளுறான்' என்ற சொல்லி அப்பாவிகளுக்கு அடிவாங்கிக் கொடுத்ததுண்டு. முறைப்பாட்டுக்காரராகி அடிவாங்கியதுமுண்டு.

நினைக்கின்றேன்... நினைக்கின்றேன் -

அரிவரி வகுப்பில் நேசமணியக்கா, முதலாம் வகுப்பில் 'சின்னத்தங்கங்கா' - பார்க்கவே பயங்கரமான தடியுடன் வருவார். நாலாம் வகுப்புக்கு வந்தபோது 'அக்கா' என ஆசிரியைகளை அழைக்க வெட்கப்பட்டோம். எனவே 'புஷ்ப ரீச்சர்', ஆறாம் வகுப்பில் 'லீலா ரீச்சர்' என 'ரீச்சர்' சொல்லிப் பழகிய நாம் எட்டாம் வகுப்புக்கு வந்ததும் 'மிஸிஸ் அருமைரத்தினம்', 'மிஸிஸ் இராமச்சந்திரன்', 'மிஸிஸ் சிவராஜா' என்று சொல்லப் பழகிக் கொண்டோம். பெயர்களால் மாத்திரமன்றி அவர்களின் திறமைகள், தகுதிகளாலும் அழைக்கப்பட்டார்கள், சிறுவர்கள் 'பாட்டக்கா' என்றாலும் சரி, சிறு பராயம் தாண்டியவர்கள் 'சங்கீத ஆசிரியை' என்றாலும் சரி, வளர்ந்தவர்கள் Music Teacher என்றாலும் சரி, அது செல்வி சரஸ்வதி வைத்திலிங்கத்தையும், திருமணமான பின் சரஸ்வதி இராஜேஸ்வரனையும் குறிப்பிடும். இது மட்டுமல்ல -

'கார் அக்கா' என்றால் மிஸிஸ் இராமச்சந்திரன். அவர் தானாகவே காரோடி வருவார். அறுபதுகளின் ஆரம்பத்தில் உடுப்பிட்டியில் ஒரேயொரு லேடீஸ் சைக்கிள் என்ற நினைவு. அதில் பயணம் செய்தவர் 'சைக்கிளக்கா' என அழைக்கப்படும் மிஸிஸ் சிவராஜா.

அதிக நாட்கள் சிறிய வகுப்புகளின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர் திரு. வேலுப்பிள்ளை. ரியூசன் வருமானமில்லாக் காலத்திலேயே சொந்தக்



உடுவை எஸ். தில்லைநடராஜா
மேலதிக செயலாளர்
மனிதவள அபிவிருத்தி கல்வி,
பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
(பழைய மாணவன்)

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 LIGHT DISPELS DARKNESS 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

கார் வைத்திருக்கவும், சம்பளம் கொடுத்து சாரதியை வைத் திருக் கவும் ஆசிரியரின் சம் பளம் போதுமானதாயிருந்தது. திரு. பொன்னம்பலம், திரு. துரைராஜா ஆகிய ஆசிரியர்களும் தமது காரில் கல்லூரிக்கு வருவதுண்டு. ஆர். பொன்னம்பலம் மாஸ்டர், தில்லையம்பல மாஸ்டர், ஆனந்தராஜா மாஸ்டர் ஆகியோரின் ஸ்கூட்டர்களைப் பார்ப்பதிலும், கோள்மூட்டிகள் இல்லாதபோது அவற்றைத் தொட்டுப் பார்ப்பதிலும் ஒருவகைச் சுகம். நேசதுரை மாஸ்டர், மயிலிட்டி ரிபிஸியஸ் மாஸ்டர், ஏழாலை குணசிங்க மாஸ்டர் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் வந்துபோனதும் நினைவில் இருக்கிறது.

நான் நாலாம் வகுப்பு சித்தியடையும்வரை அதிபராகக் கடமையாற்றியவர் திரு. கே. ரி. ஜோன். இவர் இந்தியாவைச் சேர்ந்த மலையாளி என்று சொல்வார்கள். மிகச் சாதாரணமான உடை, நடை, மெல்லிய சிரிப்புத் தவழும் முகம். இருப்பினும் கண்டிப்பும் கட்டுப்பாடும் மிக்கவர்.

அதிபரின் அலுவலகம் வெளிவாசலிலிருந்து கணிசமான தூரத்துக்கு அப்பால் அமைந்திருந்தாலும், அவர் தலை எப்போது நிமிரும், உதடுகள் எப்போது அசையும், கை எப்போது சைகை காட்டும் எனச் சொல்ல முடியாது. கல்லூரி நேரத்தில் யாராவது போய்வருது தெரிந்தால் தலையை நிமிர்த்திப் பார்ப்பார். கவனியாமல் சென்றால் கையைத் தட்டுவார். கண் கொடுத்தவர், காது கொடுத்தவர் இரும்பு காந்தமிருக்குமிடம் செல்வதுபோல அதிபரின் அறையினுள் நுழைவார். பாடசாலை நேரத்தில் வெளியே செல்வதற்கான தண்டனையைக் கடைசியாகப் பெற்றவராக இருப்பார். அதன்பின் அப்படிச் செல்லமாட்டார்.

அதிபர் ஜோன் காலத்தில் மாணவர்களுக்கு தலையிடி, வயிற்றுவலி வருவது குறைவு. முதலுதவிப் பெட்டியில் மருந்து வகைகள் நிறையவே இருக்கும். வருத்தத்தைக் காரணம் காட்டிக் கற்றலிலும் கற்பித்தலிலும் ஒதுங்கிவிட முடியாது. நான் மேல் வகுப்புக்கு வரும்வரை மற்றும் பல விடயங்கள் ஒழுங்காக நடந்தன. வருடம் ஒரு தடவை வயிற்றுப் பூச்சிகளுக்கு மருந்து என பேதி தரப்படும். பேதி மருந்து கசந்தாலும், ஒருநாள் விடுதலையும் - கல்லூரி சிற்றுண்டிச்சாலை நடாத்திய பரமசாமியின் ஓசி தேநீரும் நல்ல ருசி. நெருப்புக் காய்ச்சல் பரவுவதற்கு முன் கல்லூரிக்கு வைத்தியப் பகுதியினர் வந்து தடுப்பூசி போடுவார்கள். அம்மை பற்றிக் கேள்விப்பட்டதும் 'பால்' கட்டுவார்கள். அதிபர் இவ்விடயங்களில் எல்லாம் நல்ல கவனம். அது மட்டமல்ல - கல்லூரி மாலையில் முடிவடைந்தபின் ஒவ்வொரு ஒழுங்கைகளாலும் உலா வருவார். பெரும்பாலான மாணவர்களின் இருப்பிடம் பெற்றோர் விவரம், பின்புலம் எல்லாம் அறிந்து வைத்திருந்தார். எனது பெற்றோரின் பெற்றோரையும் தெரிந்து வைத்திருந்ததால் 'முருகுப்பிள்ளையின்ரை பேரன்' எனக் கூப்பிடுவார்.

நினைக்கின்றேன்.... நினைக்கின்றேன் -

அதிபர் ஜோன் இளைப்பாறிய பின் அதிபர் எஸ். எஸ் செல்லத்துரை. பின்னர் திரு. றொபேட் நவரத்தினம்.

அதிபர் செல்லத்துரை பல்லை மெதுவாகக் கடித்துக்கொண்டு தடிக்கு வேலை கொடுப்பார். றொபேட் மாஸ்டர் அடித்தது குறைவு என்று சொல்வதைவிட இல்லையென்று சொல்லலாம். "மடையா... மடையா... பேயா.." என்று ஏசுவது பிரம்படியைவிட உறைக்கும். புஷ்ப ரீச்சர் நாலாம் வகுப்பில் முழங்காலுக்கு மேலே கிள்ளினால் சதை பிய்ந்து விடுமே என்ற பயத்தோடும் நோவோடும் நிலத்திலிருந்து ஓரடி மேலே சென்று கீழே வந்தது இன்னும் நல்ல நினைவு. நிலத்துக்கும் சைக்கிளுக்கும் நோகாமல் தெல்லிப்பளையிலிருந்து சைக்கிளில் வரும் சிற்றம்பல ஆசிரியர் "பிள்ளைகள்" என்று மரியாதையாகத்தான் ஏசுவார். குற்றங்கள் கூடினால் ஆசிரியர் நீலகண்டனிடம் தான் சொல்வார். தண்டனை நீலகண்டன் மாஸ்டரால் நிறைவேற்றப்படும். தடியால் விழும். மேசைக்குக் கீழே குனிந்து நிற்கச் சொல்லி எதிர்பாராத நேரத்தில் முதுகில் பிரம்பு விழும். இரு கை விரல்களையும் கூட்டி வைக்கச் செய்து விரல்களிடையே பென்சில்களை வைத்து, எங்கள் கைகளை நாங்களே மேசையில் அடிக்க வேண்டும். விரல் மொழிகள் வலி சொல்ல முடியாது. வித்துவான் கனகசபை மாணவிகளுக்கு முன்னிலையில் கேலியாகச் சில கதை சொல்லி தண்டனை தந்து விடுவார். இந்தத் தண்டனைகளில்லாவிட்டால் பெரும்பாலான மாணவர்கள் மனிதர்களாக வந்திருப்பார்களா? அறிவையும் ஒழுக்கத்தையும் பெற்றிருப்பார்களா என்பது சந்தேகம்தான்.

திரு. கொல்வின் இரத்தினசிங்கம் சிகரெட் புகைத்து, தான் வருத்தம் வாங்கியதுபோல மற்றவர்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக அடிக்கடி அறிவுரைகள் வழங்குவார். வீட்டிலே ஒரு வாசிகசாலை வைத்து மாணவர்களினதும் ஊராரினதும் வாசிப்புக்கு தீனிபோட்டு வந்தார். சித்திர ஆசிரியர் எம்பெருமான் எப்போதும் கலகலப்பாக இருப்பார். நாடகங்கள் எழுதிப் பழக்குவார். கல்லூரியின் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வார். பலாலி ஆசிரிய கலாசாலைப் பயிற்சியின் பின் சிறந்த ஆங்கில ஆசிரியர் என்றும் பெயரெடுத்தவர்.

'நாடகம்' என்றதும் எம்பெருமான் மாஸ்டர் நினைவில் வருவதுபோல 'நடனம்' என்றதும் ஆசிரியர் ஆனந்தராஜா நினைவுக்கு வருவார். கைப்பணிக் கலையையும் பயிற்றுவித்தார் ஆனந்தராஜா மாஸ்டர்.

சாரணர் இயக்கம் பற்றிப் பேசும்போது 'லீலவங்ஸ' என்னும் பெயரையுடைய சிங்கள மாஸ்டர், 'மத்யூ' என்னும் மலையாள ஆசிரியர் ஆகியோருடன் ஆசிரியர்கள் செல்வநாயகம், நீலகண்டன், சண்முகசுந்தரம், எம்பெருமான், ஆனந்தராஜா ஆகியோரும் ஆற்றிய சேவைகள் நினைவுக்கு வரும். எல்லா நடவடிக்கைகளிலும் தன்னை நுழைத்துக் கொள்ளும் தம்பிராஜா ஆசிரியரும் நினைவில் குறுக்கிடுகிறார்.

வழமையான ஊர் சுற்றிப் பார்த்தல் - தட்டிவானில் மாணவர்களை ஏற்றி காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் தூசியைச் சுவாசித்து, பலாலி விமான நிலைய வெய்யிலில் காய்ந்து, கீரிமலைக் கேணியில் குளித்து, யாழ்ப்பாண நூதனசாலை, கோட்டை, சுப்பிரமணியம் பூங்கா, வாசிகசாலை பார்த்து, திரைப்பட ரசிப்பு முடிந்து, டிங்கிரிடிங்காலை, பம்பரக் கண்ணாலே... பாட்டுடன் வீடு வந்ததும் ஒரு காலம்.

அதிபரின் அலுவலகத்துக்குப் பின்புறமும் ஒரு கதவுண்டு. மெதுவாக நுழைகின்றேன். - நினைக்கின்றேன்.

– கிளாக்கர் மீனாட்சிசுந்தரம் பழைய ரெமிங்டன் தட்டச்சுப் பொறியில் விரல்களை ஓடவிட்டுக் கொண்டிருக்கின்றார். கோபிக்கிறபோதும் சிரித்த முகம் காட்டும் செல்லத்துரையண்ணை றோனியோ மிஷினைச் சுழற்றிக் கொண்டிருக்கின்றார். பஞ்சநாதன் மாஸ்டர் மெஷினை மறைத்துக்கொண்டு நின்றதால் பரீட்சை வினாத்தாளாயிருக்கலாமென சந்தேகம். பணிஸ் விநியோக இடாப்புக்களை பாலசுப்பிரமணியம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

குழாய்த் தண்ணீரைக் குடித்துக்கொண்டே ஆய்வுகூடங்களை நோட்டம் விடுகின்றேன். இரசாயன ஆய்வுகூடத்தில் அம்மான் சின்னத்துரை. மேலே உயிரியல் ஆய்வுகூடத்தில் திரு. துரைராஜாவின் சிரிப்பொலி கேட்கிறது. வாசிகசாலையில் திரு. ராஜதுரை புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஆய்வுகூடங்களுக்கு முன்னாலுள்ள வெளியில்தான் முதலாம் தவணைக் காலத்தில் பங்குனி மாத முதல் வாரம் பெற்றோர் தின விழாக் கொண்டாட்டம் நடைபெறுவது வழக்கம்.

நினைக்கின்றேன்... நினைக்கின்றேன்...

பெற்றோர் தினக் கொண்டாட்டத்தன்று உடுப்பிட்டிக் கிராமமே கலகலப்பாக இருக்கும். ஒலிபெருக்கிச் சத்தம், மின்சார இயந்திரத்தின் ஒலி, ஒளி - காற்றில் சரசரக்கும் கடுதாசிச் சோடனைகள், மாணவர்களின் பேச்சு, பாட்டு, நடனம், நாடகம். மாலை ஐந்து மணிக்கு முன்பாக மேடைக்கு அருகில் நிலத்தில் குந்தியிருந்து பார்த்த நிகழ்சிகள் அத்தனையும் கல்மேல் எழுத்தாகப் பதிந்திருக்கக் கடந்த வாரம் ஏதோ ஒரு கலை விழாவுக்குப் பிரதம விருந்தினராகச் சென்று, குளுகுளு மண்டபத்தில் முன் வரிசையில் மாலை மரியாதைகளுடன்... என்ன நிகழ்ச்சி பார்த்தேன், நினைக்கின்றேன்...நினைக்கின்றேன்... நீர்மேல் எழுத்துபோல ஒரு நிகழ்ச்சியும் நினைவுக்கு வரவில்லையே.

பெற்றோர் தினத்தின் மறுதினம் பரிசளிப்பு நிகழ்ச்சி. அநேகமாக ஆங்கிலத்தில் தான் எல்லாம். நிகழ்ச்சியில் பங்குபற்றும் மாணவர்களும் பரிசில் வாங்கும் மாணவர்களும் மாத்திரம் அனுமதிக்கப்படுவர்.

அ. மி. கல்லூரிக்கு விளையாட்டு மைதானம் 'சன்னாவெட்டை' என்று சொல்லப்படும் 'சண்முக வளவு'. எனக்கும் விளையாட்டுக்கும் வெகுதூரம். மைதானத்தில் ஓடாவிட்டாலும் இல்ல அலங்கரிப்புக்காக வல்லிபுரக் கோவில் பக்கம், வல்வெட்டித்துறை, வல்வை என்று ஓடியோடிச் சென்று சவுக்கு மரம், தாளங்காய் கொண்டுவந்து குவித்தது நினைவுக்கு வருகிறது.

'கிறவுண் போய்' என்ற நியமனத்தில் இயங்கிக் கொண்டிருந்த 'சுப்பிரமணியம்' பகிடிக் கதைகளுடன் 'குளுக்கோஸ்' பரிமாறினதும் நல்ல நினைவு.

பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாகப் படித்த கல்லூரியில் பார்த்தவை, பயின்றவை எல்லாம் நினைவலைகளில் வருகின்றன. வந்த நினைவலைகளில் சில துளிகளைத்தான் தெளித்தேன். தெளிக்காத துளிகளுள் எத்தனையோ ஆசிரியப் பெருந்தகைகள் - அற்புதமான சம்பவங்கள்.

நினைக்கின்றேன்... நினைக்கின்றேன்

நினைவலைகளில் நீந்தும் இன்பம் எனக்கு.... உங்களுக்கு?

தன்னை ஜீவன் என்று நினைத்துக் கொள்பவன் ஜீவனாகவே இருந்து விடுகிறான். தான் ஈஸ்வரன் என்று நினைத்துக் கொள்பவன் ஈஸ்வரனாகவே ஆவான். ஒருவன் தான் நினைக்கிறபடியே ஆவான்.

– ஸ்ரீ ராமகிருஷ்ணர்

இளமை குன்றாதென்றுமுள ஏ. எம். சி.

வ. அழகலிங்கம்

பழைய மாணவன், ஜேர்மனி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் நூற்றி ஐம்பதாவது பிறந்தநாள் வைபவம் வரப்போகிறதென்ற செய்திகேட்டு அதிர்ச்சியும், புளகாங்கிதமும், பெருமையும் அடைந்தேன். அதிலே படித்தவன் என்று பெருமைப்படுவதற்கு அத்தனை உரிமையும் இருந்தபோதும் அந்தக் கல்லூரியின் வளர்ச்சிப்போக்கின் பொற்காலத்தில் படித்தவன் என்றுசொல்லிப் பெருமைப்படுவதுதான் பொருத்தமாகும். அந்தக்கல்லூரி 'ஏ' கிறேட் ஆன காலத்தில், அது அதிகமான மாணவர்களை சர்வகலாசாலைக்கு அனுப்பிய காலத்தில் அது சாரணர் இயக்கத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் அகில இலங்கை முதற்பரிசு பெற்றகாலத்தில், உதைபந்தாட்டத்தில், கைப்பந்தாட்டத்தில், மெய்வல்லுனர் போட்டிகளிலே மெச்சத்தக்க சாதனைகளைப் படைத்த காலத்தில், போதனாபாடங்களில் சந்தேகந்தெளிந்த அறிவு முதிர்ச்சியுள்ள ஆசிரியர்கள் போதிக்க மிகுந்த சிரத்தையும் ஒப்புவமையற்ற தேடலும் குருபக்தியும் விசுவாசமுள்ள கீழ்படிவுமுள்ள மாணவர்கள் படித்து, அந்தக் கல்லூரியின் அதியுயர் பலனைப் பெற்றகாலத்திற் படித்தவன் என்று எஞ்ஞான்றும் பெருமைப்படலாம். விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனங்கள், கலை இலக்கியக் கழகங்கள், பட்டிமன்றங்கள் பூத்துக்குலுங்கி அறிவொளிபரப்பி கல்லூரி நெஞ்சை நிமிர்த்தி மிடுக்கோடு மிளிர்ந்த காலத்தில் படித்தவன். என்னோடு சகமாணவர்களாக இருந்து இன்று தொல்லுலகெங்கும் சிதறி பல பொறுப்பான பதவிகளை வகிக்கும் பட்டதாரிகளை பொறியிலாளர்களை முதுமாண் புலமையாளர்களை விஞ்ஞானிகளை கலாநிதிகளை கணக்காய்வாளர்களை வைத்திய கலாநிதிகளை பேராசிரியர்களை சட்டவல்லுனர்களை அரசியல்வாதிகளை தொழில்வல்லார்களை வங்கி இயக்குனர்களின் பட்டியல்களைப் பதவிகளை யெல்லாமெழுதி இக்கட்டுரையை விரிக்கவேண்டு மென்ற பயம் தடுக்கிறது. அந்த வெற்றிகளின் இரகசியம் இதுதான். பள்ளித்தலம் கோயில், எழுத்தறிவித்த ஆசிரியர்கள் இறைமதிப்புக்குரியவர்கள். இதைச் சிறிது விளக்கினால் சிறப்பாகும்.

நாம் அடிக்கடி வாலிபமிடுக்கோடு எங்காவது சைக்கிள்களிலே பத்துப் பதினைந்து பேரளவில் கும்பலாக கேளிக்கையோடு போவோம். எங்களிற் பலர் மாமிசமலைகள். வடமாகாண மெய்வல்லுனர் போட்டியிற் பங்குபற்றியவரும் அடங்குவர். எமக்கு நேரெதிராக தற்செயலாக ஆசிரியர்கள் வந்தால் எல்லோரும் சைக்கிளைவிட்டிறங்கி Good Morning அல்லது Good afternoon சொல்வோம். அந்த நேரத்தில் பேரூந்தோ, வாகனங்களோ வந்தால் ஸ்தம்பிதமாகிவிடும். பஸ்களிலே போவோம். சிலவேளைகளில் ஆசிரியர்கள் இடையிலே பஸ்களில் ஏறுவார்கள். அதிகமானவர்கள் எழுந்து Good morning சொல்லி இடங்கொடுப்பார்கள். அதிலே கல்யாணம் செய்து பிள்ளைகள் பெற்றவர்கள்கூட தமது பெண்சாதி பிள்ளைகளோடு எழுந்து மரியாதை செலுத்துவதைக் கண்டிருக்கிறேன். இது உயர்வுநவிற்சி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு சிறப்பிதழ்

அணியல்ல. இந்த ஆசிரியர்கள் எவ்வாறு அம்மதிப்புக்கு உயர்ந்தார்கள் என்பதை பல தடைவை யோசித்து ஆராய்ந்திருக்கிறேன். இவர்கள் ஒருநாளாவது வகுப்புகளிலே நீ எழும்பு பேசாதே அப்படி இப்படி அடங்கி நடக்கவேண்டும் என்று ஆணையிட்டது கிடையாது. They never demand respect. They command respect அதன் சூட்சுமம் இதுதான். அவர்கள் மிகக் கரிசனையோடு ஒரு செக்கனையும் வீணாக்காமல் போதித்து தமது கடமையைச் செவ்வனே செய்தார்கள். அவர்களின்பால் கீழ்படிவும் மரியாதையும் தானே வந்தன. ஐரோப்பிய தத்துவ ஞானம் கடைந்தெடுத்துச் சொல்லும். Preparation for the future generation is the highest culture என்று. இந்த எதிர்காலப் பரம்பரைக்குத் தயாரிப்பதுதான் உயர்ந்த கலாசாரம் என்பதை அன்றைய அமெரிக்கன் மிஷன் கல்லூரி நடைமுறையிற் காட்டியது. அந்தக் கல்லூரிக்கும் அங்குவாழ் மக்களுக்கும் மீளா அடிமையாகச் சேவைசெய்ய வேண்டிய கடமைப்பாடும், அது இன்னமும் செயல்வடிவம் பெறவில்லையே என்ற குற்றவுணர்வும் வாட்ட, ஆத்மாவுக்கு அளவற்ற அவா இருந்தபோதும் வரலாற்றின் "பிறேக்" அறுந்து முழுக் கலாசாரம் பண்பாடு சம்பிரதாயம் விழுமியங்களை யெல்லாம் இரத்தவெள்ளத்திற் கழுவி, இரும்புத் துடைப்பானாற் துடைத்துக் கொண்டிருக்கும்பொழுது முன்முயற்சிகளும் தொடர்ந்த பிரயத்தனங்களும் பலாபலனைக் கொடுக்க மறுக்கின்றன.

எமது கல்லூரி ஆற்றிய பணியல்ல. இனிமேல் ஆற்றவேண்டிய பணியே முன்னோக்கப்பட வேண்டிய ஒன்று. மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை. நேற்றைய சரியும் சாதனையுமல்ல பிரச்சனை. இன்றைக்கும் எதிர்காலத்திலும் ஆற்றவேண்டிய கடமைகள் முன்யோசித்துத் திட்டமிடப்பட்டு செயல்வடிவம்பெற முன்முயற்சியும் பிரயத்தனங்களுமெடுக்கப்பட வேண்டும். வரலாற்றில் முந்தி அபிவிருத்தியடைந்த மேற்கு நாடுகளிலே செய்நன்றி கொல்லாத கடப்பாட்டுணர்வோடு நிறையவே பழைய மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பங்களிப்புகளும் படைப்புத்திறன்களும் பிரயோசனமான வழிகளிற் பிரயோகிக்கச் செய்யும் வழிதுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இன்று உலகமோ கணணியுகமாகி சர்வதேச கணணிவலைத் தளத்தாற் பின்னப்பட்டு மூலைமுடுக்கெங்கும் "மொபைல் ரெலிபோன்" நாட்டாண்மைகாட்டும் யுகமாகிவிட்டது. எண்ணற்ற தொழிற்பிரிவினை சர்வதேசதொழிற் பிரிவினை, உலகச்சந்தை, உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், உலகமயமாக்கல், "ஒலிம்பிக்" "ஒஸ்கா" "நோபல் பரிசு" என்று எல்லாமே சர்வதேசியமயமான வேளையிலே எமது கல்லூரியும் உலகநாடுகளின் கல்லூரிமட்டத்திற்கு தன்னை வளர்த்து உலகிலுள்ள மேதைகளுக்கு அறிவியலாளர்களுக்கு தொழில் வல்லுனர்களுக்கு விளையாட்டு வீரர்களுக்கு கலைஞர்களுக்கு இரண்டாந்தரமில்லாத மாணவர்களைப் படைத்துத் தரவேண்டும். உள்ளுவதெல்லாம் உயருள்ளல் என்று வள்ளுவன் சொல்லுவான். நிலையான நிதியான கலைஞான அறிவை எவர் பிந்திக்கற்கிறார்களோ அவர்கள் வரலாற்றில் தண்டிக்கப்படுவர்களென்று ஜேர்மனியப் பழமொழியொன்றுண்டு. அது தனது நூற்றம்பதாவது வயதிலும் இளமை குன்றாது முதலாவது கணணி வகுப்புகளைத் தொடங்கிய பாடசாலையென்ற அந்தஸ்தையும் கௌரவத்தையும் வெல்லப் பிந்திவிடக்கூடாது. அது இன்றைய உலகவரலாற்று வளர்ச்சிக்கேற்ப உலகமயமாக்கல் நிலைக்கேற்ப தன்பல்கலை பயிற்றுவித்த தொன்மையோடு நவீன விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் போதிக்கும் நிலைக்கு விஷ்தரித்து உயர்த்தாவிடில் அதிருக்கும் பிரதேச ஏதிர்காலப் பரம்பரைக்கு துரோகஞ் செய்ததாகிவிடும். நமது முன்னோர்கள் எப்பொழுதுமே வரலாற்று மாற்றத்திற்கும் வரலாற்று அபிவிருத்திக்கும் ஈடுகொடுத்து எம்கல்லூரியை பலபக்கமாக வளர்த்துக்கொண்டே வந்தார்கள். எனது நினைவிலிருக்கும் ஜோன் மாஸ்டர் அதிபராக இருந்தகாலந் தொடக்கம் கல்லூரி அபிவிருத்தி வரலாற்றை எழுதத்தொடங்கினால் இக்கட்டுரை வேறுவிதமாகிவிடும். மனதில் அலைமோதும் உயிர்த்துடிப்பான ஏ.எம்.சி. நினைவுகளை எழுதமுற்பட்டால் பல புத்தகங்களைப் படைத்து விடலாம்.

இருந்தபோதும் கட்டாயம் இரண்டு ஆசிரியர்களை மேற்கோள்காட்டித்தான் ஆகவேண்டும். ஏனெனில் அவர்களிருவருமே நான் கல்லூரி வாழ்வை முடிக்குந் தறுவாயில் மரணித்தவர்கள். ஆனால் மரணிக்முடியா நித்தியஜீவ எண்ணங்களை பரம்பரை பரம்பரையாகக் கொடுக்கும்படி விட்டுச் சென்றவர்கள்.. ஒன்று ஏபிரகாம் மாஸ்டர். அவர் கணிதம் கற்பிப்பதற்கென்றே பிறவி எடுத்தவர். He never alow to slip a siongle logic even accidentally or unconsciously. கணிதவெளியின் அத்தனை தர்க்கங்களும் அவர் காலடியில் மண்டியிட்டு அவர் கட்டளைக்குக் காத்திருக்கும். He can consummate everything with a high power of abstraction. அவர் ஒருதடவை கரும்பலகையிற் செய்த விடையோடு புத்தகத்திலுள்ள விடை பொருந்தியிருக்கப் போவதில்லை யென்று நாம்சொன்னபொழுது Humphry

பிழைவிடுவான், Ramse பிழைவிடுவான், ஏபிரகாம் பிழைவிடமாட்டான். நான் எழுதுவதைக் கடவுள் வாக்காக எழுதுங்கோ. அவ்வளவுக்கு தன்னம்பிக்கையும் விழிப்புணர்வும் நிதானமும் கணிதத்தில் சந்தேகமுமற்ற ஆசிரியர். அவர் ஒருநாளாவது கரும்பலகையிற் பிழையாக எழுதிவிட்டு அழித்துத் திருத்தி எழுதினது கிடையாது. சரளமாக ஆங்கிலம் பேசவல்ல அவர் சொன்ன தங்கம் நிகர் இரண்டு மேற்கோள்களை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். "Manners can't be taught. It can be caught. மற்றது No man is indisposed in the world."

அடுத்தவர் விளையாட்டுத்துறை ஆசிரியரான ஜெயராஜா மாஸ்டர். அவர் கண்ட இடமெல்லாம் சொல்லிய மேற்கோள் ஒன்றுண்டு. உள்ளத்துறுதி உடலுறுதிக்கண்ணது. "Sportive spirit," இல்லாது வெறுமனே புத்தகப்பூச்சி கல்வியால்மட்டும் சமுதாயத்திற்குப் பங்களிக்கக்கூடிய உயர்ந்த மனிதனாகிவிட முடியாது. விளையாட்டென்பது சேர்ந்துவாழவும் இசைந்து இயங்கவும் மன்னித்து மறக்கவும் விட்டுக்கொடுத்து முன்னேறவும் உடன்பாடோடு முரண்பாடுடைய சமுதாயத்தில் பகைமையைக் குறைக்கவும் பழக்கப்படுத்தும் காரணி. பள்ளிவாழ்வின் மிகப்பெரும் பலாபலனான சிறந்த நண்பர்களை உருவாக்கித் தருவதற்கு எண்ணற்ற சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித்தருவதோடு மற்றைய பாடசாலை மாணவர்களோடு நிறைய அறிமுகங்களை ஏற்படுத்தித்தரவும் உதவுவது. இந்த வார்த்தைகளை வள்ளுவனின் "ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்" என்ற குறளோடு ஒப்புநோக்கிப் பார்த்திருக்கிறேன். மற்றைய மனிதர்களோடு மற்றைய சமூகத்தோடு ஒத்துப்போகத் தெரியாத மனிதர்கள் நடமாடும் பிணங்களாகும். சமுதாய உணர்மையுள்ள அவர் தரப்படுத்தற் சட்டம் வருவதற்கு இரண்டு வருடத்திற்கு முன்னரே தீர்க்கதரிசிபோல் கூறினார்.


வடமாகாணத்தில் பத்துமடங்கு சர்வகலா சாலைக்குப் போவதற்குத் தகுதியான மாணவர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமோ அரசியல் வாதிகளோ இதைப்பற்றிச் சட்டைசெய்யாது உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். சிலவேளை ஒருபெரிய சமூக அவஸ்தை ஏற்படலாம். வாலிபம் சிரிக்கத் துள்ளித்திரிந்த எம் துடிப்படக்கி பள்ளிமாணவனாகப் பயன்படுத்திய பெருந்தகை என்றால் மிகையாகாது.

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். இந்தச் சமுதாய அமைப்பு முறையின் இருண்ட கோடிக்குள் கிடந்த குப்பையிற் பிறந்து குப்பையில் வளர்ந்த நாம் பலபக்க பரிபூரணத்துவமடைந்த பாடசாலையில் சந்தேகந்தெளிந்த ஆசிரியர்களிடம் கல்விகற்கவும், ஒருவரையொருவர் எதிலும்வெல்லக்கூடிய ஏட்டிக்குப் போட்டிபோடும் சகமாணவர்களோடும் சேர்ந்து கல்விகற்கவும் கொடுத்துவைத்ததால் மண்புழு விலிருந்து மனிதனானவர்கள். அந்தக் கடப்பாடு இடித்துரைக்க எமது கல்லூரிக்கும் எமது ஆசிரியர்களுக்கும் சகமாணவர்களுக்கும் உடுப்பிட்டிச் சூழல்வாழ் மக்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது சிரந்தாழ்த்தலைச் சொல்லிக்கொள்கிறேன். இதை எழுதும்பொழுது தொண்டரடிப்பொடியாழ்வாரின் கங்கையிற் புனிதமான காவிரி என்பதும் சொர்க்கத்தில் சிறந்த திருவரங்கம் என்ற வரிகள் நினைவுக்கு வந்தன. அந்த உடுப்பிட்டி அமெரிக்க மிஷனில் படிக்கவும் அந்தச் சொர்க்கத்தில் வாழ்ந்து இன்றுவரை விஞ்ஞானமும் கலையும் படைத்த அத்தனை வளங்களையும் அனுபவித்து எமது அடுத்த பரம்பரை வாழ்க்கையை முழுமையாக வாழ்வார்கள் என்று நம்புவோமாக. அந்த எதிர்கால வாழ்வுக்கு உத்தரவாதமளிக்கும் இளமைகுன்றாதென்றுமுள ஏ.எம்.சி. யின் இருநூறாவது முன்னூறாவது... ஆண்டுவிழாவின் முன்தேவைகளை செய்வதன் மூலம் அதன் இன்றைய வாரிசுகளான நாம் அதை நடைமுறையால் வாழ்த்துவோமாக.

இவ்வுலக வாழ்க்கையில் இருப்பதும், அதனைத் துறப்பதும் ஈஸ்வர இச்சையைப் பொறுத்திருக்கின்றன. ஆதலால் எல்லாவற்றையும் ஈஸ்வரனிடம் ஒப்புவித்துவிட்டு உன் வேலையைச் செய். அதைத் தவிர உன்னால் என்ன செய்ய முடியும்?

– ஸ்ரீ ராமகிருஷ்ணர்

'இருளை அகற்றும் ஒளி'யிலிருந்து சில அனுபவக் கீற்றுகள்



கந்தையா நீலகண்டன்

சட்டத்தரணி

(உப தலைவர்

பழைய மாணவர் சங்கம்

கொழும்புக் கிளை)

"காலங்கள் மாறிவிட்டன. நாட்டு நிலைமைகள் தடம்புரண்டு விட்டன."

இந்நாட்டில் வாழும் சமீபகால வரலாற்றை அனுபவித்த ஒவ்வொரு தமிழனின் மனதிலும் எழும் எண்ணங்கள் இவை. ஆனால் அவை இருதசாப்தங்களின் அனுபவ அலைகள். அதற்கு முற்பட்ட - சுமார் நாலு தசாப்தங்களுக்கு முந்திய அனுபவக் கீற்றுகள்தான் இங்கு நான் வடிக்கப் போகின்ற நினைவலைகள். "ஒளி இருளை அகற்றுகின்றது" என்பதனையே இலட்சணையாகக் கொண்டு எங்களின் அறிவின்மை என்ற இருளை நீக்கிய ஒளியான எங்கள் கல்லூரி எனக்குத்தந்த அனுபவங்கள் - படிப்பினைகள் - ஏராளம் - ஏராளம். சிலவற்றைத் தொட்டுக் காட்டும் முயற்சியே இந்த ஆக்கம்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் மலாயா (அன்று மலேசியா அப்படித்தான் அழைக்கப்பட்டது) நாட்டின் அரச சேவையில் பல பொறுப்புக்களை வகித்து இரண்டாம் உலக யுத்தத்தில் 'வார்டனாக', பணிபுரிந்து, இறுதியில் 'PJK' என்ற அரச பட்டத்தையும் பெற்று கௌரவமாக வாழ்ந்த என் தந்தை அங்கு ஒரு விடயத்தில் நிறைவைக் காண முடியவில்லை. யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்த அனுபவமோ என்னவோ மலாயாவிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் கல்வி நிலை உயர்ந்தது என்ற அபிப்பிராயத்துடன் என்னையும் என் சகோதரங்களையும், தான் இளைப்பாறும் முன்பே யாழ்ப்பாணத்திற்கு கல்விகற்கும் ஒரே நோக்குடன் எங்களின் அம்மாவுடன் அனுப்பி வைத்தார். மலாயா இராச்சியத்தினதும் பிரித்தானிய இராச்சியத்தினதும் பிரஜா உரிமைகளை நாங்கள் துறந்து இலங்கைப் பிரஜைகளானோம். அந்தக் கதையைக் கேட்டு என் பிள்ளைகள் சிரிக்கிறார்கள். அன்றைய யாழ். கல்வியின் சிறப்புக் காரணமாக முடிவு எடுத்த என் தந்தையாரையும் குறை கூறமுடியாது; இன்றைய நிலையை அனுபவிக்கும் இளம் தலைமுறையினரையும் குறைகூற முடியாது.

மலேசியாவிலிருந்து வந்ததும் எனது அண்ணன்மார் இருவரும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சேர்க்கப்பட்டனர். கரணவாய் அரசினர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்துக்கொண்ட நான் ஆறாம் வகுப்பில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 1958 தைத் திங்களில் சேர்ந்து கொண்டேன். ஆங்கிலம் சரளமாகக் கற்றுத்தந்த லீலா

உடுப்பிட்டி

அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு

சிறப்பிதழ்

டீச்சர் எங்கள் வகுப்பாசிரியை. தமிழ்ப் புலமைமிகு நீலகண்டன் மாஸ்டர் தமிழ் கற்பித்தார். தன்பெயரே என்பெயராக இருந்தபடியால் தமிழ் வகுப்பில் தமிழாசிரியர் "நான்" என்றே என்னைச் செல்லமாக அழைத்தார். இளம் வயதில் அது ஒரு திகில் தரும் இன்ப அனுபவம். "நானும் பேசவேண்டும்" என என்னைத் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் பேசவைத்தார். 'கொலை' என்ற சொல்லை, 'கொளை' என்று சொல்லித் தமிழைக் கொலை செய்த எனக்குக் கால் நடுங்கியது. விட்டுவைக்காத விடாக் கண்டனாக தமிழாசிரியர் உருவெடுத்தார். பேச்சுப் போட்டியில் பேசிமுடித்துவிட்டேன். இரண்டாம் இடம் மட்டும் கிடைத்தது. அதுவே எனக்குப் பெரும் வெற்றியாகப்பட்டது. நீலகண்டன் மாஸ்டர் விடவில்லை. அதிபரிடம் சென்று மத்தியம் வகித்தவர்கள் வேறு ஓர் ஆசிரியரின் உறவினருக்கு முதலிடம் கொடுத்தது பாரபட்சமான தீர்வு என முறையிட்டார். என்றும் வெள்ளைநிற உடையில் உலாவிவந்த கரும் மனிதரான அதிபர் செல்லத்துரை ஒரு கடுமையான மனிதர். "அநீதி நடந்தால் தவறு; மீண்டும் போட்டியை நடத்த வேண்டும்" என உத்தரவு போட்டார். மீண்டும் நடந்த போட்டியில் எனக்கு முதலிடம். நான் அல்ல - நீலகண்டன் மாஸ்டர் வென்றுவிட்டார். பல ஆண்டுகளின் பின் கொழும்பில் பல மேடைகளில் எனக்கு உரையாற்றும் பாக்கியம் கிடைத்த வேளைகளில் நீலகண்டன் மாஸ்டரை சபையில் கண்டால், அந்த அனுபவத்தை நினைவு கூர்ந்து கூறுவது என் நன்றிமறவாப் பணியாகிவிட்டது. அதனால் நீலகண்டன் மாஸ்டருக்குக் கோபம்கூட வந்துள்ளது. ஆனால், என் உள்ளக் கிடக்கையை நன்றியுணர்வுடன் என்னை மறந்த நிலையில் கொட்டித் தீர்த்துவிடுவது வழக்கம்.

நேர்மையாக நீதியை நிலை நாட்டிய அதிபர் செல்லத்துரையும் என் உள்ளத்தில் என்றும் வாழ்கிறார். அவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்காதுவிட்டாலும், கொழும்பு தேவாலயத்தில் நடந்த பிரார்த்தனையில் பழைய மாணவர் சார்பில் நினைவஞ்சலி உரை நிகழ்த்த சந்தர்ப்பம் கிடைத்தது ஒரு நிம்மதி.

பேச்சுப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் பெற்றோர் தினவிழாவில் பேச வேண்டும். பெரிய மேடையில் ஏற்றப்பட்டேன். கல்லூரி முற்றம் நிறைய ஜனத்திரள். ஒலிவாங்கி முன் என் கன்னிப் பேச்சு. இருளில் ஒருவரின் முகமும் தெரியவில்லை. ஒலிவாங்கியைப் பார்த்து ஐந்து நிமிடங்கள் பேசியபின், சாரணர் அண்ணாமார் என்னைப் பாராட்டி கீழே இறக்கிவிட்டார்கள். அன்று நானும் ஒரு பேச்சாளனாகிவிட்டேன் என்று எனக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. அந்த அனுபவம் என் வாழ்வில் ஒரு திருப்பு முனை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கடைசிப் பாடநேரம் மாணவர் தேர்ச்சிச் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஒரே வகுப்பில் இருக்கும் எல்லாப் பிரிவு மாணவர்களும் சேர்ந்து நடத்தும் ஒரு குட்டிப் பாராளுமன்றம் அது. தமிழரசுக்கட்சி - தமிழ் காங்கிரஸ் கட்சி வேறுபாடும் வளர்ந்த அவை அது. அறுபதுகளில் உடுப்பிட்டிச் சிங்கம் சிவசிதம்பரம் எங்களின் தலைவன் என்ற உணர்வு. அந்தக் கட்சி ஆதரவு உணர்வு என்னை அடுத்த பிரிவு ஒன்றில் இருந்த மு. ஸ்ரீ சத்குருநாதனுடன் இணையா நண்பனாக அணைத்து வைத்தது. இன்று அவர் வாழ்வது வேறு நாடு. ஆனால் நட்பு அணையவில்லை. மாணவர் தேர்ச்சிச் சங்கத்தில் தேர்தல்கள் நடத்தினோம், விவாதங்கள் நடத்தினோம், அத்துடன் நிற்கவில்லை. பத்திரிகை அறிக்கைகள் கூடவிட்டோம். ஸ்ரீ ஜவஹர்லால் நேரு மறைந்தபோது அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றி பத்திரிகையில் பிரசுரித்தோம். பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்கின்ற பயிற்சி; மாணவத் தலைவர்களாக கட்டுப்பாட்டை பேணும் ஆள்மைத் திறமை; இப்படிப் பலபல அனுபவங்கள்... இந்த அனுபவங்கள் பிற்காலத்தில் என் வாழ்வில் பல பணிகள் ஆற்றவும் சட்டத் தொழிலை செவ்வனே புரியவும் அத்திவாரங்களாக அமைந்தமையை எண்ணி, என்னை ஆக்கிய கல்லூரிக்கு நன்றி நவில்கிறேன்.

கல்லூரி மாணவர்களிடையே நாடகத் தாகத்தை வளர்த்தவர் எம்பெருமான் மாஸ்டர். நாங்கள் க.பொ.த. சாதாரண தர வகுப்பில் படிக்கும்போது நண்பன் உடுவை எஸ். தில்லை நடராஜா ஓரங்க நாடகமொன்றை தானாகக் கதை எழுதி இயக்கி பெற்றோர் தின விழாவில் மேடையேற்ற வந்தபோது தட்டிக் கொடுத்து அனுமதி தந்தவர் எம்பெருமான் மாஸ்டர். நானும் அதில் ஒரு நடிகன். என் நடிப்புத் திறமையிலும் பார்க்க தில்லையின் நட்பே முதற் காரணம். இன்னும் ஒரு மாணவர் குழுவிற்கும் நாடகம் மேடையேற்ற அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இந்த இரு நாடகங்களிலும் காதல் பேச்சுகள் வருவதாக அதிபர் செல்லத்துரையின் காதிற்கு எட்டிவிட்டது. விழாவிற்கு முதல்நாள் மத்தியானம் இருநாடகங்களையும் மேடையேற்ற அனுமதிப்பதில்லை என்ற கட்டளையை அதிபர் பிறப்பித்தார். தில்லைக்கும் எனக்கும் பெரும் ஏமாற்றம். அன்று நடுநிசி பன்னிரெண்டு மணிவரை அதிபர் இல்லத்தின் முன் நின்று மன்றாடி, இறுதியில் அனுமதி தந்தார். அதுவும் ஆசிரியர் ஒருவர் திருத்திய நாடகப் பிரதியைப் பார்த்து அங்கீகரித்தால் மட்டுமே நாடகங்களை மேடையேற்றலாம். அங்கீகரிக்கப்பட்டபடி நாங்கள் நாடகத்தை மேடையேற்றினோம். ஆனால் அடுத்த குழு அதில் தவறு விட்டுவிட்டது. அதிபர் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்தார். இது செல்லத்துரை மாஸ்டரின் ஆட்சியில் இன்னும் நான் மறக்க முடியாத ஓர் அனுபவம்.

நண்பன் தில்லை நடராஜா கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்படும் முன், இந்து

கலாசார திணைக்களத்தின் பணிப்பாளராக சில காலம் இருந்தார். நான் இந்நாட்டின் இந்துமத நிறுவனங்களினதும் அறக்கட்டளைகளினதும் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் என்ற முறையில், இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளரை ஒரு நிகழ்ச்சிக்காக அழைத்திருந்தேன். அப்போதுதான் இருவரும் 1962ம் ஆண்டில் நடந்த நிகழ்வை இனிமையுடன் எண்ணிப் பார்த்தோம். 1962ல் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, அரசாங்க பாடசாலைகள் சுவீகரிப்பு சட்டத்தின்கீழ் அரசாங்கப் பாடசாலையான பின் முதன்முறையாக சரஸ்வதி பூசை கல்லூரியில் நடந்தது. அதற்குப் பொறுப்பான இந்து மாணவர் சங்கத்தின் தலைவராக நண்பன் தில்லை நடராஜாவும், செயலாளராக நானும் இருந்து சரஸ்வதி பூசையை நடத்திவைத்தோம். நான்கு தசாப்தங்களுக்கு பிறகு இந்து கலாசார திணைக்கள பணிப்பாளராகவும், இந்து மாமன்றப் பொதுச் செயலாளராகவும் நாங்கள் சந்திக்கின்ற பாக்கியம் எங்கள் கல்லூரி நாளை நினைவூட்டியது.

அறுபதுகளில் பிரபல தமிழ் எழுத்தாளராக இருந்து அகால மரணமடைந்த நெல்லை க. பேரன் ஈழநாடு, வீரகேசரி பத்திரிகைகளுக்கு நிருபர். நானும் நண்பர் ஜெயக்குமாரும், தில்லை நடராஜாவும் நெல்லை க. பேரனுக்கு நட்பு முறையில் செய்தி கொடுப்பவர்கள். ஒருநாள் அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நீர்க்குழாயில் நீர் வரவில்லை. அடுத்த நாள் ஈழநாடு பத்திரிகையில் செய்திவந்துவிட்டது. அதிபர் செல்லத்துரை, ஆசிரியர் குழாம் அறைக்குச் சென்று "இங்கு எது நடந்தாலும் பத்திரிகைக்காரர் விடமாட்டார்கள்" என்று சொல்லியிருக்கிறார். உடனே எம்பெருமான் மாஸ்டர் "இங்கு மூன்று குறும்புக்காரர்கள் இருக்கிறார்கள்" என்று எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார். அதிபர் சிரித்துவிட்டுப் போய்விட்டாராம். இதுபற்றி குறிப்பிடும்போது இன்னும் ஒரு ஞாபகம் வருகிறது. நான் ஒருநாள் செல்வச் சந்நிதிக்கு ஓர் உறவினரின் திருமணத்திற்குச் சென்றிருந்தேன். இன்னும் ஒரு திருமணமும் வள்ளி அம்மன் வாசலில் நடக்க இருந்தது. அங்கே பெரும் குழப்பம். மெல்லச் சென்று உற்றுக் கேட்டேன். தங்கையைப் பெண்காட்டிவிட்டு அக்காவை மணப் பெண்ணாகக் கொண்டு வந்ததால் மாப்பிள்ளை தாலிகட்ட மறுத்துவிட்டார். அடுத்த நாள் இடைவேளை நேரம் தில்லையும், ஜெயக்குமாரும் உதவிசெய்ய அதுபற்றி ஒரு செய்தியை விபரமாக எழுதினேன். திரு. பேரனிடம் கொடுக்க ஞாயிறு வீரகேசரியில் பெரும் கொட்டை எழுத்துடன் இச்செய்தி வந்ததும் எங்கள் மூவருக்கும் திகில்.

அன்று கல்லூரியில் "மாணவன்" என்ற பெயரில் கையெழுத்துப் பத்திரிகையொன்றை வெளியிட்ட நண்பன் தில்லை நடராஜா, பிற்காலத்தில் நாடறிந்த நல்ல எழுத்தாளராக - நடிகராக - உயர்ந்திருக்கிறார். செய்திகள் வரைந்த ஜெயக்குமார் பிற்காலத்தில் ஈழநாடு, தினகரன் முதலான பல பத்திரிகைகளுக்கு நிருபராக இருந்திருக்கிறார். வளரும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். அப்படியான பயிர்களை வளர்த்த செம்மையான பூமியாகவும் எங்கள் கல்லூரி விளங்கியது.

கல்லூரியின் ஒழுங்குக்குப் பொறுப்பாக அன்று இருந்தவர் உப அதிபர் ரொபேர்ட் நவரத்தினம் மாஸ்டர். கடமை, கண்ணியம். கட்டுப்பாடு தவறாதவர். நான் க.பொ.த. சாதாரணதர வகுப்பில் படிக்கும்போது அவ்வகுப்பில் அவரின் மகள் ஒரேயொரு மாணவி. நான் வகுப்பு மாணவ தலைவனும், கல்லூரி மாணவ தலைவர்களின் சபையான மாணவர் சபைப் பிரதிநிதியும். ஆசிரியர் வராத வகுப்புகளை மேற்பார்வை செய்வது மாணவ தலைவரின் பொறுப்பு. ஒரு நாள் ரொபேர்ட் மாஸ்டரின் மகள், கடைசிப் பாடம் ஆசிரியர் இல்லாதபடியால் வீட்டிற்குப்போக முயன்றார். நான் அனுமதி மறுத்து கண்டிப்பாக இருந்தேன். தன்மகளுடன் கண்டிப்பாக இருந்ததற்கு தந்தை என்னைக் குறை கூறவில்லை. ஆனால் பாராட்டி மெச்சினார். சைக்கிளில் பிரம்புடன் கல்லூரி சூழலில் - தெருவில்கூட - வலம்வந்து ஒழுங்கைப் பேணிய உத்தமர் அவர்.

கல்லூரியின் ஒழுங்கைப் பேணுவதில் அதிபர் செல்லத்துரை மாஸ்டரும் உப அதிபர் ரொபேர்ட் மாஸ்டரும் காட்டிய கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும் என்றும் மனதார நினைந்து மெச்சுபவன் நான். அதிபர் செல்லத்துரை மாஸ்டருக்கு கொழும்பு தேவாலயத்தில் நடந்த பிரார்த்தனையில் அஞ்சலி செலுத்தியதைப்பற்றி குறிப்பிட்டிருந்தேன். அதைப்போன்று மறைந்த ரொபேர்ட் மாஸ்டருக்கும் அஞ்சலி செலுத்துகின்ற பாக்கியம் கிடைத்தது எனக்கு நிம்மதி. அவர் மறைந்தபோது, நான் தற்செயலாக ஊரில் இருந்தபடியால், பழைய மாணவர்கள் சார்பிலே அவரது மரணச் சடங்கில் கலந்து கொண்டு இரங்கல் உரை நிகழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்தையே குறிப்பிடுகிறேன்.

அதிபர் செல்லத்துரை மாஸ்டருடனான இன்னும் ஓர் அனுபவத்தையும் குறிப்பிட்டேயாக வேண்டும். நான் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தியெய்திய பின் அமெரிக்க மிஷன் கல்லூரியிலேயே க.பொ.த. உயர்தர வகுப்பையும் படித்து அங்கிருந்து பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்பது என் அதிபர் ஆசிரியர்களின் அவா. ஆனால் விடுதியொன்றில் இருந்து க.பொ.த. உயர்தர வகுப்பு படித்து நான் வைத்தியனாக வரவேண்டும் என்பது என் தந்தையின் விருப்பம். சட்டம் படிக்க வேண்டும் என்பது என் முடிவு. யாழ் இந்துக் கல்லூரியில் க.பொ.த. உயர்தர வகுப்பில் சேர்க்கப்பட்டேன். அங்கிருந்து சட்டக் கல்லூரி பிரவேசப் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்யவிருந்தேன். அதற்கு முந்திய வருடம் படித்த கல்லூரி அதிபரின் அல்லது ஒரு முக்கியஸ்தரின் சான்றிதழ் தேவை. அதிபர் செல்லத்துரையை நாடி சான்றிதழ் கேட்போது, நான் அமெரிக்க மிஷன் கல்லூரியிலிருந்து விலகிச் சென்ற

கோபத்தை கனலாகிக் கக்கி மறுத்து விட்டார். எனக்கு உடன் அது வேதனை தருவதாக இருந்தது. நான் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரத்தின் சான்றிதழுடன் விண்ணப்பத்தை அனுப்பிவிட்டேன். சில மாதங்களுக்குப் பின், யாழ். மாநகர சந்தையில் என்னைக் கண்ட செல்லத்துரை மாஸ்டர் "நீலகண்டன், ஏன் கரெக்டர் சேர்டிபிகேட் எடுக்க வரவில்லை?" என்று அன்புடன் கேட்டார். "நீங்கள்தான் மறுத்துவிட்டீர்களே சேர்" என்றேன். "வாரும் அடுத்த கிழமை" என்று சொல்லிச் சென்றார். அடுத்த கிழமை அவரைச் சென்று சந்தித்தேன். தன் முத்தான கையெழுத்தில் ஒரு பக்கம் நிறைய எழுதித் தந்தார். அதனை இன்றும் பக்குவமாகப் பேணிப் போற்றுகிறேன். கல்லூரியின் பற்று. அதன் காரணமாகக் கண்டனம் இருந்தும் அதற்கெல்லாம் பின்னால் ஒரு நேய உள்ளம் - அந்த முழுவெள்ளை ஆடையில் உலாவிவந்த கருமனிதரிடம் இருந்தது.

இன்றும் எந்த வீதியில் நடந்தாலும் என்னையறியாமலே என் கால்கள் வீதியின் வலப்புறம் சென்றுவிடும். எங்கள் கல்லூரியில் வெள்ளிக் கிழமைகளில் கல்லூரி 'அசெம்பிளி' நடக்கும்; அதில் அதிபர் செல்லத்துரை உரையாற்றுவார். ஒரு நாள் அவர் கூறினார் "நீங்கள் எல்லோரும் ரோட்டில் செல்லும் போது கார்களை ஓட்டும் சாரதிகள் எல்லோரும் மடையர் என்று எண்ணி கவனமாக வீதியின் வலப் புறத்தில் நடக்க வேண்டும். உங்களுடைய பிரின்சிப்பல் செல்லத்துரை காரை ஓட்டும் போது அவரையும் ஒரு மடையன் என்று எண்ணிக் கவனமாக நடவுங்கள்". அந்த வார்த்தைகள் என் மனதில் பதியப்பட்ட காரணத்தால் அன்று முதல் வலப்பக்கத்தில் மட்டும் வீதியில் நடக்கிறேன்.

நாங்கள் க.பொ.த. (சா.த.) ஆரம்ப வகுப்பில் இருந்த போது தொழில் வழிகாட்டி வகுப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு ரொபேட் மாஸ்டரே பொறுப்பு. என்ன தொழில் பார்க்க விருப்பம் என்ற எங்களுக்குத் தரப்பட்ட வினாக் கொத்தில் ஒரு கேள்வி. தயங்காது நான் தந்த பதில்: "சட்டத் தொழில்". உடுப்பிட்டி அ. மி. கல்லூரி தந்த பல அனுபவங்களின் காரணமாக என் மனதில் வித்தாக அன்று முளைத்த ஆசையை ஆண்டவன் நிறைவேற்றி வைத்தான் என்றே கூற வேண்டும்.

ரோபேர்ட் மாஸ்டரைப் பற்றியும் இன்னும் ஒரு விடயம் சொல்ல வேண்டும். "டே.. டே.." எனக் கோபமாகக் கத்தினாலும் கடமை உணர்வு மிக்கவர். ஒழுங்காக இருந்து கல்வி கற்கும் மாணவர்களில் அவருக்கு ஒரு தனிப்பற்று. அந்தப் பற்றினை அனுபவித்தவன் நான் என்று அடக்கத்துடன் கூறவேண்டும். ஒருநாள் பௌதீக ஆய்வு கூடத்தில் இருக்கும் நுண்காட்டியை இடது கண்ணால் பார்த்தார் ரொபேர்ட் மாஸ்டர். பக்கத்தில் செல்லப்பிள்ளைபோல் நின்ற நான், "வலது கண்ணால் பாருங்கள் சேர், இன்னும் தெளிவாகத் தெரியும்" என்றேன். "டே..டே.. என்ன சொல்கிறாய்.. ஏதோ பிழை இருக்கிறது" என்று திரும்பினார். அவர் செய்த விசாரணையின் பின்தான் முதன்முதலாக எனக்கு விளங்கிய விடயம் என் இடது கண்ணில் வழமையான பார்வை சக்தி இல்லை என்று. இப்படிப் பல கட்டங்களில் ஒரு கடுமையான ஒழுக்கத்தைப் பேணுகின்ற ஆசிரியரிடம் நானும், நண்பன் ஸ்ரீ சத்குருநாதன் போன்றோர்களும் அன்பாக பழகுகின்ற வாய்ப்பினையும் பெற்றிருந்தோம்.

எங்களுக்கு ஏழாம் வகுப்பில் இனிமையாகக் கணித பாடம் படிப்பித்தவர் பஞ்சநாதன் மாஸ்டர். அவருக்கும் கோபம் வரும் என்று சிலர் கூறுவர். ஆனால், அவர் கோபப்பட்டதை நான் என்றும் காணவில்லை. கணித பாடத்தில் எனக்கு ஓர் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் முதலில் ஏற்படுத்தியவர் அவர். பின்னர் க.பொ.த. சாதாரண தர வகுப்பில் கேரளத்திலிருந்து வந்த ஏபிரகாம் மாஸ்டர் கணிதத்தில் மேலும் அறிவைத் தந்தார். நடுவில் ஒரு குற்று போட்டுவிட்டு சோக்குக் கட்டியால் வட்டம் போட்டார் என்றால் அது வட்டம்தான். அவசரமாகத் துள்ளித் துள்ளி வருவார். வேகமாகப் படிப்பித்துவிட்டு செல்வார். அவருக்கு நேர் மாறான சுபாவமுள்ள அமைதியும் தாய்மையும் மிக்க திருமதி ஏபிரகாம் டீச்சர் மிருகவியலை அன்புடன் எங்களுக்குக் கற்றுத் தந்த இனிய அன்னை.

க.பொ.த. சாதாரண தர முதலாம் ஆண்டில் எங்களுக்கு பல்கலைக்கழகப் பட்டதாரியான ஓர் இளம் ஆசிரியர் பௌதிகம் படிப்பிக்க வந்தார். அவரது முதல் எழுத்துக்கள் "ஆர். பி." தெளிவாக எழுதுவார். அந்த எழுத்துக்களின் பின்னேயிருந்த இராமலிங்கம் பொன்னம்பலம் என்ற பெயர்களை இந்த இரு எழுத்துக்களும் மறைத்து நின்றன. எனவே அவர் என்றும் ஆர். பி. மாஸ்டர் ஆனார். அவர் என் உறவினர் என்றாலும், எனக்குப் படிப்பித்த நல்ல சிறந்த ஆசிரியர்களில் ஒருவராகவே அவரை மதித்துப் போற்றுகிறேன். என் பிள்ளைகள் கூட அவரிடம் பாடம் கேட்டுப் படிக்கும் பாக்கியத்தைப் பெற்றனர். அவர் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவரான எம். பி. இராமலிங்கத்தின் தலைமகன். இருந்தாலும் பெருமையெதுவுமின்றி அடக்கமாக ஏழு ஆண்டுகள் படித்த அந்த கல்லூரியில் 34 ஆண்டுகள் தொடர்ந்து ஆசிரியப் பணியாற்றிய செம்மல்.

துரைசாமி என்ற துரைராஜா மாஸ்டரையும் மறக்க முடியாது. சில மாணவர்களை கலங்க வைத்த அவர் என்னை நல்ல அன்பாக நேசித்தார். 'சுகாதாரம்' படித்த நான், அப்புத்தகத்தின் பக்கங்களின் எண்ணிக்கையைப் பார்த்துப் பயந்து தமிழ் இலக்கியத்தை க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு எடுக்கத் தீர்மானித்தேன். தமிழ் இலக்கியம் படிக்காது இப்பாடத்தை பரீட்சையில் எழுத நானும் தில்லையும் துணிந்தபோது துரைராஜா மாஸ்டர் தயங்காது அனுமதி தந்தார். "இவங்கள் தமிழ் இலக்கியம் படிக்கத் தேவையில்லை. படியாமல் பாஸ் பண்ணுவாங்கள்" என்றே முடிவு சொல்லிவிட்டார்.

கல்லூரி நூலகத்திற்கு அப்போது பொறுப்பாக இருந்தவர் தன்முயற்சியால் உயர்ந்து அதே முயற்சியால் பிற்காலத்தில் கல்லூரியை உயர்த்திய அதிபராகிய திரு. சிதம்பரப்பிள்ளை. நூலகத்திலிருந்து புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிப்பதில் அவர் மிகவும் கடினம். ஆனால், நான், தில்லை நடராஜா, ஜெயக்குமார், முத்துரத்தினானந்தன் போன்ற சிலருக்கு மட்டும் அனுமதி தந்திருந்தார் திரு. சிதம்பரப்பிள்ளை. இராமாயணம், பாரதம் முதலியவற்றை வகுப்பில் அல்ல, நூலகத்தில்தான் கற்று தமிழ் இலக்கியப் பரீட்சை எழுதிய அனுபவம் இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கின்றது. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிவிட்டு, சீதைபட்ட துயரத்தைப்பற்றி வர்ணிக்குமாறு கேட்கப்பட்ட வினாவுக்கு பக்கம் பக்கமாக ஆசைதீர எழுதிக் கொட்டினேன். அதற்கு உதவி செய்தது நாங்கள் படித்த இராமாயணம் பற்றிய பல நூல்கள். இப்படி கல்லூரி நூலக அனுபவங்கள் பலவற்றை அடுக்கிச் செல்லலாம்.

என் கல்லூரி அனுபவத்தைப்பற்றி எழுதும்போது இன்னும் ஒரு மறக்க முடியாத ஆசிரியை "சைக்கிள் டீச்சர்" என பிரபல்யம் பெற்ற திருமதி எம். சிவராசா. அவரின் ஆங்கில வகுப்பில் தமிழில் கதைத்தால் தண்டப் பணம் செலுத்த வேண்டும். அப்பணத்தில் சரஸ்வதிபூசை நடத்தி வைப்பார். எனக்கு ஆங்கிலம் எழுத வழிகாட்டிய ஆசான்களில் அவர் குறிப்பிடத்தக்கவர். அவர் ஒருமுறை கல்லூரியில் நூறு மாணவர்களைக் கொண்டு கட்டப் பொம்மன் நாடகத்தை நடிக்கவைத்து தயாரித்தளித்த துணிவுமிக்க ஒரு பெண்மணி.

கல்லூரி வாழ்க்கையில் கல்லூரிசூழலும் தந்த படிப்பினைகள் பல. துவாளி வயலுக்கு ஊடாகத்தான் கரணவாய் தெற்கில் இருந்து கல்லூரிக்கு நானும் என் கிராமத்து நண்பர்களும் செல்வோம். சப்பாத்து அணிந்து கல்லூரி சென்றவர்கள் அல்ல நாம். செருப்புடன் தான் நடந்து வளர்ந்தவர்கள். நண்பன் முத்துரத்தினானந்தனின் தந்தையார் ஒரு கிறிஸ்தவப் பாதிரியார். ஆனால் துவாளிப் பிள்ளையார் முன் செருப்புடன் நடக்க மாட்டார். வயலுக்கு ஊடாக செருப்புடன் நடக்க மாட்டார். நாம் வணங்கும் ஆலயங்களுக்கும் எங்களுக்கு சோறுபோடும் வயல்களுக்கும் தர வேண்டிய மரியாதைபற்றி ஒருநாள் துவாளி வயலில் வைத்து எனக்கு அறிவுரை தந்த பெரியார் அவர். மத வேறுபாட்டிற்கு அப்பால் அவர் தந்த அறிவுரை என் மனதில் பசுமையாகப் பதிந்தது. இன்றும் ஆலயங்களுக்கு முன்னால் மரியாதை செலுத்த வேண்டிய கடப்பாட்டை மறவாது நிறைவேற்ற அந்த அனுபவம் எனக்கு அத்திவாரம் போட்டு வைத்தது. இப்படி கல்லூரி சூழல்கள் தந்த அனுபவங்கள் பல, என் எதிர்கால வாழ்வில் - போக்கில் தாக்கங்களை ஏற்படுத்தி வைத்தன.

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அடுத்ததாக, உடுப்பிட்டியில் அமைந்த அமெரிக்க மிஷன் கல்லூரி வடமராட்சியில் இருளை அகற்றிய ஒளிப்பிழம்பு. பிரபல அணுசக்தி விஞ்ஞானியாக உலகம் போற்றிய–நவிண்டிலில் பிறந்த மேதை கலாநிதி கந்தையா, உயர்நீதிமன்ற நீதியரசராக உயர்ந்த தொண்டமானாற்றில் பிறந்த நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜா, உடுப்பிட்டித் தொகுதிக்கு உடுப்பிட்டி எனப் பெயர் வைப்பதற்குக் காரணகர்த்தாவக இருந்த தேர்தல் ஆணையாளர் திரு. ஆ. அருள்பிரகாசம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உப வேந்தராகப் புகழ்பூத்த உடுப்பிட்டியில் பிறந்த கலாநிதி அ. துரைராசா போன்ற பலரை உருவாக்கிய பெருமை எங்கள் கல்லூரியைச் சாரும். பேராசிரியர் துரைராசா தன் வாழ்நாளில் இறுதிப் பாகத்தினை முக்கியமாக தன் பழைய கல்லூரியின் கண்ணீரைத் துடைக்க செய்த மகத்தான சேவையை நன்றியுடன் குறிப்பிட வேண்டும்.

இன்று உலகின் பல நாடுகளிலும் பல பதவிகளை வகித்து வாழ்வில் உயர்நிலை காணும் பழைய மாணவர்களை வளர்த்தெடுத்த அன்னை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி. எமது கல்லூரி தந்த கல்விப் படிப்பினை மட்டுமல்ல, ஒழுக்கக் கட்டுப்பாடு மட்டுமல்ல, வாழ்க்கை அனுபவங்களும் பலப்பல. எங்களின் வாழ்வினை அவை வளம்படுத்தின என்று கூறினால் மிகையாகாது. பல சுவையான அனுபவங்களை இனிமையாக எழுதிக்கொண்டே செல்லலாம். ஆனால் அளவுக்கு மிஞ்சினாலும் அமுதமும் நஞ்சல்லவா?

இறுதியில் ஒரு மன நிறைவைக் குறிப்பிட்டேயாக வேண்டும். 150 ஆண்டுகள் பூர்த்தி காணும் எனது பழைய கல்லூரிக்கு சிறப்பிதழ் வெளியிடப்படும்போது இப்பணியில் இணைகின்ற பாக்கியம் எனக்குக் கிடைத்தது ஒரு பெரும் மனநிறைவு. பிற்காலத்தில் சட்டக் கல்லூரியில் சஞ்சிகைகள் வெளியிடுகின்ற வாய்ப்புக் கிடைத்ததுடன், சட்டத்தரணிகள் சங்கச் சஞ்சிகையின் ஆசிரியராக கடந்த பதினைந்து ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றேன் என்றால் நான் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் பெற்ற அனுபவங்களின் விளைவு என்பதனை மனம் நெகிழ உணர்ந்து பெருமைப்படுகிறேன். அதற்கு நன்றிக் கடன் செலுத்த இது ஒரு சந்தர்ப்பம் என்று பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை மூலம் கல்லூரி அதிபருடன் இணைந்து இந்நினைவு மலரை வெளியிடுவதில் பெருமைப் படுகின்றேன். இது வாழ்நாளில் கிடைக்கக்கூடிய ஒரே சந்தர்ப்பம். அதற்காக ஆண்டவனை வணங்கி நன்றி செலுத்துகிறேன்.

"மனிதனிடம் இயல்பாக அமைந்திருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே சமயம்"

– சுவாமி விவேகானந்தர்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில்
எனது அனுபவங்கள்

ச. தேவதாசன்

முதுநிலைப் பதவிநிலை உத்தியோகத்தர்
மருத்துவபீடம் – யாழ். பல்கலைக்கழகம்
(பழைய மாணவன்)

மனித அறிவு வளர்ச்சிப் படிகளாகப் பலகாரணிகள் இருப்பினும், அவை எவையும் அனுபவம் போல் ஆற்றல் வாய்ந்தவை அல்ல என்பது கண்கூடு. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழி இளமையிற் பெற்ற அனுபவத்தின் வலிமையினை உணர்த்தி நிற்கின்றது. இறந்த காலங்களை மீட்டுப் பார்க்கின்ற சுக அனுபவங்களால் இதயம் சொக்கிப்போகிறது. இந்த வகையிலே எனது பாடசாலை அனுபவங்களை உங்களுக்குப் பகிர்ந்தளிக்க முன்வந்திருக்கிறேன். இவ்வரிய சந்தர்ப்பத்தினை தந்ததையிட்டு மலர்குழுவினருக்கும், கல்லூரி அதிபர் அவர்களுக்கும் நன்றி சொல்ல வகிடெடுத்த வார்த்தைகள் வசப்படாமல் தவிக்கிறேன்.

மழலைபேசித் தாய்மடியில் தலைசாய்த்த பருவமும், மாணவனாய் பள்ளியிலே பவனி வந்த பருவமும் மகத்தானவை. 1954ம் ஆண்டு ஒன்பதாம் வருடத்தில் விஞ்ஞான பாடங்களைப் படித்து, விஞ்ஞானத் துறையில் எனது கல்வியைத் தொடர்வதற்காக என் தந்தை இப்பாடசாலைக்கு என்னை ஆற்றுப்படுத்தினார். முதல் யுத்தத்தை மறக்க முடியாத வீரனைப் போல, முதற்பள்ளி நாளை மறக்க முடியாத மாணவன் நான். என் பாடசாலை அனுபவத்தின் அரைப்பங்கு முதல் நாளோடு ஐக்கியமாகிவிட்டது என்றால் மிகையாகாது. காலை 8.00 மணிக்கு பாடசாலையில் சேர சகல ஆவணங்களுடனும் சென்றேன். என் பாதம் பாடசாலை மண்ணில் பதிந்தபோது, மகிழ்ச்சியடைந்த மணி, ஓசை எழுப்பி என்னை வரவேற்றது. "முதல் மணி ஓசை கேட்டல் நல்ல சகுனம்" என்ற முதியோர் வாக்கு என்னை அகமகிழச் செய்தது. மணியோசை கேட்டதும் மாணவர்கள் வரிசையாக மண்டபம் சென்று கடவுள் வணக்கம் செய்வதை அறிந்து கொண்டேன். கடவுள் வணக்கம் முடிந்ததும் நல்ல தோற்றமுடைய ஒருவர் வெண்ணிலவின் தண்ணொளியை வீசுகின்ற வேட்டியோடு, வெள்ளை நாஷனல் அதனுள்ளே, மோனாலிசாவின் புன்னகைபோல் வெளிப்பட்டும், வெளிப்படாத பெனியனுடனும் வருவதைக் கண்டேன். இவர் யாராக இருக்கலாம்? என்ற சிந்தனை என் இதயத்தின் ஆழம் வரை சென்று திரும்பியது. நான் முன்பு படிப்பித்த ஹாட்லிக் கல்லூரி அதிபரை நீண்ட வெள்ளைக்காற்சட்டை, சுருக்கமில்லாத வெள்ளைச் "சேட்" டுடனும் கண்ட எனக்கு, இவர் தமிழாசிரியராக இருக்க வேண்டும் என்ற எண்ணமே தலைதூக்கியது. ஆனால் அவர் மிகவிரைவாக வந்து என்முன் இருந்த அதிபர் நாற்காலியை நிரப்பினார். அவர் பெயரை செல்லத்துரை என வாசித்தபோது, என் தகப்பனார் கூறிய பெயரையும் ஞாபகப்படுத்தி "இவர்தான் எங்கள் பாடசாலை அதிபராக இருக்க வேண்டும்" என உறுதிப்படுத்திக் கொண்டேன். எனினும் தமிழ் சட்டம்பியார் என்ற தைரியத்தில் பயமறியாது நின்றதை உணர்ந்து விட்டாரோ என என்னுள் வெகுண்டு எனது தந்தை இவரைப் பற்றிக் கூறாமையினையிட்டு மனம் வருந்தினேன்.

அதிபர் என் மனப்பயம் கிழித்து என்னுள் ஊடுருவினார். "யாரிடம் வந்திருக்கிறீர்கள்" என விழி நோக்கி வினா வந்தது. நான் பதட்டத்துடன்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு சிறப்பிதழ்

ஆவணங்களைக் கொடுத்தேன். அவற்றைப் பார்வையிட்ட பின் என்னைப் பாதாதி கேசமாகப் பார்த்தார். பின் மாணவர் தலைவனைக் கூப்பிட்டு "இவரை 9 A வகுப்பு மொனிற்றரிடம் ஒப்படைக்குமாறு" கட்டளை பிறப்பித்தார். அவர் என்னை அன்பாக அழைத்துப் போகும் வழியில் குசலம் விசாரித்து வகுப்பறைக்குக் கூட்டிச்சென்று வகுப்பு மொனிற்றரிடம் ஒப்படைத்தார்.வகுப்பு மொனிற்றர் முன் வாங்கில் உள்ள ஒரு மாணவனின் பெயரைக் கூறி அடுத்த வாங்கில் அமரக் கட்டளையிட்டு என்னை முன் வாங்கில் இருத்தினார். மொனிற்றர் கூறியதும் அம்மாணவன் பின் வாங்கில் சென்று அமர்ந்ததை பார்வையிட்ட என்மனம் சிறிதுநேரம் இவ் ஒழுங்கையிட்டுச் சிந்திக்கலாயிற்று.

முன் வாங்கில் அமர்ந்தபடி முழுவகுப்பறையினையும் பார்வையிட்டேன். விழிகள் வகுப்பறையின் மறுபக்கம் சென்றவுடன் நங்கூரமிட்டுவிட்டன. ஒரு இன்ப அதிர்ச்சி! அங்கங்கள் கொண்ட வெண்ணிலவுகள் அங்கு அமர்ந்திருக்கக் கண்டேன். ஹாட்லிக் கல்லூரி போல் அல்லாது பெண்களும் படிப்பதைப் பார்த்து மகிழ்ந்தேன். ஆங்கில மொழியில் "ரீன் ஏஜ்" அல்லவா...? ஏனைய உணர்வுகளுடன் பாலுணர்வும் ஊற்றெடுக்கும் உதயகாலமல்லவா...! "ஏன் இவ்வாறு ஏனைய பாடசாலைகளில் இருபாலாரும் படிக்க வருவதில்லை" என்ற எண்ணம் பிறந்த போது, இவ்வனுபவத்தின் வழி என்னை ஆற்றுப்படுத்தி தந்தைக்கு நன்றி கூற வேண்டும் என்று மனம் விரும்பியது. என் மன எண்ணங்களை எவரேனும் மொழி பெயர்த்து அறிந்து விடுவார்களோ? என்ற அச்சத்தினால், அலைபாயும் எண்ணங்களை ஒருவாறு அடக்கிக் கொண்டேன்.

என் விழிகளுக்கு எந்த மொழியில் விளக்கமளித்தாலும் விளங்குவதாய் இல்லை. என்னையும் மீறிப் பெண்கள் மீது படிந்தன கண்கள். உள்ளத்தை உளவறிந்த சக மாணவன் "என்னடா எங்களைப் பாராமல் அவர்களையே பாக்கிறாய்" என்றான் தமாஷாக. வகுப்பறை குலுங்கிச் சிரித்தது. இதயத்தில் பிசபிசுத்த அவமானம் நல்ல அனுபவமாக அமைந்தது. இதற்கிடையில் வயது முதிர்ந்த ஆசிரியர் ஒருவர் றவுசர் சேட்டுடன் அவசரமாக வகுப்பு நோக்கி வருவதைக் கண்டேன். "இவர் உப அதிபர். கணித ஆசிரியர்" என்று மாணவர்கள் எடுத்துரைத்தார்கள். நான் அதிபரோடு பேசிக்கொண்டிருந்தபோது அவர் என்னைப் பார்வையிட்டது ஞாபகத்தில் வந்தது. வகுப்பறைக்குள் பிரவேசித்த கணத்திலே இரண்டு கணக்குகளை கரும்பலகையில் எழுதினார். அக்கணக்குகள் பற்றிய முன் அனுபவத்தால், முன் படித்த பாடசாலையில் காட்டுவதுபோல முதலாவதாகக் காட்டலானேன். சக மாணவ, மாணவியர் கண்கள் என்மீது மொய்த்தன. மனதில் சந்தோசமும் இறுமாப்பும் குடிகொண்டன. எனினும் பிழை விட்டிருப்பேனா? என்ற அச்சமும் சேர்ந்து கொண்டது. றொபேட் மாஸ்டர் "கெட்டிக்காரன் ஆனால் படிமுறைகள் (Steps) சரியாக எழுதவில்லை. மறுமொழி பிழையானாலும் படிமுறை சரியானால் எட்டுப் புள்ளிகளைப் பெறலாம்" எனக் கூறினார். எல்லோரிடமும் கணக்குக் கொப்பிகளைப் பெற்று கரும்பலகையில் இரு கணக்குகளையும் படிமுறையுடன் செய்து காட்டினார். தேவதாசன் என என் பெயர் அவரால் உச்சரிக்கப்பட்டு "நீரும் இப்படி மறு வகுப்பில் கணக்குகள் செய்ய வேண்டும்" என உணர்த்தப்பட்டது. என் பெயரை மனதில் பதித்திருந்ததையிட்டு நான் ஆச்சரியமடைந்த அதேவேளை, உப அதிபரை வருமாறு அழைத்து அதிபரால் கொடுத்தனுப்பிய கடிதத்துடன் ஒருவர் வந்தார். உப அதிபர் அவசர அவசரமாக அகன்றார். என் சக மாணவன் ஒருவன் என்னிடம் "எங்கள் பாடசாலை அதிபருக்கும் உப அதிபருக்கும் மாணவர் பெயர் மட்டுமல்ல தந்தைபெயர் உட்பட பூர்வீகமே தெரிந்திருக்கும்" என்றான். வகுப்பின் இரைச்சலால் மொனிட்டர் "அமைதி" என கூறினான். ஓரளவு அமைதி குடிகொண்டது. எனது அருகில் இருந்த கருணாகரன் எனும் மாணவன் (தற்போது வைத்திய கலாநிதி) "உமக்கு கடைசித் தவணை கணிதத்திற்கு எத்தனை புள்ளிகள் எனக் கேட்க, நான் 90 என்றேன். அதை அவன் முரசறைத்து முன் மொழிந்தான். எல்லோரும் புன்னகையால் வழிமொழித்தார்கள். சிரிப்பதா...? அழுவதா...? எனும் இரண்டுங்கெட்டான் நிலையில் மௌனத்தை அடைகாத்தேன்.

என் தவத்தை கலைப்பதற்காய் வேட்டி நாஷனலுடன் ஆசிரியர் ஒருவர் உள்நுழைந்தார். அருகில் இருந்த மாணவன் "இவர்தான் வகுப்பாசிரியர் கணபதிப்பிள்ளை" எனவும் "கருணாகரனின் தந்தை" எனவும் அறிவித்தான். அவர் வகுப்பிற்குள் நுழைய மயான அமைதி நிலவியது. குண்டூசி விழுந்தாலும் சத்தம் வரும். குழுப்பாடலாக "குட்மோர்னிங்" மலர, நானும் பின்பற்றினேன். எழுந்து நின்றவர்களை இடத்தில் இருத்தினார். "நீர் தேவதாசனா" என என்னை நோக்கி வந்த வினாவுக்கு "ஓம்"சேர் விடையளித்தேன். என் பதிலில் தமிழும் ஆங்கிலமும் கலப்புத் திருமணம் செய்திருப்பதைச் சுட்டிக்காட்டி நகைத்தார். "தேவதாசன் இந்தப் பாடசாலையில் "டிசிப்பிளீன் பெஸ்ற்" (Displine First)" என்றபோது, நான் முன்னைய பாடசாலையில் ஆறு பிரம்படி அதிபரிடம் வாங்கியதை அறிந்து விட்டாரோ? எனப்பயந்து டிசிப்பிளினாக நின்றேன். "சிற்" என்றார். மனதில் மையங்கொண்ட பயத்துடன் அமர்ந்தேன். ஆங்கிலப் புத்தகத்தினை மற்ற மாணவர்களைப்போல நானும் எடுத்துக்கொண்டேன். அவர் கற்பிக்க ஆரம்பித்த பின்புதான் மொழிக்கும் உடைக்கும் தொடர்பில்லை என்ற உண்மையை உள்ளம் அறிந்தது. அவரிடம் கற்ற அடிப்படை ஆங்கில அறிவுதான் சர்வகலாசாலையில் எனது புள்ளி விபரவியல் கற்பித்தலை ஆங்கிலத்தில் மருத்துவ மாணவர்களுக்கு கற்பிக்கும் திறமையைத் தந்தது என்றால் மிகையாகாது.

ஆங்கில ஆசிரியர் செல்ல ஓர் ஆசிரியர் ரவுசர் சேட்டுடன் வந்தார். மாணவர்களின் கரங்களிலே பௌதீகவியற் கொப்பி கொலுவேறியது. அவர் மின்சாரம் பற்றி பல விளக்கங்களும் படங்களும் கீறிப் படிப்பித்தார்.

பாடம் முடிவதற்கு முன் ஐந்து கொப்பிகளைக் கேட்டுப்பெற்றார். அந்த ஐந்தில் என்னுடைய கொப்பியும் அங்கம் வகித்தது. என் கொப்பியைப் பார்த்துவிட்டு "நீர் என்ன பட்டம்விட்டுப் பழகிய பழக்கமோ" என்று திராவக வார்த்தைகளை வீசினார். வகுப்பே என்னைப் பார்த்துச் சிரித்தது. என் பரிதாப நிலையை உணர்ந்த சூரியன், குளிர்சாதனப்பெட்டியாய் குளிர்ந்த மொழி பேசியது. "இதனை நீர் முன்பு படிக்கவில்லையா?" எனக் கேட்டு எனக்கு அடித்த பெரிய அடிக்கு தழும்பை தழுவிவிடுவது போல் தடவி விட்டார். அத்துடன் மணி அடித்தது. யாழ்ப்பாணத்தில் இப்பாடத்தில் புகழ் பூத்த பொன்னம்பலம் ஆசிரியர் இவர்தான் என்பதையும் அறிந்து கொண்டேன்.

மதிய உணவுக்கான நேரம்தான் அது என்பதை சக மாணவர்கள் உணவுப் "பார்சல்" எடுப்பதிலிருந்து ஊகித்தறிந்தேன். மாணவ/மாணவியர் இருபாலாரும் உணவு அறை ஒன்றா...? என்பதை அறிய விரும்பி என்னருகில் இருந்த ஞானாம்பிகையை (தற்போது வைத்திய கலாநிதி) உசாவினேன். அவர் எங்கள் அறையைச் சுட்டிக்காட்டி, தங்களது அறை தூரத்தில் இருப்பதாகக் கூறிச் சென்றார், "கண்டறியாத மிக்ஸ் ஸ்கூல். சமத்துவத்தை சாப்பாட்டிலே காட்டினால் என்ன?" என்று இதயம் எனக்குள் பட்டிமன்றம் வைத்தது. எனினும் சகமாணவர்களின் புலனாய்வுப் பார்வையிலிருந்து தப்பிக்கும் அவதானத்தோடு முகபாவங்களை மாற்றிக்கொண்டேன். ஆனால், பரந்தாமன் என்ற மாணவன் (தற்போது பிரதம எழுதுவினைஞர்) "என்னடா கேள்ஸ் உன்னோட சாப்பிட வரவில்லை என்றா யோசிக்கிறாய்" என்றான் தமாஷாக. "என்னடா இவன் என் இதயக் கும்பலகையில் எழுதிய அனைத்தையுமே வாசித்து விடுகின்றான்" என எனக்குள்ளேயே சலித்துக் கொண்டேன். மேலும் "வகுப்பாசிரியருக்கு பெண்பிள்ளைகளுடன் பேசுவதே பிடிக்காது" என்று எச்சரிக்கையும் செய்தான். புது உத்வேகத்துடன் புறப்பட்டுச் சென்ற பூங்காவிலே 'மலர்களைப் பறிக்காதீர்கள்', 'நிழலில் ஒதுங்காதீர்கள்' என்ற நிபந்தனைகள் கண்டவனின் உள்ளம் போல் உற்சாகம் குன்றினேன்.

மாலை வகுப்புக்கள் ஆரம்பமாகின. தாவரவியலை செல்வநாயகமும், விலங்கியலை நல்லையா ஆசிரியரும் கற்பிப்பதாகவும், அவ்விருவரும் கொழும்பு சென்றிருப்பதால் இன்று மாலை முதல் வகுப்பை தமிழாசிரியர் எடுப்பார் எனவும் மாணவர்கள் கூறினார்கள். அப்போது, கணபதிப்பிள்ளை ஆசிரியர் வகுப்பிற்கு வந்தார். நான் ஆங்கிலக் கொப்பியை எடுக்க ஏனையவர்கள் "கும்பகர்ணன் படலம்" எடுத்தார்கள். நான் திகைத்தேன். அவரோ ஆங்கிலம் கற்பித்தது போன்ற அழகிய நடையில் தமிழையும் கற்பித்தார். என்னிடம் வாய்மொழியாக இரண்டு திருக்குறள்களைப் பெற்று செவிவழியாக மாணவர்களிடம் கொடுத்தார். பின்னர் "நீர் என்ன யோசித்துக் கொண்டு இருக்கிறீர். பயப்படாதே உமக்கு ஏதும் பிரச்சினை இருப்பின் மொனிற்றரிடம் கூறும். அவர் தீர்த்து வைப்பார்" என அன்பாகக் கூறினார்.

கடைசி மணி ஒலித்தது. மொனிற்றர் "அமைதி" என்றார் எல்லோரையும் ஒழுங்காகச் செல்லுமாறு கட்டளையிட்டார். மாணவர் தலைவர்கள் (Prefect) நாங்கள் செல்வதை கண்காணித்தார்கள். ஆண், பெண் வரிசைகள் தனித்தனியாக நகர்ந்தன. எனினும் ஆணாதிக்க சமுதாய தலைமைத்துவ அணியே முன் சென்றது. நாங்கள் சென்ற ஐந்து நிமிடத்தின் பின்புதான் மாணவிகள் அனுப்பப்படுவதைக் கண்டுகொண்டேன். மாணவ தலைவர்கள் மட்டுமன்றி அங்குமிங்குமாக ஆசிரியர்களும் தெரிந்தும் தெரியாமலும் பார்வையிடுவதிலும், கட்டளை பிறப்பிப்பதிலும் கவனம் செலுத்தியைக் காணக்கூடியதாக இருந்தது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் - ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

எனும் தெய்வப்புலவன் வாக்கிற்கமைய கல்வி இமயமாகவும், ஒழுக்கம் சிகரமாகவும் திகழ்ந்த தன்மை "டிசிப்பிளீன் பெஸ்ட்" என்பதை நிரூபித்தது. இவை என் வாழ்விற்கு சிறந்த அனுபவமாக அமைந்தது. சக மாணவர்களுக்கும் அவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் வழிகாட்டியாக இருந்திருக்கும் என்பது நெருப்பில் போட்டெடுத்த நிஜம்.

முதலாந் தவணை எனது அறிமுகத்துடனும் நான் அவர்களை அறிவதிலும் குறிப்பாக ஆசிரியர்களை அறிவதிலும் முடிந்தது. பாடங்களைக் கற்பிப்பதும் பரீட்சைக்குத் தயார் செய்வதும், சித்திபெற வைப்பதுந்தான் பாடசாலைகளின் நோக்கம் என இருந்த எனக்கு, எனது பாடசாலையில் இருந்த மாணவர் சங்கம், விஞ்ஞான சங்கம், நாடக மன்றம், தமிழ்ச் சங்கம், ஆங்கிலச் சங்கம், விளையாட்டுக் கழகம் எனப்பல சங்கங்களும் கழகங்களும் செயலாற்றிய விதம் வியப்பினைத் தந்தது. இச்சங்கங்களிலே ஒவ்வொரு மாணவர்களையும் பங்குபற்ற வைக்க வகுப்பு ஆசிரியர் தொடக்கம் அதிபர்வரைக்கும் வற்புறுத்தலும், இவை மூலம் மாணவர்களின் திறமைகள் இனங்கண்டு வளர்க்கப்படுவதும், ஆளுமையும், தலைமைத்துவமும் மேலோங்குவதும் அன்றைய கல்வி முறையின் அர்த்தமுள்ள முயற்சிகளாக அமைந்திருந்தன. இன்றைய தனியார் கல்வி நிலையங்களின் நோக்கங்கள் போலல்லாது நற்பிரஜைகளையும், சிறந்த தலைவர்களையும் உருவாக்கும் பாசறைகளாகத் திகழ்ந்தன. அதனால்தான், அன்றெமது பாடசாலையில் பயின்ற மாணவர்கள் உலகம் போற்றும் மேதைகளாகவும், உயர் பதவிகளுக்கு பொறுப்பானவர்களாகவும் காணப்பட்டார்கள். இதனைத் தினசரிப் பத்திரிகைகளும் அவ்வப்போது அத்தாட்சிப்படுத்துகின்றன.

இரண்டாந் தவணையின் போது விளையாட்டுப் போட்டி ஆரம்பமானது. நான்கு மணிக்கு "பெல்" அடிக்கப்பட்டு மாணவர்கள் மைதானத்திற்கு அனுப்பப்பட்டார்கள். நானும் அவர்களோடு இணையவேண்டியவனானேன். எனக்கு விளையாட்டில் புகழ்பெறுவது பூஜ்யந்தான். எனினும் கால்பந்து விளையாட்டில் கோலிக்கு முன் புல் பக்கில்

(Full Back) இருந்து, யோசியாது பந்து கொண்டு வருபவனுக்கு காலில் அடித்து கோலை இல்லாது செய்வதில் அசாதாரண திறமையை வளர்த்துப் புகழ் பெற்றவன் நான். இதனால் சிலகாலம் கால் பந்தாட்டத்தில் எனது பெயர் பரவலாயிற்று. "வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு" என்பதற்கு அமைய எனது பாடசாலை எதிரணியிலும், மறு பாடசாலைகளிலும் என் திறமையை மிஞ்சும் வகையில் சில மாணவர்கள் உருவாக்கப்பட்டார்கள். அதன் பலனாக ஹாட்லிக் கல்லூரியுடன் நடந்த போட்டியில் "ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டென" எனது பழைய நண்பன் நிரூபித்தான். காலின் வலிக்கு புக்கை கட்டிக் கொண்டேன். அவ்விபத்தோடு என் நட்சத்திர அந்தஸ்து சரியத் தொடங்கியது மாத்திரமல்லாமல் பாடசாலைக் கால்பந்து குழுவில் இருந்தும் நீக்கப்பட்டேன். பாடசாலை விளையாட்டுப் போட்டியில் என் இல்லத்தின் சார்பில் எப்போட்டியில் பங்கு பற்றினாலும் ஆறாவதாக, ஏழாவதாக வருவதையே என் தனித்துவமாகக் கொண்டேன். எவ்வளவு முயன்றும் முன்னேற முடியவில்லை. எனது இல்லத்திற்கு ஒரு புள்ளியும், எடுத்துக் கொடுக்க முடியவில்லையே என்ற வெட்கம் என்னைத் தின்றாலும், தோல்வியை எதிர்கொள்ளும் பக்குவமும், தன்னம்பிக்கையும் அதிகரித்தது. தோல்விகளின் முற்றுகையிலும் என்னிடம் காணப்பட்ட ஆர்வத்தை இனங்கண்ட தோழர்கள் இல்லத்தின் உப தலைவராக என்னை நியமித்தனர். முழுமூச்சோடு செயற்பட்டு அணிநடை, அஞ்சலோட்டம் முதலியன மூலம் சில புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தேன். அதிஷ்டக் காற்று என் முகவரிதேடி வீசியது. என் இல்லம் முதலிடத்தைப் பிடிக்க அனைவரின் பாராட்டும், அறிமுகமும் கிடைத்தது.

விளையாட்டுப் போட்டி முடிந்ததும் எனக்கு பாடசாலையில் தெரியாதவர்களே இல்லை எனலாம். அதிபர் கூட தேசதாசன் எனக் கூப்பிடாது "டவடாஸ்" எனச் செல்லமாக கூப்பிடலானார். இதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் பேச்சுப் போட்டிகள் நடைபெற பாடசாலைகளில் இருந்து இரு மாணவர்களை தெரிவு செய்து அனுப்புமாறு சுற்றறிக்கை வந்தது. மாணவர் சங்கத்தில் ஒரு மேடைப் பேச்சாளனாக என்னை வளர்த்துக் கொண்டது அனைவரும் அறிந்ததே. இதனால் முதலாவதாக எனது பெயரையும், இரண்டாவதாக லக்சிமிபாய் (தற்பொழுது அரச மருந்தாளர் Pharmacest) பெயரையும் வகுப்பாசிரியர் முன்மொழிந்தர். பாடசாலை மட்டத்தில் பேச்சுப் போட்டிக்கு அனைவரும் ஆயத்தமானார்கள். பேச்சுப் போட்டியின் முடிவில் மத்தியஸ்தர் பேச்சுப் போட்டியில் பங்கு பற்றியவர்களின் குறைபாடுகளைப் பட்டியலிட்டார். அடக்க ஒழுக்கமான பேச்சு முதலிடத்தை பெறுகின்றது எனவும் ஆணவமான பேச்சு இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது எனவும் மத்தியஸ்தர் அறிவித்தார். முதலாமிடம் கிடைக்கும் என இறுமாப்புடன் இருந்த எனக்கு அவ்வாறான அறிவிப்பு அதிர்ச்சியைக் கொடுத்தது. அறிவிப்பைச் செவிமடுத்தேன் முதலாமிடத் லக்சிமிபாய் எனத் தெரிவிக்க மாணவர்கள் அடக்க ஒடுக்கமாகக் கைதட்டினார்கள். இரண்டாமிடம் என்று கூற முனைகையில் கூக்குரலும் கைதட்டலும் வானைப் பிளந்தது. அமைதி பார்த்து "தேவதாசன்" என்ற பெயரை மத்தியஸ்தர் கூறினார். வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை சென்ற இராவண மன நிலையில் வகுப்பறைக்குள் பிரவேசித்தேன். ஆனாலும் மாவட்ட மட்டப் போட்டியில் வகுப்பாசிரியர் கணபதிப்பிள்ளையின் நெறிப்படுத்தலால் ஆணவத்திற்கு அடக்க முலாம் பூசி முதற்பரிசைக் கைப்பற்றினேன்.

அடுத்த விஞ்ஞான சங்கம்பற்றி பார்வையிடுவோம். எனது பாடசாலைப் படிப்பு ஒரு வருடம் ஓடியது. நான், சகலரும் அறிமுகமாகி சங்கங்களின் தலைமைப் பதவிக்கு போட்டியிடும் அளவுக்கு முன்னேறிவிட்டேன். விஞ்ஞான சங்கத்திலும் உப தலைவர் ஆனேன். விஞ்ஞான சங்கம் மாணவர்களின் விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கு பலவகையிலும் பெரிய பங்கு வகித்தது. அன்று இச்சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்த இருவர் பேராசிரியர்களாக யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ளார்கள். பேராசிரியர் ராஜேஸ்வரி மகேஸ்வரனும், பேராசிரியர் அ. நவரட்ணராஜாவும் வைத்திய கலாநிதிகளாகவும், க. கருணாகரன், திருமதி. ராமதாஸ் ஞானாம்பிகை பொறியியலாளராகவும், தங்கராஜா வடக்கு கிழக்கு மாகாண கால்நடை வைத்திய அதிகாரியாகவும் இருக்கிறார்கள். சுருங்கக் கூறின் இச்சங்கத்தில் இருந்தோரில் இருபத்தைந்து வீதமானோர் தொழில்நுட்பத்தரத்தில் பலவேலை களிலும், பத்து வீதமானோர் பட்டதாரிகளாக உயர் பதவிகளிலும், ஐந்து வீதமானோர் பொறியியலாளரா கவும், மருத்துவர்களாகவும், நான்கு வீதமானோர் பேராசிரியர்களாக அல்லது அதற்கு சமமான தரத்திலும் இருக்கிறார்கள். இவர்களின் செயற்பாடுகளின் நிறைவால் எமது பாடசாலையின் புகழ் இலங்கை எங்கும் மிளிர்வது மனதிற்கு நிறைவாக உள்ளது.

ஒரு நாள் எமது விஞ்ஞான சங்கக் கூட்டத்திற்கு பாடசாலை அதிபர் செல்லத்துரை அவர்களை அழைத்து இருந்தோம். அவர் தனது பேச்சில் விஞ்ஞான சங்க மாணவர்களின் கடமைகளை விரித்துரைத்தார். இச்சங்கத்திலிருந்து வெளியேறிய மாணவர்களின் சாதனைகளை உணர்வு பூர்வமாக விபரித்தார். குறிப்பாக, துரைராசா என்ற மாணவனை மேற்கோள் காட்டி, அவன்போல் நீங்களும் உருவாக வேண்டுமெனத் தெரிவித்தார். அவர் கூறிய அனைத்து அம்சங்களும் இம்மியளவும் குறையாத குணக்குன்றுதான் துரைராசா என்பது தொலைந்து போகாத நிஜம். பேராசிரியர் துரைராசா பேராதெனிய பல்கலைக்கழகத்தில் புகழ்பூத்த இயந்திரவியலாளராக அமைந்ததும், அவர் பெயரிலேயே இயந்திரவியலிலே ஒரு சூத்திரம் இருப்பதும், அதனை இயந்திரவியல் மாணவர்கள் கற்பதும் அனைத்திற்கும் போதிய சான்றாக அமைந்துள்ளது. மேலும் தன்சார்ந்த சமூகத்தின் காயங்களுக்கு கட்டுப்போட எண்ணி, போர்மேகம் சூழ்ந்த காலத்தில் தனது பெரிய வருமானங்களை உதறித்தள்ளிவிட்டு யாழ். பல்கலைக்கழகத்தின்

துணைவேந்தராகப் பதவியேற்ற மேன்மை வார்த்தைகளுக்குள் வசப்படாதது. தனது கிராமமான உடுப்பிட்டியில் இருந்து காலை 6.00 மணிக்கு துவிக்சக்கர வண்டியில் யாழ் பல்கலைக்கழகம் சென்ற தூயமனிதன் வரலாற்றின் மடியில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றான். எனது முப்பத்தேழு வருட சர்வகலாசாலை அனுபவத்தில் பல துணைவேந்தர்களைக் கண்டுள்ளேன். அவர்களின் சேவைகள் சிறந்தன எனினும் பூரண அர்ப்பணிப்பற்ற சேவையாகவே திகழ்ந்தன என்பது என் கணிப்பு. புத்திக் கூர்மையும், பூரண அர்ப்பணிப்பும், சிங்கநோக்கும், இதழ்களிலே முடியாட்சி செய்யும் முறுவலும், தன்னினம் சார்ந்த தீர்க்க தரிசனமும் இவரது குருதியிலே குடிகொண்டவை. தனது சேவைக் காலத்தில் சர்வகலாசாலையின் வளர்சியுடன் மாத்திரம் நில்லாது யாழ்ப்பாணத்தில் ஒரு விஞ்ஞான சங்கம் அமைக்க அரும்பாடுபட்டார். இவரது நோக்கிற்கு தோள் கொடுத்தவர் பேராசிரியர் V. K. கணேசலிங்கம். இவரும் சிறந்த சமூக சேவையாளர். இலங்கை விஞ்ஞான சங்கத்தின் அறிவியல் பரப்புக்குழு அங்கத்தவனாகவும், யாழ் அறிவியல் பரப்பு சங்கத்தின் செயலாளராகவும், 1980ம் ஆண்டு நான் இருக்கும்போது தலைவராகவும் இருந்து யாழ் பாடசாலைகளில் விஞ்ஞான விழாவை ஆரம்பித்தவர். வடக்கு கிழக்கு மாகாணத்திலே இக்கிளைச் சங்கத்தினால் விஞ்ஞான விழாவை நடாத்த பேராசிரியர் எலியேசர், பேராசிரியர் சித்திர வடிவேலு, பேராசிரியர் Rev. ராஜேந்திரா போன்றோரின் உதவி பெற்று சிறப்பாக நடாத்திக்காட்டி இலங்கை விஞ்ஞான சங்கத்தால் யாழ் கிளைக்கு 35ம் 36ம் ஆண்டறிக்கைகளில் பாராட்டுப் பெற்றுத் தந்தவர். பேராசிரியர் V. K. கணேசலிங்கம் வளர்த்த விஞ்ஞான சங்கம் இன்று தமிழ் மக்களின் விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கு முதுகெலும்பாக உள்ளது என்றால் மிகையாகாது. நானும் எனது பாடசாலைப் பழைய மாணவர் விஞ்ஞான சங்கத்தின் ஆரம்ப ஆயுட்கால அங்கத்தவனாக இணைந்து கொண்டேன். 1996, 1997ல் பிரிவு 'சி' இன் செயற்குழு அங்கத்தவனாகவும், 1998ல் கிளை 'சி' இன் செயலாளராகவும் இருந்து என்னால் இயன்றளவு பங்களிப்புச் செய்துள்ளேன். இன்றும் எமது பாடசாலையின் பழைய மாணவரான முதுநிலை விரிவுரையாளர் சற்குணராசா அவர்களே பொதுச் செயலாளராக இருந்து அவர்கள் விட்டுச்சென்ற பணியைக் கட்டிக்காத்து தொட்டுத் தொடர்கிறார்.

மக்களை இலகுவாகச் சென்றடையக் கூடிய ஊடகமான சினிமா, அனைவரின் கவனத்தையும் தன்னகத்தே ஈர்த்துக்கொண்ட காலப்பகுதியிலே நாடகக் கலைஞர்களுக்கும் ஓரளவு நட்சத்திர அந்தஸ்து இருந்தது. தமிழ் நாடகங்களை விட ஆங்கில நாடகங்களே அரசாட்சி செய்தகாலம். ஆனால் எமது பாடசாலை அன்றைய சூழ்நிலையிலும் "தமிழ் நாடக வளர்ச்சியின் ஊற்றுக்கால்" என ஏனைய யாழ்ப்பாணப் பாடசாலைகளால் விதந்துரைக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. இதற்குக் காரண கர்த்தாவாக அமைந்தவர் நாடக நடிகரும், டைரக்டருமான புகழ்பூத்த எப்பெருமான் ஆசிரியர் அவர்களே ஆவர். அன்றைய சூழ்நிலையில் வேறு பாடசாலைகளில் நாடக அரங்கேற்றத்தின் போது நெறியாளராகவும், போட்டிகளின் போது மத்தியஸ்தராகவும் அவரே அழைக்கப்பட்டார். அவரது நாடகங்களில் நான் சிறிய பாத்திரங்களை ஏற்று நடித்து உள்ளேன். அவரது நெறிப்படுத்தலின்போது பட்ட கஷ்டங்கள் மறக்க முடியாதவை. உளி செய்யும் உபத்திரம் ஒரு கல்லைச் சிலையாக்கும். அதேபோல் அவர் தந்த கஷ்டங்களோ எம்மை நல்ல கலைஞர்களாக உருவாக்கின. தொண்டமானாற்றை சேர்ந்த பத்மநாதன் என்ற மாணவர்தான் (இலங்கை போக்குவரத்துச் சபையின் ரிக்கற் பரிசோதகராக கடமையாற்றியவர்) அன்றைய காலத்தில் கதாநாயகனாக நடித்தார்.

நான் கணபதிப்பிள்ளை மாஸ்டரின் ஆங்கில நாடகத்தில் கதாநாயகனாக நடித்தேன். அவரின் நெறிப்படுத்தலும், ஆங்கில உச்சரிப்பும் தனித்துவமானது. அவரின் நாடகத்தில் நண்பனால் வஞ்சிக்கப்பட்டு இறக்கின்ற கதாபாத்திரத்தினை ஏற்றேன். இறக்கின்ற சந்தர்ப்பத்தில் Rascal, Reprogate, Rewegade Reacioaary, Cut-Throat, Black Guard, Murderer எனப் பேசி இறந்ததைப் பார்த்த மாணவர்களும், ஆசிரியர்களும் மேடைநோக்கி படைஎடுத்துப் பாராட்டியதை என்னால் மறந்துவிட முடியுமா...?

இறுதியாக, நான் பெற்ற அனுபவமாக விதந்துரைக்கக் கூடியது, பெற்றோர்தின விழாவாகும். ஒவ்வொருவரும் தமது திறமையினை பெற்றோருக்கு எடுத்துக்காட்டுவதில் ஈடுபட்டார்கள். நானும் எனது திறமையைப் பேச்சிலேகாட்டித் தெரிவானேன். அவ்விழாவில் நாம் பெற்ற சிறந்த அனுபவம் விழாவினை ஒழுங்கு படுத்தலாகும். அதிபர், ஆசிரியர், மாணவர்கள் சிறப்பாக நெறிப்படுத்திய நேர்த்தியான அவ்விழாவைப் பாராட்டி மற்றையநாள் பத்திரிகை புகழாரம் சூட்டியபோது புளகாங்கிதம் அடைந்தோம். இவ்வனுபவம் பாடசாலையின் உயர்தர மாணவர்களுக்கு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தும் தலைமைத்துவத்தினைக் கொடுத்ததில் பெரும்பங்கு வகித்தது.

சுருங்கக்கூறின், நான் எனது பாடசாலையில் பெற்ற அனுபவங்கள், எனது வேலைத் தலத்திலும், சமூக நடவடிக்கைகளிலும், ஆத்மீக நிகழ்வுகளிலும் என்னை முன்னிலைக்குத் தள்ளி சர்வகலாசாலையில் உயர் பதவியுடன் சிறந்த கௌரவம் பெறவும், அரசின் கௌரவப் பட்டமான சமாதான நீதவான் பட்டம் பெறவும் வைத்தது எனக்கூறி, என்பாடசாலைக்கு நன்றி கூறி

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

என்றுரைத்து முற்றுப்புள்ளி இடுகிறேன்.

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் சாரணியமும்

சாரணியம் என்றால் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி என்ற பெயர் பல வருடங்களாக நிலவி வந்தது. இந்த பெருமையை சம்பாதித்துக்கொள்ள உழைப்பு என்னும் உரமிட்டு, சேவை எனும் நீரூற்றி, கடமை எனும் காவலிட்டுத்தான் பெற முடிந்தது.


ஆரம்பத்தில் எமது கல்லூரியின் ஆசிரியரான சாரணாசிரியர் திரு. V. K. இராசரத்தினம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சாரணியம் சிறிது காலம் இயங்காது நின்றுவிட்டது. பின்பு சாரணியமே உதிரத்தில் கலந்தமைந்த சாரணாசிரியர் திரு. K. M. மதியூ அவர்கள் 1948ம் ஆண்டில் மீண்டும் இவ் இயக்கத்திற்கு உயிர் ஊட்டி உருவாக்கினார். இவர் காலத்தில் எம் கல்லூரி சாரணியம் வட மாகாணத்திலேயே ஓர் முன் உதாரணமாக திகழ்ந்தது. இதற்கான சான்றுகளாவன:-

1951ம் ஆண்டு முதல் மாவட்ட போட்டிகளில் தொடர்ந்து பல வருடங்களாக முதலிடம் பெற்று சாரணியத் தீபத்தை ஏற்றுவதாயிற்று. இதனால்தானோ என்னவோ வவுனியா மாவட்டத்திற்கும் மன்னாரிற்கும் சிறப்புக் குழுவாகச் சென்று, மாதிரிப் பாசறைகள் அமைத்தல் மூலமான சாரணியச் செயற்பாடுகள் செய்து காட்ட எமது கல்லூரிச் சாரணர் குழுவினரை அழைத்தனர் போலும்.

1954ம் ஆண்டு எமது கல்லூரியில் இருந்து முதல் "ராணிச் சாரணனாக" திரு. P. பாஸ்கரசிங்கம் தெரிவானார். மேலும் அவர் 1957 இல் இலண்டனில் நடைபெற்ற World Jamboree இல் எம் கல்லூரி சார்பில் கலந்துகொண்டதுடன் இராணிச் சாரணனுக்குரிய சான்றிதழையும் மகாராணியிடம் நேரடியாக பெற்றுக் கொண்டார். அவருடன் திரு. S. A. Edwin என்பவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து பங்குபற்றியிருந்தார்.

1955, 1956 ஆகிய இருவருடங்களும் திரு. P. பாஸ்கரசிங்கம் அணித்தலைவனாக இருக்கும் காலப்பகுதியில் எம்கல்லூரி சமூக சேவையின் மூலம் அதிக தொகைப் பணத்தைச் சேர்த்ததற்காக கேணல் K. P. Jeyawardana Challenge Shield இலங்கையிலேயே எமது கல்லூரிக்கு மாத்திரம் கிடைத்தது பெருமைக்குரிய விடயமே.

"முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணங்க 1955ல் அகில இலங்கைச் சாரணியக் கொடியை [Island Merit Flag] எமது கல்லூரி பெற்றது. திரு. K. M. மதியூவின் சிறந்த உழைப்பிற்கும் சேவைக்கும் சான்று பகர்ந்தது.



சி. கனகசபாபதி
(சி. கனகசபை)
(முன்னாள் சாரணிய அணித் தலைவன்
பழைய மாணவன்)

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 — 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

அவர் செல்லவே அவரிடம் பயிற்சி பெற்ற P. B. L. லீலவன்ஸ அவர்கள் பொறுப்பேற்று 1956 இல் மீண்டும் அகில இலங்கைச் சாரணியக் கொடியை எமது கல்லூரி பெற்றது.

1958ல் திரு. P. B. L. லீலவன்ஸ செல்ல எமது கல்லூரி பழைய மாணவரும் ஆசிரியருமான திரு. V. K. நல்லையா அவர்கள் பொறுப்பேற்று திறமையாக செயற்பட்டார். இவ்வாண்டில் கல்லூரி சாரணாசிரியர் குழுவில் ஆசிரியர்கள் திரு. கோ. செல்வவிநாயகமும் திரு. K. சண்முகசுந்தரம் அவர்களும் இணைந்து கொண்டார்கள். இவ்வாண்டும் மூன்றாவது முறையாக அகில இலங்கைச் சாரணியக் கொடியினைப் பெற்று வேறு எந்தக் கல்லூரியுமே பெறாத ஒரு சாதனையை நிலைநாட்டியது. இச்சாதனையைக் கௌரவிக்கும் முகமாக இக் கொடியினை பெற்று வந்த சாரணாசிரியர்களையும் சாரணர்களையும் உடுப்பிட்டி வாசிகசாலையில் இருந்து கல்லூரி வரையும் மேளதாளங்களுடன் மிகச் சிறப்பான முறையில் ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து வரவேற்றுக் கௌரவித்தனர்.

திரு. V. K. நல்லையா அவர்கள் செல்ல திரு. K. நீலகண்டன் ஆசிரியர் அவர்கள் பொறுப்பில் சாரணியம் சிறப்பாக வளர்ந்தது. இக்காலப் பகுதியிலேயே நானும் குருளைச் சாரணனாக இணைந்து கொண்டேன். திரு. K. நீலகண்டன் அவர்கள் பொறுப்பாசிரியராக இருந்த காலத்தில் எமது குழு பலமுறை வெளி மாவட்டங்களுக்குச் சென்று பாசறை அமைத்துப் பயிற்சி பெற்றது குறிப்பிடத்தக்கது. இவர் தமது காலத்தில் சாரணர்கள் ஒழுக்கமாகவும் சாரணவிதிகளுக்கு அமைய நடக்க வேண்டும் என்பதிலும் மிகக் கடுமையாக இருந்து செயற்பட்டார். சில வருடங்கள் அவர் கடமையாற்றி ஆசிரியர் பயிற்சி பெறச் சென்றதும் திரு. கோ. செல்வவிநாயகம் அவர்கள் பொறுப்பேற்றார்.

திரு. K. M. மதியூ ஆசிரியர் அவர்களின் உதிரம் சாரணியம் என்றால் திரு. கோ. செல்வவிநாயகம் ஆசிரியர் அவர்களின் மூச்சே சாரணியம் எனலாம். சிறந்த ஒழுக்கக் கட்டுக்கோப்பில் திரு. K. நீலகண்டன் ஆசிரியரால் வளர்க்கப்பட்ட சாரணர்களை இவர் பல்துறைகளிலும் தேர்ச்சி பெற்ற ஒரு முன்மாதிரிக் குழுவாக திகழவைத்தார். சாரணர்களுக்கு தன்னம்பிக்கையும் துணிவும் ஏற்படுத்தும் பொருட்டு பல பயிற்சிப் பாசறைகளை பல மாவட்டங்களிலும் பல தரப்பட்ட புறச்சூழ்நிலைகளிலும் அமைத்துப் பயிற்றுவித்ததுடன், பரீட்சைகளையும் நடாத்தி முதற் குழுவாக பின்வருவோரை 1965ல் இராணிச் சாரணர்களாக்கினார்.

1. திரு. R. முத்துரத்தினானந்தன்
2. திரு. S. கனகசபை
3. திரு. V. தவேஸ்வரன்
4. திரு. N. அனந்தராஜா
5. திரு. P. உமாமகேஸ்வரன்

இக்குழுவிற்குரிய இராணிச் சாரணர்கள் சின்னத்தை மேன்மை தங்கிய மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ அவர்களிடமிருந்து இராணி மாளிகையில் பெற்றுக் கொண்டனர்.

இரண்டாம் குழுவில் பின்வருவோர் 1996 இல் இராணிச் சாரணர்களாகி சின்னத்தைப் பெற்றுக் கொண்டனர்.

1. திரு. P. இராமலிங்க மூர்த்தி
2. திரு. T. வசந்தகுமார்
3. திரு. S. ஜெயசீலன்
4. திரு. V. சொர்ணலிங்கம்
5. திரு. K. கோணலிங்கம்
6. திரு. S. இரவீந்திரன்
7. திரு. R. இராஜேஸ்வரன்
8. திரு. K. முருகேசு
9. திரு. V. பிரேமசந்திரன்
10. திரு. V. தர்மகுலசிங்கம்

ஆசிரியர் திரு. கோ. செல்வவிநாயகம் அவர்கள் பொறுப்பாளராக இருந்த காலங்களில் அவரின் திட்டமிட்ட செயற்பாடு, விடா முயற்சி, மதிநுட்பம் இவற்றுடன் சிரேஷ்ட சாரணாசிரியர் திரு. K. சண்முகசுந்தரம் அவர்களின் ஒத்துழைப்புடன் எமது சாரணர் குழு ஈட்டிய வெற்றிகள் சாதனைகள் சிலவற்றை கீழே குறிப்பிடுவதில் பெருமையடைகிறேன்.

* யாழ் பழைய பூங்காவில் 1966ம் ஆண்டு நடைபெற்ற வருடாந்த மாவட்டப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்றதுடன் "திடற்காட்சி" போட்டியில் 72 அடி உயரமான காவற் கோபுரம், காட்டுக் கம்புகளைக் கொண்டு தும்புக் கயிற்றின் உதவியுடன் அமைத்து சாதனை படைத்தது. அதன் உச்சியில் பாசறை அமைத்து யாழ் நகரைக் கண்டுகளித்தது குறிப்பிடத்தக்கது.

* 1967ம் ஆண்டு அகில இலங்கை சாரணியக் கொடியினையும் [Island Maerit Flag] சமூக சேவை வெற்றிக் கிண்ணத்தையும் [Community Survice Shield] அப்போதைய அணித்தலைவர் திரு. S. கனகசபை அவர்கள் மேன்மை தங்கிய மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டமை.

* 1967ம் ஆண்டு யாழ் பூங்காவில் நடைபெற்ற மாவட்ட மட்டப் போட்டியில் சகல போட்டிகளிலும் வெற்றியீட்டி ஒன்பது வெற்றிக் கிண்ணங்களையும் தமதாக்கி சாதனை படைத்தமை.

* இதே ஆண்டும் அகில இலங்கை சாரணியக் கொடியினை அப்போதைய அணித்தலைவர் திரு. த. வசந்தகுமார் அவர்கள் மேன்மை தங்கிய மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டமை.

இக்காலப்பகுதிகளில் சாரணர்களாகத் திகழ்ந்த நாம் உண்மையில் அதிஷ்டசாலிகளே. எம் சாரணாசிரியர்களால் எமக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் எமது வாழ்க்கைக்கும், தொழிலுக்கும் மிகவும் உறுதுணையாக உள்ளதென்றால் மிகையாகாது. இதனை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டாலும் இன்றும் அவர்களை எமது வழிகாட்டிகளாக போற்றுகின்றோம்.

எமது சாதனைகளின் பின்னணியில் எம்மால் என்றுமே மறக்க முடியாத சோக நிகழ்வும் உள்ளதை இக்கட்டுரையில் குறிப்பிடாமல் விட முடியாது. 1966ம் ஆண்டிற்குரிய அகில இலங்கை சாரணீயக் கொடியினை எமது குழு கொழும்பில் இராணி மாளிகையில் பெற்றுத் திரும்பி வரும் வழியில் எமது பேரன்புக்குரிய சகோதர இராணிச் சாரணன் திரு. S. இரவீந்திரன் அவர்கள் புகையிரதத்தில் இருந்து தவறி விழுந்து அதே இடத்தில் மரணித்த சம்பவமாகும். நாங்கள் இன்றும், என்றும் அவரை நினைவு கூறுகிறோம்.

இக்கட்டுரையை பூரணமானதாக்க பலருடன் தொடர்பு கொண்டபொழுதிலும் ஒரு சிலரே முக்கிய தரவுகள் தந்து உதவினார்கள். அவர்களில் எனது சாரணாசிரியர்கள் மதிப்பிற்குரிய திரு. கோ. செல்வவிநாயகம், திரு. ம. சண்முகசுந்தரம் அவர்களுடன் எமது முன்னாள் அணித்தலைவர் திரு. P. பாஸ்கரலிங்கம் அவர்களுக்கும் எனது தாழ்மையான நன்றிகளை தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

"நெறியைப் படைத்தான் நெஞ்சில் படைத்தான்
நெறியின் வழுவின் நெருஞ்சில் முற்பாயும்
நெறியில் வழுவாது இயங்க வல்லார்க்கு
நெறியில் நெருஞ்சில் முள் பாயா வினவே"

– திருமூலர்

இருளை அகற்றிய ஒளி

— அதிபர் க. சிதம்பரப்பிள்ளை —


சேவைக்காலம் : 1988 ஒக்டோபர் 30 - 1991 நவம்பர் 14.

அறிமுகம்

1988 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 29ம் திகதி, வழமைபோல் ஆசிரியர்கள் இல்லாத வகுப்பு மாணவர்களில் சிலர் களவாக நீந்தச் சென்றுவிட, மற்றையோர் கள்ளன் - பொலிஸ் விளையாடுவதிலும், இந்திய ராணுவத்தினர் ஒரு செம்பு தண்ணீரில் குளிக்கும் விந்தையைப் பார்ப்பதிலும் அவர்களுடன் சேட்டைவிடுவதிலும் ஈடுபட்டிருந்தோம். இந்திய ராணுவத்தினர் அந்த நேரத்தில் பாதி உடைந்து போயிருந்த ஜோன் மண்டபத்தை தமது இருப்பிடமாகக் கொண்டிருந்தனர். இருபகுதிக்கும் மொழி தெரியாத நிலையில் சைகை மொழியில் கதைத்துக் கொண்டிருந்த எமக்கு ஏனைய மாணவர் மூலம் ஓர் அபாய எச்சரிக்கை விடப்பட்டது. கண்டிப்பு மிக்க பாட பரிசோதகர் ஒருவர் எல்லா வகுப்புக்களையும் சென்று பார்வையிடுவதாகவும், அவரது கை, கையிலுள்ள பிரம்பு, உதடுகள் எல்லாம் கோபமிகுதியால் ஆடுவதாகவும் மிகுந்த எச்சரிக்கையாக இருக்குமாறும், தெரிவிக்கப்பட்டது. எப்படித்தான் கவனமாக இருந்தாவது "$x^2 = 4$"எனின் "$x = 2$" என மாத்திரமே எம்மால் கூறமுடிந்தது.

அந்தப்பாட பரிசோதகர் தான் எமது புதிய அதிபர் என்பதை மறுநாட் காலை 8.30 இன் பின்னர் சென்ற எமது மாணவர்கள் நிரையாக நிற்கவிடப்பட்ட அவரால் எச்சரிக்கப்பட்ட போதுதான் எம்மால் ஊகிக்க முடிந்தது. அது மட்டுமல்லாமல் சாதாரணதர பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருந்த நாம் தினமும் காலை 7.00 - 8.00 வரை விசேட கணித பாடவகுப்பிற்கு செல்ல வேண்டியதாயிற்று.

ஒரு காலத்தில் கல்வி, விளையாட்டு, கலைநிகழ்ச்சி, சாரணியம் போன்ற சகலதுறைகளிலும் முன்னின்று விளங்கிய எமது பாடசாலை முற்று முழுதாக தனது கடமையிலிருந்து விலகிக் கொண்டிருந்த காலம் 1987 இல் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையுடன் யாழ் மாவட்டத்திலேயே சிறந்த தர ஆய்வுகூடத்தையும், நூலகத்தையும் மட்டுமன்றி தன்னகத்தே கொண்டிருந்த அனைத்துக் கட்டடங்களையும் இழந்திருந்தது. இனிமேல் AMC ஆல் மீளவே முடியாது என நலன்விரும்பிகள் பெருமூச்சு விட ஒரு சில மனவலிமையும், சமூகப்பற்றும், கடமையுணர்வும் கொண்ட ஆசிரியர்களின் விடாமுயற்சியால் பாடசாலை இயங்கிக் கொண்டிருந்த காலம். அப்போதுதான் தலமைத்துவத் திறமையும் மாணவர் பற்றிய



ச. மதிரூபன் *B.Sc. (Eng.)*
பழைய மாணவன்

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 — 2002



150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

தூரநோக்கையும் ஆளுமையையும் இயல்பாகவே தன்னத்தே கொண்ட திரு. க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் எமது பாடசாலைக்கு அதிபராக வந்தார்.

AMC உடனான தொடர்பு

உயர்ந்த கல்வித்தரம், ஒழுக்கக், கட்டுப்பாடு நிறைந்த அதிபர் ஜோன் காலத்தில் திரு. சிதம்பரப்பிள்ளை அவர்கள் எமது பாடசாலையில் S.S.C வரை கல்வி பயின்றார். அக்காலத்தில் தூர இடத்து மாணவர்களையும் ஈர்க்கும் சக்தி பெற்றிருந்தது. A/L வகுப்பு அப்போது எமது பாடசாலையில் இல்லாத காரணத்தினால் ஹாட்லிக் கல்லூரியில் A/L கல்வியைப் பயின்று தொடர்ச்சியாக அதை மேற்கொள்ளாது விவசாயக் கற்கை நெறியினைப் பயின்று அதன்பின்னர் 1954ம் ஆண்டு எமது பாடசாலையின் நூல்நிலையப் பொறுப்பாளராகக் கடமை ஏற்றுக் கொண்டார். இக்காலத்தில் நூல் நிலையத்தை சகலவழிகளிலும் மிகத்தரமான நிலைக்கு உயர்த்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளையும் எடுத்தார். மாணவர்கள் நூல் நிலைய படிப்பில் ஈடுபடுவதனை ஊக்குவித்ததோடு அவர்களை மிகவும் கட்டுப்பாடாகவும் கொண்டு நடத்தினார். கிடைத்த சந்தர்ப்பத்தில் தன்னையும் நூல் நிலையத்துடன் ஒன்றிணைத்து தனது அறிவுப்பசியைப் போக்கியதோடு ஒரு நடமாடும் நூல்நிலையமாகத் தன்னை ஆக்கிக்கொண்டார். தனது முயற்சியால் இக்காலப் பகுதியில் லண்டன் பட்டப்படிப்பில் இரண்டாம் தரச் சிறப்புச் சித்தியையும் வெற்றிகரமாகப் பெற்றுக்கொண்டார். இதன் பயனாக ஆசிரியர் நியமனம் கிடைத்தது. உயர்தர வகுப்புகளிற்கு வரலாறு, கணித பாடங்களைக் கற்பித்து மாணவர்களுக்கு சிறந்த அறிவூட்டியதோடு தரமான பெறுபேறுகளையும் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தார்.

1965 இற்கும் 1988 ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் AMC இற்கும் இவரிற்கும் தொடர்பு நலிந்து காணப்பட்டது. இந்தக் காலப்பிரிவில் கம்பளை சாஹிராக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றினார். அந்தப் பாடசாலைகளிலும் ஆசிரிய ஆலோசகர் சேவைக் காலத்திலும் இவர் பணிகள் போற்றத்தக்கனவாகவே அமைந்தன.

அதிபராக AMC இல்

புதிய அதிபர் வந்துவிட்டார் என்ற செய்தி மாணவர்கட்கு உண்மையில் நெஞ்சினில் பால் வார்த்த செய்தியாகவே இருந்தது. தனியார் கல்வி நிலையங்களில் மற்றைய பாடசாலை மாணவர்களின் கல்வித்தரத்தையும் ஒழுக்கத்தையும் உதாரணம்காட்டி ஆசிரியர்கள் எம்மை ஏசும்போது தலைகுனிந்து நிற்கும் எமக்கு புதிய அதிபரின் வருகை பல எதிர்பார்ப்புக்களையும், ஆவலையும் உருவாக்கி யிருந்தது. இவர் வந்த சில தினங்களிலேயே பாடசாலையில் துரித மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. நடப்பது கனவா என நினைக்கும் வகையில் அதிபரின் கண்டிப்பும், அழுத்தம் நிறைந்த கட்டளைகளும் அன்பும் ஆதரவும் நிறைந்த அறிவுரைகளும் பாடசாலையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தன. கல்லூரியைத் தான் இருந்த காலத்தில் காணப்பட்டது போன்று சகல துறைகளிலும் தரமுயர்த்த வேண்டுமென்ற அவா அவரிடம் அதிபராக இருந்த காலத்தில் மட்டுமல்லாது இப்போதும் இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

கல்வி முன்னேற்றம்

அதிபராகப் பதிவியேற்றதும் ஆசிரியர்களிற்கு முதலில் கொடுத்த உபதேசம் "அழிந்த கட்டிடங்கள் கல்மலையாகக் குவிந்திருக்கலாம், அவை மீண்டும் எப்போதாவது கட்டியெழுப்பப்படலாம்; ஆனால் மாணவர்களின் கல்வியை நாம் அழியவிட முடியாது. கொட்டில்களிலோ கற்குவியல்கள் மீதோ இடிபாடுகளின் இடையிலுள்ள இடங்களிலோ நாம் உடனடியாக அதனை செயற்படுத்த வேண்டும். அதற்காக என்னுடன் ஒத்துழையுங்கள்" என்பதாகும். வெள்ளிக் கிழமைகளில் சமய ஆராதனைகளின் போது அதிபரின் உரை மாணவர்களை பல வழிகளிலும் ஊக்கம் அளித்தது.

"இந்தப் பாடசாலை அச்சாணி சுழன்று நகர முடியாத வண்டியின் நிலையுள்ளது. இதனை மீண்டும் அச்சாணி பூட்டி ஓடக்கூடிய நிலை மாத்திரமே என்னால் கொண்டுவர முடியும், அதைத் தொடர்ந்து ஓடவைப்பது உங்கள் பொறுப்பு" என்று ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் கூறி தனக்குரிய அந்தக் குறுகிய இருவருட காலங்களிலும் அதை நிறைவேற்றியும் காட்டினார்.

மீண்டும் மீண்டும் ஏற்பட்ட விமானத் தாக்குதல்கள் காரணமாக எமது பாடசாலைக் கொட்டில்கள் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்ட போதிலும் மாணவர்களிற்கான கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்படாமலிருக்க அதிபர் காட்டிய அக்கறை எழுத முடியாதது. இதற்கு மேலாக இதன் மூலம் நாம் அவரிடமிருந்து கற்றது மனவுறுதியும் விடாமுயற்சியும் தான் (இவையிரண்டையும் பிற்காலத்தில் நான் அவரது குடும்பத்தில் ஒருவனாக இருந்தபோது மேலும்பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிந்தது.) இவரின் அபிவிருத்தித் திட்டங்களிற்கு ஆசிரியர்களும் மனப்பூர்வமான ஆதரவை வழங்கி மாணவர்களை ஊக்குவித்தனர். தமிழ்த்தினப் போட்டி, பண்ணிசைப்போட்டி, ஆங்கில தினப்போட்டி, பொதுஅறிவு வினாவிடைப் போட்டி என பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றிச் சிறந்த இடங்களைப் பெற்றனர். மாணவர்களைக் கல்வித்துறையில் ஊக்குவிப்பதற்காகப் பரிசளிப்பு விழாவை வருடாவருடம் நடத்துவதற்கு அடித்தளமிட்டு வைத்தார்.

இவருடைய முயற்சி வெற்றியளிக்கும் தருணத்தில் அரசியல் சூழ்நிலைகளால் மக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது. அதற்கும் அவர் மனம் சலிக்கவில்லை. பெயர்ந்த மக்கள் மீண்டும் திரும்பிவரும்வரை காத்திருந்து எல்லோரும் அதிசயிக்கத்தக்க அளவு சிறப்பாக பரிசளிப்பு விழாவை அவர் நடத்தி வைத்தார். இந்த விழாபற்றி அவர் கூறுகையில் "இந்த விழா கல்வியில் முதற்தர மாணவர்கட்கு பரிசளிக்க ஏற்பாடு செய்யப்பட்ட விழா மட்டுமல்ல எதிர்காலத்தில் மாணவர்களை அடுத்தமுறை பரிசுபெற ஊக்குவிக்கும் விழா" என்பதாகும்.

ஒழுக்கம்

பாடசாலை நடவடிக்கையை ஆசிரியர்கள் முடிக்கும் பாடப் பரப்பினளவை வைத்து எடைபோட்ட எமக்கு ஒழுக்கத்தின் முக்கியத்தும்பற்றி வெள்ளிக்கிழமை சமய ஆராதனையின் பின் தனது உரையில் அழுத்திக் கூறுவார். 'மாணவர் பராயத்தில் எவரும் நீ யாருடைய மகன் எனக் கேட்கமாட்டார்கள், நீ எந்தப் பாடசாலை என்று தான் கேட்பார்கள்" எனக் கூறி மாணவர்களின் ஒழுக்கத்தை நெறிப்படுத்துவதில் பாடசாலை/ ஆசிரியர்களின் பங்களிப்பை அதிபர், தான் ஒழுங்குசெய்த முதலாவது ஆசிரியர் தின விழாவில் குறிப்பிட்டார். அதிபர் வந்து சிறிய காலத்திற்குள்ளேயே மாணவர்களின் ஒழுக்கத்தில் பலமாற்றங்கள் ஏற்பட்டன. மாணவர்கள் யாவரும் மீண்டும் சீருடையில் காலை 8.00 மணிக்கு முன்பே அணிவகுத்து பாடசாலைக்குச் செல்லும் அழகை (உண்மையிலேயே) அழகுதான் என்பதை நான் பாடசாலையை விட்டு நீங்கியபின் தான் கண்டு இரசிக்கக் கூடியதாக இருந்தது. ஊர்மக்கள் இரசித்தார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக மாணவர்கள் கல்வி, ஒழுக்கம், தேசியப்பற்று என்பனவற்றை உள்ளடக்கிய பாடசாலைக் கீதம் ஒன்றை தமது காலத்தில் இயற்றுவித்ததோடு, இனிய மெட்டினையும் அமைப்பித்தார். பாடசாலைக்கென ஆரம்ப காலம் முதல் இருந்த பாடசாலைக் கீதம் பல இன்னல்கள் அழிவுகள் இடப்பெயர்வுகள் காரணமாக முழுமையான முறையில் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் காலம் சூழ்நிலை மாணவர் ஒழுக்கம், பல்கலை, தேசியப்பற்று என்பனவற்றின் வளர்ச்சியை மையமாகக் கொண்ட கருத்துக்களை முன்வைத்து அதிபரின் வேண்டுகோளிற் கிணங்க ஆசிரியர் கா. நீலகண்டன் அவர்களால் பாடசாலைக் கீதம் நல்ல அமைப்புடன் இயற்றப்பட, அதிபர் காலத்திருந்த சிறந்த சங்கீத ஆசிரியர் திரு. S. சதாசிவம் அவர்களால் பாடலுக்கேற்ற இசையமைப்பும் வழங்கப்பெற்று இன்று அனைவரது நினைவிலும் இப்பாடல் இடம்பெற்றிருக்கின்றது.

இத்தகைய சிறந்த பாடசாலைக் கீதம் எமது அதிபர் அவர்கள் காலத்தில் தான் உருவானது என்பது மிகப் பெருமைக்குரிய தொன்றாகும்.

விளையாட்டு

இந்த அதிபரின் வருகைக்கு முன்பு எமது பாடசாலையில் பல காலமாக இல்ல விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெறவில்லை. சுவட்டு நிகழ்ச்சிகள் மட்டும் வருடாவருடம் மட்டுப்படுத்தப்பட்டளவில் நடைபெற்று வந்தன. மீண்டும் முதன் முதலாக 1990 ம் ஆண்டில் இல்ல விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்றமை மாணவர் மத்தியில் அளவில்லாத உற்சாகத்தைத் தந்தது. முதன் முதலாக மைதான நிகழ்ச்சிகள் நடைபெற்று மாணவர்களின் திறமை வெளிக் கொணரப்பட்டது. மாணவர்கள் கொத்தணி மட்டம், கோட்ட மட்டம், மாவட்ட மட்டம் எனத் தமது திறமைகளை வெளிப்படுத்திப் பாடசாலையின் புகழையும் மேலோங்கச் செய்தனர். விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் பிரதம விருந்தினரின் வருகையும் அவரது உரையும், இல்ல மாணவர்களின் அணி வகுப்பும், உடற்பயிற்சிக் காட்சியும் என யாவும் மாணவர்களாகிய எமக்குப் புதுமையாக இருந்தது. இல்ல விளையாட்டுப் போட்டிக்குத் தேவையான நடுவர் மேடை, வெற்றி மேடை, ஒலிம்பிக் தீபம் போன்றவை அன்றைய தினமே செய்வித்தமை போட்டி ஒழுங்கமைப்பின் குறுகிய காலத்தையும் ஆரம்பத்திலிருந்து வளப் பற்றாக் குறையையும் விளக்கப் போதுமானவை. அன்றைய தினம் அதிபராலும், பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த மறைந்த பேராசிரியரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான அ. துரைராஜா அவர்களாலும் விளையாட்டின் முக்கியத்துவம் பற்றி ஆற்றப்பட்ட உரைகள் விளையாட்டைப்பற்றி மாணவர்களைப் புதிய பரிணாமத்தில் சிந்திக்கத் தூண்டியது.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்றவற்றை மாணவர்களிடையே விருத்தி செய்ய பழைய மாணவர் சங்க உதவியுடனே அதிபர் அயராது உழைத்தார். மாலை, காலை நேரங்களில் மாணவருக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பின்வரும் காலங்களில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் எமது பாடசாலை கேடயம் பெறுமளவுக்கு விருத்தியடைந்தது.

விளையாட்டுத்துறை மீண்டும் எமது பாடசாலையில் துளிர்விட்டு வளர்ச்சியடைந்தமை பாடசாலை வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகித்தது. மாலையில் நடைபெறும் பயிற்சி வகுப்புக்கள் மாணவர்கள் ஒன்று சேர்ந்து விளையாட்டு நிகழ்ச்சிக்குத் தேவையான மேடையமைத்தல் மற்றும் சுவடு ஒழுங்கமைத்தல் ஆகியவற்றில் ஈடுபடும் போதெல்லாம் ஆசிரியர் - மாணவர் உறவும் மாணவர் - மாணவர் உறவும் ஒரு புதிய பரிமாணத்துடன் வளர்ந்தது. விளையாட்டுத் துறையில் முன்னணி வகித்த மாணவர்களிடையே வளர்ந்த பங்களிப்பினால் உருவாகும் திருப்தி (Satisfaction by Participation) அவர்களின் தனித்தன்மையை வளர்த்ததுடன் பாடசரலை

விருத்திக்கும் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கியது. அதிபர் காலத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் இன்றும் எம்மிடையே எமது சக மாணவர்களைக் குறிப்பிடும் போது முதலாவதாக வந்த பச்சை இல்லப் பொடியன், உயரப் பாய்தலில் இரண்டாவதாக வந்த பொடியன் என்று சொல்லும் அளவிற்கு நினைவில் நிற்கிறது.

கலை நிகழ்ச்சிகள்

அதிபரின் காலத்தில் மீண்டும் எமது பாடசாலை தனது சமூகத்திற்கான கடமையைச் சரிவரச் செய்ய ஆரம்பித்தது எனலாம். ஒரு பாடசாலை என்பது கற்றல் - கற்பித்தல் நிகழும் தொழிற்கூடமல்ல; அது மாணவர்களின் விருப்புக்களைத் திறமைகளை இனங்கண்டு அவர்களை எதிர்காலத்தில் எவ்வாறு நல்ல பிரசையாக உருவாக்கலாம் என அறிந்து, அவ்வாறு உருவாக்குவதில் வெற்றிகண்டு, தனக்கும் பெருமைதேடி சமூகத்திற்கும் பெருமை தேடிக்கொடுக்கிறது. மாணவர் தமது பங்களிப்பினால் உருவாகும் மனத்திருப்தி மூலம் தமது தனித்தன்மையை நிலைநிறுத்தி எதிர்காலத்தில் நம்பிக்கையுடன் வரவேற்கும் சத்தியை பாடசாலை ஏற்படுத்துகிறது.

இவ்வகையில் மாணவர்களிடையே மறைந்து கிடந்த பல்வேறு கலைத்திறமைகளையும் வெளிப்படுத்துவதற்கு அதிபர் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தார். பெற்றோர் தின-பரிசளிப்பு விழாவில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள், எமது தேசிய உணர்வோடு ஒன்றித்து நடைபெறும் நிகழ்ச்சிகள், சரஸ்வதி பூஜை, மற்றும் ஒளிவிழா போன்ற சமய நிகழ்வுகளில் நடைபெறும் கலை நிகழ்வுகள் என யாவற்றிலும் ஆசிரியர்களின் அயராத உழைப்புடன் மாணவர்கள் மிகச் சிறந்த கலைப்படைப்புக்களை வழங்கினர். நாடகம் கூத்து, பட்டிமண்டபம், கவிதா மண்டபம், வில்லிசை பண்ணிசையென மாணவர் தமது திறமைகளை விருத்தி செய்தனர்.

> ஓது கலைத்துறைபோடு விஞ்ஞானமும்
> ஓங்கு முயிர் நலந் தாங்கு மெய்ஞ்ஞானமும்
> நாத இசை யொடு நங்கள் சமூகமும்

என்ற எமது பாடசாலைக் கீதத்திற்கமைய எமது மாணவர்களை கலைத்துறை விருத்திக்கு பாடசாலை தயார்படுத்தியது.

சில கலைப் படைப்புக்கள், குறிப்பாக பெற்றோர் தின விழாவில் வழங்கப்பட்ட இருநாடகங்களும், சங்கீத ஆசிரியை செல்வி. வியாகேசு விமலாவினால் பயிற்றப்பட்ட பாடல்களும் ஆரம்ப பாடசாலை மாணவர்களால் வழங்கப்பட்ட கோலாட்ட, மயில், காவடி நிகழ்வுகளும் வாழ்வில் மறக்க முடியாதவை.

சாரணியம்

ஒரு எழுத்தாக்கத்தில் மீண்டும் மீண்டும் ஒரு கருத்துத் தெரிவிக்கப்படுவது அழகல்ல. அந்தப் பொதுக் கருத்துக்களையும் மீறி, அதிபர் காலத்தில் பாடசாலை தனது சமூகத்திற்கான கடமையை நிறைவேற்ற ஆரம்பித்தது என்பதை இப்பந்தியிலும் வலியுறுத்த வேண்டியுள்ளது. சூழற் செயற்பாடு, சமூக நோக்கு மற்றும் வெளிப்புற வாழ்க்கைக்குத் தயார்படுத்துதல் போன்ற தேவைகளை சாரணிய மூலம் மாணவர்களிடையே வளர்க்க மீண்டும் அதிபர் வழிவகுத்துக் கொடுத்தார்.

மாணவர்களின் சாரணியச் செயற்பாடு நாட்டுச் சூழ்நிலை காரணமாக வரையறுக்கப்பட்டதாக இருந்ததாயினும், சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம், ஆனையிறவுப் போரின் போதான வீதியொழுங்கு ஆகியவற்றின்போது எமது சாரணிய மாணவர்களும் ஏனைய பாடசாலைகளுடன் இணைந்து செயலாற்றினர்.

பழைய மாணவர் சங்கம்

தம்மாலும், ஆசிரியர்களினாலும் மாணவர்களாலும் எல்லாச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாதென்பதை உணர்ந்த அதிபர், அதற்குத்தக்க ஆத்ம, பொருளாதார ஆதாரமாகப் பழைய மாணவர் சங்கத்தை உயிர்ப்பிக்க வழி செய்தார். பாடசாலையில் அடிக்கடி ஏற்பட்ட அதிபர் மாற்றங்களும், அரசியற் சூழ்நிலைகளும் பாடசாலைக்கு ஏற்ற ஒரு பலம் மிக்க பழைய மாணவர் சங்கத்தை நிலையாகக் கொண்டிருக்கவில்லை. இந்தக் குறைபாட்டை மிக வெற்றிகரமாகப் போக்கி பிற்காலத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சகல துறைகளிலும் எல்லோரும் அதிசயிக்கத்தக்க வகையில் தலைநிமிர்ந்து நிற்பதற்கேற்ற ஆதாரமான ஒரு பழைய மாணவர் சங்கத்தினை உருவாக்கிய பெருமை அதிபர் திரு. க. சிதம்பரப்பிள்ளையவர்களையே சாரும் என்பதை கல்லூரிச் சமூகம் ஒருபோதும் மறுக்கமாட்டாது.

தளர்ந்து போயிருந்த பழைய மாணவர் சங்கத்தைப் பாடசாலையின் முன்னேற்றத்திற்கேற்றவாறு ஆதாரம் கொடுக்கத்தக்க வகையில் தகைமையும், புரிந்துணர்வும், ஆற்றலும் மிக்க தலைமைத்துவம் உரியவர் யார் என்பதையும் கண்டறிந்தார். உடுப்பிட்டி அ.மி. கல்லூரி வரலாற்றை மீண்டும் நினைவு கூரும் வகையில் மறைந்த பேராசிரியர் அ. துரைராஜா அவர்களே அந்தத் தலைமைத்துவத்திற்கு ஏற்றவர் என்பதைக் கண்டறிந்து அந்தப் பொறுப்பினை அவர் ஏற்கும் வண்ணம் முழுமூச்சான செயற்பாட்டில் நின்று அதிபர் தமது நோக்கத்தில் பூரண வெற்றியும் மன நிறைவும் கண்டார்.

பேராசிரியர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றபின்னர் பாடசாலை மிகத்துரிதமாக முன்னேறியது. இங்கு இச்செயற்பாட்டில் பாடசாலை ஆசிரிய ஆசிரியைகள், பழைய மாணவர்கள், சு. கனகசபாபதி, கணிதத்துறைப் பொறுப்பாளர் திரு. ஸ்ரீ சற்குணராஜா, திரு. பொ. வியாகேசு, செல்வி சீதா, திரு. சண்முகசுந்தரம் போன்றவர்களும் குறிப்பிடக் கூடியவர்களாவர்.

இத்துடன் நிற்காது இந்தத் தாய்ச் சங்கத்தின் முயற்சியால் கனடாவிலும் எமது பழைய மாணவர் சங்கக் கிளை யொன்றிற்கு வழிவகுக்கப்பட்டு அங்குள்ள எமது ஆக்கமும், ஊக்கமும். நுண்ணறிவும் பாடசாலை மாதாவை என்றும் மறவாப் புதல்வர்கள் பலரும் ஒன்றிணைந்து, தம்முழைப்பின் கணிசமான பகுதியையும், தமது ஆலோசனைகளையும் பாடசாலை முன்னேற்றத் திற்காக அள்ளி வழங்கிக் கொண்டிருப்பதோடு, காலத்திற்குக்காலம் இங்கு வருகை தரும் பழைய மாணவர் பாடசாலை முன்னேற்றம் குறை நிறைகள் பற்றி மிக ஆவலுடன் கவனித்து மேலும் செய்ய வேண்டியவைகள் எவை என்பதற்குக் கருத்தாக நிற்பதையும் நாம் தெளிவாகக் காண முடிகிறது.

பழைய மாணவர் சங்கம் தனது தொடர்புகளை நிர்வாக மட்டத்துடன் மட்டும் வைத்துக் கொள்ளாது விழாக்களில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆற்றிய உரைகள் மூலம் மாணவர்களின் சிந்தனையோட்டத்திலும் தம்மை இணைத்துக் கொண்டனர். இத்துடன் இக்காலப் பிரிவில் பழைய மாணவர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கு மிடையே நடந்த சிநேக பூர்வமான காற்பந்தாட்டம் அவர்களிடையே ஓர் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

பழைய மாணவர் சங்க உதவியுடன் அதிபரால் நிறுவப்பட்ட முக்கிய அமைப்பு உடு/அ.மி. கல்லூரி நுண்கலை மன்றமாகும். அதிபரின் வருகைக்கு முன்பிருந்த பாடசாலை நிலைமையால் மாணவர்களுக்குண்டான பெருமிழப்பு நுண்கலை ஆற்றல் விருத்திக்கு வழியில்லாமல் இருந்ததாகும். ஆனால் இவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நுண்கலை மன்றத்தினால் எமது பாடசாலை மாணவர் மட்டும் அன்றி வேறு பாடசாலை மாணவர்கள் பாலரில் இருந்து இளைஞர் வரை ஆண், பெண் யாவருக்கும், மிருதங்கம், வாய்ப்பாட்டு, நடனம் ஆகிய சகலதுறைகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது கலைவளர்ச்சி மட்டுமல்ல பாடவிதானத்துடன் இணைக்கப்பட்ட செயற்பாடுகளாக இருப்பதோடு பல மாணவர்களுக்கு பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவிற்குள் புகுவதற்கும் பெருவாய்ப்பளிக்கின்றது.

முகாமைத்துவம்

ஒட்டு மொத்தமாக அழிந்து கொண்டிருந்த பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு, பெற்றோர், மாணவர்களிடையே நிலவிய நம்பிக்கையின்மை, புதிய மாற்றத்தை எதிர்நோக்கப் பின்னிற்கும், ஆசிரிய, ஆசிரியைகள் எல்லாவற்றுக்கும் மேலாக பாடசாலை அன்றாட நடவடிக்கைகளுக்குச் சவாலாக அமையும் இராணுவ நடவடிக்கைகள் எனப்பல சவால்களின் மத்தியில் தனது மன உறுதியாலும் முகாமைத்துவத் திறமையாலும் திட்டமிட்ட காரியங்களை அதிபர் முன்னெடுத்துச் சென்றார். இதற்காக தமக்கு இயல்பாக உள்ள உரத்த கண்டிப்பான உரையாடல் மூலம் சிலரின் மனக்கசப்பைப் பெற்றதுமுண்டு. குறிப்பாக ஆசிரியரின் காலங் கடந்த லீவுகள் மாணவர் நலனைப் பாதிக்கும்போது அதிபர் உணர்ச்சி வசப்படுவது வெளிப்படையாகக் காணக்கூடிய தொன்று.

அதிபரின் மனவுறுதியை நாம் கண்டு, பிரமிக்கத்தக்க சம்பவங்கள் பல. பாடசாலை வழமையான இடத்தில் நடைபெற்ற போது விமானப்படைக் குண்டு வீச்சால் கதிகலங்கி நின்ற மாணவர்களை மீண்டும் அவர்கள் பயத்தைப் போக்கி பாடசாலை மைதானத்தில் தற்காலிகக் கொட்டில்களை அமைத்துக் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட்ட அன்றே மீண்டும் மாலை கொட்டில்கள் இரண்டின் மீது குண்டுவீச்சு நடாத்தப்பட்டது. ஆனால் அதிபர் சற்றுநேரம் நிலை கலங்கினாலும் உடனேயே நீலநிறத்துணி வாங்கிப் பாடசாலை இயங்குகின்றது என்பதை வெளிக்காட்டிக் கொடிகள் கட்டித் துடிப்புடன் தொழிலாளருடனும், மாணவருடனும் ஒருவனாக நின்று மீண்டும் கொட்டில்களை அமைத்து உடனடியாகவே மாணவர்களின் கல்வியைத் தொடரவைத்த அவரின் முகாமைத்துவத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இப்படியாக அதிபரின் முகாமைத்துவச் சிறப்பைச் சொல்லி முடியாது.

முடிவுரை

அதிபரைப்பற்றி எழுதுவதானால் எவ்வளவோ எழுதலாம். அமெரிக்கன் மிஷன் கல்லூரி வரலாற்றில் என்றும் அவருக்கு ஒருமுக்கிய இடம் இருக்கும். மாணவனாய், நல்லாசிரியனாய், திறமைமிக்க அதிபராய், அறிவும், ஆற்றலும், செயற்றிறனும் மிக்கவராய் அறிவொளி மங்காது எந்தச் சுழற்காற்றுச் சூழ்நிலையிலும் அதனை அணையாது காத்தவர். தம்முன்னோர் நல்வழிகளைக் கடைப்பிடித்தவர். தனக்குப் பின் வந்தவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்கியவர் ஆவர். எமது பாடசாலை வாசகத்திற்கேற்ப "இருளை அகற்ற வந்த ஒரு பேரொளி" அவர் என்று தான் என்னாற் கூற முடியும்.

உடுப்பிட்டி அ. மி. கல்லூரியும் திரு. ந. அனந்தராஜ் அவர்களும்


அமெரிக்க மிஷனரியினரின் கல்விச் செயற்பாடுகளில் உதித்த கலங்கரை விளக்குகளில் யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி யாழ் மாவட்டத்தில் இன்று முன்னணிப் பாடசாலையாக மிளிர்ந்து நிற்கின்றது. இப்பாடசாலை வரலாற்றில் பல சோதனைகளையும், அழிவுகளையும் கண்டு இன்று 150வது ஆண்டை கடந்து நிமிர்ந்து நிற்கின்றது. இப் பெருமைக்குரியவர்கள் இக் கல்லூரியின் கடந்தகால மறக்க முடியாத அதிபர்களே.

1852ம் ஆண்டு இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து திறமைமிக்க முதல்வர்கள், அதிபர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கு தங்களை அர்ப்பணிந்துள்ளார்கள். இவர்களில் 1939ம் ஆண்டு முதல் அதிபராக கடமையாற்றிய திரு. K. T. John முக்கியமானவராக கருதப்படுகின்றார். இவரைத் தொடர்ந்து 1956ல் அதிபராக கடமையாற்றிய திரு. S. செல்லத்துரையின் காலத்தில் வடமராட்சியின் தலைசிறந்த பாடசாலைகளில் ஒன்றாக இக்கல்லூரி மிளிர்ந்துள்ளது.

எனினும் 1987ம் ஆண்டு வடமராட்சியில் இடம்பெற்ற ஒப்பிரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கை இக்கல்லூரியின் பொலிவை, அழகை அடியோடு சிதைத்து விட்டது. இக்காலப்பகுதியில் பாடசாலை அதிபராக இருந்த திரு. K. சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஓய்வுபெற சிதைந்துபோன, அழிந்துபோன இக்கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பை தற்போதைய வடமராட்சி வலயக்கல்வி அலுவலக கல்விப் பணிப்பாளர் திரு. V. T. செல்வரத்தினம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது சேவைக்காலம் மிகக்குறுகியதாக இருப்பினும் கல்லூரியின் வளர்ச்சியில் இவரது சேவைக்காலமும் மறக்க முடியாதவையே.

இவரைத் தொடர்ந்து கல்லூரியின் அதிபர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டவர் திரு. ந. அனந்தராஜ் அவர்கள் ஆவார். இடம்பெயர்ந்த நிலையில் தனியார் வீடுகளிலும், விளையாட்டு மைதானத்திலும், அயற்காணிகளிலும் தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து இயங்கிக் கொண்டிருந்த இப்பாடசாலையின் நிர்வாகப்பொறுப்பை திரு. ந. அனந்தராஜ் அவர்கள் 1992ம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் 1996ம் ஆண்டுவரை இப்பாடசாலையின் அதிபராக இருந்து வடமராட்சியின் சிறந்த ஒரு கல்லூரியாக உருவாக்குவதற்கு இரவுபகல் பாராது தனது கடின உழைப்பை வழங்கிய பெருமை இவரையே சாரும்.

எதிர்கால சந்ததியினரை கல்வி அறிவால் மேம்படுத்தி நாட்டுக்கு நல்ல பிரஜைகளாக உருவாக்க வேண்டிய பொறுப்பு பாடசாலைகளின் அதிபர்களையும்,



சி. நந்தகுமார்
முன்னாள் ஆசிரியர்
கோட்டக்கல்வி அதிகாரி, மருதங்கேணி
உதவிக் கல்விப் பணிப்பாளர் –
முறைசாராக் கல்வி

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

ஆசிரியர்களையும் சார்ந்ததாகும். இதனை கருத்திற்கொண்டு திரு. ந. அனந்தராஜ் அவர்கள் இக்கல்லூரியின் அதிபராக செயற்பட்டதுடன் தனது ஆசிரியர் குழாத்தையும் சிறப்பாக செயற்படுத்திய பெருமைக்குரியவர். தனது நிர்வாகத் திறமையினால், ஆளுமை முதிர்ச்சியால், பணிவான பேச்சினால் மாணவர்களையும், ஆசிரியர்களையும் வெற்றி கொண்டதுடன் கல்லூரிச் சமூகத்தையும் கல்லூரியின்பால் இறுக இணைத்துக் கொண்டார்.

1972ம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மாற்றலாகி வந்த என்னை தன்னுடைய கல்லூரிக்கு சேவையாற்ற வருமாறு அன்புடன் அழைத்து என்னையும் இக்கல்லூரியின் வளர்ச்சியில் சிறு பங்காற்றச் செய்த பெருமையை இன்றும் என்னால் மறக்க முடியாதுள்ளது. தனித்துவச் சிறப்பைக் கொண்ட வல்வை மக்கள் வீரத்துடன் கல்வியிலும், ஒழுக்கத்திலும், விருந்தோம்பலிலும் மிகுந்த அக்கறையுடையவர்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை. இதற்கு எடுத்துக்காட்டாக இக்கல்லூரியின் முதல்வராக இருந்த வல்வை ந. அனந்தராஜ் அவர்களை குறிப்பிட்டால் அது மிகையாகாது.

அவருடன் சேவையாற்றிய காலப்பகுதி (1992 - 1994) மிகக் குறுகியதாக இருப்பினும் கல்லூரியின் பெருமையை நிலைநாட்டுவதிலும், மாணவர்களின் கல்வி மேம்பாட்டை உயர்த்துவதிலும் தனது முழுநேர உழைப்பைக் கொடுத்து தன்னையே அர்ப்பணித்துச் சேவையாற்றிய வீரராக என்மனக்கண்முன் மிளிர்கின்றார்.

திரு. ந. அனந்தராஜ் அவர்களுடன் 1983ம் ஆண்டு தொடக்கம் நான் பழகியுள்ளேன். வல்வெட்டித்துறையில் இயங்கிய வல்லைக் கல்வி மன்றம் இவரது நிர்வாக செயற்திறனை என்றும் நினைவு கூரும். அந்த மன்றத்திலே ஓர் ஆசிரியனாக கடமையாற்றிய காலத்திலேயே (1983 - 1985) இவரது நிர்வாகத் திறனை அறிந்து கொண்டேன். கண்டிப்புடன் கூடிய கனிவான அணுகுமுறை இவர்மீது எனக்கு ஓர் மதிப்பை ஏற்படுத்தியது. இந்த மதிப்பே முல்லைத்தீவில் இருந்து மாற்றலாகி வந்த என்னை தனது பாடசாலைக்கு வருமாறு அன்புடன் அழைத்தபோது எதுவித மறுப்பும் தெரிவிக்காது உடன்பட வைத்தது.

திரு. ந. அனந்தராஜ் இக்கல்லூரியின் அதிபராக வருவதற்கு முன்பு பரு. சித்தி விநாயகர் வித்தியாலயத்திலும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திலும் அதிபராக் கடமையாற்றியுள்ளார். இவ்விரு பாடசாலைகளினதும் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்லூரிச் சமூகம் இன்னும் இவரது செயற்திறனை நினைவு கூறுவதில் இருந்து இவரது ஆளுமை வெளிப்படையாகின்றது.

இக்கல்லூரியில் மாணவர்களை, ஆசிரியர்களை கற்றல் கற்பித்தற் செயற்பாட்டுடன் முழுமையாக இணைத்து வழிநடத்திச் சென்றதுடன் நின்றுவிடாது இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் தனது நிர்வாகத் திறனை வெளிப்படுத்த தவறவில்லை. யாழ் மாவட்டத்தின் முன்னனி சாரணர்களை கொண்ட பாடசாலையாக இக்கல்லூரியை வளர்த்ததுடன் தன்னையும் முழுமையாக சாரணர் இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். அத்துடன் யாழ் மாவட்டத்தில் 1994 ஆண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் 2ம் இடத்தை இக்கல்லூரி பெறுவதற்கு மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் இணைந்து செயற்பட்டதை இன்னும் என்னால் மறக்க முடியாதுள்ளது.

மாணவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சியில் என்றும் அக்கறையுடையவராக மிளிர்ந்துள்ளார். இதன் வெளிப்பாடாக மாணவர்களது கையெழுத்து சஞ்சிகையாக வெளிவந்த "அரங்கம்" எனும் சஞ்சிகை இவரது கலைத்திறனை எடுத்துக் காட்டுகின்றது. இடம்பெயர்ந்து வசதிகளற்ற நிலையில் கல்லூரி செயற்பட்டபோதும் மாணவர்களின் விளையாட்டுத் திறனை வளர்க்கும் நோக்குடன் இருக்கின்ற வளங்களை உச்ச அளவிற்கு ஈடுபடுத்திய பெருமை திரு. ந. அனந்தராஜ் அவர்களையே சாரும். இதற்கு எடுத்துக்காட்டாக பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் கல்லூரியில் துடுப்பாட்ட மைதானம் அமைக்கப்பட்டு மாணவர்களுக்கு துரித பயிற்சி அளிக்கப்பட்டு யா/ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுடன் இம்மைதானத்தில் 1994 ஆண்டு நடைபெற்ற சினேகபூர்வ துடுப்பாட்டபோட்டி இவரது செயற்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் இவரது காலத்தில் புதுப் பொலிவுடன் செயலாற்றியது. "அரங்கம்" சஞ்சிகை உயர்தர மாணவ மன்றத்தின் அழகான கையெழுத்து சஞ்சிகை. இக்காலத்தில் உயர்தர மாணவர் மன்றம் வருடாந்த ஒன்று கூடல்களை கல்லூரிப் பாரம்பரியத்துக்கும் கௌரவத்துக்கும் ஏற்ப சிறப்பாக ஒழுங்கு செய்து நடாத்த உறுதுணையாக இருந்ததை மறக்க முடியாது.

இவரின்கீழ் செயற்பட்ட 1992 - 1994ம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தகப்பிரிவு மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்கு எனக்கு முழு உறுதுணையாக நின்று வழிகாட்டியதுடன் நல் ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கியதை என்றும் என்னால் மறக்க முடியாது. இவரதுகாலப் பகுதியில் வருடாந்த பரிசளிப்பு விழா, வாணி விழா, ஒளிவிழா, இல்ல மெய்வல்லுநர் போட்டி என்பன எத்தகைய தடங்கலுமின்றி சிறப்பாக நடைபெற்றமை இவரது செயற்திறனுக்கு மேலும் எடுத்துக்காட்டாக உள்ளன. இக்கல்லூரியில் இருந்து 1994ம் ஆண்டு நான் மாற்றம் பெற்றபின்னரும் இவரது வழிகாட்டலில் கல்லூரி சிறந்து விளங்கியதுடன் யாழ் மாவட்டத்தில் தனது நிலையை நிலைநிறுத்திக் கொண்டது. இக்கல்லூரியில் இருந்து மாற்றலாகிச் செல்லும் வரை கல்லூரியின் பெருமையையும் வளர்ச்சியையும் கட்டிக்காத்து நின்றதை இன்னும் எவரும் மறக்க மாட்டார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

"ஒளி இருளை அகற்றும்"
Light Dispels Darkness.

கல்லூரி வரலாற்றில் புதுயுகம்

எனக்கு அறிவூட்டிய அன்னைக்கு நூற்றைம்பது அகவை நிறைவு என்றவுடன் மகிழ்ச்சி பொங்குகிறது. பெருமிதம் ஏற்படுகிறது. தாயினும் சாலப்பரிந்து நின்ற தாய்க்கு என் தலை சாய்த்த வந்தனங்கள். இவ்வேளையில் உடுவைக் கவிஞன் ஒருவனின் வெண்பாவை உள்ளம் மீட்டிப் பார்க்கிறது.

"உத்தமர்கள் வாழுமூர் ஓயாவுழைப்புளவூர்
முத்தமிழுமோங்கு முதன்மையூர் - சத்தியூர்
வீறுதிறல் விஞ்ஞான மேதையரைத் தந்தவூர்
கூறுமுடுப்பிட்டியூர் கொல்"

வெண்பாவின் பொருளுக்கு முதற்பொருளாய் அமைபவள் எனது அன்னை. இலங்கையின் இணையற்ற கல்வி நிலையங்களில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கும் ஒரு முதன்மை உண்டு. இதை எவராலும் மறக்க முடியாது. உடுப்பிட்டிக் கிராமம் உடுத்துக் கொள்வதற்கு எத்துணை சீருடைகள் இருந்தாலும் அத்தனைக்கும் ஆதாரம் அமெரிக்கன் மிஷன் கல்லூரியே. மகளிர் கல்லூரி உட்பட மட்டற்ற கல்லூரிகள் இருந்தாலும் அவையாவற்றுக்கும் முன்னோடியாக மங்காப் புகழுடன் என்றும் திகழ்வது அமெரிக்கன் மிஷன் கல்லூரியே.

கல்லூரிக்கு வயது நூற்றைம்பது, ஆனால் அது கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால் திகைப்புத்தான். கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதையது. கறைபடிந்த காலங்களைக் கழித்து இன்று கம்பீரத்துடன் காட்சியளிக்கிறது. மகிழ்ச்சிதான். வளர்ச்சி என்பது இருவகைப்பட்டது. சாதகச் சூழ்நிலைகளை மட்டும் பெறுவதால் சரித்திரம் படைப்பது ஒருவகை. மற்றையது எதிர்பாராமல் ஏற்படும் பாதகங்களின் பழுது துடைத்துப் பரிணமிப்பது. அவ்வகையில் எனது கல்லூரி இரண்டாம் நிலைக்குரியது. ஈழத் தமிழ் மக்களைப் பிடித்த அத்தனை பிணிகளும் இக்கல்லூரியைப் பற்றிப் பிடித்தன. இனப்பிரச்சினையின் மோசமான விளைவுகள் இக்கல்லூரியை ஈனநிலைக்கு இழுத்துச் சென்றன. ஒரு காலகட்டத்தில் கல்லூரியின் உயிரே ஊசலாடியது. எண்பதுகளிற்குப் பின் கடுகளவில் ஆரம்பித்த ஈனநிலை தொண்ணூறுகளில் மிக மோசமாகமாறி கல்லூரியின் கட்டுக்கோப்பையே சிதைத்தது.

நான் கல்லூரிக்கு காலடிபதித்த காலம் திரு. சிதம்பரப்பிள்ளை அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் காலம். புதிய அதிபராகப் பொறுப்பேற்ற திரு. V. T. செல்வரட்ணம் ஒரு சில மாதங்களில் கல்விப்



செல்லத்துரை சுதர்சன்
(பழைய மாணவன்)
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 — 2002

LIGHT DISPELS DARKNESS

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

பணிப்பாளராக உயர் நியமனம் பெற்றேகினார். அதன் பின்னர் திரு. ந. அனந்தராஜ் அதிபராகப் பொறுப்பேற்றார்.

திரு. ந. அனந்தராஜ் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்ற காலத்தில் குடாநாட்டுப் பாடசாலைகள் அனைத்துமே ஸ்தம்பித நிலையடைந்திருந்தது. எந்நேரமும் குண்டுமழை பொழியலாம் என்ற அச்சமே மேலோங்கியிருந்தது. ஆசிரியர்கள் மாணவர்களின் வரவை உறுதிப்படுத்துவதை விட்டுவிட்டு வானத்தை அண்ணார்ந்து பார்த்து அவர்களின் உயிரை உறுதிப்படுத்திக் கொண்டிருந்த காலம். வல்வைக் கடலில் இருந்து கக்கும் பீரங்கிகளின் மத்தியிலும் ஒரு கல்விக் கூடம் மெல்ல மெல்ல இயங்கியது. பல்வேறுபட்ட அடிப்படை வசதிகளை இழந்த நிலையிலும் கல்விசார் நடவடிக்கைகள் நடைபெற்று வந்தன. கல்லூரி மைதானத்தில் உள்ள மரங்களின் கீழே கொட்டகைகள் அமைக்கப்பட்டன. அவற்றுக்குள் குறைந்த தளபாட வசதிகளுடன் கல்வி போதிக்கப் பட்டது. இடம் போதாமை கருதி பீக்கோன் தனியார் கல்வி நிலையக் கொட்டகைகளிலும் சில வகுப்புகள் நடைபெற்றன. மைதானத்துக்கு அருகில் உள்ள திரு. சுந்தரலிங்கம் அவர்களின் வீட்டின் ஒரு பகுதி அலுவலகமாகியது. அருகில் உள்ள இன்னொரு வீட்டின் அறை மிகமிகக் குறைந்த புத்தகங்களுடன் நூலகமாக இயங்கியது. கல்லூரியின் பெரிய நூலகம் குண்டுவீசி அழிக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே.

மைதானத்தில் அமைக்கப்பட்ட கொட்டகை களுக்கு அருகில் நீளமான பதுங்கு குழிகளும் அமைக்கப்பட்டிருந்தன. இக்காலத்தில் கல்லூரி சகல வசதிகளையும் இழந்திருந்தாலும் கல்விசார் நடவடிக்கையில் குன்றவில்லை. பரீட்சைப் பெறுபேறுகள், கலை நிகழ்வுகள், சாரணீய இயக்கம், தமிழ்மொழித்தினப் போட்டிகள் போன்ற அனைத்திலும் உயர்ந்து காணப்பட்டது. 1995 இல் இருபது மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கும் தகுதி பெற்றனர். துரதிஷ்டவசமாக யாழ் மண்ணில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு ஓரளவு இருந்த சூழலையும் குலைத்து விட்டது. உயர்திரு. ந. அனந்தராஜ் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று திருமலைக்குச் சென்றார். வடக்கு கிழக்கில் நிலவிய மாபெரும் பொருளாதாரத் தடையின் மத்தியிலும் தன்னால் இயன்ற உதவிகளைப் பெற்று கல்லூரியை வளர்க்கப்பாடுபட்ட ந. அனந்தராஜ் அவர்களை உடுப்பிட்டிச் சமூகம் மறந்துவிடக் கூடாது.

இதன் பின்னர் கல்லூரி இருந்த இடத்திற்கு அருகில் இராணுவம் முகாமிட்டிருந்தது. இப்போதும் இருக்கிறது. கல்லூரிக்குச் சொந்தமான கிணற்றையும் களவாடியிருந்தது. கல்லூரிக்குச் சென்று வருவதற்கு அனைவருக்கும் அச்சம் தோன்றியது. இந்நிலையில் உப அதிபராக இருந்த திரு. ச. தில்லையம்பலம் அவர்கள் கல்லூரியை மெல்ல மெல்லக் கொண்டு நடத்தினார். இவர் காலத்திலும் கல்விசார் நடவடிக்கைகள் நடைபெற்றன. கல்லூரி மைதானத்தில் ஒரு பகுதியும், Becon தனியார் கல்வி நிலையத்தில் ஒரு பகுதியும் கல்லூரி வளவில் ஒரு பகுதியுமாக காணப்பட்டிருந்தன. கல்லூரி வளவின் பெரும்பகுதி அந்நியர் ஆட்சியால் ஏற்பட்ட அழிவுகளுடன் சுடுகாடு போலக் காணப்பட்டது. கல்லூரி மாதாவின் மேனியின் பெரும்பகுதி முட்களும், கற்களும் நிறைந்த பற்றைகளாக இருந்தது. இராணுவத்தினரால் அழிக்கப்பட்ட கட்டிடங்கள் ஒரு புறமிருந்தன. கல்லூரி ஒரு கட்டுக் கோப்புக்குள் இருக்க முடியாது அங்கொன்றும் இங்கொன்றுமாக பிரிபட்டுக் கிடந்தது. இவ்வாறு அச்சமும் குழப்பமும் நிறைந்த சூழலில் உள்ள கல்லூரிக்கு அதிபராகப் பொறுப்பேற்க எவருமே முன்வரவில்லை. பணிப்பாளரதும், பழைய மாணவர் சங்கத்தினதும் அழுத்தத்தினாலும் அரிய முயற்சியாலும் திரு. கி. நடராஜா அவர்கள் 9.7.1997 இல் அதிபராகப் பொறுப்பேற்றார்.

கல்லூரி இருந்த சூழ்நிலையில் அதனைப் பொறுப்பேற்கத் துணிந்த அதிபரின் திறன் வியந்து பாராட்டத்தக்கதே. அதிபர் கி. நடராஜா நேர்மை உள்ளவர். கல்லூரியின் உயர்ச்சிக்காக எக்காரியமானாலும் துணிந்து இறங்கும் வல்லமைமிக்கவர். கல்வியியலாளன். கலை ஆர்வம் மிக்கவர். தன்து நேரத்தை கல்லூரியின் வளர்ச்சியில் செலவு செய்வதில் பிரியமுள்ளவர். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்மீது தீராத மோகம் கொண்டவர். அத்தகையதொரு மானுடத் தொண்டனின் வரவு கல்லூரி வரலாற்றில் அதன் வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையையே ஏற்படுத்தியது. குறுகிய காலத்தில் கல்லூரி கண்டோர் வியக்கத்தக்க வளர்ச்சியை நோக்கி முன்னேறத் தொடங்கியது. கல்லூரி வரலாற்றில் புதுயுகம் ஆரம்பமானது.

முதல் முயற்சியாக அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த வகுப்பறைகள் கல்லூரி வளவிற்குள் கொண்டுவரப்பட்டன. இதற்காக அதிபர், பழைய மாணவர் சங்கத்தின் உதவியைப் பெற்றுக் கொட்டகைகளை அமைத்தார். அதிபரின் வருகையின் பின்பு கல்லூரிக்குக் கிடைத்த பெரியதொரு அதிஷ்டம் G.T.Z இன் வருகை. G.T.Z இன் மூலம் மிகக் கூடிய பயன் பெற்ற கல்லூரி அதுவே எனில் அது மிகையாகாது. இவ்விடத்தில் G.T.Z. இன் Team Leader உயர்திரு கல்பா அவர்கள் எழுதிய கடிதமொன்றின் சில வரிகளை குறிப்பிடுதல் நன்று. இக்கடிதம் பாடசாலை அபிவிருத்திச் சங்க தலைவரான அதிபருக்கு எழுதப்பட்டது.

"We wish to inform you that, we are indeed very happy that you have been able to successfully complete the construction of the 130' x 25' two storied class room building and also make a substantial savings of over Rs. 550,000.

Your school have also with far-thought and vision utilized the major part of the savings to construct a water tank for the well being of the school.

Your new sanitation building have been model for our school sanitation programme.

We deeply appreciate and commend the deep commitment and collective co-operation shown to construct these excellent building by your staff, old boys well wishers and your good self your efforts and actions were an example to the others and reflected our policies and goals. It was a great pleasure to work with your school

Yours sincerely

Sgd. E. Berhard Halbach

Team Leader - GTZ - JRP"

1997ம் ஆண்டிற்குப் பின் கல்லூரியில் நடைபெற்ற செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கன. அவற்றுள் முதன்மையான மிகக் குறுகிய காலத்தில் 130 x 25 அளவு கொண்ட இருமாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டட அளவை 180 x 25 ஆக மாற்றியமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் வகுப்புக்கள் போதாது என்ற நிலையில் 25% நிறைவு செய்யப்பட்டது.

கல்லூரியில் மலசல கூட வசதி, நீர் வசதி இல்லாமல் மாணவர் பட்டபாடு சொல்லுந்தரமன்று. அதன் அவசியம் உணர்ந்து G.T.Z. இன் மூலம் மலசல கூடம் நவீன முறையில் அமைக்கப்பட்டது. இத்தகையதொரு மலசல கூடத்தை வடமராட்சியில் உள்ள பாடசாலைகளில் எங்குமே காணமுடியாது. G.T.Z. இன் சேமிப்பில் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு நீர் விநியோகம் செய்யப்பட்டது. இச் செயற்பாடுகளால் மாணவர்கள் மக்கள் வீடுகளுக்குச் சென்று நீர் குடிக்கும் நிலையும், ஒதுக்குப்புறம் சென்று சலம் கழிக்கும் நிலையும் நீங்கியது.

ஏற்கனவே இருந்த 50 x 25 அளவு கொண்ட இருமாடிக் கட்டட அலுவலகத்தைப் புனரமைத்து அதன் மேற்பகுதியில் நூலகமும் கீழ்ப்பகுதியில் அதிபர் அலுவலகமும், கணனி அலுவலகமும் அமைக்கப்பட்டன. எமது கல்லூரியின் பழைய மாணவரும், பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ் பல்கலைக்கழக உபவேந்தருமான காலஞ்சென்ற மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராஜாவின் ஞாபகார்த்த மண்டபமே தற்போதைய நூலகமாகும். கல்லூரியில் கற்கும் மாணவர்களின் தேடல் தேட்டமாக அமைவது நூலகம் ஆகும். முன்பு கல்லூரியில் இருந்த நூலகம் இராணுவ நடவடிக்கையால் அழிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. 1996ம் ஆண்டில் கல்லூரி அறை ஒன்றில் மிகக் குறைந்த புத்தகங்களுடன் இயங்கிய நூலகம் பின்னர் மூடப்பட்டுக் கிடந்தமையும் குறிப்பிடத்தக்க தாகும். 97களிற்குப் பின் பிரமாண்டமான அளவிலான நூலகம் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களாற் திறந்து வைக்கப்பட்டது. நூலகத்திற்குத் தேவையான நூல்களைத் திரட்டியதில் அதிபரின் பங்கு பாராட்டுதற்குரியது. கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், கல்விமான்கள் வேறுபல நிறுவனங்கள் அந்நிய தேசத்தில் வாழ்பவர்கள் போன்ற அனைவரிடமிருந்து நூல்கள் திரட்டப்பட்டன. திரு. ந. ஆனந்தராஜ் அதிபரின் காலத்தில் ஒவ்வொரு மாணவனிடம் இருந்து ஒவ்வொரு ஓடுகளைப் பெற்று கொட்டில்கள் அமைத்ததை இந்நிகழ்வு ஞாபகப்படுத்தியது.

குறுகிய காலத்தில் ஒரு பெறுமதிமிக்க நூலகமாக வளர்ச்சி கண்டது. மாணவர் நூலகத்தில் இருந்து கற்பதற்கேற்ற அனைத்து வசதிகளையும் கொண்டிருந்தது. நூலகத்தின் புத்தெழுச்சியானது மாணவர்களின் கல்விக்குப் போடப்பட்ட பெரிய பலமான அத்திவாரமாகியது. வடமராட்சி வலயப் பாடசாலைகளின் நூலகங்களில் தலைமை நூலகமாகவும் இதுவே இன்று விளங்குகிறது. ஆனால் நூலகப் பரப்பளவு இன்னும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

21ம் நூற்றாண்டின் மடியில் தவழும் மாணவர்களுக்கு ஊடகங்களுடனான உறவு அவசியம் என்பதை உணர்ந்து தொலைக்காட்சிப் பெட்டி, டெக், வானொலி போன்றன வாங்கப்பட்டன. இதன் மூலம் புவியியல், உயிரியல், மாணவர்கள் பெரும் பயன் பெற்றனர். பெற்று வருகின்றனர்.

ஒரு திட்டத்தின் மூலம் பல சேமிப்புக்களை உருவாக்கி பழைய மாணவர் சங்கத்தின் உதவிகளைத் தாராளமாகப் பெற்று இவ்வாறு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதே ஆகும்.

பாடசாலையில் வளர்க்கப்பட்ட நிழல் தரும் மரங்களையும், வண்ணப் பூக்கள் பூத்து மணம் வீசும் பூமரங்களையும் அவ்வப்போது ஆடுகளும் மாடுகளும் மேய்ந்து இளைப்பாறுவதும், நாய்கள் வளவை அசுத்தம் செய்வதும் வழமையாகியிருந்தன. இதனைத் தடுப்பதற்கு சுற்றுமதில் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு பழைய மாணவர் சங்க உதவியுடன் சுற்றுமதில் கட்டப்பட்டது.

சிங்கள அரசால் சிதைக்கப்பட்டு அரைகுறையாக கிடந்த விஞ்ஞான ஆய்வு கூடம் 20 x 20 அளவு கொண்ட அறையில் சீரமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதைவிட இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கென செயற்பாட்டு அறை ஒன்று

அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். விவசாயம் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாய நிலத்தின் தேவைகருதி பழைய மலசல கூடம் துப்பரவு செய்யப்பட்டு பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் மண் கொண்டுவரப்பட்டு காடாக இருந்த நிலம் விவசாயத்திற்குரிய நிலமாக மாற்றப்பட்டது.

சூழலை அழகுபடுத்தல் எனும் திட்டத்துக்கமைய அழகானதொரு சரஸ்வதி சிலையும், தாமரைத் தடாகமும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பூமரங்களால் ஒரு சோலையாகவும் காட்சியளிக்கிறது.

கல்வித் திணைக்கள அதிகாரிகளை தம் வசப்படுத்துவதில் அதிபரின் ஆற்றல் அளப்பரியது. திணைக்கள அதிகாரிகளுடன் சுமுகமான தொடர்புகளை கொண்டிருந்தமையும் அதிபரின் செயற்றிட்ட வெற்றிகளுக்குக் காரணமாகியது. இன்னும் ஊர்மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் சங்கம் என்பனவற்றுடன் அதிபருக்கு இருந்த உறவு முறையும் வெற்றிக்கு காரணமாக அமைந்தன.

மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வியத்தகு மாற்றமடைந்தன. 5ம் ஆண்டு புலமைப் பரிசில், க.பொ.த. சாதாரணதரம். க.பொ.த. உயர்தரம் முதலாய பரீட்சை முடிவுகள் சிறப்பாக அமைந்தன. 1998ல் க.பொ.த. உயர்தரத்தில் 4 பாடங்களில் அதிவிசேட சித்தியும் மாவட்ட நிலையில் முதலாம் இடமும் கிடைத்தது. 2000ம் ஆண்டில் நடைபெற்ற உயர்தர பரீட்சையில் ஜெயகரன் என்ற மாணவன் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று மாவட்டத்தில் மூன்றாம் நிலையைப் பெற்றுக் கொண்டான். 2001இல் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் சு. சுதாகரன் என்ற மாணவனும் கணித துறையில் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் பன்னிரண்டாம் நிலையைப் பெற்றுக் கொண்டான். கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பெரும்பாலான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றார்கள். அதிலும் கலை வர்த்தகத் துறைகளில் மிக அதிகமான மாணவர்கள் அனுமதி பெற்றனர். அதிபரின் வரவால் கலைத்துறை கல்லூரியில் கொடிகட்டிப் பறக்கிறது. இன்று கலைத்துறைக்கு மாணவர்களை அதிகமாகக் கொண்ட கல்லூரி இது வென்றால் அது பொய்யல்ல. உயர்தர வகுப்பில் கலைத்துறையானது திரு. கி. நடராஜா, திரு. ப. ஜோதீஸ்வரன், திருமதி இ. தில்லையம்பலம், திருமதி. குமாரசாமி, திரு. மா. லோகசிங்கம், திரு. மனோகரன் போன்ற ஆற்றலும் ஆளுமையும் ஒருங்கமையப்பெற்ற ஆசிரியர் குழாத்தைக் கொண்டிருந்தது.

விளையாட்டுத் துறையில் வருடாவருடம் யாழ் மாவட்டத்தில் தனக்கென ஒரு முத்திரை பதிப்பது A.M.C. யின் வழமையான செயல். உதைபந்தாட்டத்தில் A.M.C. க்கு தனிமரியாதை. 1998ல் உபமாகாண மட்டத்தில் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியிருந்தாலும் சில காரணங்களால் மாகாண மட்டத்திலும், தேசிய மட்டதிலும் கலந்து கொள்ள முடியாமை துர்அதிஷ்டவசமானதே. வடமராட்சியில், முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட 14 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணியில் A.M.C. வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பறியது. மெய்வல்லுநர் போட்டிகளிலும் வலயமட்டம், உபமாகாண மட்டம், மாகாண மட்டங்களில் பல மாணவர்கள் கலந்து கொண்டனர். 2001இல் அகில இலங்கை ரீதியான மெய்வல்லுனர் போட்டியில் இரு மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். தோற்பந்து துடுப்பாட்டம், 13 வயதுப் பிரிவு அணியினர் சென்பற்றிக்ஸ், சென் ஜோன்ஸ், யாழ்ப்பாணக் கல்லூரி என்பனவற்றுடன் மோதி சமநிலை கண்டது. இது ஒரு கன்னி முயற்சியாகும். விளையாட்டுத்துறைக்கு பொறுப்பான திரு. S. செல்வக்குமரன் ஆசிரியரின் அயரா உழைப்பும் இதன் வெற்றிகளுக்குக் காரணமாகும்.

கல்லூரியின் சாரணீயம் இன்று உயர் நிலையில் இருப்பதற்கு சாரணப் பொறுப்பாசிரியர் திரு. க. கனகேஸ்வரன் அவர்களுக்கும், திரு. க. இராஜசேகரன் அவர்களுக்கும் முக்கிய பங்குண்டு. பல்வேறு தடைகளைத் தாண்டி சாரணீயம் வீறு நடை போட்டது. வழமைபோல வடமராட்சிப் பகுதியில் உள்ள அனைத்துச் சாரணர் குழு அமைப்புக்கும் முன்னோடியாக எமது கல்லூரிச் சாரணர் குழு இருந்தது. 1998ல் பாடசாலைகளுக்கிடையிலான சாரணீயப் பாசறை நிகழ்வு தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் எமது கல்லூரி முதலிடம் பெற்றிருந்தும் அதற்குரிய வெற்றிக் கேடயமோ, சான்றிதழ்களோ இன்னும் வழங்கப்படாமை மனம் வருந்தத்தக்கது. செல்வச்சந்நிதி கோவில் மகோற்சவம், மேதினம், மாணவர் எழுச்சி நாள் கல்லூரியின் விழாக்கள் போன்றவற்றுக்கு சாரணீயம் தனது சேவைகளைத் தாராளமாக வழங்கி வருகிறது. ஆனாலும் சாரணீயத்துக்கு என்று அறை இன்னமும் ஒதுக்கப்படவில்லை. கல்லூரியின் பரியோவான் படைப் பிரிவினர் தற்போது மிகவும் குறைவாகவே உள்ளனர்.

கலைநிகழ்வுகளை நோக்கின் பெற்றோர் தின விழா, பரிசளிப்பு விழா, சாரணீய விழா, வாணி விழா போன்ற பல விழாக்கள் நடைபெறுகின்றன. கல்லூரியின் பெற்றோர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் வடமராட்சியில் வருடாவருடம் நடைபெறும் விழாக்களின் தலைமை விழாவாகத் திகழ்கிறது. 95 களிற்கு முன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ்விழா 96ல் கல்லூரியன் நீண்ட கொட்டகை ஒன்றில் நடைபெற்றது. 97 களிற்குப் பின்னர் கல்லூரியின் திறந்த வெளியரங்கு திருத்தப்பட்டு அதில் நடைபெற்று வருகிறது. இவ்விழாக்களில் போடப்படும் நாடகங்களிற்கு கல்லூரி வரலாற்றில் ஒரு முதன்மை உண்டு. நாரதர் நடமாடுகிறார், பக்தப் பிரகலாதன்,

சங்கிலி, பாயும்புலி பண்டாரவன்னியன், மாண்டவர் மீண்டனர், குசேலர், கனகரும் கனடாவும், அப்பு கொழும்பில், தமிழை சோதித்த தலைவன், சன்னாவெட்டைச் சக்கடத்தார், காலனி மாளிகை போன்றன. அவற்றுள் முக்கியமான நாடகங்கள் 98ல் அதிபரின் நெறியாள்கையில் நாட்டாரிசைமாலை என்னும் புதிய கலை வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ் மொழித் தினப் போட்டிகளில் வலயமட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரை பலமாணவர்கள் பங்குபற்றியிருக்கிறார்கள். கவிதை, கட்டுரை, நாடகப் பிரதி ஆக்கம், சிறுகதை, பேச்சு, தனிப்பாடல், குழுப்பாடல், நாடகம், நடனம், வினாடி வினா, வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகளில் பெரும்பாலானவை முதலிடங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் நாடகம் ஒவ்வொரு முறையும் மாவட்ட மட்டத்தில் இடத்தைப் பெறுவது வழமை. 97இன் முற்பகுதியில் வலய மட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தும் உபமாகாண மட்டத்தில் இடத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதற்குக் காரணம் உயர்தர மாணவர் மன்றம் நடாத்திய ஒன்று கூடலும், போட்டித் தினமும் ஒன்றாக இருந்தமை ஆகும். நாடகப் போட்டியில் பங்கு பற்றும் மாணவர்கள் ஒன்று கூடல் திகதியை மாற்றியமைக்குமாறு கோரியும் மாற்றப்படாமல் போட்டிக்கு கட்டாயமாக அனுப்பப்பட்டமையாகும். அதனால் மனநிலை சரியின்மை காரணமாக அவர்கள் ஆற்றுகையை சரியாக வழங்க முடியவில்லை. ஆனால் தற்போதைய அதிபர் கல்விசார், கலைசார், நிகழ்வுகளுக்கு முதலிடம் கொடுத்து வருகின்றமையால் பல வெற்றிகள் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறே ஆங்கில தினப் போட்டி, கல்வியற் கண்காட்சி, ஓவியம் போன்ற போட்டி நிகழ்ச்சிகளில் பல பரிசில்களைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதிபர் கி. நடராஜா அவர்கள் தரமான பல கலை நிகழ்ச்சிகளை வெளியிடங்களிலிருந்து கொணர்ந்து மேடையிட்டு மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி வருகிறார். இதற்கு உதாரணமாக குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம், பாஞ்சாலி சபதம், நாட்டுக் கூத்து போன்றவற்றை மேடையிட்டு வியப்பிலாழ்த்தியமையைக் குறிப்பிடலாம்.

கல்லூரியின் மன்றங்கள் பல கலை நிகழ்வுகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்து மாமன்றம் நவராத்திரி விழாவையும், கிறிஸ்தவ மன்றம் ஒளி விழாவையும் நடாத்தி வருகின்றமை சிறப்புக்குரியதாகும். 98ம் ஆண்டு ஒளி விழாவில் "பாடுகளின் பாதை" என்ற நாடகம் மேடையிடப்பட்டமை சிறப்புக்குரியதாகும். க.பொ.த. உயர்தர மாணவர் மன்றம் வருடாவருடம் "அரங்கம்" சஞ்சிகையை வெளியிட்டு வருதல் குறிப்பிடத்தக்கது. இன்னும் கணித விஞ்ஞானக் கழகம், சாரணீய அமைப்பு போன்றனவும் பல நிகழ்வுகளை நடாத்துகிறது.

இவ்வாறு உயிர் ஊசலாடிய நிலையில் இருந்த கல்லூரி ஒன்று இன்று புதுப் பொலிவுடன் விழாக்காண்கிறது. கல்லூரியின் அலுவலகக் கட்டிடத்தில் தெருவை நோக்கிய வடக்குப் பகுதியில் தற்போதைய அதிபர் பொறித்த "என்னால் பாடசாலை உயரவேண்டும். பாடசாலையால் நான் உயர வேண்டும்" என்ற பொருள் பொதிந்த ஆங்கில வாசகம் அவ்வீதியால் போய்வரும் வேறு பாடசாலை மாணவர்களுக்கும் மந்திரமாக அமைகிறது. இறுதியாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி இன்று ஒரு தனி மனிதனின் சரித்திரமாக மாறிவருகின்றமையையும் குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

"ஏழிசை போலவும் இன்றமிழ் போலவும்
இசை பல திசை தொறும் இசைவுற
வாழி வாழிய வாழியவே
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
வாழிய வாழிய வாழியவே"

விழுப்பத்தைத் தருகின்ற ஒழுக்கத்தை விருத்தி செய்யுங் கல்வியே கல்வி. ஏனைய கல்வி கல்வியெனப்படமாட்டாது. ஒழுக்கம் நூற்கல்வியால் மாத்திரம் எய்தப்படுவதொன்றல்ல. நல்லாசிரியரும் நன்மாணாக்கரும் ஒன்றுசேர்ந்து உடனுறையுங் குருகுல வாசங்களில் நித்திய கர்மானுஷ்டானம் பிரம்மச்சரியம் முதலிய ஏற்பாடுகளினால் நல்லொழுக்கம் வளர்ச்சியெய்துகின்றது அத்தகைய குருகுலவாசங்களே உண்மைக் கல்வி நிலையங்களாகக் கருதப்படத்தக்கன.

— சுவாமி விபுலானந்தர்

அறிவுப்பசி தூண்டிய உடுப்பிட்டி அ.மி. கல்லூரி

சதானந்தன் சொலமன்

(பழைய மாணவன்)

1974 ஆம் ஆண்டு தரம் 7 'A' யில் நுழையும் போது ஒருவித தயக்கம், ஏக்கம், பதகளிப்பு. ஏனெனில் கொழும்பிலிருந்து வந்து ஓர் புதிய பாடசாலையில், புதிய வகுப்பில் சேர்ந்து கொள்வதால் "நண்பர்" என எவருமில்லை. "தெரிந்தவர்கள்," "அறிமுகமானவர்கள்" என எவரும் எனது வகுப்பில் இல்லை. இது தவிர கொழும்புத் தமிழ் என்று சொல்லப்படும் "கொச்சைத்" தமிழால் "நல்லதமிழ்" என்று புகழப்படும் யாழ்ப்பாணத் தமிழில் சகமாணவர் வினாவும்போது எவ்வாறு பதிலிறுப்பது? என்ற ஏக்கம் (கொழும்பிலிருந்து எனது தந்தையார் இடமாற்றம் வேண்டிநின்று வந்தமைக்கு ஓர் பிரதான காரணம் இதுவுமாகும்). இவ்வாறான ஏக்கச் சுமைகளோடு வகுப்பறைக்குள் நுழையும் போது முதலாவது பாடமே எனது மண்டைக்குள் ஏறாத, நான்வெறுத்து ஒதுக்கும் கணிதபாடம். ஏனடா இங்கு வந்தோம்! என்று ஏங்கி நிற்கும்போது கணிதபாட ஆசிரியையாகிய மறைந்த திருமதி. கணபதிப்பிள்ளை என்று சக ஆசிரியர்களால் அழைக்கப்படும், செல்லமாக நாம் "ஆச்சி ரீச்சர்" என்றழைக்கும் ஆசிரியரின் கனிவான பேச்சும், அன்பு கலந்த கண்டிப்பும் என்னை அதிகம் கவர்ந்தது. பாடவேளை முடிந்தவுடன் சகமாணவர்கள் மிக ஆவலுடன் வந்து என்னைப் பேட்டி கண்டனர். நாட்கள் செல்லச்செல்ல எனது வகுப்பு, எனது பாடசாலை என்ற உணர்வு என்னுள்ளத்தே ஊன்றி வளர்ந்து சென்றது. இவ்வகுப்பிலே இடம்பெற்ற ஓர் சம்பவம் இன்றும் எனது உள்ளத்தே மிகப் பசுமையான நினைவாக உள்ளது. ஆம் எனது மிக நெருங்கிய நண்பன். அவன் தன்னை முன்னிலைப்பன்மையில் அழைக்காது, முன்னிலை ஒருமையில் அழைக்குமாறு வலியுறுத்தினான். நான் அவனை வினாவும் போது "நீர் நாளைக்கு வருவீரா?" அல்லது நீர் இதைச் செய்கிறீரா? என்று கேட்பது வழக்கம். ஆனால் இவ்வாறு "நீர்" என அழைக்காது "நீ" என்றே தன்னை அழைக்க வேண்டும் என வலியுறுத்தினான். நான் அவ்வாறு அழைக்காத காரணத்தால் நாமிருவரும் பின் ஒருவரோடொருவர் கதைக்காது கோபம்போட்டுக் கொண்டோம். இக்கோபம் க.பொ.த. (சாதாரண) தரம் வரை நீண்டு சென்றதையும் பின்னர்தான் இருவரும் கதைக்கத் தொடங்கியதையும் எனது பாடசாலை வாழ்க்கையில் மறக்க முடியாத நினைவாக உள்ளது. ஆம்! இன்று அதனை நினைத்துப் பார்க்கும் போது இன்றும் கூட நாம் ஒருமையில் அழைக்க வேண்டிய ஒன்றை மரியாதையின் நிமித்தமோ அல்லது நாகரீகம் என நினைத்தோ என்னவோ முன்னிலைப்பன்மையை பயன்படுத்தி அழைப்பதை, வேண்டுவதைக் காண்கிறோம். ஆனால் இதில் உண்மையான அன்பு செறிந்தில்லை என்பதனை உணரலாம்.

தரம் 8 இல் படிக்கும்போது ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. எமக்கு ஆங்கில ஆசிரியராக திரு. நீலகண்டன் ஆசிரியர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் மிகவும் நல்லவர். ஆங்கில பாடத்தோடு சேர்ந்து பல அநுபவங்களையும், வாழ்வின் விழுமியங்களையும் எடுத்துரைப்பார். எனினும் அவர் பாடசாலையில் பல

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு சிறப்பிதழ்

பொறுப்புக்களிலும் தன்னை ஈடுபடுத்தி செயற்படுத்திக் கொண்டிருந்தார். சாரணர் துருப்புக்கு பொறுப்பான ஆசிரியராகவும், சமய விழாக்களை ஒழுங்குசெய்து சிறப்பாக நடாத்துபவராகவும், இன்னும் பல பொறுப்புக்களில் தன்னை தாமாகவே ஈடுபடுத்தி செயற்படுவதிலே சிறப்பான செயல்வீரனாக இருந்தார். இதனால் ஆங்கில பாடத்தை எமது வகுப்பிற்கு வந்து கற்பிப்பதில் அவருக்கு சிரமமதிகமிருந்தது. எமது வகுப்பு மாணவர்களில் என்னைத் தவிர பெரும்பான்மையான மாணவர்கள் தரம் 6 இலிருந்து சந்திரா ரீச்சர் என்ற ஆசிரியையிடமிருந்து ஆங்கிலத்தைக் கற்று வந்தவர்கள். சந்திரா ரீச்சர் மிகவும் கண்டிப்புள்ளவர். எனினும் மாணவர்களில் மிகவும் அன்பும், பாசமுமுள்ளவர். அவரது கண்டிப்பும், தண்டனையும் எம்மை நல்வழிப்படுத்துவதற்கே என எம்மில் பலரும் நன்குணர்ந்திருந்தோம். எனவே எமது வகுப்புத் தலைவனினதும் வேறுசில மாணவர்களினதும் ஆலோசனைக்கேற்ப இந்த வகுப்பிலும் (தரம் 8) எமக்கு ஆங்கில ஆசிரியராக சந்திரா ரீச்சரையே நியமிக்குமாறு வகுப்பிலுள்ள மாணவர்கள் யாவரும் கையெழுத்திட்டு ஓர் வேண்டுகோள் அதிபருக்குச் சமாப்பித்திருந்தோம். அடுத்த நாள் வகுப்பிற்கு திரு. நீலகண்டன் ஆசிரியர் அவர்கள் கடுங்கோபத்துடன் வந்திருந்தார். அவரது கோபம், அவரது சிவந்த முகத்தில் பளிச்சிட்டுத் தெரிந்திருந்தது. எனினும் அவர் தன் கோபத்தை எந்தவித அடக்குமுறையுணர்வுடனும் வெளிக்காட்ட வில்லை. பதிலாக "இந்த வகுப்புக்கு இன்றிலிருந்து க.பொ.(சாதாரண) வரை நான் தான் ஆங்கிலம் கற்பிப்பேன்" என்று எமக்கு சூளுரைத்தார். அதன் பிரகாரம் கற்பித்தார். எமது வகுப்பைச் சேர்ந்த மாணவர் அநேகர் ஆங்கிலத்தில் திறமைச் சித்திகளையும், சித்திகளையும் பெற்றோம்.

க.பொ.த. (சாதாரண) வகுப்பில் சமயபாடம் என்றால் எமக்கு அதிக பிரியம். நான் ஓர் கிறீஸ்தவனாக இருந்தாலும் கிறீஸ்தவபாடம் ஒருபாட வேளையாக போடப்பட்டு கற்பிக்கப்படவில்லை. ஏனெனில் நான் ஒருவன் மட்டுமே இவ்வகுப்பில் கிறிஸ்தவனாக இருந்தேன். எனவே இப்பாடவேளையில் நூல் நிலையம் செல்வதற்கு நான் அனுமதிக்கப்பட்டேன். எனினும் நான் நூல் நிலையம் செல்வதில்லை. மாறாக சமயபாட வகுப்பிலேயே இருந்துவிடுவேன். காரணம் இச்சமய பாட ஆசிரியரே. ஆம்! பண்டிதர் முத்துவேலு ஆசிரியர் மிகவும் அழகாக சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறுவார். என்னை அவர் வகுப்பிலிருந்து துரத்தியதேயில்லை. என்னையும் தனது வகுப்பில் ஒருவனாக அனுமதித்திருந்தார். அவர் வகுப்பறைக்குள் நுழைந்தவுடனேயே, வணக்கம் சொல்வதற்கு முன்பே மாணவர்கள் எல்லோரும் "சேர் கதை சொல்லுங்கோ சேர் கதை சொல்லுங்கோ" என்று கேட்கத் தொடங்கிவிடுவோம். சிலவேளைகளில் அவருக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வரும். எனினும் சிறிது நேரத்தில் தணிந்துவிடும். சமய பாடத்தை கதைவகுப்பாகவே கொண்டு செல்வார். சமய உண்மைகளை கதை வடிவமாக அவர் எடுத்துக் கூறும் பாங்கு தனியழகு. சமயப் பொறை குறித்து அதிகமாகப் பேசப்படும் இந்நாட்களில் இவ்வாறான ஆசிரியர்களிடமிருந்து பெற்ற கருத்துக்கள் பிற சமயத்து உண்மைகளையும் அறிந்து கொள்ள அதிகம் உதவியது.

சுகாதாரமும், உடற்கல்வியும் என்பது க.பொ.த. (சாதாரண) தரத்தில் எமக்கு ஒரு பாடமாக இருந்தது. இதனை திரு. முத்துச்சாமி ஆசிரியர் கற்பித்தார். அவர் ஒரு சிறந்த விளையாட்டுத் தொடக்குனர் (Starter). எமது பாடசாலையிலும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக இருந்தார். உடற் கல்வியைக் கற்பிப்பதற்காக எம்மை சன்னாவளவிற்கு அழைத்துச் செல்வார். போகும் வழியிலேயே நவிண்டில், கல்லுவம் பகுதி மாணவர்கள் இடையே நழுவிவிடுவர். சில வேளைகளிலே அவர் மிதிவண்டியில் வலம் வந்து மாணவர்களை மடக்கிவிடுவார். அவரது கையில் அகப்பட்டால் அதோகதிதான். சன்னா வளவில் முதலில் சென்றவுடன் எமக்கு அணிநடை பயிற்றுவிக்கப்படும். அணிநடையில் கால் மாறினால் சலார் என ஓர் பிரம்படி விழும். இவ் ஆசிரியரின் கண்டிப்பு வாழ்வில் எமக்கு ஓர் ஒழுங்கு முறையை, ஒழுக்கத்தை கற்றுத் தந்தது.

விஞ்ஞானபாடம் என்றால் அமைதி நிலவும். வகுப்பறைக்குள் ஆசிரியர் வருவதற்கு முன்பே வகுப்பறை அமைதியாகிவிடும். நவரத்தினம் ஆசிரியருடைய விஞ்ஞானபாட வகுப்பு என்றொருநாளாவது நடைபெறாதுவிட்டமை ஞாபகத்திலில்லை. (ஹர்த்தால் நாட்களைத்தவிர) இப்பாடவேளையில் மாணவர் எவருமே வகுப்பில் இல்லாதிருக்க மாட்டார்கள். அப்போதெல்லாம் (1977 - 78) ஹர்த்தால், பகிஷ்கரிப்பு என்பன அடிக்கடி நடைபெறும். இவற்றால் இல்லாதுபோன வகுப்புக்களையும் நவரத்தினம் ஆசிரியர் பிரத்தியேக வகுப்புக்களை வைத்து சீர்செய்து விடுவார். இப்பிரத்தியேக வகுப்புக்கள் வார இறுதிநாட்களில் நடைபெற்றாலும் மாணவர் வரவு ஒழுங்காகவே இருக்கும். பாடசாலையை விட்டு கல்விநிலையங்களுக்குச் செல்வதையோ அல்லது தனது பிரத்தியேக வகுப்பை கட்பண்ணி வேறு வகுப்புகளுக்குச் செல்வதையோ அவர் விரும்புவதில்லை, அதனை அனுமதிப்பதுமில்லை. வகுப்பிற்கு சமுகமளிக்க முடியாத மாணவர் அதற்குரிய காரணத்தை ஏற்கனவே அவருக்குத் தெரியப்படுத்திவிடுவர் அல்லது அடுத்த நாள் அவரது வகுப்பு நடைபெறுவதற்கு முன் அதை அவருக்கு அறிவித்து விடுவர்.

க.பொ.த. (உயர்தர) வகுப்பில் கலைப்பிரிவில் முதலில் இருவர் சேர்ந்தோம். பின் மூவராகி, நால்வராகி, ஐவராகினோம். எனவே எம்மை பஞ்சபாண்டவர் என் ஆசிரியரும் ஏனைய பிரிவு மாணவரும் அழைப்பர். இவ்வகுப்பில் எமது வகுப்பாசிரியராகிய காலஞ்சென்ற உயர் திரு A. K. குணசிங்கராஜா ஆசிரியர் நியமிக்கப்பட்டார். அவர்தான் எமது பொருளாதார ஆசிரியராகவும், மாணவ தலைவர்களின் ஆலோசகராகவும் இருந்தார். எமது வகுப்பைச் சேர்ந்த மூவர் மாணவர் தலைவர்களாக இருந்தோம். குணசிங்கராஜா ஆசிரியரின் சிம்மக்குரல் இன்றும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. விடயங்களைக் கூறுகையில் அவரது வாயின் அசைவு, ஒலிப்பு முறை, சொற்களை எதுகை மோனையில் அடுக்கிச் செல்லும் பாங்கு என்பன எம்மைக் கவர்ந்தன. பாடசாலையைவிட்டு நீங்கிய பின் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமா கல்வியையும் அவரிடத்தில் கற்கும் பேறு பெற்றேன். எனது பிரிவினர்தான் இக்கல்வியை அவரிடத்தில் கற்றுக்கொண்ட இறுதிமாணவர்களாவர். பாடசாலையிலும், பல்கலைக்கழகத்திலும் அவரது வழிப்படுத்தல் "மனிதன் மனிதனாக" வாழ்வதற்கு தூண்டியது.

சின்னத்தம்பி மாஸ்டர் அரசறிவியலைக் கற்பித்தார். அவரை நாம் P. S. மாஸ்டர் என்றழைப்போம். ஆங்கிலத்தில் அதிக புலமை வாய்ந்தவர். எமது வகுப்பறைக்கு வரும்போது மூன்று அல்லது நான்கு ஆங்கிலப் புத்தகங்களை கொண்டுவருவார். மேசையின் மீது அப்புத்தகங்கள் அனைத்தையும் விரித்துவைத்து அவ்ஆங்கிலப் புத்தகங்களில் உள்ளவற்றை வாசித்து ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் அரசறிவியல் குறிப்புக்களை எமக்கு தமிழில் தருவார். இது அவரது ஆங்கில, தமிழ் அறிவையும், இன்னவிடயம் இந்தப் புத்தகத்தில் இத்தனையாம் பக்கத்திலுள்ளது என்று ஏற்கனவே அவர் பாட ஆயத்தம் செய்து வந்துள்ள தன்மையையும் எமக்குணர்த்தியது. அதுமட்டுமன்றி மாணவர்களாகிய எமக்கு நாம் வாசித்து அறியவில்லையாயினும் இந்தப் புத்தகம் இந்த நிறம் என்று கூறக்கூடிய வகையில்தானும் எமக்கு அறிவைப் புகட்டியது. அரசறிவியல் பாடத்தை மட்டுமன்றி நடைமுறை அரசியல் விடயங்களையும் எடுத்துக்கூறி எமக்கு அரசியலறிவில் ஆர்வத்தைத் தூண்டினார்.

தமிழ்ப் பாட ஆசிரியரை நாம் தாயாகப் போற்றுவோம். ஆம்! திருமதி. தில்லையம்பலம் ஆசிரியையின் கனிவான பேச்சும், அன்பான அறிவுரைகளும், தன்னுடைய பிள்ளைகள்போல் எமது தவறுகளை பொறுத்தருளும் பண்பும், எம்மை அழைத்து உபசரிக்கும் பாங்கும், தனது நேரத்தை எமது நேரத்திற்கு இசைவாக்கி எமக்கு அறிவூட்டிய சந்தர்ப்பங்களும் என்றுமே மறக்க முடியாதவை. தம்முடைய வாழ்வின் அநுபவங்களை எமது வாழ்வை உயிர்ப்பூட்டுவதற்காக அவர் புரிந்து கொண்ட தனிப்பட்ட ஒவ்வொருவர் மீதும் அவர்கொண்ட கரிசனை, மாணவர்களாகிய எமது பக்கம் நின்று பிற ஆசிரியர்களோடு - ஏன் தனது கணவனோடுகூட (தில்லையம்பலம் மாஸ்ரர்) முரண்பட்ட சந்தர்ப்பங்கள் என்பவை என்றுமே நினைவில் நிற்பவை. நூல் நிலையம் அழைத்துச் சென்று அறிவைத் தூண்டிய முறை, கட்டுரை வகுப்புக்களை நடாத்திய முறை என்பன அறிவுப் பசியைத் தூண்டின.

உயர்தர வகுப்பில் கல்விகற்கும் காலத்தில் அதிபராக இருந்த சச்சிதானந்தம் அதிபரவர்கள் என்றுமே மறக்க முடியாதவர்கள். உயர்தர வகுப்பில் எப்பாடங்களைத் தெரிவு செய்து கற்பது என திண்டாடியபோது சிறிதுகாலம் சரித்திர பாடத்தை கற்பித்து தனக்கு ஒழுங்காக பாடவேளையை நடாத்த முடியாது என்ற காரணத்தால் அளவையியல் பாடத்தை எடுக்குமாறு தூண்டி, கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத சந்தர்ப்பத்திலும் நாம் விரும்பும் ஆசிரியர் ஒருவரை எமக்கு ஏற்பாடு செய்து எம்மைக் கற்பதற்கு தூண்டினார். அதுமட்டுமன்றி பொருளாதார பாடம் ஆசிரியரில்லாது தடைப்பட போகின்றது என ஐயுற்ற வேளையில் உடனடியாகவே பொருளாதார பாடத்திற்கு உரிய ஆசிரியரை நியமித்து மாணவர்களாகிய நாம் எவ்வித சிரமமுன்றி கற்றலை மேற்கொள்ள தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டார். உயர்தர மாணவர் மன்றத்தை சிறப்பான முறையில் செயற்பட உதவினார். இம் மன்றத்திற்கூடாக பெற்ற அனுபவங்கள் மிக அதிகம், அதிகம்.

இன்றைய அதிபர் உயர்திரு. க. நடராஜா அதிபரவர்கள் சிறந்த தமிழ் ஆசிரியர். அவரிடம் கல்விகற்கும் வாய்ப்புப் பெற்றேன். தமிழ் இலக்கணம் என்றால் கசப்பாக இருக்கும் என்ற எண்ணத்தை அடியோடு அசைத்தவர். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப்போல் கடினமான இலக்கண விதிகளையும் மாணவர்களாகிய நாம் இலகுவாக புரிந்து கொள்ளும் வண்ணமாக எமக்குப் புகட்டினார். இதனால் விடிகாலையில் இவர் வைக்கும் வகுப்புக்களையும் கூட நாம் தவறவிடுவதில்லை. கற்பித்தல் உத்திகளை மிகச் சிறப்பாக அறிந்திருக்கும் அவர்தம் அறிவு கல்வியியலில் அதிபரவர்கள் பெற்றிருக்கும் உயர் புலமையும் இவ்வாறு அழகாக மாணவர் மனதில் பதியவைப்பதற்குக் காரணம் எனலாம்.

கல்லூரி வாழ்க்கையில் அறிவுப் பசி தூண்டிய உடுப்பிட்டி அ. மி. கல்லூரி நாட்டின் சூழ்நிலையில் அலங்கோலப்படுத்தப்பட்டாலும் தொடர்ந்து அறிவுப் பசியைத் தூண்டிக் கொண்டிருப்பதற்காக இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

இடுக்கண் வரத் தகர்ந்தவள்
மிடுக்குடன் மீள நிமிர்ந்தனள்!

உடுப்பிட்டி வள மண்ணில் உயர்ந் தெழுந்த எழில் மாடம்
எடுப்புடன் மிச னறியார் எமக் களித்த கலைக் கூடம்
இடுக்கண் அது வரவே இடிந்து வாணி உறை பீடம்
மிடுக்குடன் நாம் உழைக்க மீள அமைந்த திரு மாடம்

பட்டணம் சென் றெம் பழையவர் படிப்பினைத் தொடர்ந்தார்
பட்டிடாப் பாடுகள் பட்டே பல காத தூரங்கள் அவர் நடந்தார்
பட்டன்ன பாடசாலை பக்கலில் அமைந்திடப் பலரும் உவந்தார்
பட்டங்கள் பதவிகள் பெற அ. மி. பள்ளி படிக்கல்லா யமைந்தாள்.

பாமரர் பிள்ளைகள் கூட படிப்பதன் நல் வாசனை அறிந்தார்
தேமதுரத் தமிழ் தன்னை தெரிந்திட வழி வகை புரிந்தாள்
மாமதுரை வளர் தமிழ் மேன்மைகளை மகவுகள் தெளிந்தார்
தாமறியா ஆங்கிலத்தை தம் மகவறியத் தாதையர் குளிர்ந்தார்.

வேட்டிச் சாயம் வெளுக்குமென வெளுக்கா விவசாயம் புரிந்தோர்
பாட்டி பாட்டன் வழியினில் பரம்பரைத் தொழில்கள் தொடர்ந்தோர்
ஏட்டிக்கு போட்டி மறந்தார் இணைந்தவர் பிள்ளைகள் பயின்றார்
தோட்டி பிள்ளையோடு தொழ வேதியர் பிள்ளைகள் இணைந்தார்!

வல்லை கடந்து வந்தவ ரெம் 'அ.மி.' ஆல் உயர்நிலை அடைந்தார்
வல்வையில் பிறந்த சிலரும் வந்து இவளே புகலென அணைந்தார்
வல்லவர் அமர் அதிபர் தவிசில் வல்வையள் பிள்ளை அமர்ந்தார்
தொல்லை தீர் கந்தனுறை தொண்டமானாறு இவளால் உயர்ந்தாள்.

அக்கம் உளார் பெறு மக்களை எலாம் அர வணைத்தாள் அன்னை
திக்கம் உள்ள திக்கு உள்ளாரும் தேடி வர வைத்தாள் தன்னை
தக்க கல்விக் கூடங்கள் சில தன் அகத்து இருந்தும் என்னை?
பக்கம் உள பரு நகராரும் கல்வி பருக வைத்த கலைத் தென்னை!

கரவெட்டி கரணவாயர் அந்நாளில் கடுகதி 'பஸ்' களில் வந்தார்
இளவட்டர் இணைந்து இளைத்து களைத்து ஈருளி 'பைக்' இல் வந்தார்
வரவழைத்த அன்னை அவர்க்கு வாரி வாரி கல்வி வரம் தந்தாள்
உரமான அறிவுக்கு எம் உடு. அ. மி. திறமான பாலமாய் திகழ்ந்தாள்!


ஒரு பெரிய மனிதர் 'அ.மி.' ஆல் 'மா மனிதர்' எனும் நிலைக் குயர்ந்தார்
வெறு கரிய மண்ணை ஆய்ந்து ஒரு பெரு விஞ்ஞானியாய் திகழ்ந்தார்
பெறு அரிய மண்ணாள் இப்பிள்ளையை பெற்றதனால் பெரி துவந்தாள்
துரை பிந்நாள் முந்நாள் மாணவத் தலைவராயும் மா பணிகள் புரிந்தார்.

மருத்துவம் பயின்ற எம் பழைய மாணவர் பலர் மண் மிசை இருக்கிறார்
வருத்திடும் நோய்களை வருத்தி வதைக்கிறார், வாதைகள் குறைக்கிறார்
அருத்தியல் பொறியியல் பயின்ற பிள்ளைகளால் எம் பள்ளி சிறக்கிறாள்
கருத்துடன் பயின்றவர் விருப்புடன் 'அ. மி.' இல் கற்பிக்க கள்ளி சிரிக்கிறாள்

திருத்தமாய்ப் பணி புரி பல் மருத்துவரால் பல் தெரியச் சிரிக்கிறார்
தரித்திரம் போக்கும் தர்ம வானாயும் பள்ளிப் பழையவர் இருக்கிறார்
சரித்திரம் படைத்த சாதனையாளரால் உருக் கொடுத்தவள் உவக்கிறாள்
மரித்திடாப் புகழொடு கலை மாதிவள் ஈழ மண்ணில் நிலைக்கிறாள்!

கனடாவில் கால் பதித்த பழையவர் சிலர் மதிக்கப் பாங்கொடு வாழ்கிறார்
கணனிப் பள்ளி அமைத்து பயனுற உன்னோர் மைந்தர் ஈண்டு வாழ்கிறார்
கனமான தொழில் பண்ணி கலைவாழப் பண்ணி இன்னோர் அன்பர் வாழ்கிறார்
மனதார வாழ்த்த புனர்வாழ்வு பெற்று பொலிவோடு எம் கலைமாது வாழ்கிறாள்!

வானவில் விழா என்னில் கனடாவில் வந்து மக்கள் அலை மோதும்
காணவில்லை என்னில் பெரும் கவலை அவர் உளம் தனில் மேவும்
பூணுமணி கலன் போல் அன்னைக்கு மிகு பொலிவு அதனால் சேரும்
வானமதில் வரு மதி போல் வையமதில் 'அ.மி' யும் நிலையாய் வாழும்!



சட்டத்தரணி,
கனக மனோகரன் (சத்தியப் பிரமாண ஆணையாளர்)
துணைத் தலைவர்,
உடு. அ. மி. கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா)

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன்
கல்லூரியின்


LIGHT DISPELS DARKNESS

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்


உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் கணிதமும்

இக்கல்லூரியில் 1940 களின் பிற்பகுதியிலிருந்து 1958 வரை கணித பாடத்தை இடைநிலை வகுப்புகளில் கற்பிப்பதற்கு பல ஆசியர்கள் ஊக்கமுடன் ஈடுபட்டு கணிதபாடத்தின் தரத்தை உயர்த்தினார்கள். அக்கால கட்டங்களில் வடமராட்சியில் H.S.C. வகுப்பு காட்லிக் கல்லூரியில் மட்டுமே இருந்தது. எனவே S.S.C. வகுப்பு வரை (பின் G.C.E. O/L) இங்கு கற்பித்த ஆசிரியர்கள், மாணவர்கள் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு சிரத்தையுடன் உழைத்தார்கள். அப்போது எண் கணிதம் ஒரு பாடமாகவும், தூய கணிதம் இன்னொரு பாடமாகவும் கற்பிக்கப்பட்டது. உயர் வகுப்புகளில் (S.S.C. வகுப்புகள்) திரு. S. S. செல்லத்துரை, திரு. S. R. நவரத்தினம் (றொபெட் மாஸ்ரர் என எல்லோராலும் விருப்பமுடன் அழைக்கப்படுவார்) திரு. E. பஞ்சநாதன் போன்றவர்கள் தூய கணிதம், உயர் கணிதம், பிரயோக கணிதம் என மூன்று பிரிவுகளான S. S. C. வகுப்புகளுக்குக் கற்பித்து வந்தனர். வடமராட்சியில் இங்கு மட்டும் தான் S.S.C. வகுப்பில் உயர்கணிதமும், பிரயோக கணிதமும் கற்பிக்கப்பட்டது. காட்லிக் கல்லூரியில் கூட S. S. C. வகுப்பில் அவை கற்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் இப்பாடசாலையில் S.S.C. சித்தியடைந்து பின் H.S.C. படிப்பதற்காக மறு பாடசாலைகளுக்குச் சென்றவர்கள் கணிதத்தில் சிறப்பாகச் செய்வதற்கு அவ்வடிப்படை உதவியாக இருந்தது. அவ்வாறு இங்கு கற்று பின் மறுபாடசாலைகளுக்குச் சென்று சிறந்து விளங்கியவர்களுள், பேராசிரியர் அ. துரைராசா, திருவாளர் E. V. செல்வரத்தினம், திரு. R. பொன்னம்பலம், திரு. S. தில்லையம்பலம் (வல்வெட்டி), திரு. K. சண்முகசுந்தரம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் 6ம் வகுப்புத் தொடக்கம் 8ம் வகுப்பு (J.S.C.) வரை அக்கால கட்டத்தில் கணிதம் கற்பித்த ஆசிரியர்கள் மிக அக்கறையோடு மாணவர்களை தயார் செய்தார்கள், அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் திருமதி நவரட்ணம்மா, திரு. E. பஞ்சநாதன், திரு. V. S. கொலின் இரத்தினசிங்கம், போன்றோர் கல்லூரியின் கணித தரத்தை உயர்த்துவதற்கு உழைத்தனர். 1940 இன் முற்பகுதிகளில் மலையாளத்திலிருந்து வந்து (அமெரிக்கன் மிஷனரி மூலம்) கற்பித்த ஆசிரியர்களும்



திரு. S. தில்லையம்பலம்
முன்னாள் அதிபர்,
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்



1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

பலர் இருந்ததாக அறிகின்றோம். இவ்வாறாகச் சிறந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை அரவணைத்து ஊக்கப்படுத்தி கல்லூரியையும் வளர்த்தெடுத்த பெருமை அக்காலத்தில் அதிபராகவிருந்த K. T. ஜோன் அவர்களையே சாரும். அவரது அர்ப்பணிப்பு நிறைந்த சேவை வார்த்தைகளால் அடக்க முடியாது. பின் 1958ல் H.S.C. வகுப்புகள் தொடங்கப்பட்டன. எனினும் 1960 களிலேயே அதிபர் S. S. செல்லத்துரை அவர்களின் வழிநடத்தலில் அவ்வகுப்பில் கணிதபாடத்துறை மிக உன்னத நிலையை அடைந்தது. அப்போது கணித பாடங்களை (தூய, பிரயோக) H. S. C. வகுப்பில் கற்பித்த ஆசிரியர்களில் திரு. S. தில்லையம்பலம் (வல்வெட்டி), திருவாளர். ரிபூஷியஸ், திரு. ஏப்பிரகாம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். அப்போது பௌதிகம் திரு. R. பொன்னம்பலம் அவர்களாலும், இரசாயனம் திரு. S. S. செல்லத்துரை பின் திரு. K. சண்முக சுந்தரம் அவர்களாலும் கற்பிக்கப்பட்டன. இதன் காரணமாக (சிறந்த ஆசிரியக் கூட்டு) G.C.E. A/L பரீட்சையில் கணித விஞ்ஞானத் துறையில் மிகச் சிறந்த பெறுபேறுகள் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதன்பின் அதிபர்கள் பலர் வந்து போய்க்கொண்டிருந்ததாலும் பாடசாலை நிர்வாகத்தில் தளர்ச்சி ஏற்பட்டது. எனினும் கணிதத்துறையை ஓரளவுக்கேனும் உயர்ந்த நிலையில் வைத்திருப்பதற்கு திருவாளர் S. செல்வராசா (தற்போதைய யா/ விக்கினேஸ்வரா கல்லூரி அதிபர்) திருவாளர் K. கணேசலிங்கம் போன்றோர் மிகச் சிறப்பாக கற்பித்து நல்ல பெறுபேறுகளை ஈட்டச் செய்தனர். தொடர்ந்தும் கற்பிக்கும் தற்போதைய ஆசிரியர்களால் அப்பாரம்பரியம் ஓரளவு பேணப்படுகின்றது. மேலும் மேலும் இத்துறை வளர்ந்து 60 களில் இருந்த நிலையை அடைவதற்கு அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் ஊக்கமுடன் உழைக்க ஆண்டவன் அருள்புரிவாராக!

இல்லை என்று ஒருபோதும் சொல்லாதே. 'என்னால் இயலாது' என்று ஒருநாளும் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது காலமும் இடமும் கூட உனக்கு ஒரு பொருட்டல்ல. நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன். சர்வ வல்லமை படைத்தவன் நீ.

– சுவாமி விவேகானந்தர்

Teaching of English at Uduppiddy A. M. College


It is gratifying to wallow in nostalgia vis-a-vis teaching of English at Uduppiddy A.M.C. on the eve of publishing a magazine (memento) fitting the occasion of commemorating a century and a half of its founding. Indisputably, it is one of the oldest educational institutions in the Isle of Indian Ocean, which once prided itself for ethnic harmony, economic boom, multicultural flavour and English of emulation – spoken and written. However, it has pathetically sullied its image today – worn and torn for reasons which need no elaboration. Yet, the institution of Uduppidy A.M.C., though for a short spell of time fated to shambles and rubble, has raised its head again free from sandy dunes to stand high and erect, for no person, animal or thing could lie dormant long when vibrant and determined leadership is afforded; not to speak of prominence and promising situations reached out to English learning and teaching since the inception of the institution even in the worst of times which confused and confounded everything.

It is no exaggeration that the great minds of the environment would agree to conclude that they derive infinite pleasure, if one metaphorically speaks, that the classrooms of Uduppiddy American Mission College abounds with famous voices of great teachers whose memories are still spoken in endearing terms inundated with anecdotes. Late Mr. K.T. John, a legendary figure, dominating the whole atmosphere of the school – teaching, administration and congenial rapport with the school society, has enlivened the history of the institution enhancing its tone and tenor in scale immeasurable. His amorousness for the school was so unparalled that he braved some fiercest situations to put the school on the swing. His literary taste and depth of acquaintance with Shakespeare's work had been frequently felt as he delved into comparison of characters in drama or fictions. He often reminded Hamlet's famous soliloquy 'do or die' in his bid to initiate students to their tasks and targets. What else could a throng of indebted hearts owe to a great master other than a fitting monument – an eternal one – erected in his name to perpetuate his memory, exuding lustre and brilliance?

Successors of the profession glowed and flowed in their assignments making marks of excellence and erudition. Messrs N.R. Balasingam, S. Soosaipillai, S. Veluppillai and S. Tissaveerasingham paid meticulous attention to grammar and usage; and in equal strength and vigour grilled their charges to spoken language which made many to use the podium



P. SINNATHAMBY (P.S.)
Retired Former Deputy Principal
Uduppiddy A.M.C.



with unusual ease later in their lives. The contributions made towards the promotion of English learning and teaching by Messrs S. S. Nathan, S. Ratnasingam, V.R. Rajaratnam and S. Thambirajah are too innumerable to enumerate and elucidate. They carved their own methodologies and displayed various innovations to induce and enthuse pupils in learning English with added desire.

It would be considered as a tragical omission if no reference is made to teaching of English through science subjects – chemistry and Maths which were handled by veterans who mastered English to an enviable and amiable degree. The writer was told on occasions numerous during lunch chat that the late Mr. S. Selladurai whose name is inextricably linked to the welfare of the school had often wielded the foot-ruler which was more powerful than a magnetized iron-rod to incite and excite students to the process of learning 'chemical' English. Mr. Abraham, a soft-spoken and a stickler of time and event, yet boisterous at injustice, adhered to the holistic principle of the profession, loved teaching more than the treasures of the earth and taught a lot of English through mathematics. The dust of chalk that engulfed his majestic personality as he emerged out of the classroom and the writer's close and intensive exploration of his life – short stints at Uduppiddy A.M.C., and Nelliady M.M.V, yet powerful meeting of the minds, bear witness to this quality of the rare species in assertive terms.

English for globalisation and liberalization – English Every Day spinned to play in the hands of Messrs Stanley Solomon, Emperuman, and Neelakandan who accentuated either in accent or dialect throbbing and propping proper reading and speech. The net result – hard evidences of professionals, administrators and executives enthroned in positions because of the power of language they commanded, who once decorated and adorned the school society as old boys, parents and well-wishers have abruptly caused a vacuum of the intellectually fertile soil in search of placid and safety abodes are not small in number, nay the few who are still clawed to the environment voice high of their envious past under teachers of versatility.

Having had a panoramic view of the teaching of English and the teachers involved in it at different times, it is irretrievably committed to discuss laconically the extraneous or extra-mural paths employed to cause interest in the learning of the language. There is consensus of opinion among linguists, philologists and educationists that learning or teaching a language is a multi-pronged art. English is no exception in an environment of non-speakers of the language. And drama is one of the powerful arts that was given significance in toto at Uduppiddy A.M.C. Drama initiates and motivates character roles to handle unexpected situations, which provide dynamism in spoken language-intricacies of a dialect.

In this context it is obligatory to reminisce the faculty of discretion exercised by the envious lot of teachers of English in selecting the right type of dramas to be staged suiting the level of students and the taste of the society – parents, well-wishers and educationists. Since drama forms an integral part of any fabulous literature, the dilemma of choosing the right type appeasing the highest mental faculty often posed a challenge. Dramas of the highest order always expand the consciousness of the audience – both students and parents. The play must identify itself in imagination with the entire mass of humanity, their joys and sorrows. It must be a total experience of every aspect of human nature in depth. Obsessed with this concept of drama, selections of episodes from Ramayana and famous plays of Shakespeare, to mention a few, were staged, often scripted and directed in unison with English teachers. The sonorous voices of Messrs Jacob and Emperuman added lustre when they compered during interludes.

After meddling with the role of drama in teaching and learning English, a fair reminiscence of the lively part played by oratory involving students would be ravishing, for the teachers who moulded the future speakers were themselves great speakers of English in all its trajectories during their sunny school days and became custodians of coveted prizes for inimitable deliveries – a galaxy of teachers are still remembered with awe and inspiration in this respect. Records of achievements and list of prizes snapped by students at competitions under illuminating direction are myriads in number.

In a laconic end, it could be said that like the "Golden period of the Guptas", the institution enjoyed a star studded pride in multifarious fields and the place of English draws no parallel; and even now it is not a mirage difficult to harness an infinite output with the right input, for the soil is jealously rich as the school is sited in a multi-vocational environment which provides a competitive spirit and thereby a conducive atmosphere for effective learning and teaching of English – a language of opportunity with a global magnetism.

"True peace can exist only on the basis of a process of unification in which each people is able to choose, in freedom and truth, the paths of its own development....."

Pope John Paul II

Thanks To American Missionaries

The American Missionaries came flopping,
Landed in the coastal belt hopping,
Came with the aim of Christianity spreading,
Chose the path of masses educating.

Established at Vaddukkodai their headquarters,
Founded Jaffna College and built quarters,
From there Far and Wide
They traveled through the tide.

Awakening every village to educate,
Building schools for masses to promote,
Preaching's held every nooks and corners,
Masses became educational formers.

Education spread in our peninsula like wild fire,
Every parent send their children without tire,
Educationists flourished here,
High posts were captured there.

Independence came for freedom,
Soon turned to boredom,
Percentage came in nationalism,
Intelligence went to barbarism.

Freedom war began to dawn,
Education institutions were blown down,
But Education is still surviving,
Thanks to the American Missionaries,
The Jaffna man ever grateful will stand.



KANDIAH VALLIPURANATHAN
(Retired Principal, Valvetty Vinayagar Vidyalayam)
(Past Pupil)

Special Souvenir
to commemorate
150 years of

1852 2002

American Mission College
Uduppiddy

The Teachers who taught me and remembered by me at Uduppiddy American Mission College

After completing my Grade 3 in Valvetty American Mission Tamil Mixed School, I was admitted to 1st Year B, at Uduppiddy American Mission School that was about one mile from my home at Valvetty. The school was located at the junction opposite the Girls' Boarding School Uduppiddy. I can vividly remember the following teachers who taught me at Uduppiddy American Mission College from 1940 to 1947 :-

Thirugnanasambandan Master

His home place was Manipay but he was living in a rented house at Uduppiddy. His son Master Thievendran was also in our 1st year B Class. Thirugnanasambandan Master taught us English, English writing and general knowledge. He was an encyclopedia of general knowledge. He always wore cream coloured national and veshdi.

Krishna Master

He lived next to our house at Valvetty and Muthu Acca teacher was his wife. He taught us Tamil. He was always dressed in pure white national and veshidi attired very high and was meticulously clean. When he walks from Valvetty to Uduppiddy school we students cannot keep pace since his speed was very high.

Rajaratnam Master


He is from Udupiddy and taught us English. His explanations of Shakespeare were excellent. He came in national and veshidi. He had a big mustache and his nick name was " Broom".

Singaratnam Master

He is from Uduppidy and was a graduate. He taught us Mathematics. His writing on the blackboard was perfect.

Robert Master

Mr. Arulpiragasam was a very unassuming man, a man of character and virtue, and one who lead a simple life. He was fearful of sin, and had faith in God and in the correctness of moral living. He was an inspiration to others. Throughout his life, he dedicated his skills and attainments to the progress of the community and nation that he served. He was fondly called Arul by his colleagues.


When the P.P.A. was formed in 1949 by the late Mr. K. T. John, Mr. Arulpiragasam was elected as one of the vice presidents of that body, the other being Mr. T. Ramalingam.

Mr. Arulpiragasam married Sathiabaladevi, daughter of Dr. Kandiah also from Uduppiddy. Sathiabaladevi had been one of the earliest teachers at the Ramanathan College Chunnakam. Mr. & Mrs. Arulpiragasam had three sons and four daughters. They instilled in the children that moral and spiritual values are as important as economic and material values. All of them have distinguished themselves here in Sri Lanka and abroad in their chosen fields.

Mr. Arulpiragasam lived a life of purpose and meaning. He died on the 24th June 1988 at the age of 89. He left behind a culture of enduring excellence that persists in his family to this day, long after he is away from the scene.



சமீபகால நிகழ்வுகள்



அரங்கம் சஞ்சிகை வெளியீடு 1996
அதிபர் அனந்தராஜ் உரையாற்றுகிறார்




பரிசளிப்பு விழா - 1999

இ-வ: கணக்காய்வாளர் - திரு. சி. சண்முகம்,
ப.மா. சங்கத் தலைவர்
பேராசிரியர் அ. நவரட்னராசா,
யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை,
அதிபர் திரு. சி. நடராசா,
வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா



பரிசளிப்பு விழாவில் 11-6-99ல் உப-வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மங்கள விளக்கேற்றும் காட்சி



பிரதம விருந்தினர் உரை

சமீபகால நிகழ்வுகள்



செயற்பாட்டறை திறப்பு விழா வைபவம்
இ.வ.: திரு. G. சிவபாலன், பிரதம பொறியியலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா, முன்னாள் அதிபர் திரு. சி. தில்லையம்பலம், அதிபர் திரு. நடராசா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு, வே. செல்வரத்தினம், உப-அதிபர் திரு. S. தங்கவடிவேல்



பேராசிரியர் துரைராசா நினைவு தினம் 11-06-2001
இ-வ: ப.மா.ச. தலைவர் பேராசிரியர் நவரத்தினராசா
நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்திய
பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்
அதிபர் சி. நடராசா உரையாற்றுகிறார்



குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தில்
ஒரு தோற்றம் - 11-6-2000




மாணவர் கரகாட்டம்

சமீபகால நிகழ்வுகள்



சென்ற வருட பரிசளிப்பு விழாவின்போது பிரதம விருந்தினர் அதிபர், ஆசிரியர், மாணவர்களினால் அழைத்து வரப்படுகிறார்



2001ம் ஆண்டு பரிசளிப்பு விழாவின் போது.....



கல்லூரி விளையாட்டுப் போட்டி 28-1-2001 பிரதம விருந்தினர் திரு. T. அருணகிரிராசா A.D.E. (Physical Education)



பழைய மாணவர் சங்கத்தின் (கனடாக்கிளை) போஷகரான, திரு. வசந்தகுமாரின் பாரியார் பரிசளிப்பு வைபவத்தில் பரிசு வழங்கும் காட்சி



ஆரம்பப் பிரிவு விளையாட்டுப் போட்டியில் உடற்பயிற்சி கண்காட்சி




நீர்த்தாங்கியை முன்னாள் அதிபர் திரு. சி. தில்லையம்பலம் திறந்து வைக்கும் காட்சி



மாண்புமிகு கல்வியமைச்சர் சுரிணிமல ராஜபக்ஷ 30-05-02 கல்லூரிக்கு விஜயம் செய்தபோது கல்லூரி அதிபர் தேவைகளை விளக்கிக் காட்டுவதற்காக அழைத்துச் செல்லும் காட்சி




போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் 2000 - 2001



போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் கடமையின் போது



K. T. John Memorial Block built with the assistance of GTZ



Mr. Eberhard Halback *(Team Leader GTZ)* and Mrs. Ponmalar Rajeswaran *(Project Officer GTZ)* being received by Principal by Mr. K. Nadarajah



Customary welcome




Team Leader addresses









LIGHT DISPELS DARKNESS
150th Anniversary
சிறப்புக்
கட்டுரைகள்
Special
Articles
Special Souvenior
1852
2002
Uduppiddy
American
Mission College

D



திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோழப்பேரரசிற் சமயமும் அரசியலும்



பேராசிரியர் சி. பத்மநாதன்
தலைவர்
வரலாற்றுத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

தமிழகத்து அரசியற் சிந்தனைகள் சோழப் பெரு மன்னரின் காலத்திலே, பத்தாம் நூற்றாண்டிற்கும் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், மிக வளர்ச்சி பொருந்திய நிலையில் காணப்பட்டன. சோழர்காலத்து அரசியற் சிந்தனைகள் பெருமளவிற்கு மெய்க்கீர்த்திகளிலே காணப்படுகின்றன. சோழரின் அரசியல் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான சாதனங்கள் என்றவகையில் மெய்க்கீர்த்திகளின் முக்கியத்துவம் நன்குணரப் பட்டிருந்தும் அரசியற் சிந்தனை வரலாற்றைப் பொறுத்த வரையிலே அவற்றின் முக்கியத்துவத்தை சாசனவியலாளரும், வரலாற்றாசிரியர்களும் இலக்கிய விமர்சகர்களும் இதுவரை கவனிக்கவில்லை. சோழராட்சியிலே தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் வளர்ச்சிகள், சமுதாய மாற்றங்கள், பண்பாட்டு வளர்ச்சிகள் ஆகியவற்றின் அடிப்படையிலே மெய்க்கீர்த்திகளிலுள்ள அரசியற் சிந்தனைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

பிரபந்தவகைகளுள் ஒன்றான மெய்க்கீர்த்தி என்பது தமிழிலக்கியப் பரப்பிலே சோழப்பெரு மன்னர்களால் வளர்க்கப்பட்ட இலக்கியப் பிரிவாகும்! சோழ மன்னர்களின் சாதனைகளும் அரசியற் சிந்தனைகளும் இலக்கிய நயம் பொருந்தும் வகையில் அவற்றிலே கூறப்பெற்றுள்ளன. தமிழ் மெய்க்கீர்த்திகளுக்கும் சமஸ்கிருத மொழியிலுள்ள **பிரஸஸ்தி**களுக்கும் சில பொதுப் பண்புகள் காணப்படுகின்றபொழுதிலும் அவற்றிடையே ஒரு பெரும் வேறுபாடு காணப்படும். மன்னனொருவனுடைய சிறப்புக்களை அவனது குலத்து முன்னோர்களின் சிறப்புக்களோடு இணைத்துக் கூறும் பாங்கினைக் கொண்டது **பிரஸஸ்தி**. ஆனால் மெய்க்கீர்த்தி ஆட்சி செலுத்துகின்ற அரசனைப்பற்றி மட்டுமே அமையும்; அவனுடைய முன்னோர்களைப் பற்றிய குறிப்பெதுவும் அதில் வருவதில்லை. சோழப் பெருமன்னர் வெளியிட்ட இரு வேறு மொழிகளிலும் அமைந்த சாசனங்களும் இக்கருத்திற்கு ஆதாரமாயுள்ளன.

சோழப்பெருமன்னர் தங்கள் ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்வதற்கும் அதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் ஏற்றவொரு சாதனமாக மெய்க்கீர்த்தியைப் பயன்படுத்திக் கொண்டார்கள். கோயில்களிலும் பிற விடங்களிலும் எழுதப்பெற்ற பல நூற்றுக் கணக்கான சாசனங்களிலே சேர்த்துக் கொள்ளப்பெற்ற மெய்க்கீர்த்திகள் பிரசார நோக்குடையனவாய் அமைந்தன. சோழரின் மெய்க்கீர்த்தி ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுக்கால வரலாற்றைக் கொண்டது; பதினைந்து சோழ மன்னர்களின் பெயரால் மெய்க்கீர்த்திகள் வெளியிடப்பெற்றுள்ளன. முதலாம்

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

இராசராசனின் ஆட்சிக்காலத்திலே (985 - 1016) சோழரின் சாசன வழக்கிலே தோற்றம்பெற்ற மெய்க்கீர்த்தியின் அமைப்பிலுந் தோற்றத்திலும் பொருள் மரபிலும் காலப்போக்கிற் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

சோழரின் மெய்க்கீர்த்திகளைக் கால அடிப்படையில் வீரராசேந்திரன் காலம் வரையிலுள்ளன என்றும் அதற்குப் பிற்பட்டவை என்றும் இருவகையினவாக வேறுபடுத்திக் கொள்ளலாம். இவையிரண்டிற்கும் அமைப்பிலும் தோற்றத்திலும் பொருளமைதியிலும் அதிக வேற்றுமையுண்டு. வீரராசேந்திரனுடைய காலம் வரையுள்ள மெய்க்கீர்த்திகள் சோழ மன்னர்கள் தம் படைவலியாற் பகையரசுகள் பலவற்றை வென்று நாடுகள் பலவற்றைக் கைப்பற்றிச் சோழப் பேரரசுடன் இணைத்துக்கொண்டவை பற்றியும் வெற்றிகளின் விளைவாகத் தம் பொருள் வளத்தைப் பெருக்கிக்கொண்டமை பற்றியும் இலக்கியச் சுவையுடன் எடுத்துரைக்கின்றன. சோழ மன்னரின் வீரமும் வீரச் செயல்களுமே அவற்றிலே சிறப்பித்துக் கூறப்படுகின்றன. சோழரின் அரசியற் சிந்தனைகளிலே வீரம் சிறப்பிடம் கொண்டிருந்தது. முதலாம் இராசராசனது காலத்திலே உருவாகியதும் தமிழகத்துக்குப் புதுமையாகவிருந்ததுமாகிய சோழப்பேரரசு எழுச்சி கொள்வதற்குச் சோழரின் போராற்றல் பெரிதுங் காரணமாயிருந்தது. இந்திய துணைக் கண்டத்தில் வேறெக்காலத்திலும் வேறெந்தவரசிலும் இடம்பெறாத அளவிற் சோழராட்சியிலேயே தமிழகத்தில் வீர உணர்ச்சி போற்றி வளர்க்கப்பட்டது. அதுவே சோழரின் அரசியற் கோட்பாடுகளுக்கெல்லாம் அடித்தளமாக விளங்கியது. சோழ மன்னர்கள் இணையிலா வீரம் படைத்தவர்கள், தோல்வியை அறியாதவர்கள்; எனவே அவர்களுக்குப் பணிந்து ஆதரவளிப்பது அவசியமானது என்ற கருத்தை வலியுறுத்துமாப்போல் மெய்க்கீர்த்திப் பகுதிகள் சில அமைந்துள்ளன. சோழரின் படைவலியினையும் இணையில்லாத போராற்றலையும் பேரரசவமைப்பிற் காணப்பட்ட அரசர், சிற்றரசர், சாமந்தர், செல்வாக்கும் வளமும் கல்வியறிவும் படைத்த சமுதாயப் பிரிவினர் ஆகியோரின் மத்தியில் வலியுறுத்திக் கொள்வதே அவற்றின் நோக்கமாகும். அதன் மூலமாக அவர்களின் ஆதரவினையும், நம்பிக்கையினையும், கீழ்ப்படிவினையும் பெற்றுக்கொள்ள முடியுமென்று கருதப்பட்டிருத்தல் வேண்டும். முதலாம் இராசராசனின் ஆட்சியிலே தென்னிந்தியாவிலே குறுகிய காலத்தினுட் போர்வலிமையினால் ஏற்படுத்தப்பட்ட சோழரின் மேலாதிக்கத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சமுதாய ஒப்புதலைத் தேடிக் கொள்வதே மெய்க்கீர்த்திகளின் நோக்கமென்று கருதலாம்.

வீரராசேந்திரனது காலத்தில் மெய்க்கீர்த்தியிலே முன்பு காணப்படாத புதிய அம்சங்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. சோழரின் அரசியற் சிந்தனைகளில் ஏற்பட்ட புதிய வளர்ச்சிகளை மெய்க்கீர்த்திகளின் பகுதிகள் பிரதிபலிப்பனவாயுள்ளன. வீரராசேந்திரனுடைய காலத்தில் சமயத்தின் செல்வாக்கு அரசியற் சிந்தனைகளிலே பெருமளவிலே ஏற்படத் தொடங்கியது. அரசனுடைய நிலை, அரசபணிகள் என்பனபற்றிய கருத்துக்கள் மாற்றமடைந்தன. வீரராசேந்திரனும் அவன்பின் ஆட்சி செலுத்திய சோழ மன்னர்களும் திரிபுவனச் சக்கரவர்த்தி என்று மெய்க்கீர்த்திகளிலே குறிப்பிடப் பெற்றுள்ளனர். முடிமன்னனைக் கடவுளின் அவதாரமாகக் கொள்ளும் மரபு வலுப்பெற்றது. அரசின் இலட்சியங்கள் வைதிக மரபிற் கேற்பவும் சமயவடிப்படையிலும் மெய்க்கீர்த்திகளிலே கூறப்பட்டுள்ளன. சோழ மெய்க்கீர்த்தியின் அமைப்பிலும் பொருளமைதியிலும் எற்பட்ட மாற்றங்கள் அரசியற் சிந்தனையிலேற்பட்ட புதிய கருத்துகளைப் பிரதிபலிக்கின்றன. சோழராட்சியிலே தமிழகத்திலேற்பட்ட சமுதாய வளர்ச்சிகளே இம்மாற்றங்களுக்குப் பொறுப்பாகவிருந்தன.

சோழராட்சிக் காலத்திலே தமிழகத்துப் பண்பாட்டு வளர்ச்சியிலும் சமுதாயவமைப்பிலும் பெரு மாற்றங்கள் ஏற்பட்டன. செல்வமும் செல்வாக்கும் கல்வியறிவும் பெற்றிருந்த சமூகப் பிரிவுகளின் மத்தியிற் பொதுத்தன்மை கொண்ட பண்பாட்டு மரபுகள் உறுதியான முறையில் பேணி வளர்க்கப்பட்டன. இந்துமதம் அப்பண்பாட்டு மரபுகளுக்கு அடித்தளமாயிருந்தது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பரப்பிய பக்திநெறியைக் கொண்ட தமிழ் மரபைத் தழுவிய சைவம், வைணவம் ஆகியவற்றிற்கும் வடமொழி மரபினைத் தழுவிய வேதாகம நெறிக்கும் இடையிலேற்பட்ட இணக்கமுஞ் சேர்க்கையுஞ் சோழர்கால சமய பண்பாட்டு வளர்ச்சிகளின் பிரதான இயல்புகளில் ஒன்றாக விளங்கியது. இந்துக் கோயில்களின் அமைப்பும் அவற்றிலுள்ள ஏற்பாடுகளும் இத்தகைய வளர்ச்சிகளை நன்கு பிரதிபலித்தன. தென்னிந்தியக் கோயில் சோழர் காலத்திலே பெருவளர்ச்சி யடைந்தது. ஆலய வியக்கமானது தமிழக மெங்கும் பரவியிருந்தது. ஊர்கள்தோறும் பெருங் கோயில்கள் அமைக்கப்பட்டு அவற்றிற்கு விளை நிலங்களும் சமுதாயப் பிரிவுகள் பலவற்றின் சேவைகளும் அரசர்களாலும் அரசியலதிகாரிகளினாலும் பெருமளவிலே அமைக்கப்பட்டன. சோழ மன்னர்கள் வானளாவிய விமானங்களைக் கொண்ட கோயில்கள் பலவற்றை அமைத்து அவற்றிலே வழிபாடும் அறங்களும் பிற சேவைகளும் ஒழுங்காக நடைபெறுவதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்தியிருந்தார்கள். தென்னிந்தியக் கோயில் உற்பத்தி முறையோடும் சமுதாய அமைப்புடனும் பண்பாட்டு வளர்ச்சிகளோடும் நெருங்கிய தொடர்புடைய சமுதாய நிறுவனமாகக் காட்சியளித்தது.

சமஸ்கிருத மொழியிலுள்ள இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள் ஆகியன கோயில்களிலுள்ள கல்வி நிலையங்களிலும் அரண்மனையிலும் நன்கு படிக்கப்பட்டன. அவற்றின் செல்வாக்குச் சைவர்களதும், வைணவர்களதும் சமய வாழ்க்கையினையும், சமுதாய வாழ்க்கையினையும் பிரதிபலிக்கின்ற துறைகளிலே காணப்பட்டது.

இந்துசமய நிறுவனங்களும் அவற்றைச் சார்ந்த கல்வி முறையும் பண்பாட்டு மரபுகளும் சதுர்வேதி மங்கலத்துப்

பிராமணர், ஊர், நாடு என்ற அமைப்புக்களிலே அதிகாரம் பெற்றிருந்த விவசாயிகள், வணிகர் முதலியோர் பொதுவான பண்புகளினாலும் இலட்சியங்களினாலும் இணைக்கப் பட்டார்கள். மிகப் பெரும்பாலான தமிழர்களின் பொதுத் தன்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஆதாரமாயிருந்த இந்துமத நிறுவனங்களினதும் மரபுகளினதும் ஆதரவாளர்களாகச் சோழர் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டார்கள்.

முடிமன்னர்கள் கடவுளின் அவதாரம்

வேதாகம நெறியும், இதிகாச புராணங்களும், கோயிலமைப்பும் தமிழகமெங்கும் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த காலமாகிய பதினோராம் நூற்றாண்டிலும் அதன் பின்பும் சோழராதிக்கத்திற்குத் தேவையான சமுதாய ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கேற்ற சாதனமாகச் சமயமே பயன்படுத்தப்பட்டது. அதனால் அரசியற் கோட்பாடுகள் சமயத்தை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. மன்னனைத் தெய்வத்தின் நிலைக்கு உயர்த்தும் மரபு சோழர் காலத்தில் ஏற்பட்டது. மன்னனைத் தெய்வமாகக் கொள்ளும் முறை தமிழகத்திற்கு மட்டும் சிறப்பானதன்று. இந்தியாவின் பிறபகுதிகளில் வெவ்வேறு காலகட்டங்களில் மன்னர்களைக் கடவுளோடு சமநிலைப்படுத்தும் வழக்கம் காணப்பட்டது. வேள்விகளை வேட்டு வேதவிதிப்படி சடங்குகளைப் புரிந்து அரச பதவியினைப் பெற்றதும் ஷத்திரியனொருவன் தெய்வாம்சங்களை சாதாரண மனிதர்களுக்கில்லாத ஆற்றலைப் பெற்றுக்கொள்வான் என்ற கருத்து வேத காலத்திலே வலியுறுத்தப் பட்டிருந்தது. இந்திரன், வருணன், அக்கினி, யமன் முதலிய தேவர்களின் அமிசங்களை முடிவேந்தர் கொண்டுள்ளனர் என்ற கருத்தினை மனுதர்ம சாஸ்திரம் முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன. அரசனுடைய ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் அதைச் சமுதாயம் ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதற்குமே தர்மசாஸ்திரங்களின் ஆசிரியர்கள் மன்னரின் தெய்வாம்சம் பற்றிய கோட்பாட்டை முன்வைத்தார்கள்.[2] தேவர்களின் கடமைகளோடு மன்னர்களின் கடமைகளை ஒப்பிட்டுக் காட்டுவதன் மூலமாக மன்னர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்ற கருத்தை வலியுறுத்தினார்களே தவிர அரசரை முழுமுதற் கடவுளாகவோ தர்மத்திற்கும் தண்டனைக்கும் கட்டுப்படாதவர்களாகவோ மனு முதலியோர் கொள்ளவில்லை. ஆயினும் கி. பி. முதலாம் நூற்றாண்டளவிலிருந்து வட இந்தியாவிற் குஷாணரும் வேறு அரசமரபினரும் மகேஸ்வரன், சர்வலோக ஈஸ்வரன் போன்ற முழுமுதற் கடவுளுக்குரிய உள்ளதமான விருதுகளைச் சூடிக் கொண்டார்கள்.[3] வடமேற்கிந்தியாவில் ஏற்பட்ட சைவசமய எழுச்சியும் அரண்மனைக்கும் சைவத்திற்கும் இடையிலேற்பட்ட நெருங்கிய தொடர்புகளும் ஒரு வகையிலே இந்நிலையேற்படுவதற்குக் காரணமாயிருந்தன. சைவர்களின் ஆதரவையுந் தங்கள் ஆதிக்க வளர்ச்சிக்குத் தேடிக் கொள்ளும் நோக்குடன் குஷாண மன்னர்கள் சைவசமயத் தொடர்புள்ள விருதுகளைச் சூடிக்கொண்டனர் என்று கருதலாம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் மன்னர்கள் தெய்வீக ஆற்றல் கொண்டவர்கள் என்ற கருத்தும் மன்னர்களின் கடமைகளைத் தெய்வங்களின் கடமைகளோடு ஒப்பிட்டுக் கூறும் மரபும் சங்ககாலத்திலிருந்து காணப்பட்ட பொழுதும் சோழப் பெருமன்னர் காலத்திலேயே முடிமன்னர்களைக் கடவுளாக வர்ணிக்கும் முறை வெளிப்படையாகவும் எதுவுத தயக்கமின்றியும் மேற்கொள்ளப்பட்டது. இதிகாச புராணங்கள் தமிழகத்திற் பெற்றிருந்த செல்வாக்கும் இந்த மரபு வளர்ச்சி பெறுவதற்குக் காரணமாயிருத்தல் வேண்டும். சோழர் காலத்தில் எழுந்த நூல்களிலெல்லாம் சாலச் சிறந்ததென்று கொள்ளப்படும் கம்பராமாயணத்திலே தசரதராமன் திருமாலின் அவதாரமாகவே படைக்கப்பட்டுள்ளான். பக்திநெறி பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த சோழர் காலத்தில் இராமகாதை தென்னாட்டு வைணவர்களின் வாழ்க்கை நெறியினைச் சித்தரிக்கும் பேரிலக்கியமாகியது.

இதிகாச புராணங்களும் சைவமயக் கருத்துக்களும் அரண்மனையிலும் அரண்மனையோடு நெருங்கிய தொடர்புடைய அதிகாரிகள், அறிஞர்கள் முதலியோரின் மத்தியிலும் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கின் விளைவாகச் சோழர்களின் அரசியற் சிந்தனையில் அவதாரக் கோட்பாட்டின் தாக்கம் ஏற்பட்டது. மன்னனைத் தெய்வத்தின் நிலைக்கு உயர்த்தும் மரபு தோன்றியது. மெய்க்கீர்த்திகளும் வடமொழிப் பிரஸஸ்திகளும் அரசரின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட பிற இலக்கியங்களும் மண்ணாளும் வேந்தரை மறைமொழி கடந்த பரம்பொருளின் நிலவுலகிலமைந்த தோற்றமாக வர்ணித்தன. சோழ மன்னர்கள் அயலிலுள்ள இராச்சியங்கள் பலவற்றைக் கைப்பற்றிப் பேரரசொன்றினை அமைத்துச் சக்கரவர்த்தி என்ற நிலையினை அடைந்த பின்பே முடியரசன் கடவுளின் அவதாரம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அருண்மொழிவர்மனாகிய முதலாம் இராசராசனைக் குறித்து முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளிலே மேல்வருமாறு கூறப்பெற்றுள்ளது :-

> 'மூவுலங்களையுங் காவல்புரிகின்ற கமலக் கண்ணனாகிய திருமால் அருமொழிவர்மனாகி வந்துள்ளான் என்பதை அவனுடைய அங்கலக்ஷணங்களின் மூலமாக அறிந்த மதுராந்தகன் (உத்தம சோழன்) அருமொழிவர்மனுக்கு இளவரசுப்பட்டங் கட்டினான்.'[4]

சோழச்சக்கரவர்த்தி திருமாலின் அவதாரம் என்ற கருத்துக் கலிங்கத்துப்பரணியில் மிகத் தெளிவாக மேல்வருஞ் செய்யுட்களிலே கூறப்பட்டுள்ளது :-

கமலயோனி முதலாகவரு முங்கள் மரபிற்
காவன்மன் னவர்களாகி வருகின்ற முறையால்
அமலவேதமிது காணும் இதிலாரண நிலத்து
அமலனே யபயனாக அறிகென் றருளியே,

இராசபாரம்பரியம், 184

அன்றிலங்கை பொருதழித்த அவனேஅப்
பாரதப்போர் முடித்துப் பின்னை
வென்றிலங்கு கதிராழி விசயதரன்
என உதித்தான் விளம்பக் கேண்மின்.

மேலது, செய்யுள், 211

இருள்முழுது மகற்றும் விதுகுலத்தோன் தேவி
இகல்விளங்கு தபன குலத்துராச ராசன்
அருள்திருவின் திருவயிற்றில் வந்து தோன்றி
ஆலிலையி னவதரித்தா னவனே மீள.

அவதாரம், செய்யுள், 234

முன் ஆலிலையிலே தோன்றியவனும் இராமாவதாரத்தில் இலங்கையிற் போர் புரிந்து இராவணனைத் தோற்கடித்துப் பின் கிருஷ்ணவதாரத்திலே பாரதப்போரினை முடித்தவனுமாகிய திருமால் **அபயன், விசயதரன்** முதலிய விருதுகளைக் கொண்ட குலோத்துங்கனாகத் தந்தை வழியிற் சூரிய குலத்திலே (சோழர் குலம்) தோன்றியவளும் சந்திர குலத்தைச் (கீழைச் சாளுக்கியர்) சேர்ந்த இராசராசனது பட்டத்தரசியுமானவளின் வயிற்றிலே வந்து அவதரித்துள்ளான் என்பதே இம்மூன்று செய்யுட்களினதும் பொருளாகும். குலோத்துங்கன் திருமாலின் அவதாரம் என்ற கருத்து அவனுடைய **திருமன்னி விளங்கு** எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியிலும் மேல்வருமாறு கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அருக்க னுதயத் தாசையி லிருக்குங்
கமல மனைய நிலமக டன்னை
முந்நீர்க் குளித்த வந்நா ளாதிக்
கேழ லாகி யெடுத்த திருமால்
யாதுஞ் சலியா வகையினி தெடுத்துத்
தன்குடை நிழற்கீ ழின்புற விருத்தித்
திகிரியும் புலியுந் திசைதொறும் நடாத்திப்
புகழுந் தருமமும் புவிதொறு நிறுத்தி....[5]

திருவாலங்காட்டுச் செப்பேடுகள் முதலாம் இராசராசன் திருமாலின் அவதாரமாயிருந்தான் என்று குறிப்பிடுகின்ற பொழுதிலும் வீரராசேந்திரன் (1064 - 1069), முதலாங் குலோத்துங்கசோழன் (1070 - 1122) ஆகிய இருவரின் ஆட்சிக் காலத்திலேயே அவதாரக் கோட்பாடு சோழரின் அரசியற் சிந்தனையின் ஒரு பிரதானமான அமிசமாகியது.[6] வீரராசேந்திரனின் ஆட்சிக் காலத்திலிருந்து மன்னர்கள் கடவுளை ஒத்தவர்களென்ற கருத்தினைக் குறிக்கும் விருதுகள் அரசரின் விருதுப்பெயர்களாயின. **இராச நாராயணன், உலகுய்யவந்தான், சகல புவனாஸ்சிரயன், பரமேஸ்வரன்** என்ற விருதுப் பெயர்களை வீர அரசர்கள் சூடிக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது.[7] இவற்றுள் இராச நாராயணன், பரமேஸ்வரன் ஆகியவிரண்டும் அரசனாகவுள்ள நாராயணன் (திருமால்), பரமசிவன் என்ற பொருளைக் குறிக்கும். வீரராசேந்திரன் இராசநாராயணன், பரமேஸ்வரன், சகலபுவனாஸ்சிரயன் என்ற விருதுகளைப் பெற்றிருந்தமையால் அவனுடைய ஆட்சிக்காலம் சோழரின் அரசியற் சிந்தனைகளிலே அவதாரக் கோட்பாடும் பேரரசன் தெய்வம் என்ற கருத்தும் சேர்த்துக் கொள்ளப்பெற்று வற்புறுத்தப்பட்ட கால கட்டமாகும்.

மெய்க்கீர்தியின் அமைப்பிலும் அரசரின் வாழ்க்கையினையுஞ் சாதனைகளையும் அடிப்படையாகக் கொண்ட இலக்கியத்திலும் இக்கருத்துக்களின் செல்வாக்குப் பெருமளவிலே ஏற்பட்டது. தர்மத்தை நிலைநாட்டுவதும் தக்கோரைப் பாதுகாப்பதும் அவதார புருஷர்களின் நோக்கம் என்ற கருத்துப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் விளக்கப்படுகின்றது. **சகலபுவனாஸ்சிரயன்** (எல்லா உலகங்களுக்கும் புகலிடமானவன்), உலகுய்யவந்தான் (உலகினைப் பாதுகாத்தற் பொருட்டு அவதரித்தவன்) என்ற விருதுகள் சோழமன்னரின் அரசியற் சிந்தனையிலேற்பட்ட புதிய வளர்ச்சிகளைப் பிரதிபலிப்பனவாய் அமைந்தன. சயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி உலகுய்தற்பொருட்டுக் குலோத்துங்கன் திருமாலின் அவதாரமாக வந்தவன் என்ற கருத்தினை வலியுறுத்தும் பேரிலக்கியமாய் அமைகின்றது என்று கருதலாம். மூன்றாம் இராசராசனின் மெய்க்கீர்த்தியிலுஞ் சோழமன்னன் திருமாலின் அவதாரமென்ற கருத்து,

'தனித்துலக முழுதாளத் தடங்கரைப்பாற் கடல்பிரிந்த
பனித்துளவ நறுந்தாமப் பரந்தாம னெனவந்து
கடிமுரச மொருமூன்றுங் கடனான்கு மெனமுழங்கப்
படிமுழுது மீருணீங்கப் பருதிதனிக் குலம்விளங்க'

எனும் அடிகளிலே இடம்பெறுகின்றது.[8]

திரிபுவனச் சக்கரவர்த்திகள்

பரமேஸ்வரன் என்ற விருதினைச் சூடிக்கொண்ட வீரராசேந்திரனுடைய காலமுதற் சோழமன்னர் எல்லோரும் அவர்களுடைய சாசனங்களிலே திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர். சோழமன்னர் ஏற்படுத்திய இப்புதிய மரபினைப் பிற்காலப் பாண்டிய மன்னர் பின்பற்றினார்கள். தமிழகத்துக் கலாச்சாரச் செல்வாக்கின் விளைவாக இம்முறை இலங்கையிலாட்சி புரிந்த சிங்கள மன்னர் சிலராலும் பின்பற்றப்பட்டது. திருக்கோயிற் சித்திரவேலாயுத சுவாமி கோயிலிலே வைக்கப்பட்டுள்ள கல்வெட்டிலே விசயபாகு என்ற அரசனொருவன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். ஆறாம் பராக்கிரமவாகுவின் (1415 - 1467) தமிழ்ச் சாசனங்களிலும் திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற சொற்றொடர் வருகின்றது.

திரிபுவனச் சக்கரவர்த்தி என்பது மூவுலகங்களினதும் சக்கரவர்த்தி எனப் பொருள் கொள்ளும். வைதிக இலக்கிய மரபிலே மண்ணுலகம் (பிருதுவிஸ்தான), இடையுலகம் (அந்தரிஷஸ்தான), விண்ணுலகம் (தியூஸ்தான) என்ற மூன்று உலகங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. வேதங்களிலே கூறப்பெற்ற தெய்வங்கள் எல்லாம் இம்மூன்றினுள் ஒன்றற் குரியனவாகவே கொள்ளப்பட்டன. மூவுலகிற்கும்

நாயகன் என்ற முழுமுதற்கடவுளின் நிலையினை வேதப் பாக்களிலே கூறப்பெற்ற இந்திரன், அக்கினி, வருணன் முதலிய தேவர்கள் எவரேனும் அடையவில்லை. மூன்று உலகங்களுக்கும் நாயகன் எனப் பொருள்படும் திரிபுவனச்சக்கரவர்த்தி என்ற சொல்லானது முழுமுதற் கடவுளையே குறிப்பதாய் அமைகின்றது. அது திருமாலுக்கும் மகேஸ்வரனுக்கும் உரிய பண்பினை உணர்த்துவதாகும். மன்னர்கள் திரிபுவனச் சக்கரவர்த்திகளாக வர்ணிக்கப்பெற்றமை அவர்களை இந்து சமய மரபிலே முழுமுதற் கடவுளாகவுள்ள ஈஸ்வரனுடனும் திருமாலுடனும் சமன்படுத்தியமை யினையே குறிக்கும். இராசநாராயணன், பரமேஸ்வரன் என்ற விருதுகளைப் பெற்றிருந்த சோழமன்னர்கள் திரிபுவனச் சக்கரவர்த்திகளாக வர்ணிக்கப்பட்டமையில் வியப்பில்லை. அரசன் திரிபுவனச் சக்கரவர்த்தியென வர்ணிக்கப்பட்டதால் பட்டத்தரசியைத் திரிபுவன முழுதுடையாள் என்று குறிப்பிட வேண்டியதாயிற்று. முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்திலிருந்து வெளியிடப்பெற்ற சோழரின் மெய்க்கீர்த்திகள் எல்லாவற்றிலும் பட்டத்தரசியினைத் திரிபுவன முழுதுடையாள் என்றே குறிப்பிட்டுள்ளனர்.

> 'இக்காலத்திற்குரிய பல கோயில்களும் அவற்றிலுள்ள பிரதானமான விக்கிரகங்களும் அவற்றை அமைத்திருந்த மன்னர்களின் பெயர்களைக் கொண்டு அழைக்கப்பெற்றன. சில தடவைகளில் ஆளுகின்ற மன்னர்களின் பெயர்களால் அழைக்கப்பட்ட விக்கிரகங்களிற்கு நடத்தப்பட்ட வழிபாடானது மன்னர்கள் இறந்தபின்பு அவர்களைத் தெய்வீக நிலைப்படுத்தும் மரபுடன் தொடர்புடையது போலத் தோன்றுகின்றது. அரசர்களதும் இளவரசர்களதும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களின் மேல் பள்ளிப் படைகளான ஆலயங்களை அமைத்தமைபற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் வேறெந்த இந்துமதப் பிரிவினைக் காட்டிலும் சைவத்தோடு கூடியதொடர்புடையவனாகிய தேவராஜ வழிபாட்டு முறையின் எழுச்சிக்கு ஏதுவாயிருந்த கருத்துக்கள் சோழநாட்டிலே நிலவியதற்குச் சான்றாகவுள்ளன. தனது தந்தையின் பள்ளிப் படையாக முதற் பராந்தகன் அமைத்த தொண்டைமானாட்டு ஆதித்தேஸ்வரம், அவ்விதமாகவே ஆற்றூர்ற்றுஞ்சிய அரிஞ்ஜயனை நினைவுகூரும் வண்ணமாக முதலாம் ராஜராஜன் மேல்மாடியில் அமைத்த அரிஞ்சிகை - ஈஸ்வரம், முதலாம் இராஜேந்திரனால் இராமநாதன் கோயிலில் அமைக்கப்பெற்ற பஞ்சவன் மாதேவீஸ்வரம் ஆகியவை இவ்வழக்கத்தின் மிகப் பிரதானமான உதாரணங்களாகும்.
>
> 'இரண்டாம் பராந்தகன் சுந்தர சோழனுடைய படிமமொன்றைத் தஞ்சைக் கோயிலில் அமைப்பித்து அதன் வழிபாட்டிற்கான ஏற்பாடுகளையும் அவன் மகளாகிய குந்தவை செய்திருந்ததாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. குந்தவை தனதும் தனது தாயாரதும் படிமங்களை அக்கோயிலிலே வைப்பித்தாள். ராஜராஜனதும் அவனது பட்டத்தரசியான உலோகமகாதேவியினது படிமங்களும் அங்கிருந்தன. கண்டராதித்தனுடைய சமயப்பற்றுமிக்க ராணி செம்பியன்மகாதேவியின் பெயரால் வழங்கும் ஊரிலுள்ள ஆலயத்திலே வைக்கப்பட்டிருந்த அந்தவரசியின் படிமத்திற்கு ஒழுங்காக வழிபாடு நிகழ்த்தப்பட்டது. ராஜேந்திரன், சோழமகாதேவி ஆகியோரின் பிரதிமைகளென்று கொள்ளப்படும் படிமங்கள் வரையப்பட்ட எழுத்துக்களுடன் தஞ்சாவூரிலும் காளகஸ்தியிலு முள்ள கோயில்களில் இன்றும் காணப்படுகின்றன. அரச குலத்தவர்கள் இறந்தபின்பும் சில சமயங்களில் அவர்களின் வாழ்நாட்களிலும் அவர்களுக்குத் தெய்வத்திற்குரிய மரியாதைகள் செலுத்தப்பட்டன என்பதை நிலைநாட்டுவதற்கு இவை போதிய உதாரணங்களாகும்.[9]

சோழச் சக்கரவர்த்திகள் திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்ற கருத்து முன்வைக்கப்பட்ட பொழுது மெய்க்கீர்த்தியின் அமைப்பும், உருவமும், பொருள் மரபும் மாற்றமடைந்தன. இப்புதிய தத்துவத்தை விளக்குவதற்கான அமிசங்கள் சாசனங்களின் மெய்க்கீர்த்திப் பகுதியிலே சேர்த்துக்கொள்ளப்பட்டன. அதன் பயனாகவே மெய்க்கீர்த்தி உருவிலே பெரிதாக வளருகின்றது. கவிநயமும் கற்பனைத்திறனும் சிறப்பெய்துகின்றன, ஆனால் ஒரு வரலாற்று ஆவணம் என்ற முறையிலே அதன் தரம் வீழ்ச்சியடைகின்றது. முதலாம் இராசராசன் முதல் வீரராசேந்திரன் வரையுள்ள மன்னர்களின் மெய்க்கீர்த்திகளிலே வெறும் புகழுரைகளன்றி மன்னர்களின் உண்மையான சாதனைகளே இலக்கிய நயம் பொருந்திய வகையிலே கூறப்பட்டுள்ளன. குலோத்துங்கனது கால முதற் சோழ மெய்க்கீர்த்திகள் வடமொழி இலக்கிய மரபுகளின் செல்வாக்கினைப் பெரிதும் பெற்றிருப்பதோடு மன்னரைப் பெரிதும் புகழ்ந்துரைக்கின்றன. அவற்றிலே அரசியல் பற்றி இதிகாச புராணங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் கூறப்பட்ட கருத்துக்களைச் சுருக்கமாகவும் கவிநயத்துடனும் கூறுவது ஒரு சம்பிரதாயமாகிவிட்டது.

முதற் குலோத்துங்கன் காலமுதல் வெளிவந்த மெய்க்கீர்த்திகளிலே போர்கள், அவற்றிலே சோழர் ஈட்டிய வெற்றிகள் போன்றன குறிப்பிடப்படுகின்ற பொழுதிலும் அவற்றிலே திரிபுவனச் சக்கரவர்த்தி என்பதற்கு அடிப்படையாக அமைந்த கோட்பாடுகளே அதிமுக்கியத்துவம் பெறுகின்றன. மெய்க்கீர்த்திகளிலே சோழ மன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தியாகியதும் அவற்றிலே வரலாற்றுத் தன்மை கொண்ட சோழச் சக்கரவர்த்தி பெருமளவிற்கு மறைந்து விடுகிறான். அவன் அரண்மனைக் கவிவாணரின் கற்பனையிலுள்ளவனாகவே வருகின்றான். தமிழகத்திலே கோயில்கள் சக்தி வாய்ந்த சமுதாய நிறுவனங்களாக வளர்ச்சி பெற்றிருந்த காலப்பகுதியிலும், அதே வேளையிற் பிராமணரின் அக்கிரகாரங்களான சதுர்வேதி மங்கலங்கள் பல நூற்றுக்கணக்கிலே பெருகிப் பெருவலி பெற்றிருந்த காலகட்டத்திலே அரசுக்கும் அந்நிறுவனங்களுக்கு மிடையிலான தொடர்புகளையும்

அந்நிறுவனங்கள் அரசனுடைய ஆதிக்கத்தின் கீழமைந்தவை என்பதை உணர்த்திக் கொள்வதற்கும் திரிபுவனச் சக்கரவர்த்தி என்பதற்கு அடிப்படை யாகவுள்ள கருத்துக்கள் பயன் பட்டிருத்தல் வேண்டும்.

சோழரின் படைவலி குன்றிச் சோழப் பேரரசின் எல்லைகள் படிப்படியாகச் சுருக்கமடைந்துவிடத்து மெய்க்கீர்த்திகளிலே கற்பனாமிசங்கள் மேலும் மேலும் விரிவடைந்தன. சோழமன்னர்களின் சக்கராதிபத்திய மானது இமயமுதற் சேதுபரியந்தமாகவுள்ள நாவலந்தீவனைத்திலும் அமைந்துள்ளதாகப் பிந்திய சோழர்களின் மெய்க்கீர்த்திகளிலே சொல்லப் படுகின்றது.[10] அத்துடன் அது மூவுலகங்களிலும் செறிந்திருப்பதாகவும் பாரேழிலும் பரந்துள்ளதாகவும் குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது.[11] சோழரின் செங்கோல் திசைதொறுஞ் செல்லும் தன்மையது; அவர்களின் குடையின் நிழலிலே உலகங்களெல்லாம் பாதுகாப்பைப் பெறுகின்றன. திரிபுவனச் சக்கரவர்த்திகளாகிய சோழச் சக்கரவர்த்திகள் இத்தகைய இயல்புகளைக் கொண்டவர்கள் என்பதை உணர்த்தும் வண்ணமாக அவர்களின் மெய்க்கீர்த்திகளிலே மேல்வருஞ் சொற்றொடர்கள் கையாளப்பட்டுள்ளன:-

'செங்கோல் திசைதொறுஞ் செல்லத் தங்கள்
குலமுதற் பரிதியின் வலிசேர் புவனிக்கும்
ஒற்றையாளி யுலாவ...'

அதிராஜேந்திரன்

'செங்கோல் திசைதொறுஞ் செல்ல
இருநில வளாக மெங்களுந் தனாது
திருநிழல் வெண்ணிலாத் திகழ வொருதனி
மேருவிற் புலிவிளையாட...

முதற்குலோத்துங்கசோழன்

'திகிரியொடு செங்கோல் நடப்ப அகில
புவனமுங் கவிப்பதோர் புதுமதி போல
வெண்குடை நிழற்ற...'

விக்கிரமசோழன்

'நாற்கடல்சூழ் புவியேழும் பாற்கடல்போல் புகழ்பரப்ப'
'ஊழிஊழி ஒருசெங்கோல் ஏழுபாரும் இனிதளிப்ப'

'திருவாணையுஞ் செங்கோலும்
திசையெட்டுங் கால்கொள்ள'

இரண்டாம் இராசாதிராசன்

'சக்கரமுஞ் செங்கோலும் திக்கனைத்துஞ் செல்லக்
கற்பகாலம் புவிகாப்ப...'

மூன்றாங் குலோத்துங்கன்

புராதன இந்திய இலக்கியங்களிற் குறிப்பாகப் பௌத்த நூல்களிலே சக்கரவர்த்தி மன்னனைப் பற்றிய குறிப்புக்களுள்ளன. அறம் தவறாத அரசன் ஆட்சி செலுத்துமிடத்து தருமம் வளரும். தருமத்தை வளர்க்கின்ற மன்னன் தர்மச் சக்கரவர்த்தியாவான். அவனது ஆணை திக்கனைத்துஞ் செல்லும் தன்மையுடையது. இறக்கும் தர்மச் சக்கரவர்த்தியின் தாதுப்பொருட்கள் புதைக்கப்படுமிடத்தில் வழிபாட்ட நிலையமொன்றினை அமைத்து வழிபாடு நிகழ்த்துதல் வேண்டும். சக்கரவர்த்தி கடைப்பிடிக்கும் தர்மக் கொள்கையின் பயனாக வெண் கொற்றக்குடை, சக்கரம், கருங்குதிரை, வெள்ளையானை, நவரத்தினம் என்பன தாமாகவே அவன் முன்தோன்றும்; அவனுக்கு மட்டுமன்றி அவை வேறெவருக்குங் காட்சியளிப்ப தில்லை. தர்மச் சக்கரவர்த்தி பற்றிய கருத்துக்கள் இந்து கலாச்சார மரபிற்கேற்ப மாற்றமும் வளர்ச்சியும் அடைந்து சோழராட்சியிலே திரிபுவனச் சக்கரவர்த்திக் கோட்பாடாகப் பிரதிபலித்ததென்று கொள்ளலாம்.

பிள்ளைகளைப் பெற்றோர் பேணி வளர்ப்பதைப் போல மக்களின் நலம்பேணி அரசன் ஆட்சிசெலுத்த வேண்டுமென்பது புராதன அரசியற் சிந்தனையாளரால் வலியுறுத்தப்பட்ட கருத்தாகும். பிள்ளைகளுக்குத் தந்தை ஆதரவாயிருப்பதைப் போல சக்கரவர்த்தி மன்னனொருவன் பிரசைகளுக்கு ஆதரவாயிருப்பானென்று கௌதம புத்தர் சொல்லியதாகக் குறிப்புண்டு. 'எனது பிள்ளைகளைப் போல எனது பிரஜைகளும் இம்மையிலும் மறுமையிலும் நல்வாழ்வினைப் பெறுவதையே விரும்புகின்றேன்' என்பது தர்மம் வளர்த்த அசோகச் சக்கரவர்த்தியின் வாக்கு. திருமாலின் அவதாரமாகவும் திரிபுவனச் சக்கரவர்த்தியாகவும் கருதப்பட்ட சோழச்சக்கரவர்த்தியை மன்னுயிர்கள் மீது மிகுந்த கருணையுடையவனாகவும் வர்ணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இறைவன் மன்னுயிர்களின் மேல் தாயினும் சாலப் பரிந்து அன்புசெலுத்துபவன் என்பது சைவ இலக்கிய மரபு. எனவே திரிபுவனச் சக்கரவர்த்தியாகிய சோழச்சக்கரவர்த்தி மக்கள்மீது கொண்டிருந்த பரிவினை மெய்க்கீர்த்திகளிலே மேல்வருமாறு கூறவேண்டியதாயிற்று.

'கொற்றவெண் குடைநிழற் குலவயத் துயிர்களைப்
பெற்ற தாயினும் பேணி...'

வீரராசேந்திரன்

'திங்களேர் மலர்ந்து வெண்குடை மண்டில
மன்னுயிர் தோறு மின்னருள் சுரந்து...'

அதிராசேந்திரன்

'மன்னுயிர்க் கெல்லா மின்னுயிர்த் தாய்போல்
தண்ணளி பரப்பித் தனித்தனி பார்த்து...'

'தந்தையி லோர்க்குத் தந்தை யாகியுந்
தாயி லோர்க்குத் தாயாகியும்
மைந்தரி லோர்க்கு மைந்த ராகியும்
மன்னுயிர்கட் குயிராகியும்....'

இரண்டாம் இராசராசன்

மெய்க்கீர்திகளிலே கூறப்பெற்றவாறு சோழ மன்னர்கள் தங்கள் ஆட்சியின் கீழமைந்த மக்கள் அனைவர் மீதும் பேரன்பும் பரிவுங் கொண்டிருந்தார்களா என்பது ஆராய்வதற்குரிய ஒன்றாகும். ஆயினும் இத்தகைய இலட்சியங்கள் முடியாட்சியினை அறவழியில்

நெறிப்படுத்துவதற்கும் சமய நம்பிக்கைகள் வலுப்பெற்றிருந்த சமுதாயத்திலே, அரசியலாதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கும் துணைபுரிந்திருத்தல் வேண்டும்.

அரசரின் பணிகள்

வைதீக நூல்களெல்லாம் பொதுவாக அரசின் இலட்சியங்களை வைதீக சமுதாய கோட்பாடுகளின் அடிப்படையிலே விளக்குகின்றன. வைதிக மரபிலுள்ள அரசியற் சிந்தனைகளைப் பிரதிபலிக்கின்ற நூல்களிலே மனுதர்ம சாஸ்திரம் என்பதே மிகப்பிரசித்தமானது. இந்திய அரசுகள் பலவற்றின் அரசியற் கோட்பாடுகளும் நிருவாக முறைகளும் மனுநூலை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அந்நூல் சோழர் காலத்துத் தமிழகத்திலே அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது. அரசர்களாலும், அந்தணர்களாலும், அறிஞர்களினாலும் விரும்பிப் படிக்கப்பட்டதோடு அரசியற் சிந்தனைகளிலும் இலக்கியத்திலும் அது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. மனுநெறியை நிலைநாட்டுவதற்காகச் சோழ மன்னர்கள் முடிசூடிக்கொண்டார்கள் என்று மெய்க்கீர்திகள் சில கூறுகின்றன.

'மனுவின்நெறி தழைத்தோங்க.....
பொற்பமைந்த முடிசூடி'

'.....பொருவில்மனு நெறிவாழப்
பொன்மகுடம் கவித்தருளி'

எனவரும் சொற்றொடர்கள் கவனித்தற்குரியன.

வேதம், வேள்வி, நீதி, ஒழுக்கம், வருண தருமங்கள் என்பனவற்றைக் காப்பாற்றி பஞ்சமும் பிணியும் நாட்டிலே ஏற்படாதவாறு அரசர் ஆட்சி செலுத்த வேண்டுமென்ற மரபு வழியான கருத்துக்கள் மெய்க்கீர்த்திகளிலே இலக்கியச் சுவையுடன் கூறப்பட்டுள்ளன. அத்தகைய மெய்க்கீர்த்திப் பகுதிகளுள் மேல் வருவன சில;

'வேத நீதியை விளக்கி....'[15]

தருமமும் தவமும் தானமும் தழைப்ப
வேதமும் மெய்ம்மையு மாதியுகம் போலத்
தலைத்தலை சிறப்ப வந்தருளி வெலற்கரும்
போர்ப்புலி யானை பார்த்திவர் சூட
நிறைமணி மகுடம் முறைமையிற் சூடி'[13]

'பசிபகை யானது தீங்கு நீங்க
மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க
மாதவர் தவமும் மங்கையர் கற்பும்
ஆதி அந்தணர் ஆகுதிக் கனலும்
மீதெழு கொண்டல் வீசுதண் புனலும்
மேதினி வளருஞ் சாதி ஒழுக்கமும்
நீதி அறமும் பிறழாது நிகழ....'[14]
ஒப்பரிய மறைநூலும் உரைதிறம்பா மனுநூலுஞ்
செப்பரிய வடகலையுந் தென்கலையுந் தலையெடுப்ப
நீதிதரு குலநான்கும் நிலைநான்கும் நிலைநிற்ப[15]
ஆதியுகக் குடிபுகுத அறுசமய தழைத்தோங்க.....'

முதலாம் குலோத்துங்கனது காலத்திற்குப் பிற்பட்ட மெய்க்கீர்த்திகளிலே சோழ மன்னர்களின் கோயிற்றிருப்பணிகள் சிறப்பித்தும் சிறிது விரிவாகவும் கூறப்படுகின்றன. சோழமன்னர்கள் எல்லோருமே சமய நிறுவனங்களுக்குஞ் சிறப்பாகச் சைவ நிறுவனங்களுக்கும் பேராதரவு நல்கினார்கள். முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோரின் ஆட்சிகளிலேயே கோயில்கள் பிரமாண்டமான அமைப்புக்களாகவும் பெருஞ் சமுதாய நிறுவனங்களாகவும் வளர்ச்சி பெற்றன. அம்மன்னர்களைப் போல அதிகளவிலே வேறெந்தச் சோழ மன்னர்களும் சமய நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கவில்லை. ஆயினும், அம்மன்னிருவரதும் மெய்க்கீர்த்திகளிலே சமயத் திருப்பணிகள் பற்றிய உரைகள் இடம் பெறவில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டளவிலே கோயில்களின் வளர்ச்சியிலே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. சிதம்பரம் முதலிய கோயில்களுக்குத் தலயாத்திரை செல்லும் வழக்கம் முன்னெக் காலத்திலுமில்லாத அளவிலே ஏற்பட்டது. சோழ மன்னர்களுக்கும் கோயில் நிறுவனங்களோடு தாம் கொண்ட தொடர்புகளை வலியுறுத்த வேண்டியவொரு தேவை ஏற்பட்டது. குலப்பெருமைக்கு ஏதுவான வீரச்செயல்களும் அரசியற் சாதனைகளும் பழங்கதையாகிவிட்டதும் கோயில்களும் சமயநிறுவனங்களும் பண்பாட்டு மரபுகளுமே முன்னைய சோழர்களின் சாதனைகளை நினைவுறுத்துவனவாக நிலைபெற்று வந்தன. சோழரின் ஆதிக்கம் தமிழகத்தின் எல்லைகளுள் அடங்கிவிட்டதும் சைவசமய நிறுவனங்களினதும் தமிழ் மொழி இலக்கியம் ஆகியவற்றினதும் பாதுகாவலர்களாகத் தம்மைப் பிரகடனப்படுத்தக் கொள்வதன் மூலமாகப் பிந்திய சோழர்கள் தமது ஆதிக்கத்திற்கு ஆதரவைத்தேட முற்பட்டிருத்தல் வேண்டும். விக்கிரம சோழனுடைய மெய்க்கீர்த்தியிலே சிதம்பரத்தில் அவன் புரிந்த திருப்பணிகள் மேல்வருமாறு கூறப்பட்டுள்ளன;

'வருதிறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையால்
தன்குல நாயகன் தாண்டவம் பயிலுஞ்
செம்பொன் னம்பலஞ்சூழ் திருமா ளிகையும்
கோபுர வாசல் கூடசா லைகளும்
உலகு வலங்கொண்டொளிவிளங்கு நேமிக்
குலவரை உதைய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து
இருநிலந் தழைப்ப இமையவர் களிப்பப்
பெரிய திருநாள் பெரும்பெயர் விழாவெனும்
உயர்பூ ரட்டாதி உத்திரட் டாதியில்
அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர்
இம்பர் வாழ எழுந்தருளு வதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து
பருத்திரண் முத்தின் பயில்வடம் பரப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன்
திருவளர் பெயராற் செய்துசமைத் தருளி
பைம்பொற் குழித்த பரிகல முதலாச்
செம்பொற் கற்பகத் தொடுபரிச் சின்னமும்
அளவில் லாதன வொளிபெற வமைத்து.'[16]

மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய கோயிற்றிருப்பணிகளைக் குறித்து,

'எத்தரையுந் தொழுமிறைவற்
கெதிரம்பலஞ் செம்பொன் வேய்ந்து

சித்திரைவிழா அமைத்திறைவி
திருக்கோபுரம் செம்பொன் வேய்ந்து

அரிபிரமர் தொழுமிறைவற்
ககிலமெல்லாந் தொழுது போற்றத்

திரிபுவன வீரீச்சுரஞ்
செய்துதிரு வைகாசியுஞ்

சிறந்ததிரு வாவணியுந்
திசைவிளக்கு.....யூர்

நிறைந்த செல்வத் துடன்விளங்க
நிலவுந் திருநாள் கண்டு

மன்னுயிர்க் கருளளிக்கும் வானவர்
நாயகர் வாழ

அருளமைந்த திருமலைபோல்
கோயில் கண்டு

தாரணிகொள் திருத்தாதைக்கும்
இராசராசீச் சுரத்தார்க்கும்

காரணச் சிறந்தகோயில்
அணிதிகழ் பொன்வேய்ந்தருளி'[17]

குலோத்துங்கன் சிதம்பரத்தில் நடராசப் பெருமானின் கோயிலிற்குப் பொன்வேய்ந்தமை, அங்கு சித்திரைத் திருவிழா அமைத்தமை, சிதம்பரத்து அம்பாள் கோயிலின் கோபுரத்திற்குப் பொன்வேய்ந்தமை (கும்பகோணத்திலே), திரிபுவனவீர - ஈஸ்வரம் என்னும் எழில்மிகு பெருங்கோயிலைக் கட்டியெழுப்பியமை, இராசராச - ஈஸ்வரம் என்னும் பெருங்கோயிலுக்குப் பொன் வேய்ந்தமை ஆகிய பணிகள் இம்மெய்க்கீர்த்தியிலே சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளன. கோயில்களையும் திருவிழாக்களையும் ஆதரித்தமையினைத் தமது ஆவணங்களிலே குறிப்பிடுவதன் மூலம் பிற்காலச் சோழர்கள் சைவர்களதும் பிற இந்துக்களினதும் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ள முயன்றார்கள் என்றே கருத வேண்டியுள்ளது.

சோழரின் மெய்க்கீர்திகளிலே அடங்கியுள்ள அரசியற் சிந்தனைகளை ஆராய்வதன் மூலமாக மேல்வரும் முடிபுகள் தெளிவாகின்றன. வீரராசேந்திரன் காலம்வரை சோழரின் அரசியற் சிந்தனைகளுக்கும் சாதனைகளுக்கும் வீர உணர்ச்சி பற்றிய கருத்துக்களே அடிப்படையாக விருந்தன. ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்கும் பேரரச அமைப்பினை நிலைப்படுத்துவதற்கும் ஏற்றவொரு கருவியாக வீர உணர்ச்சியானது முதலாம் இராசராசன் போன்ற திறமை மிக்க மன்னர்களினாலே பயன்படுத்தப்பட்டது. வீரராசேந்திரனுடைய காலத்தில் மன்னரைக் கடவுளோடு தொடர்புபடுத்தும் மரபு வலுவடைந்தது. குலோத்துங்கன் காலம்முதல் வெளிப்படையாகவே மெய்க் கீர்த்தியிலும் பிற இலக்கியத்திலும் முன்வைக்கப்பட்ட அவதாரக் கோட்பாடும் திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற அரசர்களின் விருதுப்பெயரும் முடிமன்னரைத் தெய்வமாகக் கொள்ளும் மரபின் வளர்ச்சியடைந்த நிலையினைக் குறிக்கின்றன. இதன் வளர்ச்சியானது சோழப் பெருமன்னர்கள் ஏற்படுத்திய கோயில் நிறுவனங்களினதும் பிற கலாச்சார நிறுவனங்களினதும் வளர்ச்சியோடு தொடர்புடையவொன்றாகும். ஓரளவிற்கு இவை சமுதாய நிலைகளிலுள்ள மாற்றங்களைப் பிரதிபலிப்பனவாய் அமைந்தன. சோழரின் போர்வலியும் ஆதிக்கமும் தளர்ச்சியுற்றவொரு காலத்திலே சோழ மன்னர்கள் தமிழகத்து மேலோர் குழாங்களின் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்காக அவர்களின் சமய உணர்ச்சிகளையும் சமய கலாச்சார மரபுகளையும் பயன்படுத்திக் கொள்ள நேரிட்டது. அரசியற் சிந்தனையிலேற்பட்ட இத்தகைய புதிய போக்கினைப் பிற்காலச் சோழர்களின் மெய்க்கீர்த்திகள் பிரதிபலிக்கின்றன.

அடிக்குறிப்புக்கள்

1. அ. வேலுப்பிள்ளை, சாசனமும் தமிழும், பேராதனை, 1971.
2. Charles Drekmeier, Kingship and Community in Early India, California. 1962, p. 251.
3. The Age of Imperial Unity, ed. R. C. Majumdar, Third Impression, Bombay. 1960, p. 140.
4. South Indian Inscriptions (SII), Vol. III, p. 420.
5. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974, ப. 635,
6. S. Pathmanathan, 'Kingship under the Imperial Cholas: The Divine Monarch and Heroic Kingship'. 5th World Conference Seminar on Tamil Studies. Proceedings, Vol. I, p.
7. மேலது.
8. பிற்காலச் சோழர் சரித்திரம், ப. 657
9. K. A. Nilakanta Sastri, The Coals, (Second Edition, Revised), Madras, 1965. pp. 452 - 453.
10. பிற்காலச் சோழர் சரித்திரம், பக்கங்கள் 623, 635
11. மேலது, பக்கங்கள் 657.
12. மேலது, ப. 623.
13. மேலது, ப. 640.
14. மேலது, ப. 643.
15. மேலது, ப. 656.
16. மேலது, ப. 641.
17. மேலது. பக்கங்கள் 652 - 653.


தனியார் உயர்கல்வியின் உலகலாவிய எழுச்சி

வளர்முக நாடுகளில் அரசாங்க உயர் கல்வி முறைமையே அந்நாடுகளில் வாழும் 70 சதவீதமான பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு உயர்கல்வி வாய்ப்புகளை வழங்க முடியும் என்பது உறுதியாகிவிட்டது. தனியார் உயர்கல்விக்கு இடமளித்துள்ள வளர்முக நாடுகளிலும் இதே நிலைமையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் உயர்கல்வி, குறிப்பாகப் பல்கலைக்கழகக் கல்வி அரசாங்க ஏகபோக உரிமையாக உள்ளது. தனியார் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்துவது பற்றிய பேச்சு எழுந்த போதெல்லாம், தனியார்மயமாக்கப்படும் உயர்கல்வி பின் தங்கிய பிரிவினரை ஒதுக்கிவிடும் என எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. உயர்கல்வியை விரிவான முறையில் தனியார் மயமாக்கியதனால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகள் பற்றிக் கருத்திற்கொள்ளும் இலங்கை அரசு இத்தகையை திட்டங்கள் ஏதுமில்லை என வன்மையாக மறுக்கின்றது.

இப்பின்புலத்தில் தனியார் உயர்கல்வி பற்றிய இன்றைய உலகளாவிய போக்குகள் எவை என்பதை அறிவது பயனுடையதாகும். மேலை நாடுகள், வளர்முக நாடுகள் என்ற வேறுபாடின்றி இன்று சகல நாடுகளிலும் உயர் கல்விக்கான சமூக தேவை அதிகரித்து செல்கின்றது. இன்று இலங்கையில் 70,000 பேர் வரை பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றாலும் 10 - 12000 பேர் வரை மட்டுமே அனுமதி பெறுகின்றனர். இந்தியாவில் தனிநபர் வருமானம் எவ்வளவுதான் குறைவென்றாலும், அந்நாட்டின் உயர் கல்விக்கான சமூக தேவையை நிறைவு செய்ய 200 பல்கலைக் கழகங்களும் 8000 கல்லூரிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அதிகரித்துச் செல்லும் இச் சமூக தேவையை நிறைவு செய்யும் நிலையில் இன்றைய அரசாங்கங்கள் இல்லை. இந்நிலையில் இன்று தனியார் உயர்கல்வியின் முக்கியத்துவம் பற்றிப் பேசப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரச்சினையைத் தனியார் கல்லூரிகளே தீர்க்க முடியும் என்ற சிந்தனை இன்று உலகலாவிய ரீதியில் உருவாகி வருகின்றது. சென்ற நூற்றாண்டில் அரசாங்கப் பல்கலைக் கழகங்களே உயர்கல்வியில் ஏகபோக உரிமை படைத்திருந்தன. ஆனால் இன்று உலகலாவிய ரீதியில் தனியார் கல்லூரிகள் நிறுவப்பட்டு வருகின்றன. அவற்றின் பண்புகள் அந்த நாட்டின் வரலாறு, பண்பாடு, என்பனவற்றுக்கேற்ப வேறுபடுகின்றன.



பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
கொழும்பு பல்கலைக்கழகம்

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 2002

LIGHT DISPELS DARKNESS

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

கனடா, எகிப்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தனியார் உயர் கல்வி வளர்ச்சி இன்றும் ஆரம்பக் கட்டங்களிலேயே இருந்து வருகின்றது. மத்திய கிழக்கைரோப்பிய நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகள் பெரும்பாலான வளர்முக நாடுகள் என்பனவற்றில் தனியார் உயர் கல்வி நிலையங்கள் துரிதமாகப் பெருகி வருகின்றன.

தென்கொரியாவில் தனியார் உயர்கல்விக்கு நீண்ட கால வரலாறு உண்டு. உயர் கல்வி மாணவர்களில் 70 சதவீதமானவர்கள் தனியார் கல்லூரிகளிலேயே பயிலுகின்றனர். இந்நாட்டில் தனியார் கல்லூரிகள் தேசிய வாழ்வில் முக்கிய பங்கினை ஏற்க வேண்டும் என்ற சமூகக் கோரிக்கைக்கு அரசாங்கம் அடிபணிய வேண்டியுள்ளது.

கண்ணியமான நல்ல வாழ்க்கை அந்தஸ்தைப் பெற உயர்கல்வித் தகுதிகளே கடவைச்சீட்டு என்று இன்று ஆசியாவிலும் ஏனைய உலக நாடுகளிலும் கருதப்படுகின்றது. அரசாங்க உயர் கல்வி நிலையங்களில் பெறப்படும் கல்வித் தகுதிகள் உள்நாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெறப் போதுமானவை; வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு களைப் பெறத் தனியார் கல்லூரிகள் வழங்கும் சான்றிதழ்களே/பட்டங்களே அவசியம் என்ற நிலை உருவாகி வருகிறது.

உள்நாட்டில் உள்ள வெளிநாட்டுக் கம்பெனிகளில் வேலைவாய்ப்புகளைப் பெறவும் இப்பட்டங்கள் உதவும்.

தனியார் கல்லூரிகளின் வளர்ச்சியில் பலவகைப்பட்ட நிறுவனங்களை இனங்காணலாம்.

* இலாப நோக்கில் இயங்கும் கல்லூரிகள், இலாப நோக்கற்ற கல்லூரிகள்;
* வழமையான கலை, விஞ்ஞான கற்கை நெறிகளை வழங்கும் கல்லூரிகள்;
* தொழில், தொழில் நுட்பவியல் கல்லூரிகள்;
* சில நாடுகளில் அரசாங்கங்கள் தனியார் கல்லூரிகளுக்கும் மாணவர்களுக்கும் உதவி வழங்க முன்வரும்;
* வேறு சில நாடுகளில் அரசாங்கங்கள் இவ்வாறு உதவி செய்ய முன்வருவதில்லை. இங்கு செல்வந்தர்களின் பிள்ளைகளே பயிலுவர்.

இன்று உலக வங்கியானது கல்வித்துறையில் தனியார் மூலதனத்தை ஊக்குவித்து வருகின்றது. உலக வங்கியின் கருத்தின்படி:

* அரசாங்கங்கள் தமது வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் கணிசமான தொகையைப் பல்கலைக்கழகக் கல்விக்கு ஒதுக்கினாலும் உயர்கல்விக்கான சமூக தேவையை நிறைவு செய்ய முடியாது;
* உயர்கல்வியில் அரசாங்கங்கள் செய்யும் முதலீட்டினால் ஏற்படக்கூடிய நன்மைகள் (returns on investment in higher education) ஆரம்பக் கல்வி, பாடசாலையில் இடம்பெறும் பொதுக்கல்வி என்பனவற்றினால் ஏற்படக்கூடிய நன்மைகளைவிடக் குறைவு.

உலக வங்கியின் இக்கருத்துக்கள் வளர்முக நாடுகளில் அரசாங்கங்களின் உயர்கல்வி மீதான செலவு அதிகரிப்புகளை ஆதரிப்பதாயில்லை. ஆசிய அரசாங்கங்கள் தாம் மட்டும் தனித்து தமது நாடுகளில் ஏற்பட்டுள்ள உயர்கல்விக்கான தேவையை நிறைவேற்றிவிட முடியாது; உயர்கல்வித்துறையில் தனியார் துறையினரை ஊக்குவித்தால் அரசின் சுமை குறையும் என்பது உலக வங்கியின் கருத்து. இன்றைய உயர்கல்வித் தேவைகளை அரசாங்கங்கள் நிறைவு செய்ய முற்பட்டாலும் அவற்றின் ஆற்றல்களும் வசதிகளும் 40 சதவீதமாக மட்டுமே உயர்த்தப்பட முடியும் என்பது ஒரு முக்கிய ஆய்வு முடிவு.

பொதுவாக அமெரிக்கத் தனியார் உயர் கல்வி நிலையங்களே முக்கிய முன்மாதிரிகளாக (Models) நோக்கப்படுகின்றன. வரலாற்றில் இல்லாத அளவுக்கு இன்று அமெரிக்க மாணவர்கள் தனியார் உயர்கல்வி நிலையங்களில் பயிலுகின்றார்கள். எவ்வாறாயினும் இந்நாட்டில் 60 - 80 சதவீதமான உயர்கல்வி மாணவர்கள் அரச உயர்கல்வி நிறுவனங்களிலேயே பயிலுகின்றனர்.

ஐக்கிய அமெரிக்காவுக்கு வெளியே சில நாடுகளில்:

* அரசாங்க பல்கலைக்கழகங்கள் இப்புதிய தனியார் உயர் கல்வி நிலையங்களை வரவேற்கின்றன;
* சில நாடுகளில் அரசாங்க தனியார் உயர்கல்வி நிலையங்களுக்கிடையே பேச்சுவார்த்தையே எதுவுமில்லை;

கொலம்பியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இரு தரப்பினரும் ஒற்றுமையுடன் இயங்குகின்றன. அதற்கான அமைப்புகளையும் ஏற்படுத்தியுள்ளனர். (Association of Universities)

கனடா நாட்டில் கடுமையான வாதப் பிரதி வாதங்களின் பின்னர் மட்டுமே கனடாவின் சனத்தொகை நிறைந்த முக்கிய மாகாணத்தில் தனியார் பல்கலைக் கழகங்களுக்கு சட்ட ரீதியாக இடமளிக்கப்பட்டது.

வரலாற்று ரீதியாக தனியார் உயர்கல்வி நிலையங்களை விரும்பாத கனடாவில் இன்று தனியார் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று வளர்முக நாடுகளில் துரிதமாகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நாடுகளில் பெருகிவரும் தனியார் உயர்கல்வி

நிலையங்கள் தொழிற் சார்பானவையாக விளங்குகின்றன.

அவையாவன:

* தொழில், வர்த்தகம்;
* சுற்றுலா;
* தகவல் தொழில் நுட்பம்.

ஆர்ஜென்டினா, மலேசியா போன்ற நாடுகளில் அங்கீகாரம் பெற்ற உயர் கல்வி நிலையங்கள் (Accredited Universities) எழுந்த வண்ணம் உள்ளன. வங்காள தேசமும் ஹொங்கொங்கும் 1990 களில் தமது கல்விச் சட்டங்களைத் தாராளமயப்படுத்த பின்னர் குத்தகைக்குப் பெற்ற தொடர்மாடிகளிலும் சாதாரண கட்டடங்களிலும் வர்த்தக முறையான உயர்கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய புதிய தனியார் கல்லூரிகளைக் கட்டுப்படுத்தாது அப்படியே விட்டு விடுவதா அல்லது அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது அதிகார மட்டம் எதிர்நோக்கும் பிரச்சினையாகும். உதாரணமாக

* **கிரிஸ்** நாட்டில் தனியார் உயர்கல்வி நிலையங்கள் அரசியல் யாப்புக்கு முரணானவை;
* **தென்னாபிரிக்க அரசாங்கம்** வெளிநாட்டுத் தொடர்புடைய தனியார் உயர்கல்வி நிலையங்கள் மீது கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது;
* சில இலத்தின் அமெரிக்க நாடுகளில் தனியார் உயர்கல்வி பற்றிய எதுவித சட்டப் பிரமாணங்களும் இல்லை.

தென்னாபிரிக்க அரசாங்கம், முன்னைய வெள்ளையர் அரசாங்கத்தின் இன ஒதுக்கல் கொள்கையினால் ஏற்பட்ட பாதிப்புகளைக் களைந்தெறிய தனியார் கல்லூரிகள் உதவுமா என்ற கேள்வியை முன்வைக்கின்றது.

அரசாங்க ஆதரவு

பெல்ஜியம் போன்ற ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் தனியார் நிறுவனங்களின் வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவை வழங்குகின்றன. ஜப்பானிய அரசு தனியார் கல்லூரிக்குத் தேவையான கணினி மற்றும் வன்பொருள் தொகுதிகளை விநியோகிக்கின்றது.

சிங்கப்பூரில் சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட முகாமைத்துவப் பல்கலைக்கழகம் தனியாரால் நடாத்தப்படுகின்றது. சிங்கப்பூர் இவ்வாறு தனியார் உயர்கல்விச் சார்பாக எடுத்த முடிவும், முடிவை எடுத்த நேரமும் 'சர்வதேச ரீதியாகச் சரியானது' என வாதிடப்பட்டது. ஏனைய நாடுகளின் மாணவருக்கு இருப்பதுபோல் சிங்கப்பூர் மாணவர்களுக்கும் வெவ்வேறு வகையான உயர்கல்வியும் அதிக பாடத் தெரிவுகளும் தேவை. சிலவற்றைத் தனியார் உயர்கல்வியே வழங்க முடியும் என்பது சிங்கப்பூரில் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்து.

மலேசியா

மலேசிய மாணவர்கள் வழமையாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று கற்பவர்கள். 1990 களின் இறுதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக இவர்கள் உள்நாட்டிலேயே கல்வி வாய்ப்புக்களைத் தேடுகின்றனர். இன்று இந்நாட்டில் 140,000 மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்களிலும் 215,000 பேர் தனியார் உயர்கல்வி நிலையங்களிலும் பயிலுகின்றனர். வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் மலேசியாவில் நிறுவும் கிளைகளில் சமமான கல்வித்தரம் பேணப்படல் வேண்டும் என்று அரசாங்கம் வாதித்துள்ளது. ஆயினும் அந்நாட்டில் தரங்குறைந்த, சட்டபூர்வமற்ற உயர்கல்வி நிலையங்களும் காணப்படுகின்றன.

தனியார் உயர்கல்வி முறையில் பல குறைபாடுகள் இருக்கலாம். இலாப நோக்கு, கல்வித்தராதரம் குறைவு, பின்தங்கிய மக்களுக்கு வாய்ப்பு வழங்காமை எனப் பலவற்றைச் சுட்டிக் காட்ட முடியும். ஆயினும் இன்றைய உயர்கல்வி முறைகள் பற்றி ஆராயும் அறிஞர்கள் இவ்வாறான குறைபாடுகள் இன்றைய உலகலாவிய ரீதியிலான தனியார் உயர்கல்வி இயக்கத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து விட முடியாது என்கின்றனர். சுருங்கக் கூறின், தனியார் துறையின் பங்களிப்பை வலியுறுத்தும் உலகமயமாக்கக் கோட்பாடு இன்று உயர் கல்வித் துறையிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மை.

அரசாங்க, தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ள மாணவர் சதவீதம் - 1998

நாடு	*அரசாங்க உயர்கல்வி*	*தனியார் உயர்கல்வி*
1. அவுஸ்திரேலியா	100%	-
2. பிரேசில்	41%	59%
3. கனடா	100%	-
4. ஐக்கிய அமெரிக்கா	68%	32%
5. பிரான்ஸ்	91%	09%
6. ஜேர்மனி	100%	-
7. இந்தோனேசியா	30%	70%
8. ஜப்பான்	26%	74%
9. பிலிப்பைன்ஸ்	25%	75%
10. இலங்கை	100%	-

ஆரம்ப கல்வி அன்றும் இன்றும்



ஆ. விமலராஜா B.A., Dip. in Edu.
பகுதித் தலைவர்
உடுப்பிட்டி அ. மி. ஆரம்பப் பிரிவு

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்



1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

கல்விக்கு வரவிலக்கணம் கண்டவர் பலர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலே கல்வியின் கருத்திற்கு வரவிலக்கணம் வகுத்தனர். வழிகள் பலவாயினும் முடிவு ஒன்றாகவே அமைவதை இவர்களின் கருத்துக்களில் இருந்து அறியக் கூடியதாய் உள்ளது. "அறம் பொருள் இன்பம் வீடு நூற்பயனே" என்பது இந்து அறிஞர்தம் கோட்பாடாகும். "ஒருவனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலைத் தோண்டி வெளிக் கொணர்வதே கல்வி" என்பது இன்னொரு அறிஞனின் கருத்து. "ஒருவன் பெறும் பல்வகைப்பட்ட அனுபவங்களே கல்வியாகும்" என்பது மற்றொரு அறிஞரின் கருத்தாகும். "அனுபவங்களை அனுபவங்களால் அனுபவங்களினூடாக அளிப்பதாக கல்வி அமைய வேண்டும்" என்பது தற்கால கல்விச் சிந்தனையாளர் ஜோன்யியின் கருத்து. "மனிதத் தன்மையினை மனிதன் பெறப் பயிற்சியளிப்பதே கல்வி" என்பது இன்னொரு அறிஞர் கருத்தாகும். மேற்கூறப்பட்ட வரவிலக்கணங்களை நோக்கும் போது கல்வி என்பது "பரந்துபட்ட ஆய்விற்கு உரியது" என்ற முடிவிற்கு வரலாம். பொதுவாக நோக்கும் போது சிறந்த ஒரு சமுதாயம் காண விளைகின்ற சான்றோனை உருவாக்கி சிறந்த ஒரு குடிமகனை நாட்டுக்கு அளிக்க உதவுவதே கல்விப் பயனாகும். அதாவது கல்வியின் மூலம் தனி மனிதனின் ஆளுமையை வளர்த்துத் தனக்கும் நாட்டிற்கும் நலன் பயக்கும் நற்குடிமகனாக உருவாக்குவதற்கு, அக்கல்வி உதவ வேண்டும் என்பதே பொதுவான கருத்தாக அமைகின்றது. இவ்வாறு காணப்படும் இக்கல்வி நடைமுறையில் பிரயோக நெகிழ்வுத் தன்மை உடையதாகக் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். அதாவது மாறிக் கொண்டே வருகின்ற இன்றைய உலகில் பிள்ளைகளை ஒரே நிலையில் உருவாக்குவதில் பயனில்லை மாறக் கூடிய நிலைக்கு எல்லாம் ஈடு கொடுக்கக் கூடியவர்களாக வளர்த்தல் மட்டும் போதாது; மக்கள் வாழ்விற்கு சிறப்பு எனத் தோன்றும் வகையிலெல்லாம் உலகத்தை மாற்றும் ஆற்றல் உடையவர்களாக மாணவர்களை உருவாக்க வேண்டும். சமூகம் என்பது வளர்கின்ற, மாற்ற மடைகின்ற மாற்ற மடைய வேண்டியதொன்றாகும். மாற்றம் என்பது எதிர் மறைக் கருத்திலன்றி நேர்நிலை முன்னேற்றமாக அமைய வேண்டும். இவைகளை நோக்கும்போது கல்வி என்பது மாறிக் கொண்டு வரும் சமுதாயத்திற்கு ஏற்ப அமைய வேண்டும் என்பது தெளிவு. அந்த வகையில் இலங்கையில் ஆரம்பக் கல்வித் துறையானது நவீன கல்விச் சீர்திருத்தத்தின் முன்பு இருந்த நிலையையும் தற்போது இத்துறை நடைமுறைப்படுத்தப்படும் வகையினையும் எடுத்து நோக்குவோம்.

ஆரம்பக் கல்வி என்னும் போது ஐந்து வயது பூர்த்தி அடைந்த பிள்ளைகள் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையில் பாடசாலையில் பெற்றுக் கொள்ளும் கல்வியினைக் குறிப்பதாகும். இடைநிலைக்கல்வி, உயர்கல்வி என்பனவற்றிற்கு அடி அத்திவாரமாக அமைவது ஆரம்பக்கல்வியே. குழந்தையின் மனதில் கல்வி பற்றிய எண்ணக்கரு ஆரம்பக் கல்வியிலேயே ஊட்டப்படுகின்றது. ஆரம்பக் கல்வியே உயர் கல்விக்கும் உவப்பான வாழ்க்கைக்கும் எம்மை உயர்த்தும் ஏணி. ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் கல்விக்கான அடித்தளத்தை எடுத்துக் கொடுப்பது ஆரம்பக் கல்வியே. "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்று ஔவைப்பாட்டி வலியுறுத்தி உள்ளார். குழந்தையின் மனத்தில் இளமையில் படிக்கின்ற விடயங்கள் நன்கு பதித்து விடும். இலங்கையில் உள்ள 10,000 பாடசாலைகளில் சுமார் 4,000 பாடசாலைகள் ஆரம்பப் பாடசாலைகளாக உள்ளன. இவைகளை நோக்கும் போது ஆரம்பக் கல்விக்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். ஒரு பிள்ளையை முளைக்கின்ற வித்திற்கு ஒப்பிடலாம். எப்படி முளைத்துவரும் ஒரு வித்து எதிர் காலத்தில் பயன்தரும் பெருவிருட்சமாக வளர்வதற்கு வேண்டிய உள்ளார்ந்த ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதோ அவ்வாறே ஒரு பிள்ளையினிடத்தும் எதிர் காலத்தில் பயனுள்ள ஒரு மனிதனாக வளர்ந்து சமூகத்தில் தன்னை இசைவுபடுத்திக் கொள்வதற்கு வேண்டிய உள்ளார்ந்த ஆற்றல்கள் பொதிந்துள்ளன. இவற்றை வெளிக் கொணர்ந்து அவனை மேம்படுத்துவதே ஆரம்பக் கல்வியின் பணியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தத்தமது விருத்திக் கேற்ப கற்கும் ஆற்றலுடையது. சில பிள்ளைகள் விரைவாகவும், கெட்டித்தனமாகவும் கற்பர். சிலர் மெதுவாகவும் பின்னடைவு உடையவராகவும் இருப்பர். இன்னும் சிலர் வெக்க சுவாபமுடையவர்களாக இருப்பர். இந்த வேறுபாடுகளை இனங் கண்டு கல்வியை முன்னெடுப்பதிலேயே ஆரம்பக் கல்வியில் வெற்றி தங்கியுள்ளது.

நவீன கல்விச் சீர்திருத்தத்திற்கு முன்பு மாணவர்கள் வெற்றுப் பாத்திரங்களாகவும் வெற்றுக்கற்பலகையாகவும் கணிக்கப்பட்டு ஆசிரியரால் கற்பிக்கப்பட்டார்கள். முதன் முதலாக பாடசாலைக்குச் செல்லும் ஒரு பிள்ளை எதுவுமே அறியாத ஒரு பிள்ளையாகவே கணிக்கப்பட்டு வெற்றுப் பாத்திரத்தில் எவ்வாறு நீரை நிரப்புகின்றதோ அவ்வாறே பிள்ளைக்கு எதுவுமே தெரியாது என்ற நிலையில் ஆசிரியர் தான் விரும்புவதை, சிந்திப்பதை பிள்ளைகள் மீது திணித்தார். பாரம்பரிய வகுப்பறையில் ஆசிரியரே முக்கிய இடம் பெற்றார். ஆசிரியர் பேச பிள்ளை செவிமடுத்தது. உபதேச முறையில் ஆசிரியர் கற்பிக்க பிள்ளை மறுப்பு ஏதும் கூறாத ஐடப் பொருளாக அவ் உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருந்தது. ஆசிரியர் வெறுமனே போதிப்பவராகவும் ஆசிரியர் கூறுவதை மட்டும் பிள்ளை கேட்பதாகவும் காணப்பட்டதோடு பிள்ளைகள் பேச அனுமதிக்கப்படவில்லை. இங்கு கற்பித்தல் மட்டுமே நடைபெற்றது. கற்றல் நடைபெறவில்லை. புத்தகம் கரும்பலகை என்பனவே பிரதான கற்பித்தல் உபகரணங்களாகப் பயன்படுத்தப்பட்டன, இங்கு ஒருவழித் தொடர்பாடலே காணப்பட்டதோடு கரும்பலகையை உபயோகிக்கும் உரிமை ஆரியருக்கு மட்டுமே இருந்தது. ஆசிரியர் தான் மட்டுமே செயற்பட்டதோடு குறிப்பிட்ட சில பிள்ளைகளை எழுத வாசிக்க செய்வதையே தம் கடமை என எண்ணினார். மேலும் வகுப்பறையில் மட்டுமே கற்பித்தல் நடைபெற்றதோடு ஏனைய சமூக வளங்களை பயன்படுத்துவது மிக அரிதாகவே காணப்பட்டது. எழுத்துப் பரீட்சை மாத்திரமே நடை பெற்றதோடு தவறுகளுக்கு கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டதனால் மாணவர்களுக்கான வகுப்பறை கற்றல் சூழல் மிகவும் சலிப்பானதாகவே காணப்பட்டது. வகுப்பறை ஆசிரியரின் ஆதிக்கத்தில் இருந்தமையால் பிள்ளைகள் இருந்த இடத்தில் பயத்துடன் இருந்தனர். இதனால் பிள்ளைகள் ஆசிரியரிடம் எதுவுமே கூறுவதில்லை. கூறினாலும் ஆசிரியர் செவிமடுப்பதில்லை. பிள்ளைகள் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் ஆசிரியர் தான் கற்பித்தது பிள்ளைகளுக்கு விளங்கியதா? என்பதை அறிவதற்குரிய வாய்ப்பும் இல்லாது போயிற்று. பொதுவாக ஆசிரியர், பாட அலகு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் முடிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தாரே அன்றி மாணவர்களுக்கு அப்பாட அலகுகள் பற்றிய பூரண விளக்கத்தை கொண்டிருந்தார்களா என்பது பற்றி நோக்கவில்லை. அதாவது பாட அலகு ஆசிரியரால் நிறைவு செய்யப்பட்டதே அன்றி மாணவர்களால் நன்கு விளங்கி கற்கப்படுகின்றனவா என்பது பற்றி நோக்கப்படவில்லை. தொகுத்து நோக்கின் பாரம்பரியக் கல்வி முறையானது ஆசிரியரை மையப்படுத்தி கல்வி கற்பிக்கப்பட்டதே அன்றி பிள்ளையை மையப்படுத்தி கல்வி கற்பிக்கவில்லை.

இக் குறைபாடுகளை நீக்கி ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு கற்றல் அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இலங்கையில் நவீன கல்விச் சீர்திருத்தமானது ஏற்படுத்தப்பட்டது. இச்சீர் திருத்தத்தின் மூலம் மாணவர்கள் தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப குறிப்பிட்ட பல தேர்ச்சிகளை அந்த அந்த தரங்களினூடாக பெற்றுக் கொள்ள ஆவன செய்யப்பட்டது. பாடசாலைக்கு முதல்முதலாக வரும்பிள்ளை எதுவுமே அறியாத ஒரு பிள்ளையாக வருகின்றது என்ற கருத்து ஏற்றுக் கொள்ள முடியாது. பாடசாலைக்கு செல்லும் முன் ஒரு பிள்ளை எவ்வளவோ அறிந்து கொண்டு வருகின்றது. எத்தனையோ சொந்தங்களை அறிந்து கொண்டு வருகின்றது. அடிப்படை எண்ணக் கருக்கள் தொடர்பான முன்னறிவுடன் வருகின்றது. தனது எண்ணங்களை இலகுவாக வெளியிடக் கூடியதாகவும்

வருகின்றது. ஒரு பிள்ளையின் சிந்தனை வளர்ந்த மனிதனின் சிந்தனை போன்றதல்ல பிள்ளை தொட்டுணரக் கூடிய பொருட்களையே நாளும் காண்பதையே நம்பும், நல்ல தோற்றமுடைய பொருட்களையே விரும்பும் பிள்ளை சூழ்நிலையின் ஒரு பக்கத்தையே பார்க்கும். இதனாலேயே பிள்ளையின் சிந்தனைப் போக்கு வினோதமானதாக எமக்கு தெரிகின்றது. பிள்ளை எந்த ஒரு விடயத்தையும் தன்னுடனும் தன் சூழலுடனும் சம்பந்தப்படுத்தி நோக்கும். பிள்ளை கருவிலேயே கற்கத் தொடங்குகின்றது. பிள்ளை தானாகவே செவிமடுத்தும், பார்த்தும், சுவைத்தும், மணந்தும், தொட்டுணர்ந்தும் செய்து பார்த்தும் பலவற்றை அறிந்து கொள்கின்றது. கையால் மண்ணில் எழுதுதல், கரியால் சுவரில் கீறுதல் போன்ற செயல்கள் மூலம் ஆரம்ப எழுத்துத் திறனை பாடசாலைக்கு வருமுன்பே பிள்ளை பெற்றுக் கொள்கின்றது. பாடசாலைக்குவரும் பிள்ளை பேசவும் செவிமடுக்கவும், கற்றுக் கொண்டே வருகின்றது. மேலும் பெரிது, சிறிது, கூடக்குறைய போன்ற கணித முன் எண்ணக் கருக்களை பிள்ளை அறிந்து கொண்டே வருகின்றது. பாடவும் ஆடவும் அவற்றை இரசிக்கவும் பழகிக்கொண்டே வருகின்றது. வீட்டில் பிள்ளை தனியாகவும், குழுவாகவும் விளையாட்டில் ஈடுபடுகின்றது. ஆகவே பாடசாலைக்கு வருமுன்பே பிள்ளை பல விடயங்களைக் கற்றுக் கொண்டு வருகின்றது. பிள்ளையிடம் காணப்படும் உள்ளார்ந்த ஆற்றல்களை தேர்ச்சிகளை வெளிக் கொண்டுவரும் களமாகவே நவீன கல்விச் சீர்திருத்தத்தில் பாடசாலை விளங்குகின்றது. கற்பித்தல் கலாச்சாரத்திலிருந்து கற்றல் கலாச்சாரத்திற்கும் மதிப்பீட்டுக் கலாச்சாரத்திலிருந்து கணிப்பீட்டுக் கலாச்சாரத்திற்கும், பாட மையத்திலிருந்து தேர்ச்சி தழுவிய மாணவர் மையத்திற்கும் நவீன ஆரம்பக் கல்விச் சீர்திருத்தம் எம்மை இட்டுச் செல்கின்றது. அறிவு, திறன், மனப்பாங்கு விழுமியங்கள் ஆகியன இணைந்த ஒரு இயலுமையே தேர்ச்சி எனலாம். இலங்கை தேசிய ஆணைக் குழுவானது பிள்ளை அடைய வேண்டிய சில தேர்ச்சிகளை முன்வைத்துள்ளது. அதாவது தொடர்பாடல் சார்ந்த தேர்ச்சிகள் இதனுள் எண்ணறிவு, எழுத்தறிவு, சித்திர அறிவு போன்றன உள்ளடக்கப்படுகின்றன. சூழல்சார்ந்த தேர்ச்சிகளுள் சமூகச் சூழல், உயிரியற் சூழல், பௌதீகச் சூழல் என்பன உள்ளடக்கப்படுகின்றன. சமயமும் ஒழுக்கமும் சார்ந்த தேர்ச்சிகளுள் சமய விழுமியங்கள் சம்பிரதாயங்கள் என்பன உள்ளடக்கப்படுகின்றன. விளையாட்டும், ஓய்வு சார்ந்த தேர்ச்சிகளுள் ஒத்துழைப்பு, குழுமுயற்சி, ஆரோக்கியமான போட்டி என்பன உள்ளடக்கப்படுகின்றன. கற்றலுக்கான கற்றல் சார்ந்த தேர்ச்சிகளுள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு ஊடகங்கள் மூலம் கற்றலுக்காக களம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.


நவீன கல்விச் சீர்திருத்தத்திற்கு பின்னர் ஆரம்பப் பிரிவானது மூவகை நிலைகளாகப் பிரிக்கப்பட்டதை நோக்கலாம். அதாவது முதன்மை நிலை ஒன்று இதனுள் தரம் ஒன்றும், தரம் இரண்டும் உள்ளடக்கப்படுகின்றன. முதன்மை நிலை இரண்டு இதனுள் தரம் மூன்றும் தரம் நான்கும் உள்ளடக்கப்படுகின்றன. முதன்மை நிலை மூன்று இதனுள் தரம் ஐந்து உள்ளடக்கப்படுகின்றது. ஒவ்வொரு முதன்மை நிலையிலும் ஒரே ஆசிரியரே கற்பிப்பதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. தரம் ஒன்று மாணவர்கள் அனுமதிக்கப்படும் போது காள்கோள் விழாவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தரம் 6 மாணவர்களுடன் இடைத்தாக்கம் புரியுமாறு நேரசூசிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள தரம் ஒன்றில் இருந்தே வாய்மொழி ஆங்கிலம் அறிமுகப்படுத்தப் படுகின்றது. இணைப்பாட விதானத்திற்கான நேரமும் நேர சூசியில் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னைய கலைத்திட்டத்தில் இருந்த பிள்ளைக்கு பிள்ளை ஒப்பீடு செய்யும் மதிப்பீட்டு முறை மாற்றப்பட்டு தேர்ச்சியை மையமாகக் கொண்ட கணிப்பீட்டு முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டது. பிள்ளைகள் சுயமாக அனுபவங்களைப் பெற்றுக் கொண்டதற்காக செயற்பாட்டு அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பாடப் பரப்புக்கள் குறைக்கப்பட்டு 4 பாடப்பரப்பிற்குள் ஏனைய பாடங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. முன்னைய பாட அறிவுசார் கலைத் திட்டம் மாற்றப்பட்டு தேர்ச்சி அடிப்படையிலான கலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே ஆரம்ப பாடசாலையைச் சிறைக் கூடங்களாகக் கருதி வெளியேறத் துடிக்கும் கைதிகளைப் போல் பாரம்பரிய ஆரம்பக் கல்விமுறையில் மாணவர்கள் இருந்தனர். அந்நிலை இன்று மாறி விளையாட்டில் ஈடுபடும் மாணவன் ஊன் உறக்கமின்றி அதில் வரித்து இருப்பதைப் போல் பிள்ளைகளுக்கு பாடசாலை, வகுப்பறைச் சூழல் மிகவும் இன்பகரமான ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளது. எப்பொழுது மணி அடிப்பார்கள் நாம் எப்பொழுது வீட்டிற்கு செல்வோம் என ஏங்கி இருந்த மாணவரின் பாரம்பரிய வகுப்பறை நிலை மாறி, மணி அடித்த பின்பும் குழுக்கற்றலில் ஈடுபடும் மாணவரை இன்றைய நவீன கல்விச் சீர்திருத்த வகுப்பறையில் காணலாம். பாரம்பரிய வகுப்பறையில் ஆசிரியரிடம் கேள்வி கேட்கப் பயந்த மாணவர்கள் இன்றைய வகுப்பறைகளில் ஆசிரியர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடி தமது சந்தேகங்களை நீக்கிக் கொள்வதை காணலாம். கலைத்திட்டம், பிள்ளைக்காகவே அன்றி ஆசிரியருக்காக அல்ல. புத்தகமும் கரும்பலகையுடன் காணப்பட்ட அன்றைய வகுப்பறைகளைப் போல் அல்லாது இன்றைய வகுப்பறையில் மணல் மூலை, புத்தக மூலை, உபகரண மூலை, ஒப்பனை மூலை, நீர்ச்சட்டி, செயற்பாட்டு மேசை, பிள்ளைகள் எழுதக் கூடிய உயரத்தில் கரும்பலகை, பிள்ளைகளின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தும் காட்சிப் பலகை, வர்ணம் பூசப்பட்ட தளபாடங்கள், செயற்பாடுகளுக்குத் தேவையான களி, மண், விதைகள் போன்ற மூலப் பொருட்கள்,

பிள்ளைகளின் உபகரணங்கள் வைத்துப் பேணத் தட்டுக்கள், கொழுக்கிகள், கற்றல், கற்பித்தல் கருவிகளைப் போட அலுமாரி, காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ள அடைக்கப்பட்ட வகுப்பறை என்பனவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டு 30 - 35 பிள்ளைகளைக் கொண்டமைந்ததாகக் காணப்படு வதோடு வகுப்பறைக்கு வெளியே விளையாட்டு முற்றம், சிறுவர் பூங்கா என்பவைகளையும் கொண்டமைந்துள்ளமையை நோக்கலாம்.

மேலும் நவீன கல்விச் சீர்திருத்தத்தில் விளையாட்டின் மூலம் மாணவர் கற்பதோடு பல்வேறு குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலமும் கற்றுக் கொள்கின்றனர். வெளிக்களச் சுற்றுலாவின் மூலமும், கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். மேலும் பரிசோதனை செய்வதன் மூலமும் சேர்த்து ஆடுதல், பாடுதல், போன்றவற்றின் மூலமும் கற்றலை மேற்கொள்ளுகின்றனர். மேலும் பிள்ளை, பிள்ளைகள் மூலம் கற்பதுடன் இணைப்பாடச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் கற்றலை மேம்படுத்திக் கொள்கின்றனர். ஆசிரியர் கற்பிப்பவராக இல்லாமல், கற்றலுக்கு வசதி அளிப்பவராக இருப்பார். பிள்ளைகள் கூறுவதை ஆசிரியரும் ஆசிரியர் கூறுவதை பிள்ளைகளும் கேட்பர். பிள்ளைகள் தேவைக் கேற்ப சுயாதீனமாக பேசுவதுடன் பல வழித் தொடர்பாடல்களும் இங்கு காணப்படும். கரும்பலகையை பிள்ளைகளும் பயன்படுத்துவதுடன் வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியிலும் கற்றல் கற்பித்தல் நடைபெறும் சமூகவளங்கள் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தப்படுவதுடன் தவறுகளுக்கு தண்டனை வழங்கப்படாது ஆலோசனையும் பரிகாரமும் வழங்கப்படுகின்றது. ஆகையால் வகுப்பறைச் சூழலானது மிக மகிழ்ச்சிகரமாகக் காணப்படுவதை நோக்கலாம்.

தொகுத்து நோக்கில் பாரம்பரிய ஆரம்பக் கல்வி வகுப்பறைக் கற்பித்தல் முறைக்கும் நவீன கல்விச் சீர்திருத்த ஆரம்பக் கல்வி கற்பித்தல் முறைக்கும் இடையே உள்ள இடைவெளியை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். பிரம்புடன் வகுப்பறைக்கு நுழையும் பாரம்பரிய ஆசிரியரை வெறுத்த பிள்ளைகள், கற்பித்தல் உபகரணங்களுடன் புன்சிரிப்புடன் கற்றலுக்கு வழிகாட்டவரும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை நேசிக்கத் தொடங்கிவிட்டார்கள். பழையன கழிதலும் புதியன புகுதலும் மரபு போல ஆரம்பக் கல்வித் துறையானது புதுப் பொலிவுடன் வீறுநடை போட்டு முன்னேறி வருகின்றது. ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் ஆரம்பக் கல்வித் துறையை மேம்படுத்துவதற்கு இயலுமானவரை உழைத்தல் தலையாய கடனாகும்.



விமர்சன நோக்கில் எண்பதுகளுக்கு பிற்பட்ட ஈழத்து நூல்கள்

1. காலச் சூழல்

எண்பதுகள் முன்னைய காலப் பகுதிகளை விட ஈழத்துக் கவிதை, சிறுகதை, நாடகம், ஓவியம் என நவீன கலை இலக்கியத் துறைகள் அனைத்திலும் மாற்றங்கள் ஏற்பட்ட காலத்தின் தொடக்கமாகும்.

எண்பதுகளிலே ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்கள் காரணமாக, முதன்முதலாக ஈழத்தின் எல்லாப் பிரதேசங்களையும் சார்ந்த – எல்லா மாவட்டங்களையும் சார்ந்த- தமிழ்பேசும் மக்கள் அனைவரும் பொதுவான சமூக அனுபவங்களுக் குட்பட்டனர். இத்தகைய பரந்துபட்ட அனுபவம் நாவல் வளர்ச்சிக்கான அடிப்படை அம்சங்கள் ஒன்றென்பது அனைவருமறிந்ததே.

மேற்குறித்தவாறான அரசியல் சமூக மாற்றங்கள் எவை? (சிங்களவர், தமிழர் ஆகிய இரு சமூகங்களுக்கிடையிலான) இனப்பிரச்சினை என்பது குறிப்பாக எண்பது நடுப்பகுதியிலிருந்து அதுவரை காலமும் வகுப்பு வாதமாகக் கருதப்பட்டுவந்த நிலைமாறி 'தேசிய இனப்பிரச்சினை' என்ற நிலைக்கு பரிணாமங் கண்டது. ஒருபுறம் இது தனிநாட்டுக் கோரிக்கை, அதற்கான தமிழீழ விடுதலை இயக்கங்களின் ஆயுதப் போராட்டம் என்பனவாகும். மறுபுறம் அரச இராணுவ ஒடுக்கு முறையின் உச்சமாகவும் விரிவுகண்டது. இத்தகைய சூழ்நிலையில் 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் விளைவாக ஈழத்தமிழர் புலம் பெயர்ந்து ஐரோப்பா, கனடா அவுஸ்திரேலியா, தமிழ்நாடு ஆகியவற்றுக்குச் சென்று வாழத் தொடங்கினர்.


தவிர, ஈழத்தமிழ்ப் பெண்கள் மத்தியில் உயர்கல்வி அதிகரித்தமையும் தமிழீழ விடுதலை இயக்கங்கள் பெண்கள் பிரச்சினைகளில் கரிசனை காட்டத் தொடங்கியமையும் பெண்கள் மத்தியிலேற்பட்ட உலகலாவிய விழிப்புணர்ச்சியும் இக்காலப் பகுதியிலிருந்து பெண்நிலைவாதச் சிந்தனைகள் பரவ வழிவகுத்தன.

மேற்குறித்த அரசியல், சமூக மாற்றங்களின் பின்புலத்திலே எண்பதுகளுக்குப் பிற்பட்ட ஈழத் தமிழ் நாவலின் செல்நெறிகள் எவ்வாறமைகின்றன என்று காண்பது பொருத்தமாகும்.



கலாநிதி செ. யோகராசா
கிழக்குப் பல்கலைக்கழகம்

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்



1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

01. எண்பதுகளிலிருந்து ஈழத்து தமிழ் நாவல்களின் முக்கிய செல்நெறிகள்.

2.1. தேசிய இனப்பிரச்சினை

இக்காலப் பகுதியின் முக்கியமான செந்நெறியாகி தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையும் அதன் விளைவுகளும் வெவ்வேறு விதங்களிலே இக்காலப் பகுதி நாவல்களில் இடம்பெற்றுள்ளன. வசதிக்காக, இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

2.1.1. இராணுவ ஒடுக்கு முறைகள்

இவ்விதத்தில் சித்திரவதைகள், படுகொலைகள் என்பன சித்திரிக்கப்படுதல் எ-டு : செ. யோகநாதனின் **நியாயப்படுத்தப்பட்ட கொலை.**

2.1.2. பரஸ்பர இராணுவ - இயக்க செயற்பாடுகளின் மத்தியிலான அன்றாட வாழ்வு:

எ-டு: தாமரைச் செல்வியின் **தாகம்,** கணேசமூர்த்தியின் **தொடுவானம் தூரத்தில்.** முறையே இவை கிளிநொச்சி பிரதேச மக்களின் வாழ்வையும், யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்வையும் விவரிக்கின்றன.

2.1.3. அகதி நிலையும் இடப் பெயர்வுகளும்

எ-டு: தெணியானின் **சிதைவுகள்,** செ. யோகநாதனின் **துன்பக்கேணியில்,** செங்கை ஆழியானின் **மரணங்கள் மலிந்தபூமி.**

2.1.4. இயக்கங்களின் போராட்டங்கள்:

எ-டு: துரையின் **சுயம்வரம்,** மலரவனின் **போருலாகு** கோவிந்தனின் **புதிய உலகம்;** இவற்றில் "சுயம்வர"த்தின் உரு பகுதியும் "போருலா"வின் முழுப்பகுதியும் இயக்க மொன்றின் போராட்டச் செயற்பாடுகள் பற்றி விவரிப்பன. **புதிய உலகம்** இயக்கமொன்றின் செயற்பாடுகள் பற்றி விமர்சிப்பது.

2.1.5. அண்மைக்கால (யாழ்ப்பாண) மக்களின் வாழ்வு:

குறிப்பாக, நீண்டகாலத்தின் பின் இராணுவத்தினாட்சிக் குட்பட்ட மக்களின் வாழ்க்கை நிலை சித்திரிக்கப்படுதல். எ-டு: செங்கையாழியானின் **மோரே நீ மோ.**

2.1.6. முற்பட்ட ஈழத்தமிழரது வாழ்வு:

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளின் உந்தல் காரணமாக முன்னைய வாழ்க்கை நிலை பற்றிச் சித்தரித்தல் எ-டு செ. யோகநாதனின் **நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே,** வ, அ. இராசரத்தினத்தின் **ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது.** இவற்றில் தமிழரது நீண்டகால வரலாற்றைச் சொல்வது என்ற விதத்திலே அதன் முதற்பகுதியாக குறிப்பாக சென்ற நூற்றாண்டு யாழ்ப்பாணத் தமிழரின் வாழ்க்கையை விவரிப்பது முதல்நாவல். ஏறத்தாழ, முப்பதுகளளவிலான திருகோணமலைப் பிரதேசம் சார்ந்த ஆலங்கேணி மக்களது வாழ்க்கையை விவரிப்பது அடுத்த நாவல்.

2.2. புகலிட நாவல்கள்

புகலிடக் கவிதைகள், சிறுகதைகள் என்பனவற்றுடன் ஒப்பிடும்போது புகலிடத்திலிருந்து, வெளிவரும் நாவல்கள் எண்ணிக்கை ரீதியில் குறைவாகும். (கவிதை, சிறுகதை என்பனவற்றைவிட) நாவல் வடிவம் ஆழ்ந்தகன்ற அனுபவத்தை விழைந்து நிற்பதும் அத்தகைய நிலை ஏற்பட்ட அதிக காலமெடுப்பதும், புகலிட அனுபவங்கள் அத்தகைய வாய்ப்பினை மிக அண்மைக்காலமாகவே தருவதும் இதற்கான - அதிக நாவல்கள் வெளிவராமைக்கான - காரணமாகின்றன. ஆயினும் இப்புகலிட நாவல்களில் பின்வரும் செல்நெறிகளை ஓரளவு இனங்காண முடிகின்றது.

2.2.1. ஈழத்து தமிழரது பிரச்சினைகள்

நுணுகி நோக்கும் போது இவற்றினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

2.2.1.1. இராணுவ ஒடுக்கு முறைகள் / இயக்கங்களின் போராட்டங்கள்:

'ஆதவன்' எழுதிய (முற்றுப்பெறாத தொடர்கதையாகிய) **மண் மனம்** குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் பொதுவாக ஈழச்சூழலில் இடம்பெற்ற விடயங்கள் பற்றிச் சித்திரிப்பதனையும் துரை எழுதிய **சுயம்வரம்** 1987 இல் வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற 'ஒபிரேசன்' முதற் கடற்சமர் முதலியனபற்றி பேசுவதையும் இங்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். இத்தியாதி விடயங்கள் ஈழத்திலிருந்து எழுதப்படுவதை விட புகலிட நாடுகளிலிருந்து எழுதப்படும் போது கூடுதலான எழுத்துச் சுதந்திரம் இருப்பதையும் விமர்சன ரீதியில் கூற வாய்ப்பிருப்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது. இவ்வாறான படைப்புகளில் அது வெளிப்படுவது குறிப்பிடத்தக்கது.

2.2.1.2. சாதிப் பிரச்சினை/சீதனப் பிரச்சினை:

முறையே பார்த்திபன் எழுதிய **வித்தியாசப்படும் வித்தியாசங்கள்,** **ஆண்கள் விற்பனைக்கு** என்பன இவ்விதத்தில் நினைவு கூரப்பட வேண்டியன. புகலிட நாட்டு அனுபவங்களே (அங்குவாழும் தமிழர் மத்தியில் இவை நிலவி வருவது காரணமாக) இவை எழுதுவதற்கு மறைமுக உந்து சக்தியளிக்கின்றன என்பது கவனத்திற்குரியது.

2.2.2. புகலிடத் தமிழரது வாழ்க்கை:

ஜேர்மனியில் அகதி முகாமொன்றில் வாழும் தமிழ் இளைஞர்களின் நாளாந்த வாழ்க்கையைச் சித்திரிக்கும் பார்திபன் எழுதிய (முற்றுப் பெறாத தொடர்கதையாகிய) **கனவை மிதித்தவன்,** அத்தகு பின்னணியில் அண்மைக்காலத்தில் பொ. கருணாமூர்த்தி எழுதிய **வானம் வசப்படும்** என்பன இவ்வித செல்நெறிக்குச்

சில எடுத்துக் காட்டுகளாம். இலண்டன் வாழ் தமிழ் இளைஞர்கள், குடும்பங்கள் பற்றி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிவரும் நாவல்களும் விதந்துரைக்கற்பாலனவே. (எ-டு: **உலகமெல்லாம் வியாபாரிகள், தேம்ஸ் நதிக்கரையில்)** இத்தகைய நாவல்கள்யாவும் குறிப்பிட்ட வட்டத்தினுள் சுழல (தியாகலிங்கம் எழுதிய) **'அழிவின் அழைப்பு'** விந்தியாசமான பின்னணியில் எயிட்ஸ் நோய்க்குள்ளாகிய தமிழ் இளைஞனது மனவுணர்வுகளைச் சித்தரிக்கின்றது.

2.2.3. புகலிட நாட்டினது வாழ்க்கை:

ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வை முதன்மைப்படுத்த தமிழ் எழுத்தாளர் எழுதிய நாவல்கள் எதுவும் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. (அத்தகு சிறுகதைகள் சில வெளியாகியுள்ளன). ஆயினும் முற்குறிப்பிட்ட நாவல்கள் சிலவற்றில் (எ-டு: **தேம்ஸ் நதிக்கரையில், அழிவின் அழைப்பு)** புகலிட நாட்டு மக்களது வாழ்வு அவற்றில் ஒரு பகுதியாக இணைந்து இடம் பெற்றுள்ளது. இவற்றுள் டேனிஷ் குடும்பமொன்றின் வாழ்வு இடம்பெறும் 'சுயம்வரம்' குறிப்பிடத்தக்கது. மேலைத் தேயத்தவரது நற்பண்புகள் இங்கு பேசப்பட்டுள்ளன.

தவிர, தமிழ்நாட்டு மக்களது வாழ்க்கையை விதந்து பேசும் ஈழத்து எழுத்தாளரது நாவல்கள் சில வெளியாகியுள்ளன. ஜெயலலிதா காலத்துத் தமிழ்நாட்டு அரசியல் நிலை பற்றிச் சித்தரிக்கும் (செ. கணேசலிங்கனின்) **ஒரு அரசியலின் கதை,** சிவகாசி சிறுவர் உழைப்புப் பற்றிப் பேசும் **'அடைப்புகள்'** சூழல் மாசடைதல் பற்றி எழுந்துள்ள **நரகமும் சொர்க்கமும்** முதலியன இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கன.

2.3. பெண்நிலை வாதம்

மேற்கூறியவாறு வகைப்படுத்திப் பார்ப்பது ஈழத்து கவிதைகளுக்கும், சிறுகதைகளுக்குமே பொருந்தக்கூடியது. ஏனெனில், இத்தகைய நோக்குடைய நாவலாசிரியைகள் ஈழத்தில் மிகக் குறைவே. சாதாரண குடும்ப வாழ்விலே பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றிப் பேசும் ஒரு **நாவலினைத்** தவிர (கோகிலா மகேந்திரனின் **தூவானம் கவனம்)** விதந்துரைக்க வேறெதுவுமில்லை. ஆயினும் பெண்நிலைவாதச் சிந்தனை கொண்ட பாத்திரங்கள் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் சில நாவல்கள் (எ-டு: உலகமெல்லாம் வியாபாரிகள்) இடம் பெற்றுள்ளன.

ஆயினும் பெண்நிலைவாத நோக்குடன் ஆண் நாவலாசிரியர்கள் எழுதியுள்ள சில நாவல்கள் (எ-டு. செ. யோகநாதனின் **தனியாக ஒருத்தி,** செ. கணேசலிங்கனின் **வன்முறை வடுக்கள், உலகச் சந்தையில் ஒரு பெண்,** கவனத்திற்குரியன.

3. ஏனைய செல் நெறிகள்

3.1. சாதிப் பிரச்சினை

முன்னர் (எழுபதுகள் போன்று இக்காலப் பகுதியிலும் சாதிப்பிரச்சினை பற்றிய நாவல்கள் வெளிவந்துள்ளன. அடிநிலை மக்களது ஏறத்தாழ நூற்றாண்டுக்கால சாதிரீதியான ஒடுக்கு முறையும் அண்மைக்காலம் வரையிலான அவர்களது வாழ்க்கைப் போராட்டமும் பற்றிய டானியலின் பல நாவல்கள் **(பஞ்சமர், அடிமைகள், கானல், தண்ணீர், கோவிந்தன், பஞ்சகோணங்கள்)** இக்காலப் பகுதியிலேயே வெளியாகின. முதற்காலகட்ட (குறிப்பாக, செ. கணேசலிங்கனின்) நாவல்கள் போன்று தெளிவான வர்க்கப் பார்வை இவற்றிலே வெளிப்படவில்லை யெனினும் இவை நாவலாசிரியரது நேரடியான அனுபவங்களினதும் ஆழமான தேடல்களினதும் பதிவுகள் என்பது முக்கியமானது.

தவிர, பிராமணச் சாதியினர் பற்றிய இருநாவல்களின் வரவு இக்காலப்பகுதியில் நிகழ்ந்துள்ளது. தமிழ்நாடு போன்று ஈழத்திலே பிராமணர் அதிக எண்ணிக்கையினருமல்ல. பொருளாதார ரீதியில் உயர்ந்தவர்களுமல்லர். இத்தகையவர்களின் வாழ்வுப் போராட்டங்களையே (தெணியான் எழுதிய) **பொற்சிறையில் வாடும் புனிதர்கள்,** (ஈழத்துச் சோமு எழுதிய) **விடிவெள்ளி வந்தது** ஆகிய படைப்புகள் வெளிப்படுத்துகின்றன.

மேலும், உயர்வர்க்கத்தினரில் ஒரு சாரராகிய மணியகாரர், உடையார் ஆகியோரின் இன்றைய வாழ்நிலையையும், அவர்களது வீழ்ச்சியையும் முதன்மைப்படுத்தி எழுதப்பட்ட (தெனியானின்) **மரக்கொக்கு** நாவலும் இக்கால படைப்புகளுள் குறிப்பிடத்தக்கதே.

3.2. சீதனப் பிரச்சினை

இப்பிரச்சினையும் சாதிப் பிரச்சினை போன்று ஈழத்தமிழ்ச் சூழலில் முக்கிய இடம் பெற்றுள்ளதெனினும் முன்னர் போன்றே இக்காலப் பகுதியிலும் இப்பிரச்சினை ஈழத்து எழுத்தாளரை ஈர்த்துக் கொண்டது குறைவு. ஓரிரு நாவல்களே வெளிவந்துள்ளன. புகலிடச் சூழலிலிருந்து வெளியான ந. பார்த்திபன் எழுதிய **ஆண்கள் விற்பனைக்கு** இவ்விதத்தில் முக்கியமானது.

3.3. தொழிலாளர் வாழ்க்கை

முன்னர் போன்று இக்காலப் பகுதியிலும் இத்தகைய நாவல்கள் வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் மலையக தொழிலாளர் பற்றி வெளிவந்துள்ள நாவல்களுள் சில குறிப்பிடத்தக்கன. குறிப்பாக மாத்தளை சோமு எழுதிய **எல்லை தாண்டா அகதிகள்** என்ற நாவல் களுகங்கைப் பிரதேசத்தில் மாணிக்கக்கல் தோண்டும் மக்கள் வாழ்க்கை பற்றியும் ஞானசேகரின் **லயத்துச் சிறைகள்,** தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கை பற்றியும் செ. யோகநாதனின் **மீண்டும் வந்த சோளகம்** மீனவத் தொழிலாளர் வாழ்க்கை பற்றியும் சித்தரிப்பன.

கடந்த சில வருடங்களாக, ஈழத்தில் இயங்கிவரும்ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் (முஸ்லிம்) தொழிலாளர் பற்றியும் அவர்களது தொழிற்சங்கப் போராட்டம் பற்றியும் சித்தரிக்க முற்படுகிறது என்ற வித்திலே திக்வெல்லை கமாலின் **'ஒளி பரவுகிறது'** கவனிக்கப்படவேண்டிய படைப்பாகிறது.

3.4. பிரதேச நாவல்கள்

தமிழ்நாட்டுடன் ஒப்பிடும்போது ஈழத்துத் தமிழ் பேசும் மக்கள் தொகையும்வாழ்விடப் பரப்பும் குறைவானதே. அத்துடன் இவர்கள் வாழும் பிரதேசங்கள் அருகருகே உள்ளனவாகவும் பரப்பளவில் குறுகியனவாயுமுள்ளன. ஆயினும் இத்தகைய பிரதேசங்களிடையே வாழ்வோரிடம் பண்பாட்டு ரீதியில் ஒருமைப்பாடு நிலவினும் நுணுகி நோக்கும் போது வேறுபாடுகளும் தனித்துவப் பண்புகளும் (அசமத்துவ ரீதியிலான வளர்ச்சி நிலையும்) காணப்படுகின்றன. இப்பின்னணியில் ஈழத்திலே பிரதேச நாவல்களின் வரவு தவிர்க்க இயலாததே. முன்னைய காலகட்டம் போன்று அதிக அளவிலான பிரதேச நாவல்கள் இப்போது வெளிவரவில்லையாயினும் சில குறிப்பிடத்தக்க நாவல்கள் வெளிவந்துள்ளன. (ஆயினும் ஈழத்திலே இன்றுவரை வெளிவந்துள்ள பிரதேச நாவல்களின் தொகை குறைவானதுதான்). பின்வருவன இவ்விதத்திற் குறிப்பிடற்பாலன.

3.4.1. யாழ்ப்பாணம்/நயினாதீவு

இவ்விதத்திலே தேவகாந்தன் எழுதிய கனவுச்சிறை நயினாதீவு மக்களின் குறிப்பிட்ட காலப்பகுதி வாழ்க்கை நிலைமைகளை ஓரளவு தத்ரூபமாக வெளிப்படுத்த முற்படுகிறது. (இந்நாவல் தொடர்ந்து எழுதப்படவுள்ள ஐந்து நாவல்களின் முதற்பாகம்)

3.4.2. யாழ்ப்பாணம்/ வடமராட்சி

முன்னர் குறிப்பிட்ட துரை எழுதிய **'சுயம்வரம்'** நாவலின் நடுப்பகுதி போராட்டம் ஆரம்பித்த எண்பதுகளின் பிற்பகுதியில் இப்பிரதேச மக்களது வாழ்க்கையை நுணுக்கமாகப் படம்பிடிக்கிறது.

3.4.3. அம்பாறை/அக்கரைப்பற்று

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் **தில்லையாற்றங் கரை** நாவல் கிராம மக்களின் வாழ்வினைச் சித்திரிப்பது.

3.4.4. வடமேல் மாகாணம்/நீர்கொழும்பு

நீர்கொழும்பூர் முத்துலிங்கம் எழுதிய ஒரு **உதயத்தின் அஸ்தமனம்** நீர்கொழும்புப் பிரதேச மக்களது வாழ்க்கையின் சிற்சில அம்சங்களை அழகாக வெளிக்கொணர முற்படுகின்றது.

3.4.5. திருகோணமலை/ஆலங்கேணி

வ. அ. இராசரத்தினம் எழுதிய **'ஒரு வெண்மணல் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது'** என்ற நாவல் இப்பிரதேச மக்களின் வாழ்க்கை நிலைமைகளைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுகின்றது.

3.4.6. தென்னிலங்கை/திக்வெல்லை

முன்னரும் திக்வெல்லைப் பிரதேச முஸ்லீம் மக்களின் வாழ்க்கையை எழுத்திலே பதிவு செய்த திக்வெல்லை கமால் **'ஒளி பரவுகிறது'** நாவலில் பிறிதொரு கோணத்தில் அதனை வெளிப்படுத்தியுள்ளார்.

3.4.7. மட்டக்களப்பு/ஓட்டமாவடி

வை. அகமத் எழுதிய **'கிராமத்துப் பெண்'** இப்பிரதேச முஸ்லீம் மக்களது வாழ்க்கையினை மேலோட்டமாக சித்தரித்திருப்பினும் சுவைபடச் சொல்லுகிறது.

3.4.8. மலையகம்

இவ்விதத்திலே 'மாத்தளை சோமு'வின் பல படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் **'நான்காவது உலகம்'** மலையகத்தில் அரசுசார்பற்ற நிறுவனங்கள் செய்யும் சுரண்டல்களையும், **'ஆயுதங்கள்'** இங்கு தலைதூக்கும் போராட்ட நிலைமைகளையும் அழகாக வெளிப்படுத்துகின்றன.

3.5. முஸ்லீம் மக்களது வாழ்க்கை

தமிழ்நாடு போலன்றி, ஈழத்திலே முஸ்லீம் மக்கள் (தமிழ் மொழி பேசினும்) தம்மைத் தனி இனமாகக் கருதுகின்ற நிலையுள்ளது. இதனால் ஈழத்தமிழ் இலக்கியத்திலே முஸ்லீம் இலக்கியம் என்பது தனி இடத்தைப் பெற்றுள்ளது. இவ்விதத்தில் முற்கூறப்பட்ட **ஒளி பரவுகிறது, ஒரு கிராமத்துப் பெண்** முதலானவற்றோடு ஜுனைதா ஷெரிப் எழுதிய நாவல்களுட் சிலவும் **(எ-டு : சாணக்கூறை)** கவனத்திற்குரியது.

3.6. வித்தியாசமான படைப்புகள்:

வித்தியாசமான களங்கள், பிரச்சினைகள் கொண்ட நாவல்கள் என்ற விதத்திலே சில குறிப்பிடத்தக்கன. செங்கை ஆழியான் எழுதிய **'ஓ அந்த அழகிய கிராமம்'** (சூழலியல் காடழித்தல் பற்றிச் சித்தரிப்பது என்பதுடன்) தொடர்புடையது. முற்குறிப்பிட்ட **'சொர்க்கமும் நரகமும்'** தமிழ் நாட்டினைக் களமாகக் கொண்டாலும் சூழலியலுக்கு முதன்மை கொடுப்பது, செ. யோகநாதன் எழுதிய 'கிட்டி' காட்டு வாழ் மக்கள் பற்றியது.

இதுவரை கூறப்பட்டவை தொடர்பாக இரு விடயங்கள் கவனத்திற்குரியன. முக்கியமான படைப்புகளே எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ளன என்பது ஒன்று. பொழுதுபோக்கு அம்சங்கள் மிகுந்த நாவல்கள் (இவை தமிழ்நாட்டுடன் ஒப்பிடும் போது ஈழத்தில் குறைந்தளவே வெளிவருகின்றன) இங்கு கவனத்திற் கொள்ளப்படவில்லை. (எ-டு: சோ. ராமேஸ்வரனின் பல படைப்புகள்) என்பது மற்றொன்று.

மேற்கூறப்பட்டுள்ளவாறான ஈழத்துத் தமிழ் நாவல்களின் செல்நெறிகள் பற்றித் தொகுத்துப்

பார்க்கும்போது - தமிழ் நாட்டுடன் ஒப்பிடுகையில் - இரு புதிய செல்நெறிகள் விதந்துரைக்கப்பட வேண்டியனவாகின்றன. தேசிய இனப்பிரச்சினையும் புகலிட அனுபவங்களுமே அவை. இவ்விதத்தில், இவை பொதுவான தமிழ்நாவல் செல்நெறிகளுடன் சங்கமித்துக் கொள்கின்றன என்பதிலே தவறில்லை.

மேலும், முன்னைய காலகட்டச் செல்நெறிகளின் தொடர்ச்சியாக இக்காலப் பகுதியிலே எழுந்துள்ள சாதிப் பிரச்சினை பற்றிய டானியலின் நாவல்கள் தமிழில் தலித் நாவல்களின் தோற்றத்தினை ஈழத்திலிருந்து ஆரம்பிக்க வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

4. இக்காலப்பகுதி நாவல்களின் படைப்பாக்க முறைமை

இனி, மேற்கூறப்பட்ட ஈழத்து நாவல்களின் படைப்பாக்க முறைமை பற்றிக் கூர்ந்து அவதானிக்கும் போது அது முக்கியமாக இரு தடங்களில் அமைந்து வந்துள்ளமை புலப்படுகிறது.

4.1. விவரண ரீதியிலான பதிவு

இக்காலப் பகுதிக்குரிய பொரும்பாலான நாவல்கள் இப்பண்பினமே. இதுபற்றி நாவலாசிரியரொருவரின் கூற்றினை எடுத்தாள்வது பொருத்தமானது. அது பின்வருமாறு.

> "இத்தகைய மாபெரும் மக்கள் வெளியேற்றத்தைச் சுட்டிக் காட்டி நாவல் வடிவில் பதிவு செய்யும் நோக்கிலேயே இந்நாவலை எழுத முயன்றேன்.... மேலே கூறப்பட்ட நிகழ்வுகள், சூழ்நிலை, சம்பவங்களை மட்டுமே மாதிரியாகக் கொண்டு ஒருசில பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மூலம் சுட்டிக்காட்ட முனைந்தேன்...."

இத்தகைய விவரணப் பதிவிலான நாவல்களில் பின்வரும் பண்புகள் இடம் பெற்றுள்ளன.

அ. நாவல் நிகழ்ச்சிகள்/ சம்பவங்களின் தொகுப்பாதல்.

ஆ. இயல்பான பாத்திர உருவாக்கமும் உரையாடலும் இடம்பெறல்.

இ. கதையம்சம் முக்கியம் பெறுதல்.

4.2. கருத்து, கருத்தியல் விளக்கம்

மேற்குறிப்பிட்ட பண்பிலான நாவல்களில் பின்வரும் பண்புகள் இடம் பெற்றுள்ளன.

அ. பாத்திரங்கள் எலும்புக்கூடுகளாக அமைதல்.

ஆ. பிரசாரம் முதன்மை பெறுதல்.

இ. ஒரே பாணியில் அமைதல்.

ஈ. செயற்கைப் பாங்குடன் அமைதல்.

உ. நாவல் நிகழ்ச்சிகள், சம்பவங்களின் தொகுப்பாதல்.

ஊ. கதையம்சம் முக்கியம் பெறுதல். அல்லது முக்கியம் பெறாமை.

இவ்விருவகைப் படைப்பாக்க முறைமை கொண்ட நாவல்கள் சில விதங்களில் ஒன்றுபடுகின்றன. அவையாவன,

அ. உலக நோக்கு அல்லது வாழ்க்கை பற்றிய தரிசனம்.

அ. பாத்திரங்களின் அகவுணர்வுகள் வெளிப்படாமை.

இ. மொழிநடை வளம் பெறாமை.

ஈ. படைப்பாக்க முறைமையிலும் கலையழகிலும் கவனஞ் செலுத்தாமை.

உ. எடுத்தாளப்படும் பிரச்சினைகள் பன்முகத் தன்மையுடன் இடம் பெறாமை, ஆழமாக அணுகப்படாமை.

5. மதிப்பீடு

5.1. எண்பதுகளிலே, புதிய செல்நெறிகளுக்கு எடுத்துக்காட்டான நாவல்கள், முன்னர் குறிப்பிட்டது போன்று (கவிதை, சிறுகதை ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது) பெருமளவு வெளிவரவில்லை.

5.2. எனினும் புதிய செல் நெறிகளாக இனங்காணப்பட்ட தேசிய இனப்பிரச்சினை பற்றிய நாவல்களும் புகலிட நாவல்களும் பொதுவான தமிழ்நாவல் வளர்ச்சிக்கு ஈழத்து நாவல் துறையின் பங்களிப்பாகின்றன.

5.3. எண்பதுகளில், முன்னைய செல்நெறிகளின் தொடர்ச்சியாக அமையும் சாதிப்பிரச்சினை பற்றிய (டானியலின்) நாவல்கள் தமிழில் தலித் நாவல்களின் முன்னோடிகளாக அமைகின்றன. இவ்விதத்திலே அவை தமிழ் நாவல் வளர்ச்சிக்கு ஈழத்து நாவல் துறையின் பங்களிப்பாகின்றன.

5.4. புதிய செல்நெறிகள் என்ற விதத்தில் கவனிக்கப்பட்ட நாவல்களின் முக்கியத்துவம் உள்ளடக்கம் சார்ந்ததே தவிர படைப்பாக்க முறைமை சார்ந்ததன்று.

5.5. எண்பதுகளின் தமிழக நாவல் செல்நெறிகளுடன் ஒப்பிடும் போது ஈழத்து நாவல்கள் உள்ளடக்க ரீதியிலே ஓரளவு ஒப்பிடக் கூடியனவே தவிர, படைப்பாக்க முறையிலே தேக்க நிலையையே எட்டியுள்ளன. இதற்கான காரணங்கள் விரிவான ஆய்வை நாடி நிற்கின்றன.

(பிகு:-) இக்கட்டுரை 1998ல் எழுதப்பட்டது. எனவே இதற்குப் பின்வந்த நாவல்கள் - உதாரணமாக, தெணியானின் **காத்திருத்தல்**, ஸம்ஸின் **ஒரு கிராமத்துக் கனவு** முதலான படைப்புகள் இங்கு கவனத்திற்குள்ளாகவில்லை.)

மிதக்கும் நாணய மாற்று வீத முறை
ஒரு கோட்பாட்டு ரீதியான விளக்கம்

த. இராஜேஸ்வரன்
B.A. Hons. (Ceylon) M. Phil (Peradeniya)
முதுநிலை விரிவுரையாளர், பொருளாதாரத்துறை,
பேராதனை பல்கலைக்கழகம்

அறிமுகம்

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் பல வகைப்படும், அவையாவன இறைக்கொள்கை, பணக்கொள்கை, வர்த்தகக் கொள்கை, நாணய மாற்று வீதக் கொள்கை என்பவையாகும். ஏனைய கொள்கைகளைப் போன்று நாணய மாற்று வீதக் கொள்கையும் பேரினப் பொருளாதார இலக்குகளில் முன்னேற்றகரமான மாற்றங்களை மேற்கொள்வதற்கு பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. எனினும் திறந்த பொருளாதார கொள்கையைப் பின்பற்றும் நாடுகளில் நாணய மாற்று வீதக் கொள்கையானது ஒப்பீட்டு ரீதியில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. அத்துடன் அண்மைக்காலத்தில் நாடுகள் தாராள பொருளாதாரக் கொள்கையில் அதிக அக்கறை காட்டி வந்ததினைத் தொடர்ந்து உலகில் மிதக்கம் நாணய மாற்று வீதமானது பிரபல்யம் அடைந்துள்ளது. இன்று சர்வதேச நாணய நிதியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஏறக்குறைய 65 சத வீதமான நாடுகள் மிதக்கும் நாணய மாற்று வீத முறையினையே பின்பற்றி வருகின்றன. இக் கட்டுரையானது மிதக்கும் நாணய மாற்று வீதம் நிர்ணயிக்கப்படும் முறை, அதன் வகைகள், அம்முறையின் நன்மைகள் என்பனவற்றை விளக்குகின்றது.

நிர்ணயிக்கப்படும் முறை

அந்நிய செலாவணி சந்தையில் நாணயங்களுக்கான கேள்வி, அவற்றின் நிரப்பல் என்பனவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் நாணய மாற்று வீதம் மிதக்கும் நாணய மாற்று வீதம் எனப்படும். இங்கு அந்நிய நாணயங்களுக்கான கேள்வியானது பொருட்கள் தேவைகளை இறக்குமதி செய்யும் போதும், மாற்றல்கள், வருமானம் என்பனவற்றின் கொடுப்பனவின் போதும், வெளிநாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளும் போதும், வெளிநாட்டுக்குக் கடன்களை வழங்கும் போதும், கடன்களை திருப்பி அடைக்கும் போதும் ஏற்படுகின்றது. அந்நிய நாணயங்களுக்கான நிரம்பலானது பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி செய்யும் போதும், மாற்றல்கள், வருமானம் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளும் போதும், வெளிநாட்டில் இருந்து கடன்களைப் பெற்றுக் கொள்ளும் போதும், வெளிநாட்டு முதலீடுகளை உள்நாட்டில் அனுமதிக்கும் போதும் ஏற்படுகின்றது.

ஒரு நாட்டின் பொருட்கள், சேவைகள், மாற்றல்கள், வருமானம், கடன், முதலீடுகள் என்பனவற்றின் கொடுக்கல் வாங்கல்கள் எப்போதும் ஒரே அளவாக இருப்பதில்லை. அவை தொடர்ச்சியாகவும் விரைவாகவும் மாறிக்கொண்டே இருக்கும். இதனால்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்
1852 2002
150 ஆண்டுகள் நிறைவு சிறப்பிதழ்

வெளிநாட்டு நாணயத்திற்கான கேள்வி, நிரம்பலிலும் தொடர்ந்தும் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். எனவே இதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் நாணயமாற்றுவீதத்திலும் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இச் செய்முறையின் காரணமாக இவ் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் நாணய மாற்று வீதம் மிதக்கும் நாணய மாற்று வீதம் என அழைக்கப்படுகின்றது. மிதக்கும் நாணய மாற்று வீதத்தினைத் தளம்பும் நாணய மாற்று வீதம் அல்லது நெகிழும் நாணய மாற்று வீதம் எனவும் அழைப்பர்.

வகைகள்

இம் முறையில் நாணய மாற்று வீதம் நிர்ணயிக்கப்படும் போது அந்நிய செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் எவ்வித நேரடியானதும், மறைமுக மானதுமான தலையீடும் இல்லாத நிலையில் நாணய மாற்று வீதம் நிர்ணயிக்கப்படுமாயின் அவ்வாறு நிர்ணயிக்கப்படும் நாணய மாற்று வீதம் தூய மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீதம் என அழைக்கப்படும். தூய மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீதமானது சுயேட்சையாக மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீதத்தில் இருந்து வேறுபட்டது. அந்நிய செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் நேரடியாக தலையீடு இல்லாத நிலையில் நிர்ணயிக்கப்படும் நாணய மாற்று வீதமே சுயேட்சையாக மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீதம் எனப்படுகின்றது. அந்நிய செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி அவ்வப்போது நேரடியாகத் தலையிட்டு அந்நிய நாணயங்களை கொள்வனவு, விற்பனவு செய்வதன் மூலம் நாணய மாற்று வீதத்தில் ஏற்படும் குறுங்காலத் தளம்பல்களை கட்டுப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு நிர்ணயிக்கப்படும் நாணய மாற்று வீதம் கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கும் நாணய மாற்று வீதம் எனப்படும். அடுத்து மிதக்கும் நாணய மாற்று வீத வகைகள் பற்றியும் விரிவாக நோக்குவோம்.

முதலில் தூய மிதக்கும் நாணய மாற்று வீதத்தினை (pure floating exchange rate) நோக்கின் கோட்பாட்டு ரீதியாகத் தூய மிதக்கும் நாணய மாற்று வீதம் தொடர்பான இரு அம்சங்கள் மிகவும் அடிப்படையானவையாகும். ஒன்று நாணய மாற்று வீதம் கேள்வி நிரம்பற் சக்திகளின் ஊடாக நிர்ணயிக்கப்படுகின்றது. மற்றையது, நாணய மாற்று வீத மாற்றங்கள் ஊடாக சென்மதி நிலவையானது தானாகவே சமப்படுத்தப்படுகின்றது. (Suzuki, 1980).

முதலாவது அம்சத்தினைச் சற்று விரிவாக நோக்கின் தூய மிதக்கும் நாணய மாற்று வீதமானது அந்நிய செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயங் களுக்கான கேள்வி அதன் நிரப்பல் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். இம்முறையின் கீழ் அந்நிய செலாவணிச் சந்தையில் நாணய அதிகாரிகளின் உறுதிப்படுத்தும் எவ்வித தலையீடும் இடம்பெறமாட்டாது. இதனால் இம்முறையின் கீழ் வெளிநாட்டு நாணயங்கள் கேள்வி நிரம்பல் அமுக்கங்களுக்குட்பட்டு நாணய மாற்று வீதமானது இடைவிடாது தொடர்ச்சியாக மாற்றமடைந்து கொண்டிருக்கும். இம்மாற்றம் தொடர்ச்சியானதாகவும் விரைவானதாகவும் தன்னியக்கமாகவும் ஏற்படும் (Gupta, 1978). எனவே ஒரு யதார்த்தமான நாணய மாற்று வீத்தினை இம்முறையில் காணலாம். ஆனால் தூய மிதக்கும் நாணய மாற்று வீத முறையானது மெய் உலகில் அதன் தூய வடிவில் ஒருபோதும் கைக்கொள்ளப்படவில்லை.

மிகவும் திறந்த மிதக்கும் நாணய மாற்று வீதத்தினை நோக்கி அசைவதற்கு அநேக நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன (Quirk, 1989). அவற்றுள் வளர்ச்சியடைந்த அந்நிய செலாவணிச் சந்தை, முன்னோக்கிய நாணயச் சந்தை, இறக்குமதி அனுமதிப்பத்திர முறை நீக்கம், திறந்த பொது அனுமதிப்பத்திர முறை, இறுப்புக்களின் சீர்திருத்தம், மூலதன தாராள மயமாக்கம் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இரண்டாவது அம்சத்தினைச் சற்று விரிவாக நோக்கின் இங்கு நாணய மாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றம் காரணமாகச் சென்மதி நிலுவையானது தானாகவே சமப்படுத்தப்படும். இம்முறையின் கீழ் சென்மதி நிலுவையினைச் சமப்படுத்துவதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டிய தில்லை. இங்கு சென்மதி நிலுவையின் சமநிலையைப் பேணுவதற்கு மிதக்கும் நாணய மாற்று வீதம் செயற்திறன் வாய்ந்ததாக இருக்க வேண்டுமாயின் இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன. ஒன்று ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி அதிகமானதாகவும், மற்றது சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கினைச் சரிப்படுத்துவதற்கு வட்டி வீதம் போதியளவு நெகிழ்ச்சி உடையதாகவும் இருக்க வேண்டும்.

அடுத்து கட்டுப்படுத்தப்பட்ட மிதக்க விடப்பட்ட நாணய மாற்று வீதத்தினை (managed floating exchange rate) நோக்கின் இங்கு அந்நிய செலாவணிச் சந்தையில் கட்டற்ற சந்தைச் சக்திகளின் செயற்பாட்டால் நாணய மாற்று வீதம் நிர்ணயிக்கப்படும். அத்துடன் தற்காலிக அல்லது குறுங்காலத் தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாணய அதிகாரிகள் எப்போதும் அந்நிய செலாவணிச் சந்தையில் நேரடியாகத் தலையிடலாம். ஆரம்பத்தில் நாணய மாற்று வீதத்தில் விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சர்வதேச ஒதுக்குகள்

பயன்படுத்தப்பட்டது. தொடர்ந்து வந்த காலப்பகுதியில் இந்த அணுகுமுறைக்குப் பதிலாக பணவீக்க வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டது (Suzuki, 1980).

அந்நிய செலாவணிச் சந்தையில் தலையிடுவது மத்திய வங்கியின் கைகளில் இருக்கின்றது. மத்திய வங்கி சுதந்திரமான நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்டிருக்கின்ற போதிலும் இதனை அரசியல் அதிகாரிகள் கட்டுப்படுத்தலாம். இது சிறந்த தீர்மானத்தினை மேற்கொள்வதினைத் தடுக்கலாம் (Wallich, 1980).

குறிப்பிட்ட திசையில் செல்லும் நாணய மாற்று வீத அசைவுகளைக் குறைப்பதற்காக மத்தியவங்கி தலையிட்டால் அது காற்றுக்கு எதிர்த்திசையில் சாய்தல் (leaning against the wind) எனவும், குறிப்பிட்ட திசையில் நாணய மாற்று வீத அசைவுகளைத் தீவிரப்படுத்துவதற்கு தலையிட்டால் அது காற்றுப்பக்கம் சாய்தல் (leaning with the wind) எனவும் அழைக்கப்படும் (Appleyard and Field, 1995).

இம்முறையின் கீழ் ஒன்றில் நிலையான நாணய மாற்று வீத முறையின் கீழ் உள்ளது போல உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்ட நாணய மாற்று வீதமும் இல்லை. அதேவேளை தூய மிதக்கும் நாணய மாற்று வீத முறையில் உள்ளது போன்று தொடர்ச்சியாக மாற்றம் அடையும் நாணய மாற்று வீதமும் அனுமதிக்கப்படுவது இல்லை. நாணய அதிகாரிகளின் தலையீடு தீவிரமாக இருப்பின் கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கவிடல் முறை நிலையான நாணய மாற்று வீத (சம பெறுமதி) முறைக்குக் கிட்டியதாகவும் இருக்கும். நாணய அதிகாரிகளின் தலையீடு குறைவாக இருந்து நாணய மாற்று வீத அசைவுகள் தொடர்ச்சியாக அனுமதிக்கப்படுமாயின் இது தூய மிதக்கும் முறைக்கு கிட்டியதாக இருக்கும் (Gandolfo1987).

இந் நாணய மாற்று வீத்தின் கீழ் நபர்கள் தங்களது பொதுப் பொருளாதாரக் கொள்கை நோக்கங்களுக்கு இசைவாகப் பொருத்தமான நாணய மாற்று வீதத்தினைத் தெரிவு செய்யலாம். எனினும் ஒரு நாடு மற்றைய நாடுகளைப் பாதிக்கக் கூடிய வகையில் அதேசமயம் தன்னுடைய குறிப்பிட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்காகக் கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கவிடலைக் கையாளும் போது இந்த நடத்தை அசுத்த மிதக்கவிடல் (dirty floating) என அழைக்கப்படும் (Appleyard and Field, 1995).

சுயேச்சையாக மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீதமானது தூய மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீதத்திற்கும் கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீதத் திற்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள உள்ள ஒரு நாணய மாற்று வீதமாகும். இந் நாணய மாற்று வீதமானது தூய மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீத வகை போன்ற தளம்பலைக் கொண்டிருக்கமாட்டாது. அதேசமயம் கட்டுப்படுத்தப் பட்ட மிதக்கவிடல் போன்ற அசைவையும் கொண்டிருக்கமாட்டாது. இங்கு பணத்துறை அதிகாரிகளின் மறைமுக தலையீடு இருப்பதால் நீண்ட காலத்தில் இவ்வகை நாணய மாற்று வீதம் கட்டுப்படுத்தப்பட்டு மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீதத்திற்குரிய பண்புகளையே அதிகம் கொண்டதாகக் காணப்படும்.

இம்முறையின் கீழ் பணத்துறை அதிகாரிகள் அந்நிய செலாவணிச் சந்தையில் நேரடியாக தலையிட மாட்டார்கள். எனவே சமநிலை நாணய மாற்று வீதத் தினை நிர்ணயிப்பதில் இருந்தும் சமப்பெறுமதியினைப் பாதுகாப்பதில் இருந்தும் அவர்கள் விலகி இருப்பார்கள். இங்கு பணத்துறை அதிகாரிகள் தலையீடு மறைமுகமாக மட்டுமே காணப்படும். இவர்கள் பணக்கொள்கை, இறைக்கொள்கை, வர்த்தகக் கொள்கை, செலாவணிக் கொள்கை என்பனவற்றில் மாற்றங்களைக் கொண்டு வந்து அந்நிய செலாவணிச் சந்தையில் பங்கு கொள்வோர் (வர்த்தகர்கள், நிதிநிறுவனங்கள், தரகர்கள்) மீது செல்வாக்கினைச் செலுத்துவதன் மூலம் நாணய மாற்று வீதத் தினை நிர்ணயிப்பதில் தாக்கத் தினை ஏற்படுத்துகின்றனர்.

1973 இல் பிரிட்டன்வூட்ஸ் முறை முறிவடைந்ததினைத் தொடர்ந்து நிலையான நாணய மாற்று வீத விதிமுறைகள் கைவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து முக்கிய கைத்தொழில் நாடுகள் மிதக்கும் நாணய மாற்று வீத முறையினைப் பின்பற்றின. எனினும் இம் மிதக்கும் நாணய மாற்று வீதமானது நிதியத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை. மிதக்கும் நாணய மாற்று வீதமானது உறுதியின்மை, குறிப்பிட்ட இலக்கு இன்மை, விரைவாக மாறும் தன்மை, ஒழுங்கின்மை என்பவற்றை ஏற்படுத்துவதாக இருக்கின்றது (Rangrajan, 1979). இதனால் சர்வதேச நாணய நிதியம் தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு வழிகாட்டல் விதிகளை அறிமுகப்படுத்தியது. இவ் வழிகாட்டல் விதிகள் 1976 இல் கைவிடப்பட்டன.

1976 இல் செய்து கொள்ளப்பட்ட யமெக்கா உடன்படிக்கையினைத் தொடர்ந்து மிதக்கும் நாணய மாற்று வீத முறையானது சட்டபூர்வமாக்கப்பட்டது. இவ் உடன்படிக்கை 1978 இல் அமுலுக்கு வந்தது. இவ் உடன்படிக்கையின் சரத்துக்களின் படி நாடுகள் தாம் விரும்பிய நாணய மாற்று வீத முறைகளை தெரிவு செய்யலாம். இதன் படி இன்று அனேக உலக நாடுகள் ஏதோ ஒரு வகையான மிதக்கும் நாணய மாற்று வீதத்தினை பின்பற்றி வருகின்றன.

நன்மைகள்

தூய மிதக்கும் நாணய மாற்று வீத முறையினைப் பின்பற்றுவதால் கோட்பாட்டு ரீதியாக பின்வரும் நன்மையினை ஒரு நாடு அடைந்து கொள்ளலாம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. மிதக்கும் நாணய மாற்று வீத முறையின் கீழ் சந்தை சக்திகளின் தடையற்ற செயற்பாட்டால் சென்மதி நிலுவை தன்னியக்கமாகவே சமநிலை அடைகின்றது. எனவே சென்மதி நிலுவையினைச் சரிப்படுத்த ஒரு நாடு இம் முறையின் கீழ் சர்வதேச ஒதுக்குக்களை நிர்வகிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே இந் நாணய மாற்று வீத முறை சர்வதேச திரவத்தன்மைப் பிரச்சினை என்பதொன்றினை இல்லாமற் செய்கின்றது.

இந் நாணய மாற்று வீத முறையின் கீழ் சென்மதி நிலுவை எளிமையாக சமப்படுவதால் ஒரு நாடு உள்நாட்டுப் பொருளாதார இலக்கினைச் சரியாக வழிப்படுத்தப் பணக்கொள்கையையும் இறைக் கொள்கையையும் சுதந்திரமான முறையில் பயன்படுத்தலாம் (Appleyard and Field, 1995). ஆகவே மிதக்கும் நாணய மாற்று வீத முறை உள்நாட்டு கொள்கைச் சுதந்திரத்தினை உறுதிப்படுத்தும் முறையாக இருக்கின்றது. மேலும் இந் நாணய மாற்று வீத முறை, வர்த்தகம் செலாவணி கட்டுப்பாடுகளை அனுமதிப்பது இல்லை என்பதால் சர்வதேச வர்த்தகம் மூலதனப்பாய்ச்சல் என்பவற்றை ஊக்குவிக்கவும் சிறந்ததாக இருக்கின்றது (Chacholiades, 1990).

மிதக்கும் நாணய மாற்று வீத முறையின் கீழ் சென்மதி நிலுவை தன்னியக்கமாகச் சமப்படுத்தப்படுவதால் வெளிநாட்டு அதிர்ச்சியில் இருந்து உள்நாட்டுப் பொருளாதாரத்தினை பாதுகாக்கவும் இம்முறை உதவுகின்றது. (Lindert, 1995) உதாரணமாக ஒரு நாட்டில் பொருளாதார பின்னடைவு ஏற்படுகின்றபோது அது மற்றைய நாட்டின் ஏற்றுமதி வருமானத்தினை வீழ்ச்சியடையச் செய்யும். இது ஏற்றுமதி நாட்டின் ஏற்றுமதி வருமானத்தினைக் குறைப்பதால் பெறுமதித் தேய்வினை ஏற்படுத்தும். இதனால் ஏற்றுமதி, இறக்குமதி போட்டிக் கைத்தொழில்களின் உற்பத்தி தூண்டப்படும். இப்படியாக ஒரு நாடு வெளிநாட்டு அதிர்ச்சியில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றது. அத்துடன் மிதக்கும் நாணய மாற்று வீத முறையின் கீழ் நாணய மாற்று வீதம் மிகவும் யதார்த்தமாக இருப்பதால் ஒரு நாடு அதன் ஒப்பீட்டு நன்மையினை முழுமையாக அனுபவிப்பதும் சாத்தியமாகும் (Salvatore, 1987)

மிதக்கும் நாணய மாற்று வீத முறையானது தமது நாட்டு மக்களுக்கு விருப்பமான உள்நாட்டுப் பணவீக்கத்தினைத் தடையின்றித் தெரிவுசெய்யவும் உதவுகின்றது. வேலையின்மை பணவீக்கத் தொடர்பின் அடிப்படையில் பார்க்கும் போது நிறைதொழில் மட்டத்தில் அதிகளவு கவனம் செலுத்தும் பற்றாக்குறை நாடுகள் சரியான வேலையின்மை பணவீக்க கலப்பினைத் தெரிவு செய்வதற்கு இந் நாணய மாற்று வீத முறை சாத்தியமானதாக இருக்கின்றது.

அரசாங்க தலையீடற்ற ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் விலைப் பொறிமுறையினூடாக உற்பத்தி பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது அங்கு சாதன உருக்கீடு உத்தமமான முறையில் இடம் பெறுகின்றது. இதே போன்று மிதக்கும் நாணய மாற்று வீத முறையின் கீழ் அந்நிய செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயங்களின் கேள்வி நிரம்பல் ஆகியவற்றில் ஏற்படுகின்ற உண்மையான மாற்றங்களை அனுசரித்து உள்நாட்டில் சாதன ஒதுக்கீட்டினை மேற்கொள்ளும் போது அது உத்தமமான முறையில் அமைய வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே சர்வதேச வர்த்தகத்தின் மூலம் உள்நாட்டில் உத்தம சாதன ஒதுக்கீட்டினை ஏற்படுத்த இந் நாணய மாற்று வீத முறை சிறந்தது.

மிதக்கும் நாணய மாற்று வீத முறையின் கீழ், உத்தேச நடவடிக்கையானது நாணய மாற்ற வீதத்திற் தளம்பலை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பிறீட்மன் (Friedman, 1953) இந் நாணய மாற்று வீத முறையில் உறுதியைக் குலைக்கும் உத்தேச நடவடிக்கை காணப்படமாட்டாது எனக்கூறுகின்றார். உத்தேச நடவடிக்கையாளர்கள் இலாபகரமான வியாபாரத்தில் தான் ஈடுபடுவார்கள். எனவே நாணயத்தின் விலை குறைவாக இருக்கும் போது வாங்கி கூடிய விலையில் விற்று இலாபம் பெறுவார்கள். எனவே உத்தேச நடவடிக்கை எப்போதும் உறுதியாக இருக்கும். எனவே இந் நாணய மாற்று வீத முறையில் தளம்பல் ஏற்படமாட்டாது.

இலங்கை அனுபவம்

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் 1977 நவம்பர் வரை நிலையான நாணய மாற்று வீத முறையையே பின்பற்றி வந்தது. இருந்த போதிலும் 1960 இல் இருந்த இலங்கை சென்மதி நிலுவை பிரச்சினையை தொடர்ச்சியாக அனுபவித்து வந்ததால் இக்காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட நாணய மாற்று வீத கொள்கையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டது. அவற்றில் 1967 இல் கொண்டுவரப்பட்ட 20 சத வீத நாணயப் பெறுமதியிறக்கம், 1968 இல் கொண்டுவரப்பட்ட அன்னிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் (இரட்டை நாணய மாற்று வீத முறை), 1972 இல் கொண்டுவரப்பட்ட மாற்றத்தக்க ரூபா கணக்குத் திட்டம் (பல் நாணய மாற்று வீத முறை) 1977 ஒக்தோபர் - நவம்பரில் கொண்டுவரப்பட்ட நகர்கின்ற சம முறை என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

1977 நவம்பரின் பின் நாணய மாற்று வீதக் கொள்கையில் அடிப்படை மாற்றம் கொண்டு வரப்பட்டது. இதற்கு இலங்கையின் சென்மதி நிலுவைப் பிரச்சினை தீவிரம் அடைந்தமையும் தாராளப் பொருளாதார கொள்கைச் சீர்திருத்தப் பொதி அறிமுகப்படுத்தப்பட்டதும் பிரதான காரணங்களாக இருந்தன. இதன்படி, முதலில் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம், மாற்றத்தக்க சூபா கணக்குத் திட்டம், நகர்கின்ற சம முறை என்பன நீக்கப்பட்டன. அடுத்து பீக்ஸ் (FEECS) வீதமும் உத்தியோகபூர்வ நாணய மாற்று வீதமும் ஒருங்கிணைக்கப்பட்ட சூபா மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. இறுதியாக நாணய மாற்று வீதமானது சந்தைச் சக்திகளின் செயற்பாட்டின் அடிப்படையில் நிர்ணயிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு நிர்ணயிக்கப்படும் மிதக்கும் நாணய மாற்று வீத முறையின் கீழ் நாணய மாற்று வீதங்களில் ஏற்படும் ஒழுங்கற்ற தளம்பல்களைச் சரிப்படுத்துவதற்காக மத்திய வங்கி தேவையேற்படும்போது அந்நிய செலாவணி சந்தையில் தலையிட்டது. இதனால் இந் நாணய மாற்று வீத முறை கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கவிடல் முறை என அழைக்கப்படுகின்றது.

2001 ஜனவரி இறுதிப்பகுதியிலிருந்து இதுவரை பின்பற்றப்பட்டு வந்த நாணய மாற்று வீத முறையில் மேலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இதற்கு இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மோசமடைந்து வந்தமையும் சர்வதேச நிதி நிறுவனங்களின் நிர்ப்பந்தங்களும் பிரதான காரணங்களாக இருந்தன எனக் கூறப்படுகின்றது. இதன்படி மத்திய வங்கி அந்நிய செலாவணிச் சந்தையில் தலையிட்டு நாளாந்த கொள்வனவு, விற்பனவு வீதங்களை அறிவிக்கும் முறையைக் கைவிட்டு சந்தைச் சக்தியின் போக்கிற்கு ஏற்ப சமநிலை நாணய மாற்று வீதத்தினை நிர்ணயிப்பதற்கு அனுமதித்தது. இது சுயேச்சையான மிதக்கவிடல் எனப்படும். இச் சுயேச்சையான மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீத முறையானது எமது ஏற்றுமதியினை ஊக்குவித்து, இறக்குமதியினைக் கட்டுப்படுத்தி நீண்டகாலத்தில் சென்மதி நிலுவைப் பிரச்சினையின் தாக்கத்தினைக் குறைத்து, எமது வெளிநாட்டு (சொத்துக்களை) ஒதுக்குக்களை அதிகரிக்க உதவும் என்ற எதிர்பார்ப்பில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

முடிவுரை

ஒரு நாடு எத்தகைய நாணய மாற்று வீத முறையினைப் பின்பற்ற வேண்டும் என்பது உலகப் பொருளாதாரத்தின் போக்கு, குறிப்பிட்ட நாடு சர்வதேச சந்தையில் தங்கியிருக்கும் அளவு, உள்நாட்டின் பொருளாதார முறை என்பனவற்றில் தங்கியிருக்கும். பொதுவாக நாணய மாற்று வீத முறையானது பரஸ்பரம் பொருளாதார தங்கியிருத்தலை இலகுபடுத்துகின்ற ஒரு பொறிமுறையாக இருக்க முடியுமே அன்றி இது உலகின் தற்போதைய வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான பிரச்சினைக்கெல்லாம் நிவாரணம் அளிக்கக் கூடிய ஒன்றாக அமையாது என்பது முக்கிய அம்சமாகும்.

References

1. Appleyard, D. R. and A. J. Field. (1995) International Economics, Chicago: Richard D. Irwin Inc.
2. Chacholiades, M. (1990) International Econimics, Singapore: McGraw-Hill Publishing Company Ltd.
3. Driskill, R. (1987) "Flexible Exchange Rate", in J. Eatwell and others (eds.)

   The New Palgrave: A Dictionary of Economics, Vol. 2. London: Macmillan Press Ltd.
4. Friedman, M. (1953) "The Case for Flexible Exchange Rates", in M. Feiedman Essays in Possitive Economics, Chicago: University of Chicago Press.
5. Gandolfo, G. (1987) International Economics - 11, Berlin: Springer-Verlag.
6. Gupta, K. R. (1978) International Economnics, New Delhi: Atma Ram and Sons.
7. Lindert, P. H. (1995) International Economics, Delhi: All India Traveller Book Seller.
8. Quirk, P. J. "The Case for open Foreign Exchange System", Finance and Development, 26 (2): 30-33.
9. Rangrajan, C. (1989) "The Exchange Rate System: Some Key Issues", the Indian Economic Review, 36 (3): 14-27.
10. Salvatore, D. (1987) International Economics, Singapore: McGraw-Hill Book Company
11. Suzuki, H. (1980) "On the Efficiency of the Generalized Floating System", in D. Bigman and T. Taya (eds.) the Functioning of Floating Exchange Rate, Cambridge: Ballinger Publishing Company.
12. Wallich, H. C. (1980) "Floating as seen from the Central Bank", in D. Bigman and T. Taya (eds.) The Functioning of Floating Exchange Rate, Cambridge: Ballinger Publishing Company.

சிந்தனை செய் மனமே!

கலாநிதி ப. சரவணகுமார்
தாவரவியற் பிரிவு
பேராதனைப் பல்கலைக்கழகம்,
போராதனை

மனிதனின் ஆளுமைக்கும் அவனின் ஆற்றலுக்கும் பிரதான காரணமாக விளங்குவது மொழியே. அம்மொழிக்கு ஊற்றாக விளங்குவது எண்ணமே. மொழியானது தகவல் பரிமாற்றத்திற்கும் கலாசார மேம்பாட்டிற்கும் இணையற்ற துணையாக விளங்குகிறது. மனிதனின் முதல் மொழி எது என அறியாவிடினும் கற்கால மனிதன் ஒலிக்குறியீடுகளையும் அங்க அசைவுகளையும் உபயோகித்து தனது எண்ணங்களை பரிமாறிக்கொண்டான் என்பதை அறியக்கூடியதாயுள்ளது. தற்கால மனிதன் பல்வேறுபட்ட உலக மொழிகளை உபயோகித்து தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்கிறான். மொழியின் பரிமாண வளர்ச்சியானது பல்வேறு நாடுகளில் பல்வேறு கலாச்சார பின்னணிகளுக்கிடையில் கடந்த நூற்றாண்டுகளாக பெருவளர்ச்சி பெற்றுள்ளது. இதில் நவீனயுக இணையத்தின் தாக்கமும் பெருமளவில் காணப்படுகின்றது. விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்ட சம்பவமானது நெருப்பைக் கண்டறிந்ததிலிருந்து ஆரம்பித்தது. இச்சம்பவத்திலிருந்து பல்வேறு கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அவை மனித குல முன்னேற்றத்திற்கு ஆதாரமாய் அமைந்தது.

உலகமயமாக்கலில் பிரதான கருத்தாக முன்வைக்கப்படுவது உலகமெங்கும் ஒரே மொழி எனும் நிலைப்பாடாகும். ஆங்கிலத்தின் மூலமாக விஞ்ஞானம் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் வளர்ச்சி பெற்ற நிலையில் இருப்பினும் பெரும்பாலான அபிவிருத்தி அடைந்த நாடுகள் ஆய்வுகளை மேற்கொள்ளவும் அவற்றின் முடிவுகளை வெளிப்படுத்தவும் தத்தம் சொந்த மொழியையே உபயோகிக்கின்றன.

அதே சமயத்தில் இருமொழிக்கொள்கை சில நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது. உதாரணமாக இலங்கையில் பள்ளி மற்றும் பல்கலைக்கழகங்களில் தாய்மொழியும் (தமிழ் அல்லது சிங்களம்) ஆங்கிலமும் போதனா மொழிகளாக காணப்படுகின்றன. இது வரவேற்கத்தக்கதாகும்.

தற்கால ஆங்கிலமொழி மற்றும் அவற்றின் வரிவடிவம் பல்வேறுபட்ட மொழியியலாளர்களின் முயற்சியாலேயே உருவானது. ஆங்கிலம் காலத்திற்கு காலம் புதிய சொற்களை உள்வாங்கி விஞ்ஞான வளர்ச்சிக்கு பேருதவி புரிகின்றது. தமிழிலும் இத்தகைய இயைபுத்தன்மை உருவாக்கப்படுதல் காலத்தின் கட்டாயமாகவுள்ளது. சில ஆங்கிலச் சொற்களை (விஞ்ஞானம் சார்ந்த) நேரடியாக தமிழ்மொழிக்குள் உள்வாங்குவது சிறந்த பலாபலனை அளிக்கக் கூடியதாய் அமையும்.

பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த ஜேக்கப் மற்றும் மௌனாட் போன்ற விஞ்ஞானிகள் மரபுக்கூறின் செயற்பாடுகளை

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

1852 LIGHT DISPELS DARKNESS 2002

150 ஆண்டுகள் நிறைவு சிறப்பிதழ்

தம் சொந்த மொழியிலேயே கண்டறிந்தனர். இலத்தீன் மொழியானது பல்வேறு உயிரினங்களின் மற்றும் உயிர்ச்சுவடுகளின் பெயரிடுதலுக்கும் உதவிகரமாய் அமைந்தது. ஜேர்மன், ரஷ்யன், பிரஞ்சு, ஜப்பான், சீன மொழிகளில் பல்வேறு கண்டுபிடிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. யதார்த்தபூர்வமாக நோக்குமிடத்து, மனித சமூகத்தின் நாகரீக வளர்ச்சியானது பலதரப்பட்ட சிந்தனையாளர்களால் பல்வேறு காலகட்டங்களில் வெளிப்படுத்தப்பட்ட தூரநோக்கான கருத்துக்களில் தங்கியிருக்கின்றது. இதில் மொழியானது முக்கிய பங்காற்றியிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

மனித மனமானது சிறந்ததோர் ஆற்றலைக் கொண்டது. நமது எண்ணமே நமது ஆற்றலுக்கான மூல வித்து. எதை நாம் அடைய விரும்புகிறோமோ அதை கற்பனையில் கொண்டால் காலப்போக்கில் அது உருப்பெருகிறது. இது ஞானிகளும் விஞ்ஞானிகளும் கண்டறிந்த உண்மை. எமது வாழ்நாளில் உயர்வான இலட்சிய நோக்குடைய எண்ணங்களை வளர்த்துக்கொண்டால் அது காலப்போக்கில் உருப்பெற்று நம் கண் முன்னால் வந்து நிற்பதைக் காணலாம். உருப்பெறும் எண்ணங்களுக்கு மொழியே விடிவுகாலாக அமைகின்றது. எண்ணங்கள் மொழி வடிவில் உருமாற்றமடைகின்றன. இது மொழிச்சிந்தனை என அழைக்கப்படுகிறது. மனித மூளையில் எண்ணத்தை தோற்றுவிக்கும் செயலானது சிக்கல் நிறைந்தது. ஒருங்கு திரண்ட செயற்பாடுகள் மூளையில் செயலாக்கம் பெற்று துரித கதியில் மொழியாக மாற்றமடைகின்றன. ஓர் மனிதனால் மொழியின்றி சிந்திக்கவியலாது. அவன் சிந்திக்கக்கூடிய சிறந்தமொழி அவன் பிறப்பிலிருந்து உழன்றுவந்த தாய்மொழியே. பின்பு அதன் தேவைக்கேற்ப பவ்வேறு மொழி வடிவில் மொழி பெயர்க்கப்படலாம்.

ஆக தன்னம்பிக்கை ஏற்பட தமிழ்மொழியில் சிந்தித்து தமது ஆற்றலை மாசற அம்மொழியில் விருத்தி செய்த பின்பு பிறமொழியைத் தழுவுவதே சிறந்த பயனைத் தரக்கூடியதாய் அமையும்.


மனத்தின் மாண்பு எதுவோ அதுவே மனிதனின் மாண்பு.

ஆதாரம்:

Fodor. J. A. The Modularity of Mind: An Essay on Faculty Physiology, MIT Press, Cambridge.

எம். எஸ். உதயமூர்த்தி, எண்ணங்கள், கங்கை புத்தக நிலையம், சென்னை. 1998

Sribir Sen. Does Language influence original thinking, Current Science 79 (8) 1044 - 1045, 2000.



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் ஒரு நோக்கு

பேராசிரியர் க. அருணாசலம்
தமிழ்த்துறை,


இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையுலகில் பலநூற்றுக் கணக்கான கவிஞர்கள் 'கவிதை' என்னும் பெயரில் பல்லாயிரக் கணக்கான படைப்புகளைத் தந்துள்ளனர். எனினும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை அல்லது நவீன தமிழ்க் கவிதை என்றதும் எமது மனத்திரையில் முதலில் வருபவர் யுகப்பெருங் கவிஞனான பராதியாரே. இருபதாம் நூற்றாண்டில் அவரை விஞ்சிய அல்லது அவருக்குச் சமமான கவிஞர் எவரும் தோன்றவில்லை. அவருக்கடுத்த நிலையில் கவிதைத் துறையிற் சாதனை படைத்தவர்கள் என்ற வகையில் பாரதிதாசன், கண்ணதாசன் முதலியோர் வரிசையில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமும் முக்கிய இடம் பெறுகிறார். தமிழகத்தின் பொதுவுடைமைக் கவிஞர்களுள் முன்னணியில் திகழ்பவர் அவர்.

இவ்வுலகில் இருபத்தொன்பது ஆண்டுகள் (1930 - 1959) மட்டுமே உயிர்வாழ்ந்த பட்டுக்கோட்டையார் தமது பாட்டுத் திறத்தாலே குழந்தைகள் முதல் முதியோர் வரை, கற்றறிந்தவர்கள் முதல் கல்வியறிவில்லாப் பாமரர்வரை, செல்வந்தர்கள் முதல் ஏழை விவசாயிகள், தொழிலாளர் முதலியோர்வரை பல திறத்தினரையும் அதிக அளவிற் கவர்ந்தார்; மக்கள் கவிஞராக மலர்ந்தார்.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், செங்கப்படுத்தான்காடு என்னும் கிராமத்தில் கலையார்வம் மிகுந்த ஏழை விவசாயக் குடும்பம் ஒன்றில் 13-4-1930 ஆம் ஆண்டு பிறந்து வளர்ந்த அவர் அதிகம் படித்ததில்லை. முதலில் ஏழை விவசாயியாகவே விளங்கினார். பின்னர் மாடு மேய்ப்பவராகவும் மாட்டு வியாபாரியாகவும், மாம்பழ வியாபாரியாகவும், இட்லி வியாபாரியாகவும், முறுக்கு வியாபாரியாகவும், தேங்காய் வியாபாரியாகவும், கீற்று வியாபாரியாகவும் மீன், நண்டு பிடிக்கும் தொழிலாளியாகவும் உப்பளத் தொழிலாளியாகவும், சாரதியாகவும், தண்ணீர் வண்டிக்காரனாகவும், நடிகனாகவும் செயற்பட்டு மக்கள் கவிஞனாகப் பரிணமித்தார்.

பட்டுக்கோட்டையார் தமது பதினேழாவது வயதில் 1947 ஆம் ஆண்டு 'நண்டு செய்த தொண்டு' என்னும் தலைப்பில் பாடிய பாடல் அவருக்குக் கவிஞன் என்னும் அங்கீகாரத்தை வழங்கியது. 1950 களிலேயே அவரது அதிகமான பாடல்கள் இயற்றப்பட்டன. ஏழை விவசாயக் குடும்பம் ஒன்றிற் பிறந்து வளர்ந்த கல்யாணசுந்தரம் இயல்பாகவே ஏழைகள், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியோர் மீது பரிவும் பாசமும் கொண்டிருந்தார். இத்தகைய கல்யாணசுந்தரம், தன்னையும் தனது சுற்றுப்புறச் சூழ் நிலைகளையும் உணரத் தொடங்கிய பருவத்திலேயே இந்திய விடுதலைப் போராட்டம் மிகவும் உக்கிரம் பெற்று 'செய் அல்லது செத்துமடி' என்னும் நிலையில் விளங்கியது. அதே சமயம் தமிழகப் பொதுவுடைமைக் கட்சியும் இயக்க ரீதியாக முனைப்புடன் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்



1852 2002

150 ஆண்டுகள் நிறைவு சிறப்பிதழ்

போராடிக் கொண்டிருந்தது. திராவிட இயக்கமும் இந்திய விடுதலையையடுத்து உக்கிரமாகச் செயற்படலாயிற்று.

இத்தகையதொரு சூழ்நிலையிலேயே, சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பி வறுமையில் வாடிப் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு புடமிட்ட தங்கமாகி, மக்கள் கவிஞராகப் பட்டுக்கோட்டையார் பரிணமிக்கலானார். தமிழகத்தின் பகுத்தறிவு இயக்கமும் பொதுவுடைமை இயக்கமும் அவரை வெகுவாகக் கவர்ந்தன. இவ்விரு இயக்கங்களும் நடாத்திய பிரசாரக் கூட்டங்களிற் கலந்து கொண்டு கவிதை மழை பொழிந்தார்.

1948 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பொதுவுடைமைக் கட்சி தடைசெய்யப்பட்டதாயினும் 1951 ஆம் ஆண்டு தடை நீக்கப்பட்டது. பொதுவுடைமைக் கட்சி தடை செய்யப்பட்ட போதும் அதன் பின்னரும் கல்யாணசுந்தரம் பொதுவுடைமைக் கட்சியின் தீவிர ஆதரவாளராக விளங்கினார். இதேகாலப் பகுதியிலேயே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடன் நெருங்கிய நட்புக் கொண்டார்; திரையுலகிலும் நுழைந்தார்.

அதேசமயம் கல்யாணசுந்தரம் வெறுமனே கவிதைகளை இயற்றுவதுடன் ஒதுங்கிவிடவில்லை. உழவனின் மகனாகப் பிறந்து வளர்ந்து உழவுத் தொழிலும் பிற தொழில்களிலும் ஈடுபட்ட அவர், உழவர்களினதும் தொழிலாளர்களினதும், ஏழைகளதும் துயரங்களையும் அவலங்களையும் கண்டு உள்ளமுருகினர்; அவர்களினது துயர்துடைக்கத் தன்னாலியன்றளவு பாடுபட்டார்; அவற்றைத் தமது பாடல்களிலும் துல்லியமாக வெளிப்படுத்தினார். தனது நண்பர்களான சிவராமன், இரணியன் முதலியோருடன் சேர்ந்து 'விவசாய இயக்கத்தைக் கட்டியெழுப்பப் பாடுபட்டார். "தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்" 1955 ஆம் ஆண்டில் திண்டுக்கல்லில் நடாத்திய "மாநில விவசாயிகள் மாநாட்டில், கண்ணின் மணிகள்" என்னும் நாடகத்திற்கு வீறார்ந்த பாடல்களை இயற்றியளித்தார்; அந்நாடகத்தில் அவரும் நடித்தார். கல்யாணசுந்தரம் தமது வாழ்நாளின் இறுதிவரை விவசாயிகளையும், தொழிலாளர்களையும், விவசாய இயக்கத்தையும் பொதுவுடைமைச் சிந்தனைகளையும் மறக்காது செயற்பட்டார்.

திரையுலகிற் பங்குகொள்ளும் நோக்குடன் சென்னையை அடைந்த கல்யாணசுந்தரம் இறுதிவரை தனது சுயத்தை இழக்காது புகழ்பூத்த திரைப்படப் பாடல்கள் பலவற்றை இயற்றியளித்தார். பொதுவுடைமைக் கொள்கைகளை வெறுமனே பிரகடனங்களாகவோ கோஷங்களாகவோ வெளிப்படுத்தாது அவற்றை உள்வாங்கிப் பாமரமக்களும் இலகுவிற்புரியும் வண்ணம் இலகுதமிழில் பாடினார். திரையுலகிற் பிரவேசித்ததைத் தொடர்ந்து கல்யாணசுந்தரத்தின் புகழ் ஓங்கலாயிற்று. எனினும் அவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தான் வரித்துக் கொண்ட பொதுவுடைமைக் கருத்துக்களையும் தான் பிறந்து வளர்ந்த விவசாய, தொழிலாளர் வர்க்கத்தையும் முன்னேறிவந்த பாதையையும் மறந்தாரில்லை. தமிழ்நாட்டுப் பொதுவுடைமைக் கட்சியின் தினசரிப் பத்திரிகையான 'ஜனசக்தி' யையும் அதன் இலக்கிய ஏடான 'தாமரை' யையும் வாயார வாழ்த்தி நாவாரப் போற்றிப் புகழ்ந்து பல பாடல்களை வடித்தார். இவ்வகையிலே "தாமரை என்றொரு ஏடு மலர்ந்தது" என்னும் தலைப்பில் அவர் பாடியுள்ள பாடல்கள் மனங்கொளத்தக்கவை.

மனித சக்தியிலும் மனிதனது உழைப்பிலும் அபார நம்பிக்கை கொண்டிருந்த பட்டுக்கோட்டையார் 1957 ஆம் ஆண்டு "மனித சக்தி" என்னுந் தலைப்பில் பாடியுள்ள பாடல் இங்கு நோக்கத்தக்கது.

> "சந்திரனைத் தொட்டதின்று மனித சக்தி
> சரித்திரத்தை மீறியது மனிதசக்தி
> இந்திரன்தான் விண்ணாட்டின் அரசனென்ற
> இலக்கணத்தை மாற்றியது மனிதசக்தி
> இந்திரனும் முடியரசாய் இருக்கொணாது
> எனும் குறிப்பைக் காட்டியது மனிதசக்தி
> மந்திரமா வெறுங் கதையா இல்லை; இல்லை
> மனிதசக்தி; சோவியத்தின் மனிதசக்தி"[1]

இந்திய விடுதலையின் பொருட்டுப் பல தசாப்தங்களாகத் திலகர், விபினசந்திரபாலர், லாலா லயபதிராய், வல்லவாய் பட்டேல், காந்தி, வ.உ.சி., சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங், பாரதி முதலிய பெருமக்கள் செய்த தியாகங்கள், போராட்டங்கள் அளப்பில. ஆயின் இந்திய சுதந்தரம் பெற்றபின் கண்டதென்ன? இந்திய விடுதலைப் போராட்ட முன்னணி வீரர்களுள் முதல்வரான காந்தி ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டார். சுதந்திரத்தின் பின் சுயநலமும் சூதுவாதும் பிரிவினைகளும் பெருகலாயின; காந்தீயம் காலடிகளில் நசுங்குண்டு சருகாயிற்று. சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகளும் தீவிரம் பெறலாயின. அரசியலானது சாக்கடையாக நாறத் தொடங்கிற்று. 'பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்னும் நிலை நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது.

மேற்கண்ட நிலைமைகளையெல்லாம் பட்டுக்கோட்டையார் தமது பாடல்களில் அலசியுள்ளார், "சுதந்திரத் தாயின் மகிழ்ச்சி...." என்னுந் தலைப்பில் இவர் பாடியுள்ள பாடல்கள் முக்கியமாக இங்கு அவதானிக்கத் தக்கவை. சுதந்திரத் தாயின் மகிழ்ச்சியடி...." என எள்ளலாகவே குறிப்பிடும் கவிஞர்

உண்மையில் சுதந்திரத்தாயின் வேதனைகளையே வெளிப்படுத்தியுள்ளார்.

இந்திய சுதந்திரத்திற்காக எண்ணரிய தியாகங்களை புரிந்தோர் பலர்; பல்லாயிரக் கணக்கானோர் சிறை வாழ்க்கைக் கொடுமைகளை அனுபவித்தனர், சித்திரவதைகளுக்காளாயினர். செக்கிழுத்த சிதம்பரனார், வறுமையினைச் சுமந்துகொண்டு விடுதலைத் தாயின் வருகைக்கு முழக்கமிட்ட பாரதி, சுபாஸ் சந்திரபோஸ், உரிமை பெற்றும் கடமையெல்லாம் முடிப்பதற்குள் மத வெறியினால் பலியான பெரியோய் காந்தி, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட பெரியோர்களே! நீங்கள் எல்லோரும் இன்றிருந்தால் தியாக வடுக்களையெல்லாம் கண்களாக்கித் தேசத்தைக் கண்ணீராலே நனைத்திருப்பீர், சுதந்திர இந்தியா அவதியுறும் நிலையைக் கண்டதால் உங்கள் நெஞ்சம் அனலிடைப்பட்ட மெழுகென உருகிப்போயிருக்கும் என்றெல்லாம் கவிஞர் வேதனைப்படுகிறார்.

"தலைக்கெல்லாம் தலையாய தலைமைத்தாயே
சரித்திரத்தில் இடங்கொண்ட சுதந்திரநாளில்
கொலை நடந்த விபரமெல்லாம் கூறுதற்குக்
கூசுகின்றேன். மற்றுமுள்ள விபரம்சொல்வேன்
சுதந்திரத்தைப் பெற்றமுதல் ஓர்நாளேனும்
துளியும் நீ மகிழ்ந்ததுண்டா? உன்றன் மக்கள்
உகந்துமன - ஒற்றுமையாய் வாழ்ந்ததுண்டா?
உன்னைத்தான் மதித்ததுண்டா? உயர்ந்ததுண்டா?
எங்கோர் பகுதியிலே ஒன்றுபட்டார்
எனிலதனை ஆதரிக்கும் முறைதானுண்டா?
பெரும்வெயிலால் வண்டல் நிலம் வெடிப்பதைப் போல்
பிளவுபட்டுப் பிளவுபட்டுச் சுயநலத்தால்
வருமான வேட்கையிலே புகுவதன்றி
மனதிலேதும் விசாலமுண்டா? பொதுநோக்குண்டா?[2]

என அடுக்கடுக்காக வினவிச்செல்லுங் கவிஞர் இறுதியில்,

இதுவரை நீ மகிழ்ந்திருப்பாய் என்ற எண்ணம்.
என்போன்றோர்க் கில்லை இனியேனும் அந்தப்
புதுவாழ்வும் ஒற்றுமையும் புனிதத் தொண்டும்
பொலிகவென வணங்கு கின்றோம் அன்னையே நீ
பூரிக்கும் அந்நாளை எதிர் பார்க்கின்றோம்.[3]

என நம்பிக்கையுடன் முடிக்கின்றார்.

இந்தியா விடுதலை பெற்றுப் பத்து வருடங்களின் பின் 15-8-1958 ஆம் ஆண்டு ஜனசக்தி இதழில் இப்பாடல் வெளிவந்துள்ளமை சிந்திக்கத்தக்கது.

கவிதையென்பது வெறுமனே இரசனைக்கு மட்டும் உரியதன்று கெட்டபோரிடும் உலகினை வேரொடு சாய்த்து எல்லோரும் எல்லாமும் பெறுவதான புத்துலகைச் சமைப்பதற்கேற்ற வலிமைமிக்க போர்க்கருவி என்பதைத் தமது பாடல்களின் மூலம் கல்யாணசுந்தரம் உணர்த்தினார். அவரது கவிதைகளுள் அதிகமானவை சுதந்திர இந்தியாவினதும் அதன் ஒரு கூறான தமிழகத்தினதும் ஏறத்தாழ 1940 களின் இறுதி முதல் 1950களின் இறுதி வரையிலான காலப்பகுதியினது அரசியல், பொருளாதார, சமுதாய நிலைமைகளை அலசுவதாக அமைந்துள்ளது.

1947 ஆம் ஆண்டு இந்தியா பெற்றது வெறுமனே அரசியல் விடுதலையே தவிரப் பொருளாதார, சமுதாய விடுதலையன்று. அதனாலேயே பிரித்தானியரது ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்றதைத் தொடர்ந்து இந்தியாவின் பொருளாதார, சமுதாய விடுதலைக்கான போராட்டங்கள் தீவிரம் பெறலாயின; இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய போராட்டத்தில் மானுடத்தை இதய சுத்தியோடு நேசிக்கும் எந்த ஒரு இலக்கிய கர்த்தாவும் பங்கு பற்றாது ஒதுங்கியிருக்க மாட்டான். பட்டுக்கோட்டையாரும் தமது குறுகிய வாழ்நாளில் இத்தகைய போராட்டங்களில் மிகத் தீவிரமாகப் பங்கு பற்றினார்; தமது பாடல்களையும் அவற்றுக்காகப் பயன்படுத்தினார்.

ஒரு நாட்டின் பொருளாதார விடுதலையே சமுதாய விடுதலைக்கு வழிகோலும் அரசியல் விடுதலையை அர்த்தமுள்ளதாக்கும். வரன்முறைக் கல்வியை மேற்கொள்ள வாய்ப்புகளில்லாத போதும் வாழ்க்கை என்னும் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட அனுபவக் கல்வியால் படிக்காத மேதையாகத் திகழ்ந்த பட்டுக் கோட்டையார் இதனை நன்குணர்ந்து கொண்டதை அவரது பாடல்கள் தெளிதிற் புலப்படுத்துகின்றன.

அவரது அதிகமான பாடல்கள் ஏழைகள், தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கூலிவேலை செய்வோர் முதலிய சமூகத்தின் அடித்தள மக்களது வாழ்க்கைப் போராட்டங்கள், வறுமைக் கொடுமை, அறியாமை, கடின உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை, சுரண்டற் கொடுமைகள், அவலங்கள் முதலியவற்றை வெளிப்படுத்துவதுடனமையாது தொழிலாளரதும் விவசாயிகளதும் பரமவைரிகளையும் அவர்களது அடாவடித்தனங்களையும், கொடூரச் செயல்களையும் விண்டு காட்டுவதும், தொழிலாளர்களும் விவசாயிகளும் உண்மை நிலையை உணர்ந்து ஒற்றுமைப்பட்டுத் தமது உரிமைகளுக்காகவும் விமோசனத்துக்காகவும் போராடுமாறு தூண்டுவதும் மனங்கொள்ளத்தக்கவை.

இவ்வகையில் ஒரு சில பாடல்களை இங்கு நோக்கலாம்

"எங்கும் விவசாய சங்கம் அமைத்ததில்
அங்கம் வகித்திடுவோம் - இந்தத்
தங்கமுயற்சிக்குப் பங்கம் விளைத்திடும்
தன்மையை வெட்டி மிதித்திடுவோம்"[4]

"கங்குல் பகல்நின்று காடுதிருத்திய
கைகள் உயர்த்திடுவோம் - என்றும்
எங்கள் உழைப்பினை எங்களுக்கேஎன
எக்காளம் ஊதிக் கிளப்பிடுவோம்."[5]

"ஏரோட்டும் ஏழை இதயம் குமிறினால்
போராட்டமே எழுமே! புவியிலே
போராட்டமே எழுமே![6]

"குடும்பம் குடும்பமாய்ப் பிச்சை எடுத்தலையும்
கொடுமைகளை இனிச் சகியோம்
கூழுக்குப் பலபேர் வாடவும் - சிற்சிலர்
கொள்ளை யடித்தலைச் சகியோம்

காடுமேடுகளைச் சீர்திருத்தி - நல்ல
கழனிகள் ஆக்கியது யாரு?
கண்ணீரிலே பயிர் வளர்த்தே - அதை
நாட்டுக்கு ஈந்தது யாரு?"[7]

விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தனாற் போலும் விவசாயிகளின் வாழ்க்கைப் போராட்டங்கள், வறுமைக் கொடுமை, உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை, அவர்கள் விழிப்புற்று எழுச்சியுற வேண்டியதன் அவசியம், அநீதிகளுக்கும் கொடுமைகளுக்கும் எதிராகப் போராடுமாறு தூண்டுதல் முதலியன குறித்து அதிகம் பாடியுள்ளார்.

காடுமேடுகளையும் வயல்களையும் கலட்டுத்தரைகளையும் செப்பனிட்டுப் பயிர் வளர்த்து அவற்றின் பயனை விவசாயிகளாகிய தாம் முழுமையாகப் பெற முடியாது தவிப்பதையும், கந்தல் துணியுடன் பட்டினியால் வாடி அவர்கள் கண்ணீர் வடிப்பதையும் கண்டு கவிஞன் மனம்பொருமுகின்றார். கோபாவேசம் கொண்டு போராட்டத்துக்குத் தூண்டுகின்றார். தினம் உண்பதற்குப் போதிய உணவின்றிக் குடிசைகளில் உறங்கும் ஏழை விவசாயிகளின் உழைப்பினைச் சுரண்டிக் கொழுப்போர், சமூகத்திற்குப் பெரிய மனிதர்களாகக் காட்டிக் கொள்வோர் உல்லாச வாழ்க்கை வாழ்கின்றனர்.

மண்வெட்டிகொண்டு வரம்புகள் கட்டிப்பெரும் வாய்க்கால்களையும் வடிகால்களையும் வெட்டி நிலத்தைப் பண்படுத்தி விதைத்துப் பயிர்காத்து விளைச்சலை அறுவடை செய்யும் நேரம், முன்புபெற்ற கடன், அதற்கான வட்டி என்றெல்லாம் கூறிக்கொண்டு நில உடைமையாளர்கள் விளைச்சலைச் சுரண்ட முயலும் கொடுமையைக் கண்டு ஏழை விவசாயிகளின் நெஞ்சம் புண்ணாகிவிடுகிறதே எனக் கவிஞர் தவிக்கிறார். பட்டுக்கோட்டையார் தாமும் விவசாயிகளுள் ஒருவராகவும் தொழிலாளர்களுள் ஒருவராகவும் நின்றுகொண்டு அவர்களது வாழ்க்கைப் போராட்டங்களையும் மனக்குமுறல்களையும் வெளியிடுவதையும் விடுதலைக் கீதம் இசைப்பதையும் போர்க்குரல் எழுப்புவதையும் அவதானிக்கலாம். போராட்ட வீறு கொண்ட அவரது பாடல்கள் அடிக்கடி பாரதியார், பாரதிதாசன் முதலியோரது பாடல்களை நினைவூட்டுகின்றன. இவ்வகையிலே சில பாடல்களை இங்கு நோக்கலாம்.

"கண்கெட்டுப் போனதோ இன்னும் சகிப்பதேன்?
துன்புற்ற தோழர்களே - துள்ளி
மின்வெட்டுப் போலே பளிச்சென்று வாருங்கள்
மேதினிக் குண்மை விளக்கிடுவோம்.

பொங்கும் தொழிலாளர்க் கின்னல் புரிந்திடும்
பன்மனப் போக்கிரிகள் - மங்கி
எங்கோ மறைந்தனர் என்றோ ஒழிந்தனர்
என்னுங் குரல்கள் எழுப்பிடுவோம்.

பித்தேறிக் கத்தும் பெருநிலப் பேயின்
சொத்தை முயற்சியெல்லாம் - மக்கள்
சக்தியைக் கண்டு சரிந்து விழிப்பறை
சாற்றிக் கிளர்ந்து நிறைந்தெழுவோம்.[8]

"தெற்கில் ஒருகுரல் தென்பாங்கு பாடுது
தீய செயல்களைச் செங்கைகள் சாடுது
பக்குவம் கொண்ட படைபல கூடுது
சிக்க லறுத்துப் பொதுநடை போடுது
சொத்தை மனந்திருந்தப் புதுச்
சத்தம் பிறந்திடுதே?

கத்தும் பறவை கனிமரத்தில் வந்து
ஒற்றுமை காட்டிடுதே - தலைப்
புத்தம் பிடித்தொரு வட்டம் தனித்தனி
பேதம் வளர்த் திடுதே!

ரத்த வியர்வைகள் சொட்ட உழைத்தவன்
நெற்றி சுருங்கிடுதே ஏழை
உத்தமர் வாழ்வை உறிஞ்சும் உறுத்தரின்
கொட்டம் அடங்கிடுதே - மக்கள்
வெற்றி நெருங்கிடுதே![9]

"நன்றிகெட்ட மனிதருக்கு
அஞ்சிநிற்க மாட்டோம்
நாவினிக்கப் பொய்யுரைக்கும்
பேரை நம்ப மாட்டோம் - என்று

கூறுவோமடா - ஒன்று
சேருவோமடா
வீறுகொண்ட சிங்கம்போல்
முன்ஏறு வோமடா!

எளிய மக்கள் தலையில்காசு
ஏறி மிதிக்குது - அதை
எண்ணி எண்ணித் தொழிலாளர்
நெஞ்சு கொதிக்குது
வஞ்சனைக்கும் அஞ்சிடோம்
பஞ்சம்நோய்க்கும் அஞ்சிடோம்
பட்டினிக்கும் அஞ்சிடோம்
நெஞ்சினைப் பிளந்தபோதும்
நீதிகேட்க அஞ்சிடோம்
நேர்மையற்ற பேர்களின்
கால்களை வணங்கிடோம்
காலி ஒன்றும் கூலிஎன்றும்
கேலி செய்யும் கூட்டமே
காத்துமாறி அடிக்குது - நீர்
எடுக்கவேணும் ஓட்டமே
தாலிகட்டிக் கொண்ட மனைவி
போலுழைத்த எங்களைத்
தவிக்கவிட்ட பேரை - எந்த
நாளும்மறக்க மாட்டோமே."[10]

மக்கள் கவிஞர் எனப்புகழ் பெற்ற பட்டுக்கோட்டையார் பாமரமக்களை மனங்கொண்டே தமது கவிதைகளை இயற்றியுள்ளதால் மேற்கண்ட பாடல்களுக்கு மேலும் விளக்கம் தேவையில்லை. எனினும் எளிமை மிகுந்த அவரது பாடல்களில் இடம்பெறும் சொல்லாட்சிகளும் பேச்சு வழக்குப் பிரயோகமும் பாமரமக்களுக்கு உவப்பான இசைவளமும் உவமைப் பிரயோகங்களும் நாட்டார் பாடல்களின் சாயலும் கவித்துவ வீறும் நாம் மனங்கொள்ளத் தக்கவை.

காடுகளும் மேடுகளும் கற்களும் புற்களும் புதர்களும் மிக்க நிலத்தை வெட்டிக் கொத்தித் திருத்திக் களனிகளாக்கிப் பயிர் விளைவிக்கும் விவசாயி கூழுக்கும் வழியின்றி அலைகிறான்; ஓலைக் குடிசையில் ஒட்டிய வயிற்றுடன் முடங்கிக் கிடக்கிறான்; நாடுசெழித்திட மாடாக உழைத்தவன்; களைபிடுங்கி நீர்பாய்ச்சி உணவு உற்பத்தியைப் பெருக்கியவன்; உண்ணவும் உடுக்கவும் வழியின்றித் தவிக்கிறான். இத்தகைய நிலைமைகளையெல்லாம் ஆணும் பெண்ணும் மாறிமாறி உரையாடும் பாங்கிலும் வினாவிடையாகவும் கவிஞர் மிக எளிமையான முறையிற் புலப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாடாக உழைப்பவர்களின் வீடுகளில் வறுமை குடிகொள்வதற்கும் பசி, பட்டினி முதலிய ஆதிக்கம் செலுத்துவதற்கும் காரணம் உழைப்பாளிகள் தேடிய செல்வங்களெல்லாம் சீமான்களின் வீட்டினிலே சேர்வதேயாகும். தொழிலாளர் யாவரும் ஒன்றுபட்டுப் போராடுவதன் மூலமே இக்கொடுமைகளை ஒழிக்க முடியும் என நம்பிக்கை ஊட்டுகின்றார். "புதுநாளினை எண்ணி உழைப்போம்', 'ஏழைகளின் புது உலகம் தெரியுதடா! 'பிறவிக் குருடனும் கண் பெறுவான்', 'வீரசிந்து', 'ஒண்ணாயிருக்கணும் அண்ணாச்சி' 'எடுக்கணும் ஓட்டம்', 'பூமி நடுங்குமடா' 'வெஞ்சிறை உடைந்தது' முதலிய தலைப்புகளில் அமைந்துள்ள பாடல்கள் இவ்வகையில் மனங்கொள்ளத்தக்கவை.

முருகப்பா, மருதப்பா, வேலப்பா, மாரப்பா, கருப்பாயி, செவப்பாயி, வெள்ளையம்மா, காளியம்மா, பக்கிரியம்மா என ஆண், பெண் தொழிலாளர்களை விழித்துத் தாமும் அவர்களுள் ஒருவராக நின்று போர்க்குரல் எழுப்புகின்றார்; போராடப் புறப்படுகின்றார். பொறுப்புடன் உழைத்துழைத்த வாழ்க்கையில் வெறுப்பு அடைந்திருப்பவர்களே வரம்பெடுத்து வயலமைத்த வானம் பார்த்து நிறபவர்களே போருக்குப் புறப்படுவோம்! உடனே புறப்படுவோம்! என்கிறார்.

தொழிலாளர்களின் எதிர்காலம் பற்றிப் பின்வருமாறு நம்பிக்கை ஊட்டுகின்றார்.

உண்மை ஒருநாள் வெளியாகும் - அதில்
உள்ளங்க ளெல்லாம் தெளிவாகும்
பொறுமை ஒருநாள் புலியாகும் - அதற்குப்
பொய்யும் புரட்டும் பலியாகும்.

காலந் தெரிந்து கூவும் சேவலைக்
கவிழ்த்துப் போட்டாலும் நிறுத்தாது
கல்லைத் தூக்கிப் பாரம் வைத்தாலும்
கணக்காய்க் கூவும் தவறாது.

தாழம்பூவைத் தலையில் மறைத்தாலும்
வாசம் மறைவது கிடையாது
சத்தியத்தை உலகில் எவனும்
சதியால் மறைக்க முடியாது.

அன்பு நெஞ்சிலே ஆத்திரம் வந்தால்
ஆண்டவன் கூட அஞ்சிடுவான்
அறிவுக் கதவைச் சரியாய்த் திறந்தால்
பிறவிக் குருட்னும் கண்பெறுவான்.!!

கவிஞர், ஏழைத் தொழிலாளர்களை நோக்கித் தோழர்களே! துணிந்த வீரர்காள்! எனவிளித்து அவர்களுக்கு உற்சாக மூட்டுகின்றார். ஈரமற்ற நெஞ்சு கொண்ட ஈனர்கள் மாயவும் ஏழைகளை மிதித்து வாழும் எத்தர்கள் வீழவும் ஒன்றுகூடி நின்று வீரசிந்து பாடுவோம்; எம்மைக் கோழைகள் என எண்ணுவோரது கொள்கைகளைப் போக்குவோம்; கிளர்ச்சி செய்து அவர்களைத் தாக்கிடுவோம்; அயோக்கியர்களின் கொட்டமடக்கிக் கூடிநின்று கொடியுயர்த்திக் கொட்டி முழக்கிடுவோம் என ஆர்ப்பரிக்கின்றார்.

கஞ்சியில்லை என்ற சொல்லைக்
கப்பலேற்றுவோம் - செகத்தை
ஒப்ப மாற்றுவோம்

பச்சையென்று நம்மை எண்ணும்
பான்மை வெல்லுவோம் - புரட்சிப்
பாதை செல்லுவோம்!

தோழர்காள்!- துணிந்த
வீரர்காள்![12]

என்றெல்லாம் முழக்கமிடுகின்றார்.

தொழிலாளர்கள் எறும்புகள் போல வரிசையாக ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும்; இடுப்பே வளையாது சும்மா இருந்து சுகங்காணும் செல்வந்தர்களை அடிபணிய வைக்க வேண்டும்; ஒன்றுபட்ட தொழிலாளர்கள் உடும்புபோன்று உறுதியோடு செயற்பட வேண்டும்; ஓணான்போன்று செயற்படக் கூடாது; "எதிர்காலம் எமதே" என்னும் திடசங்கற்பத்துடன் போராட வேண்டும் என்றெல்லாம் கவிஞர் தொழிலாளர்களுக்கு அறிவு புகட்டவும் தவறவில்லை.

தமிழகத்தில் திராவிட இயக்கம் நாத்திகப் பிரசாரத்தை மிகத் தீவிரமாக மேற்கொண்டபோதும் அது எதிர்பார்த்த பயன்கிட்டவில்லை. மார்க்சீயவாதிகளும் இறைமறுப்புக் கொள்கையினரே. எனினும் திராவிட இயக்கத்தினரைப் போன்று மார்க்சீயவாதிகள் நாத்திகப் பிரசாரத்தை முதன்மைப்படுத்தியதில்லை. பட்டுக்கோட்டையாரும் தமது கவிதைகளில் எந்த ஒரு இடத்திலும் நாத்திகப் பிரசாரத்தை வெளிப்படையாகக் காட்டியதில்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அறியாமையிலும் வறுமையிலும் மூட நம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்தவர்கள் சமூகத்தின் அடிமட்டத்து மக்கள் நிலவுடைமையாளர்களினாலும், சமய நிறுவனங்களாலும் மேலாதிக்க சக்திகளினாலும் கொடூரமாகத் தாம் சுரண்டப்படுவதை அறியாதிருந்தவர்கள், அறிந்திருந்தாலும் அதனை எதிர்த்துப் போராடத் திராணியற்றிருப்பவர்கள், எல்லாம் தமது தலையெழுத்து என நம்பியிருந்தவர்கள் தமது பிரச்சினைகள், கஷ்டங்கள், தொல்லைகள் முதலிய யாவற்றுக்கும் "சர்வரோக நிவாரணி"யாகச் 'சாமி' யிடம் சரணடைந்தவர்கள். அத்தகையவர்களிடம் கவிஞர் தமது முற்போக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்துமிடத்து மிக நாசூக்கான முறையில் பல்வேறு உத்திகளைக் கையாண்டு விளக்கியுள்ளார். தாமும் தொழிலாளர்களின் நிலைக்கு இறங்கி வந்து, அவர்களுடன் ஒன்றாகக் கைகோர்த்து நின்று செயற்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

'வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல' சூசகமாக வெளிப்படுத்த வேண்டியவற்றையும் வெளிப்படையாகக் கூறவேண்டியவற்றையும் மிகச் சிறந்த கவிதைகளாக வடித்துள்ளார். 'சாமி' யையும் ஆண்டைகளையும் பிரபுக்களையும் நம்பிக் கொண்டிருப்பதிலும் பார்க்கத் தொழிலாளர்கள் தமது கடின உழைப்பையும் ஒற்றுமையுடன் கூடிய போராட்டத்தையும் நம்புவதன் மூலமே விமோசனம் பெற முடியும் என்பதை அழுத்தம் திருத்தமாகவும் அதே சமயம் மிக நாசூக்காகவும் புலப்படுத்தியுள்ளமை விண்டுரைக்கத்தக்க ஒன்றாகும்.

இவ்வகையிலே ஒருசில பாடல்களை இங்கு நோக்கலாம்,

செய்யுந் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி - கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி

சாமிக்குத் தெரியும் பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைமை - அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்
தகுந்த பலனை - இதைப்

பாடிப்பாடி விளையாடி ஆடிப்பல
கோடிக் கோடிமுறை கும்பிடுவோம்.[13]

எழுத்தறிவில்லாத பாமரமக்களும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் அவர்களது பேச்சு வழக்குகளைத் தழுவியும் நாட்டார் இசையுடனும் கவிதைகளை வடித்துள்ள கவிஞர் கூடவே பாமரமக்களைச் சிறிது சிறிதாகச் சிந்திக்க வைக்க முயன்றுள்ளதையும் அவதானிக்கலாம். செய்யும் தொழிலே தெய்வம் எனவும் கடமையே பதவி எனவும் வற்புறுத்தும் கவிஞர், அத்துடனமையாது 'சாமிக்குத் தெரியும், பூமிக்குத் தெரியும், சாமி மறந்தாலும் பூமிதந்திடும்' எனவும் இதனைப் பாடிப்பாடி விளையாடி ஆடிப்பல கோடிக்கோடி முறை கும்பிடுவோம் எனவும் கூறுவது சிந்திக்கத்தக்கது.

மேற்கண்ட கருத்துகளையே வெவ்வேறிடங்களிலும் வெவ்வேறு வடிவிலும் வலியுறுத்த முனைந்தமையை அவதானிக்கலாம். அவ்வகையில் ஒருசில பாடல்களை எடுத்துக் காட்டாக இங்கு நோக்கலாம்.

கடவுள் இருப்பதும் இல்லை என்பதும்
கதைக்குதவாத வெறும் பேச்சு
கஞ்சிக் கில்லாதார் கவலை நீங்கவே
கருத வேண்டியதை மறந்தாச்சு - பழங்
கதைகளை பேசி காலம் வீணாச்சு;
கையாலே முன்னேற்றம் கண்டாகணும்

நம்ம வாழ்க்கை கெடக்குது ரோட்டோரமா
வண்டியை உருட்டி வறுமையை வெரட்டி
உண்டாலும் காய்ந்தாலும் ஒன்றாகணும்.....[14]

மனிதரை மனிதர்
சரிநிகர் சமமாய்
மதிப்பது நங்கடமை
வள்ளுவப் பெருமான்
சொல்லிய வழியில்
வாழ்வது அறிவுடைமை

உழைப்பை மதித்து
பலனைக் கொடுத்து
உலகில் போரைத்
தடுத்திடுவோம்[15]

இன்பத்தை தேடித்தேடி
ஏழை நெஞ்சம் ஏங்குது
அன்பில்லார் வீட்டில் அது
ரொம்ப நாளாத் தூங்குது

எந்தச் சாமிக்கும் காதுகேக்கலே
இல்லாதவனை எட்டிப் பார்க்கலே
வந்தாலும் போனாலும்
வாழ்ந்தாலும் கெட்டாலும்
ஏனென்று கேட்க ஆளேது?[16]

மலைபிளந்தோம் கல்லை உடைத்தோம்
மரம்பிளந்து வழிகள் அமைத்தோம்
வாடிக்கையாய் உள்ளம் உடைந்தோம்
வாழ்க்கையெல்லாம் துன்பம் அடைந்தோம்
எல்லோரும் சேர்ந்து ஏமாத்தும்போது
முன்னேறும் பாதை ஏது?

வியர்வையிலே மேனிகரைந்து
வெயிலாலே அழகுகரைந்து
பசியாலே பலமும் குறைந்து
பாடுபடும் முதுகு வளைந்து
தாங்காத துயரில் போராடும்போது
சந்தோஷ நாளும் ஏது?

தேனாறு பாயுது - வயலில்
செங்கதிரும் சாயுது - ஆனாலும்
மக்கள் வயிறு காயுது - அதிசயந்தான் இது
வகையாக இந்த நாட்டில் என்று
மாற்றமுண்டாகுமோ? - கலைந்த
கூட்டம் ஒன்றாகுமோ?[17]

வறுமையிலே பிறந்து வறுமையிலே வளர்ந்து ஏங்கி ஏங்கி வாழ்ந்து மடியும் பரிதாப நிலை ஏழைத் தொழிலாளர்களின் நிலை. கடனிலே பிறந்து கடனிலே வளர்ந்து கடனிலே வாழ்ந்து கடனிலே மடிபவர்கள் அவர்கள். ஏழைகளின் அவல வாழ்க்கை, உள்ளக் குமுறல்கள், வறுமைக் கொடுமை முதலியன பற்றி எவர்தான் கவலைப்படுகிறார்கள், அவர்களது விமோசனம் பற்றி எவர்தான் அக்கறை கொள்கிறார்கள் என்றெல்லாம் கவிஞர் ஏழைத்தொழிலாளர்களைச் சிந்திக்க வைக்கிறார்; 'தன் கையே தனக்குதவி' என்பதை உணர்த்த முனைகிறார். அடுக்கடுக்காக வினாக்களைத் தொடுக்கின்றார். வாழ்ந்தாலும் கெட்டாலும் மடிந்தாலும் ஏனென்றுகேட்க ஆளேது என வினவுவதன் மூலம் தொழிலாளர் ஒன்றுபட்டுப் போராடித் தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும்: அவர்களுக்கு வேறெவரும் உதவப் போவதில்லை என்பதை வற்புறுத்துகின்றார்.

விம்மி விம்மி அழும் ஏழைகளின் குரல் எந்தச் சாமியினதும் காதுகளில் விழுவதில்லை, சாமிகளும் அதிகார வர்க்கத்தினருக்கும் செல்வந்தர்களுக்கும் அருள்பாலிக்கின்றன; ஏழைகளின் பக்கம் எட்டியே பார்ப்பதில்லை. இவ்வாறெல்லாம் தொழிலாளர்களைச் சிறிது சிறிதாக விழிப்புற்றெழச் செய்து உண்மை நிலையை உணர்த்த முனையும் கவிஞர் அத்துடனமையாது தொழிலாளரின் பரமை வைரிகள் யார்? தொழிலாளர்களின் உழைப்பினை உறிஞ்சிக்கொண்டு அவர்களுக்கு இழைக்கும் தீங்குகள் யாவை? தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு அவர்கள் கையாளும் உபாயங்கள் யாவை? இவற்றுக்கெதிராகத் தொழிலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை? முதலியனவற்றையெல்லாம் நெஞ்சில் பதியுமாறு விளக்கிச் செல்கின்றார்.

சமூகத்தின் அடிநிலையில், வறுமையிலும் அறியாமையிலும் மூழ்கி வாழ்க்கைப் போராட்டம் நடாத்திக் கொண்டிருந்த மக்களது அன்றாட அவலங்களையும் ஆசை நிராசைகளையும் ஏக்கங்களையும் தவிப்புக்களையும் நெஞ்சக் குமுறல்களையும் கவிஞர் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கு விண்டுரைக்கத்தக்க ஒன்றாகும். அவருக்கு வாய்க்கப்பெற்ற அற்புதமான சொல்வளமும், நாட்டார் பாடல்களிற் கொண்டிருந்த மிகுதியான பரிச்சயமும், இன்னிசையும், கருத்து வீச்சும் உணர்ச்சிப் பெருக்கு மிகுந்த நடையும் அவரது பாடல்களுக்குத் தனிச்சிறப்பையளிக்கின்றன, நெஞ்சை அள்ளுகின்றன.

சமூகத்தின் அடிநிலை மக்களது அவலங்களையும் பிரச்சினைகளையும் வெளிக்கொணர்வதோடு கவிஞர் அமைதிகண்டு விடவில்லை, அவற்றுக்கான காரணங்களையும் தீர்வுமார்க்கங்களையும் விண்டு காட்டவும் அடிநிலை மக்களது விழிப்பிற்கும் எழுச்சிக்கும் வழிகாட்டவும் தவறவில்லை. உண்மையில் ஒரு மக்கள் கவிஞன், முற்போக்குக் கவிஞன் அவசியம் ஆற்றவேண்டிய பணி இதுவேயாகும்.

இவ்வகையில் ஒருசில பாடல்களை எடுத்துக் காட்டாக இங்கு நோக்கலாம்.

"பட்டப்பகல் திருடர்களைப்
பட்டாடைகள் மறைக்குது - ஒரு
பஞ்சையைத்தான் எல்லாஞ்சேர்ந்து
திருடனென்றே உதைக்குது."[18]

நான்கே நான்கு வரிகளில் அமைந்துள்ள இப்பாடல் சிந்திக்கத் தெரிந்து எவரது உள்ளத்திலும் "ராம பாண" மாகக் குத்தி நிற்பது மனங்கொளத்தக்கது.

நாம் காணும் இன்றைய சமூகத்தில் எத்தனை எத்தனை போலி வேடங்கள்! எத்தனை விதமான வரட்டுக் கௌரவங்கள்! வாயிலே தேன்சிந்தும், நெஞ்சிலே கொடிய விஷம் ஊற்றெடுத்துப் பாயும். இறைவன், சமயம், தார்மீகம், அறம், சோசலிசம் முதலியவற்றின் பெயரால் பயங்கரமான முறையில் சமூகத்தைச் சுரண்டிப் பிழைக்கும் உலுத்தர்களை நாம் நம்மையுமறியாமலே உச்சிமேல் வைத்துப் போற்றுகின்றோம், அவர்களுக்குத் துதிபாடுகின்றோம்.

அதேசமயம் பசிக்கொடுமையைத் தாங்காது நள்ளிரவிலோ அதிகாலையிலோ எஞ்சிய உணவினை நக்க முயலும் ஒரு பரம ஏழைக்குத் திருட்டுப்பட்டம் சூட்டிச் சிறைச்சாலைக்கு அனுப்புவதில் எமக்கெல்லாம் பெருமிதம், அளவு கடந்த மகிழ்ச்சி. இவற்றைத் தட்டிக்கேட்க எவருமேயில்லையா எனக் கவிஞர் குமுறுகின்றார். கவிஞரது மனக்குமுறலின் மற்றுமொரு பகுதியாக,

"ஜாதிகள் பேசி நம்மைத் தள்ளிவச்சி வாழ்ந்தவங்க
சாக்கடைப் பூச்சிகளாய் ஏழைகளை நினைச்சவங்க
தனக்கே ஊர்முழுவதும் சொந்தமென்று வளைச்சவங்க
சட்டங்கள் மாறிவரும் நேரம் என்ன ஆனாங்க எல்லாம்
சரிசமமாய் போனாங்க...."[19]

"கொத்தும் பணக்கழுகு கொள்ளைப் பெருச்சாளி
எத்திப் பிழைக்கவே கத்தும் நரிக் கூட்டம்
ரத்தவெறி கொண்டலையும் யுத்தப் பெரும் முதலை
பித்தம் பிடித்தலையும் பேதக்குரங்குகள்

திட்டம் உடைந்தது சித்தம் தெளிந்தது
உலகம் விடிந்தது கலகம் ஒழிந்தது - சோர்ந்த
கைகள் உயர்ந்தன."[20]

எனவரும் பாடல்கள் பல அமைந்துள்ளன.

இதேபோன்று, "குறுக்கு வழியில்", "சின்னப் பயலே", "சும்மா கெடந்த நிலத்தைக் கொத்தி..." முதலிய தலைப்புகளிலமைந்துள்ள பாடல்களும் கவனத்திற் கொள்ளத்தக்கவையாகும்.

கவிஞர் திரைப்பட உலகில் நுழைவதற்கு முன்பும் நுளைந்த பின்பும் இறுதிவரை தாம் விரித்துக் கொண்ட கொள்கையிலிருந்து தடம் புரளாது செயற்பட்டார். ஏழைகளின் துயர் துடைக்கவும் புதியதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்பவும் சகல கலை இலக்கிய சாதனங்களும் பயன்படுத்தப்படவேண்டும் என வற்புறுதினார். இதனாலேயே பின்வருமாறு துணிச்சலுடன் பாடினார்.

"ஏழைகள் துயரை ஏங்கிடும் நிலையைத்
தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்து கிடக்கும்
பசிக்குறி முகங்களைப் பாட்டாளி வர்க்கத்தை
நசுக்கிப் பிழிந்திடும் அராஜகச் செயலை
மாற்றிடும் கருத்தைத் தமிழ்ப்பட உலகம்
வன்மையாய் உரைக்க அஞ்சும் நடுங்கும்
சிக்கல் நிறைந்த வர்க்கங்கள் திருந்த
மக்கள் கலைதான் மலர்ந்நிட வேண்டும்."[21]

இதேபோன்று 'போராட்டம் எழும்,' 'வெஞ்சிறை உடைந்தது', 'புதிய ஒளி வீசுதுபார்', 'சங்கம் அமைத்தீடுவோம்', 'புதுஞாயிறு', 'எடுக்கணும் ஓட்டம்', 'நெலமை இப்படி இருக்குது', 'வீரசிந்து', 'கேடுகெட்ட கும்பல்', 'இவன் சோறு போடுகிறான், அவன் கூறுபோடுகிறான்', 'ஏழைகளின் புது உலகம் தெரியுதடா', 'சோர்ந்த கைகள் உயர்ந்தது', 'அஞ்சிநிற்க மாட்டோம்' முதலிய தலைப்புகளில மைந்துள்ள பாடற் பகுதிகளும் இவ்வகையில் விதந்தோதத்தக்கவை.

ஏழைகளை ஏய்த்துப் பிழைக்கும் அயோக்கியர்களின் செயல்களைக் கண்டு மனங்குமுறும் கவிஞர் அவற்றை அம்பலப்படுத்தவும் தவறவில்லை. தர்மம், நீதி என்றெல்லாம் வாய்கிழியப் பேசுவோர், தாயன்புப் பெட்டகத்தைச் சந்தியிலே எறிந்துவிட்டுத் தன்மான வீரரென்பர், அபலைப் பெண்களின் வாழ்க்கையை நாசமாக்குபவர், ஏழைகளின் துயரங்களுக்கெல்லாம் கர்மவினையே காரணம் என்பர். பிரமனது எழுத்தென்பர், பாவம் செய்தவர்களே தாழ்த்தப்பட்ட சாதியினராகப் பிறக்கிறார்கள் என்பார், பொது நலம், சமூகத் தொண்டு என்றெல்லாம் உரக்கப் பேசுவார்கள், இத்தகைய வர்களிடம் ஏழைகள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனக் கவிஞர் எச்சரிக்கைவிடுக்கின்றார். சமூகத்தின் அடிநிலையிலுள்ள எல்லோரும் ஒற்றுமைப்பட்டுச் செயற்படுவதன் மூலமே இத்தகைய அயோக்கியர்களை வெற்றிகொள்ள முடியும் எனக் கவிஞர் அறிவுரை புகட்டுகின்றார்.

"நம்ம வாழ்க்கை கெடக்குது ரோட்டோரமா
வண்டியை உருட்டி வறுமையை வெரட்டி
உண்டாலும் காய்ந்தாலும் ஒன்றாகணும்..."[22]

எனவும்,

"கடவுள் இருப்பதும் இல்லை என்பதும்
கவைக் குதவாத வெறும் பேச்சு
கஞ்சிக் கில்லாதார் கவலை நீங்கவே
கருத வேண்டியதை மறந்தாச்சு - பழங்
கதைகளைப் பேசிக் காலம் வீணாச்சு
கையாலே முன்னேற்றம் கண்டா கணும்"[23]

எனவும் வரும் பாடல்கள் இவ்வகையில் நோக்கத்தக்கவை.

கவிஞரின் பிரபலமான படைப்புகளுள் ஒன்று, "இரையாகும் வெள்ளாடே" என்னும் தலைப்பிலமைந்துள்ள பாடலாகும். இப்பாடலில் வரும் வெள்ளாட்டினை ஒரு குறியீடாகக் கொள்ளலாம். நிலவுடைமையாளர்களும் முதலாளிகளும் ஏழைகளைச் சாகவும் விடமாட்டார்கள், தலை நிமிர்ந்து வாழவும் விடமாட்டார்கள். ஏழைகளைச் சாகவிட்டாலும் தலைநிமிர்ந்து வாழவிட்டாலும் தமது சுகபோக வாழ்வு பறிபோய்விடும் என்பதை இவர்கள் நன்கு அறிவார்கள். இதனால் ஏழைகளது உழைப்பின் பெரும் பகுதியைத்தாம் சுரண்டிக் கொண்டு ஒரு சிறு பகுதியை ஏழைகளுக்கு இரையாகக் கொடுக்கிறார்கள். எதிர்த்துப் பேசத்தெரியாத ஏழைகளை வதைத்து வதைத்துத் தாம் கொழுப்பர்.

இக்கருத்துகளை விளக்கும் கவிஞரது பாடல் வருமாறு:

"இரைபோடும் மனிதருக்கே
இரையாகும் வெள்ளாடே
இதுதான் உலகம் வீண்
அனுதாபம் கொண்டு நீ
ஒருநாளும் நம்பிடாதே

முறையோடு உழைத்துண்ண
முடியாத சோம்பேறி
நரிபோலத் திரிவார் புவிமேலே - நல்ல
வழியோடு போகின்ற
வாய்பேசா உயிர்களை
வதச்சு வதச்சு தின்பார் வெறியாலே

காலொடிந்த ஆட்டுக்காகக்
கண்ணீர் விட்ட புத்தரும்
கடல்போல உள்ளங்கொண்ட
காந்தி ஏசுநாதரும்
கழுத்தறுக்கும் கொடுமை கண்டு
திருந்தவழி சொன்னதும் உண்டு
காதில் மட்டும் கேட்டு அதை ரசித்தாங்க-ஆனா
கறிக் கடையின் கணக்கைப் பெருக்கி வந்தாங்க[24]

பாரதியாரின் 'பாப்பாப் பாட்டினை' நினைவுபடுத்தும் வகையில் பட்டுக்கோட்டையாரும் 'மனிதனாக வாழ்ந்திட வேணும்' என்னும் தலைப்பில், 'சின்னப் பயலுக்கு' அறிவுரை கூறும் பாங்கில் சில பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்களில் 'சின்னப் பயலுகளும்' மிக இலகுவாகப் பொதுவுடைமைக் கொள்கையைப் புரிந்து கொள்ளும் வகையிலும் பொதுவுடைமையை நிலைநாட்டும் வண்ணமும் பாடியிருக்கும் திறன் பாராட்டத்தக்கது. அப்பாடலின் ஒரு பகுதிவருமாறு,

"மனிதனாக வாழ்ந்திட வேணும்
மனதில் வையடா - தம்பி
மனதில் வையடா

வளர்ந்து வரும் உலகத்துக்கே - நீ
வலது கையடா - நீ
வலது கையடா

தனியுடைமைக் கொடுமைகள் தீரத்
தொண்டு செய்யடா - நீ
தொண்டு செய்யடா!

தானா எல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா எல்லாம்
பழைய பொய்யடா!"[25]

கவிஞரது சிறந்த படைப்புகளுள் ஒன்று, "கானக் கருங்குயிலு கச்சேரியாம்" என்னும் தலைப்பிலமைந்துள்ள பாடற் பகுதியாகும். பாரதியின் கட்டுரைகள் சிலவும் பாரதி, பாரதிதாசன் ஆகியோரது பாடல்கள் சிலவும் இவ்வகையில் அமைந்துள்ளமை ஒப்பு நோக்கத்தக்கது. "எத்தனை பெரிய மனிதருக்கு எத்தனை சிறிய அறிவிருக்கு, எத்தனை சிறிய பறவைக்கு எத்தனை பெரிய அறிவிருக்கு" என்னும் பாடலடிகளும் இவ்வகையில் சிந்திக்கத்தக்கவை. ஆண்களும் பெண்களும் எல்லோரும் மாறிமாறி பாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

ஆண் காகத்துக்கும், பெண் காகத்துக்கும் திருமணம் நடைபெறுகிறது. கானக் கருங்குயில் கச்சேரி நடத்துகிறது. திருமணத் தம்பதிகள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர், பலர் பல்வேறு பரிசுகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றனர், விருந்து வைபவங்கள் கோலாகலமாக நடைபெறுகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகளினூடாக எமது மத்தியிற் காணப்படும் சகிக்க முடியாத ஏற்றத் தாழ்வுகளையும் அற்பத்தனங்களையும் கொடுமை களையும் அறியாமைத் தனங்களையும் சுயநலப் போக்குகளையும் 'மானிடத்தையே' விழுங்கி ஏப்பமிடும் கீழ்மைக் குணங்களையும் அற்புதமான முறையில் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளமை விண்டுரைக்கத்தக்க ஒன்றாகும்

பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் முழுவதையும் ஒட்டுமொத்தமாக நோக்கும் போது பல விடயங்களை வெளிப்படும். அவர், சுமார் ஐம்பத்திற்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்குப் பாடல்களை இயற்றியுள்ளார். திரைப்படப் பாடல்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பினும் அக்கட்டுப்பாடுகளை வெட்டியும் ஒட்டியும் எச்சரிக்கை விடுத்தும் அசுரத் துணிச்சலுடன் பல பாடல்களைப் பாடியுள்ளார். கட்டுப்பாடுகளுக்குத் தாம் அடிபணிவதை விடுத்து, தம்மிடம் கட்டுப்பாடுகளை அடிபணியவைத்தார்,

திரைப்பட உலகுக்கே அறிவுரை வழங்கினார். அவர் எந்த ஒரு கட்டத்திலும் தமது ஆத்மாவை விற்றதில்லை. தமது கொள்கையிலிருந்து திரும்பியதில்லை. தாம் பிறந்து வளர்ந்த பாதையையோ வர்க்கத்தையோ என்றும் மறந்ததில்லை. சமூகத்தின் அடிநிலை மக்களது எழுச்சிக்காகவே தமது வாழ்வையும் ஆற்றலையும் அர்ப்பணித்தார். அவர்களது பேராதரவைப் பெற்றுக் கொண்டார், "காயும் ஒருநாள் கனியாகும் - நம் கனவும் ஒருநாள் நனவாகும், காயும் கனியும் விலையாகும்" எனத் திடமான நம்பிக்கையினை ஊட்டினார். அவரது பார்வை அனைத்துலகம் தழுவியதாகவும் மனிதநேயம் மிக்கதாகவும் விளங்குகின்றது.

"மறைந்து கொண்டிருந்த தமிழ்த் தென்பாங்கு, சிந்து, இலாவணி போன்ற நாட்டுப் பாடல்களின் கூட்டிசைக்குப் புத்துயிரூட்டத் திரையுலகில் தனக்குக் கிடைத்த பத்தாண்டெல்லையில் மற்றவர்கள் நூறாண்டெல்லையில் செய்ய முடியாத செயலைச் செய்து இயற்கை எய்தினார்" என்னும் கூற்று கவிஞருக்கு மிகப் பொருத்தமானதே.

பட்டுக்கோட்டையார் வாழ்ந்த காலத்தில் புகழின் உச்சநிலையில் விளங்கிய கவியரசு கண்ணதாசன், உடுமலை நாராயணகவி, மருதகாசி, கு. மா. பாலசுப்பிரமணியம், தஞ்சை ராமையாதாஸ் முதலியோர் தமிழ்த் திரைப்பட உலகில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தனர்.

எனினும் அவர்கள் எவரிடமும் காணமுடியாத நெஞ்சுரமும் நேர்மைத் திறமும் கொள்கைப் பிடிப்பும் சமூகத்தின் அடிநிலை மக்கள் மீதான பற்றுதலும் அவர்களது விமோசனமே தமது இலட்சியம் எனப் பூண்டு கொண்ட விரதமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தனக்கென வகுத்துக் கொண்ட பாதையிலிருந்து விலகாத துணிகர ஆண்மையும் ஒன்றாக உருவெடுத்தாற் போன்று விளங்கும் தொழிலாளர் கவிஞன், பொதுமக்கள் கவிஞன், பொதுவுடைமைக் கவிஞன் பட்டுக்கோட்டையாரின் நாமம் தமிழ்க் கவிதை உலகில் என்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயம் இல்லை.

இந்திய விடுதலை பாரதியின் மூச்சு, தமிழ் மொழியினதும் தமிழ் இனத்தினதும் விடுதலை பாரதிதாசனின் மூச்சு, தொழிலாளர்கள், விவசாயிகள், ஏழைகள் முதலியோரது விடுதலை பட்டுக் கோட்டையாரின் மூச்சு. இவைபற்றி விரிவாக ஆராயப்பட வேண்டும்.

சான்றாதாரம்

1. சும்மா கெடந்த சொல்லை எடுத்து, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், 1994, பக் 140.
2. மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார் பாடல்கள், தொகுதி - 2, 1994, பக். 58.
3. மேலது, பக். 58.
4. சும்மா கெடந்த சொல்லை எடுத்து, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், 1994, பக் 135.
5. மேலது, பக். 135.
6. மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார் பாடல்கள், தொகுதி 2, 1994, பக். 101.
7. மேலது, பக். 101.
8. மேலது, பக். 100.
9. மேலது, பக். 102 - 103.
10. மேலது, பக். 133 - 134.
11. மேலது, பக். 128.
12. மேலது, பக். 136.
13. மேலது, பக். 104.
14. மேலது, பக். 85.
15. மேலது, பக். 59.
16. மேலது, பக். 137.
17. மேலது, பக். 138 - 139.
18. மேலது, பக். 94.
19. சும்மா கெடந்த சொல்லை எடுத்து, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், 1994, பக் 52.
20. மேலது, பக். 53.
21. மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார் பாடல்கள் தொகுதி - 2, 1994, பக். 53.
22. மேலது, பக். 85.
23. மேலது, பக். 85.
24. மேலது, பக். 79.
25. சும்மா கெடந்த சொல்லை எடுத்து, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், 1994, பக் 33 - 34.



கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள்

கலாநிதி துரை. மனோகரன்

பேராதனைப் பல்கலைக்கழகம்


இருபதாம் நூற்றாண்டு தமிழ்க் கவிதையில் ஏற்படுத்திய தாக்கம் அளப்பரியது. பாரதியை முதல்வராகக் கொண்டு, தமிழ்க்கவிதை நவீன பரிமாணத்தையும், புதிய கலைச் செழுமையையும் அந்நூற்றாண்டிலேயே பெறத் தொடங்கியது. நவீன உலகைப் பாடவல்ல பாரதி, பாரதிதாசன் பரம்பரை ஊற்றெடுக்கத் தொடங்கியது. மொழியுணர்வு, சமூகநல நாட்டம், மனிதாபிமானம் முதலியன புதிய தமிழ் கவிதைக்கு வளம் சேர்த்தன. இதே காலகட்டத்திலேயே தமிழ் திரைப்படப் பாடல்களும் மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. பல திரைப்படப் பாடல்கள் வெறுமனே திரைப்படப்பாடல்களின் காட்சித் தேவைகளையும், தயாரிப்பாளர், இயக்குனர், நடிகர், இசையமைப்பாளர் முதலியோரின் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதோடு அமைதி கண்டன. சில பாடல்களே கருத்துப் பஞ்சங்களைப் போக்கி, மக்கள் நெஞ்சங்களை நிறைத்துச் சுவையுணர்வினைத் தரவல்லனவாகவும், நீண்ட காலம் நிலைத்திருக்கத் தக்கவையாகவும் விளங்குகின்றன. அதற்கு, வெறும் திரைப்படப் பாடலாசிரியர்கள் என்ற நிலைக்கு மேலாகக் கவிதா ஆளுமையும், ஆற்றலும் கொண்ட கவிஞர்களே காரணகர்த்தாகளாக விளங்குகின்றனர். சத்தத்திற்கு ஏற்ப வார்த்தைகளை நிறைக்காமல், தமது சொந்தக் கவிதாபலத்தில் நின்றவர்களே சிறந்த திரைப்படப் பாடலாசிரியர்களாக மக்கள் மனங்களில் நீங்கா இடத்தைப் பெறமுடிந்தது. அத்தகைய ஒருவரே கவியரசு கண்ணதாசன் ஆவர்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுகூடல்பட்டி என்ற கிராமத்தில் 1927 இல் சாத்தப்பர் - விசாலாட்சி தம்பதியினரின் எட்டாவது பிள்ளையாகத் தோன்றியவரே கவிஞர் கண்ணதாசன். பெற்றோர் இட்ட பெயர் முத்தையாவாகவும், அவரைத் தத்தெடுத்தோர் வைத்த பெயர் நாராயணனாகவும் அமைந்தன. முத்தையாவும், நாராயணனும் 'கண்ணதாசனாக' மாறியமை சுவையான ஒரு கதையாகும்.

வேலை தேடிப் பத்திரிகை அதிபர் ஒருவரை அவர் சந்திக்கச் சென்றவேளை, "என்ன பெயரில் இதுவரை கதை கட்டுரைகள் எழுதியிருக்கிறீர்கள்?" என்று பத்திரிகை அதிபர் கேட்டார். தமது சொந்தப் பெயரைக் கூறவந்த கவிஞர் சற்றே தயங்கினார். அதற்குக் காரணம், புனைபெயருக்கு அக்காலத்திற் செல்வாக்கு இருந்தமையே. அதுவும் 'தாசன்' என்று அமைந்த புனைபெயர்களுக்குத் தனி மதிப்பு இருந்தது. பாரதிதாசன், கம்பதாசன், சக்திதாசன் போன்ற புனைபெயர்களில் ஒருவகைக் கவர்ச்சி இருந்தமையால், தமக்கும் உடனடியாகக் "கண்ணதாசன்" என்ற புனைபெயர் என்று தெரிவித்தார். அன்றிலிருந்து முத்தையாவும், நாராயணனும் 'கண்ணதாசன்' ஆனார்கள்.

கவிஞர் தமது ஆரம்ப காலத்தில் வெவ்வேறு புனைபெயர்களிலும் தமது ஆக்கங்களை எழுதியுள்ளார். பார்வதிநாதன், காரை முத்துப் புலவர், துப்பாக்கி, ஆடிய பாதம், வணங்காமுடி, ஆரோக்கியசாமி போன்றவை அப்புனைபெயர்களாகும். ஏறதாழப் பத்து வயதிலிருந்தே கவிதை எழுதத் தொடங்கிய கண்ணதாசன், எட்டாம் வகுப்பு வரையிலுமே கல்வி கற்றவர். ஆயினும், அவரது

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்



1852 2002

150 ஆண்டுகள் நிறைவு சிறப்பிதழ்

இயல்பான ஆற்றல் அவரைத் தனிக்கவிதைகளையும், காவியங்களையும், சிறுகதைகளையும், நாவல்களையும், பல்வகைக் கட்டுரைகளையும் எழுதவைத்தது. எனினும், கவிதைத்துறையிலேயே அவர் தமது முழு ஆளுமையையும் புலப்படுத்தியுள்ளார்.

கவிஞர் தமது வாழ்க்கை அனுபவங்களைச் சுவைபடத் தமது சுயசரிதை நூல்களான வனவாசம், மனவாசம், எனது சுயசரிதம், எனது வசந்த காலங்கள், சினிமாச் சந்தையில் முப்பது ஆண்டுகள் முதலான நூல்களிற் கூறியுள்ளார். கவிஞராக, எழுத்தாளராக, பத்திரிகை ஆசிரியராக, படத்தயாரிப்பாளராக, கதை-வசனகர்த்தாவாக விளங்கிய கண்ணதாசன், திரைப்படத்துறையிற் கதை-வசனகர்த்தாவாகப் புகழ் பெறவே ஆரம்பத்தில் விரும்பினார். அவரது விருப்பம் சில திரைப்படங்களில் நிறைவேறியபோதிலும், திரைப்படப் பாடலாசிரியர் என்ற முறையிலேயே அவர் அதிக புகழைப் பெற்றார்.

1948 இல் கன்னியின் காதலி என்ற திரைப்படத்திற்குக் "கலங்காதிரு மனமே உன் கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே" என்று கண்ணதாசன் எழுதிய பாடலே அவரது முதல் திரைப்படப் பாடலாகும். அவர் தமது ஆசைதீரப் பாடல்களை எழுதிக் குவித்த படமும், அவரைப் புகழேணியில் ஏற்றிவைத்த படமும் அவரது சொந்தத் தயாரிப்பான மாலையிட்ட மங்கை ஆகும். பதினேழு பாடல்களை அத்திரைப் படத்துக்கென அவர் எழுதினார். அத்திரைப்படத்தில் இடம்பெற்ற பாடல்கள் மூலம் கவிஞர் மட்டுமன்றி, அவற்றுக்கு இசையமைத்த விஸ்வநாதன் - ராமமூர்த்தியும் புகழ் மாளிகைக்குள் புகத் தொடங்கினர்.

கவிஞர் கண்ணதாசன் சிவாஜிகணேசனின் திரைப்படங்களுக்கு எழுதத் தொடங்கிய காலகட்டத்திலிருந்து புகழின் உச்சிக்கே செல்லத் தொடங்கினார், கவிஞரைச் சிறப்பாக இனங்காட்டத் தொடங்கியவை படிக்காத மேதை, பாகப்பிரிவினை, பாசமலர், பாலும் பழமும், பாவமன்னிப்பு போன்ற பல்வேறு திரைப்படங்களில் இடம்பெற்ற பாடல்களாகும். என்றும் தெவிட்டாத, சுவையான பாடல்களை அவற்றின் மூலம் அவர் அள்ளித்தந்துள்ளார். அவற்றைத் தொடர்ந்து பல திரைப்படங்களில் கவிஞர் தமது முத்திரையைப் பதித்துள்ளார்.

பாட்டு எழுதுவது பற்றிக் கவிஞர் குறிப்பிடும்போது, "பாட்டுத் தொழிலைப் பொறுத்தவரை நான் நியாயமாகவும் பயபக்தியுடனும் இருந்தேன், பெரிய இலக்கியங்களையெல்லாம் எளிய முறையில் சொல்ல விரும்பினேன்" என்று கூறியுள்ளார்.

பிற கவிஞர்களை மதிக்கும் பெருங்குணம் கவிஞர் கண்ணதாசனிடத்து இயல்பாகவே இருந்தது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மீது கவிஞர் கொண்டிருந்த பற்று அலாதியானது. அதைப்போன்றே கல்யாணசுந்தரமும் கண்ணதாசன் மீது அதீத வாஞ்சை கொண்டிருந்தார், இதுபற்றிக் கண்ணதாசன் குறிப்பிடும்போது,

> "எனக்கென்று ஒரு மார்க்கெட் வருவதற்கு முன் இலக்கியச் சுவையுள்ள இடமாக யாராவது சொன்னால், என்னைக் கூப்பிடச் சொல்லுவார். கிராமியப் பாட்டுக்களாக இருந்தால் அவரைக் கூப்பிடச் சொல்லுவேன் நான். பிறகு பட்டுக்கோட்டைச் கல்யாணசுந்தரத்தின் மறைவால் ஏற்பட்ட சூனியத்தை என்னைக் கொண்டே சினிமா உலகம் நிரம்பிற்று. இதில் எனக்கு ஆணவம் வரவில்லை. ஆசையே பெருக்கெடுத்தது" என்று கூறியுள்ளார்.

கவிஞர் கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களை முக்கியமாக மூன்று பெரும் பிரிவுகளுக்குள் பகுக்கலாம். ஒருவகைப் பாடல்கள் வினாக்களை அமைத்துப் பாடும்முறையில் அமைந்துள்ளன. இன்னொரு வகையானவை பழந்தமிழ் இலக்கியங்களினின்றும் பிழிந்த சாற்றை அல்லது சாரத்தைத் தமது பாணியில் தருபவையாக விளங்குபவை. மூன்றாவது வகை, கவிஞர் தமது அனுபவத் திரட்டிலிருந்து உருவாக்கித்தந்த தத்துவப்பாடல்களாகும்.

வினாக்கள் வடிவில் அமைந்த முதல்வகைப் பாடல்கள் கணிசமாக உள்ளன. எடுத்துக்காட்டாக, "கொடி அசைந்ததும் காற்று வந்ததா? காற்று வந்ததும் கொடி அசைந்ததா? நிலவு வந்ததும் மலர் மலர்ந்ததா? மலர் மலர்ந்ததும் நிலவு வந்ததா?" என்ற பாடல் முழுமையாக வினா வடிவிலேயே அமைந்துள்ளது. "யார் யார் யார் அவள் யாரோ? ஊர்பேர்தான் தெரியாதோ?" "என்னை யாரென்று எண்ணி எண்ணி நீ பார்க்கிறாய்? இது யார் பாடும் பாடலென்று நீ கேட்கிறாய்?," "பாவாடை தாவணியில் பார்த்த உருவமா? இது பூவாடை வீசிவரப் பூத்த பருவமா?" என்பன போன்ற பல பாடல்கள் இத்தகையன.

பழந்தமிழ் இலக்கியங்களின் சாறாக அமைந்த அவரது பாடல்களும் பலவுள. உதாரணமாகப் பட்டினத்தாரின் பாடலான

> "அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே விழியம்பொழுக
> மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மிவிம்மி யிரு
> கைத்தல மேல்வைத்தழும் மைந்தரும் சுடுகாடு மட்டே
> பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே"

என்பதன் கண்ணதாசன் வடிவமே,

> "வீடுவரை உறவு
> வீதிவரை மனைவி
> காடுவரை பிள்ளை
> கடைசிவரை யாரோ?" என்ற பாடலாகும்.

கவிஞரின் பாடல்களில் இன்னொரு வகையாக அமைந்தவை தத்துவப்பாடல்களாகும். தமிழ்த் திரைப்பட உலகில் கண்ணதாசன் அளவுக்குத் தத்துவப் பாடல்களைத் தந்தவர் வேறு எவருமில்லை எனலாம். அவரது பாடல்களிற் கணிசமான இடத்தை இவ்வகைப் பாடல்கள் பெற்றுள்ளன.

"பிறக்கும்போதும் அழுகின்றாய்
இறக்கும்போது அழுகின்றாய்
ஒருநாளேனும் கவலையில்லாமல்
வாழமறந்தாய் மானிடனே"

என்று தொடங்கும் திரைப்படப் பாடல் இதற்குத் தகுந்தோர் எடுத்துக்காட்டாகும்.

கண்ணதாசனின் திரைப்படப் பாடல்களில் இறைவனைப் பற்றிய கருத்துக்களும், விமர்சனங்களும் நிறையவே உண்டு. அநேகமாகச் சோகமான கட்டங்களுக்குப் பாட்டெழுதும்போதே தெய்வம் தொடர்பான பல்வேறு கருத்துக்களையும், விமர்சனங்களையும் அவர் உலவ விடுவது வழக்கம்.

கவிஞரின் பாடல்களிற் சில கதைகூறும் பாடல்களாகவும் அமைந்துள்ளன. அவ்வாறு அனைத்து பாடல்களையும் அலுப்புத் தட்டாத முறையில் சுவையாக அவர் தந்துள்ளார். வெறும் கதை கூறுபவையாக மாத்திரமன்றி, தமது கவிதா ஆளுமையின் ஒருபுறத்தை இனங்காட்டும் முறையிலும் அவற்றை அவர் வடித்துள்ளார்.

கண்ணதாசன் கர்நாடக இசைக்கேற்பவும் காதுக்கினிய பாடல்களைத் தந்துள்ளார். அத்தகைய பாடல்களிலும் தமது கவித்துவ முத்திரையைச் சிறப்பாகப் பொறித்துள்ளார். கர்நாடக மெட்டில் அமைந்துள்ள அவரது பாடல்களில் வெறும் இசையை மாத்திரமன்றிக் கவிச்சுவையையும் அனுபவிக்க முடிகின்றது. "ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்! இதயச் சுரங்கத்துள் எத்தனை கேள்வி?," "அவர்க்கும் எனக்கும் உறவுகாட்டி அருள் புரிந்தது கதையா? நினைத்து நினைத்து மகிழ்ந்த நாங்கள் நேசம் கொண்டதும் கனவா?" என்பன போன்ற பல பாடல்கள் இத்தகையவை. பல்வேறு நடனக் காட்சிகளுக்காகவும் கண்ணதாசன் இனிய பாடல்களை எழுதியுள்ளார். கற்பனை நயமும், இலக்கியச் சுவையும் இணைந்து, இன்பம் பயப்பனவாக அவை அமைந்துள்ளன. திரைப்படங்களுக்கேற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் புலப்படுத்தும் அதேவேளை, மக்கள் மத்தியில் நிரந்தர வாழ்வு பெற்றவையாகவும் அவை விளங்குகின்றன.

கவிஞர் நாட்டுப்புற இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். கணிசமான பாடல்களை நாட்டுப்புறப் பாடல்களின் அடிப்படையிலும் அவர் படைத்துள்ளார். "ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ? இல்லையொரு பிள்ளையென ஏங்கியோர் பலரிருக்க நீயும்வந்து ஏன்பிறந்தாய் செல்வமகனே?" "வட்ட வட்டப் பாறையிலே வரகரிசி தீட்டையிலே," "சாந்துப் பொட்டுத் தளதளக்க சந்தனப் பொட்டு கமகமக்க," "தாழையாம் பூமுடித்து தடம் பார்த்து நடைநடந்து" என்பன போன்று பாடல்கள் கண்ணதாசனின் நாட்டுப்புற இலக்கிய ஆர்வத்தைப் பிரதிபலிக்கின்றன.

நகைச்சுவை உயர்வை இயல்பாகக் கொண்ட கவிஞரின் பாடல்கள் சில, அச்சுவையை நயம்படத் தந்துள்ளன, மனோரமா பாடிய "தெரியாதோ நோக்கு தெரியாதோ?" என்ற பாடல், கண்ணதாசனின் நகைச்சுவை உணர்வைத் திறம்பட இனங்காட்டுகின்றது.

நவீன இசைக்கேற்பவும் சுவையான பாடல்களைத் தந்த திரைப்படக் கவிஞராக விளங்கியவர் கண்ணதாசன். எழுபதுகளின் நடுப்பகுதியில் இளையராஜாவின் வருகை, திரைப்பட இசைத்துறையில் புதிய பரிமாணத்துக்கு வித்திட்டது. அதற்கேற்பக் கவிஞரும் வளைந்து கொடுத்துத் தமது திறமைகளை வெளிப்படுத்தினார். நவீன பாணியில் அமைந்த அவரது திரைப்படப் பாடல்களுக்கு உதாரணமாகப் பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

"ஆயிரம் மலர்களே மலருங்கள்
அமுதகீதம் பாடுங்கள் பாடுங்கள்
காதல்தேவன் காவியம்
நீங்களோ? நாங்களோ?
நெருங்கி வந்து
சொல்லுங்கள் சொல்லுங்கள்"

கண்ணதாசனின் திரைப்படப் பாடல்கள் பல செவிகளுக்குச் சுவையளிக்கும் முறையில் சந்தச் சிறப்புக் கொண்டு விளங்குகின்றன. "சந்தம் நிறைந்த தமிழ் சங்கீதம் பாடும் தமிழ் சிந்துபல கொண்ட தமிழ் வெல்லும் வெல்லும்" என்று பாடல் எழுதிய கவிஞர், இவ்வகையிற் பல பாடல்களை இயற்றி, தமது சொல்வண்ணத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

கவிஞர் கண்ணதாசன் தாம் பாட்டெழுதும்போது தமக்கு ஏற்படும் உணர்வுகளை இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"தெய்வீகமான விஷயங்களை எழுதும்போது மிகுந்த லயம் உடம்பிலே ஓடும். தாலாட்டு எழுதும்போது ஒரு லயம் ஓடும். காதல் எழுதும் போது போதையும் உற்சாகமும் இருக்கும். ஆனால், சென்டிமென்ட் அதிகமாகத் தோன்றுவது தாலாட்டிலும் தெய்வீகத்திலும்தான் இந்த இரண்டிலும் எனக்குச் சமமான அளவுக்கு ஆசையும் வெறியும் உண்டு. இரண்டிலேயும் நான் லயித்துப்போகிறேன். காரணம்,

குழந்தைகளிடத்தில் எனக்குப் பிரியம் அதிகம். அதுபோல் ஆண்டவன் இடத்திலும் பக்தி அதிகம். அவர் கூறுவதற்கேற்ப, அந்புதமான தாலாட்டுப் பாடல்களைக் கவிஞர் தந்துள்ளார்.

"மழைகூட ஒருநாளில் தேனாகலாம்
மணல்கூடச் சிலநாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவையாவும் நீயாகுமா?
அம்மாவென் றழைக்கின்ற சேயாகுமா?"

குழந்தைகள் மீது அதிகப் பிரியம் கொண்ட கவிஞர் குழந்தைப் பாடல்கள் சிலவற்றையும் திரைப்படங்களுக்காக எழுதியுள்ளார். அத்தகைய பாடலொன்று மிகச் சுவையானது. ஒரு தாய், தன் குழந்தை விரும்பும் பிராணிகளை அழைத்துப் பாடுவதாக அப்பாடல் அமைந்துள்ளது.


"காக்கா காக்கா மை கொண்டா
காடைக் குருவி மலர் கொண்டா
பசுவே பசுவே பால் கொண்டா
பச்சைக் குருவி பழங் கொண்டா"

ஏறதாழ ஆறாயிரம் திரைப்படப் பாடல்களை எழுதியுள்ள கவிஞர், தாம் எழுதியவற்றுள் படித்தால் கவிதை போன்று இருப்பவை ஆயிரம் இருக்கும் என்று கூறியுள்ளார். தாம் எழுதியவற்றுள் ஏறத்தாழ இருநூறு பாடல்கள் ஏதாவது காரணத்தோடு எழுந்தவையென்று கண்ணதாசன் குறிப்பிடுகின்றார். "போனால் போகட்டும் போடா இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?," "என்னை யாரென்று எண்ணியெண்ணி நீ பார்க்கிறாய்? இது யார்பாடும் பாடலென்று நீ கேட்கிறாய்?", "அண்ணனென்னடா தம்பியென்னடா அவசரமான உலகத்திலே" என்பன போன்ற பல பாடல்கள் இத்தகையவை.

கண்ணதாசனின் பாடல்கள் இயல்பாகவே தம்மை இன்னாரது பாடல்கள் என இனங்காட்டிக்கொள்ளும் தன்மை வாய்ந்தவை. அவரது பாடல்கள் பழந்தமிழ் சுவையும், இனிமை பயக்கும் அழகிய சொற்களும், அனுபவச்சாயல் மிக்க பொருள்வளமும், கவர்ச்சிமிகு தனித்துவ நடையும் கொண்டவையாக மிளிர்கின்றன.



தமிழ்த் திரையிசைப் பாடல்களில் வைரமுத்து



சு. முரளீதரன் B.A. (Hons)
ஆசிரியர்
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

LIGHT DISPELS DARKNESS

1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

தொழிற்புரட்சிக்குப் பிறகு மனித குலத்தின் அன்றாடங்களின்மீது மின்சாரம் எப்படித்தான் ஆளுமையைச் செலுத்தத் தொடங்கியதோ அப்படியே திரைப்படமும் நம் வாழ்வியலோடு வசிக்கத் தொடங்கிவிட்டது. லூமினர் சகோதரர்களால் கண்டறியப்பட்ட சினிமா நூற்றாண்டைக் கடந்துவிட்டது. உலகிலே ஏனைய நாடுகளைவிட இந்தியாவிலேதான் அதிகமான திரைப்படங்கள் தயாராகின்றன. ஆனால் தரமான படமொன்று வருடத்திற்கு ஒன்று கூட வெளிவருவதில்லை. ஏனெனில் இந்திய மக்கள் சினிமாவை தனிப்பெரும் பொழுதுபோக்குச் சாதகமாகவே கருதுகின்றனர். 1955ல் வங்காள மொழியில் வெளிவந்து "ஒஸ்கார்" விருதுபெற்ற சத்ய ஜித்ரேயின் பதர்பாஞ்சாலி, 1965ல் மலையாளமொழியில் வெளிவந்து ஜனாதிபதி விருதுபெற்ற செம்மீன் போன்ற சில படங்கள் இதற்கு விதிவிலக்காக உள்ளன. தமிழ்த் திரைப்படங்களோ "ஜனரஞ்சக சினிமா" என்ற முத்திரையினையும் வர்த்தக நோக்கினையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்படுவதால் இலக்கியத் தரத்தினை இழந்துள்ளன. "வீடு" போன்ற யதார்த்த பூர்வமான படங்களில் தன் கவனத்தினை தமிழ்த்திரையுலகம் செலுத்தியிருந்தால் உலகத் தரத்தினைத் தொட்டிருக்கலாம். பராசக்தி, பாசமலர் போன்ற படங்கள் ஆழமான, அழுத்தமான ஆனால் மிகைப்படுத்தப்பட்ட உணர்வுகளைக் கொண்டமைந்தவை. இவ்வாறான காரணிகளால்தான் மார்வன்பிராண்டோ என்ற மாபெரும் நடிப்பைக் கொண்ட சிவாஜிகணேசனுக்கு சர்வதேச சிம்மாசனம் கிடைக்காமற் போனது.

தமிழ்த் திரையுலகின் ஊமைப்படங்களுக்கு நாமுளைத்தபோது தணிக்கைச் சான்றிதழ் தொடங்கி "சுபம்" வரைக்கும் பாடல்களே பவனிவந்தன. பாடங்களின் அணிவகுப்பே படத்தொகுப்பென்னும் விதத்தில் பழையகாலப் படங்கள் அமைந்திருந்தன. அர்த்தம் புரியாதவேளையிலும் தாளம்போட்டு ரசிக்கவைத்த கர்நாடக சங்கீத கலாசாரமும், "வதனமோ சந்திரவிம்பமோ" எனும் வகையிலமைந்த சமஸ்கிருத சொல்லலங்கார நடைகளும், பொதுவுடமையை வலியுறுத்தும் பிரச்சார நெடியும் ஒன்றன் பின்னொன்றாக தமிழ்த்திரையிசையை கைப்பற்றி அரசாட்சி செய்தன. அகப்புற பக்தி இலக்கியங்கள், நாட்டார் பாடல்கள், சித்தர் தத்துவங்கள் என்பனவற்றை எளிமைப்படுத்தியதன் மூலம் தமிழ்த்திரையிசைப் பாடல்களுக்கு கண்ணதாசன் கனம் சேர்த்தார். உடைமாற்றிக் கொண்ட தமிழ்த்திரையிசைப் பாடல்களின் உறுப்புக்களையும் மாற்றவேண்டும் என்ற

உத்வேகத்தோடு உள்நுழைந்த கவிஞன்தான் வைரமுத்து எனினும், வைரமுத்து கனதியான மாற்றங்கள் எதனையும் சாதிக்காது கண்ணதாசன் பணியினைப் பின்தொடர்ந்தார் என்பதே காலங்காட்டி நிற்கும் நிஜம்.

வைகை அணைக்கட்டுக்கு அருகே உள்ள மேட்டூர் என்ற கிராமத்தில் 13-7-1953ல் இராமசாமித் தேவருக்கு வைரமுத்து மகனாய் பிறந்தார். அவரது நான்காவது வயதிலே வைகை அணைக்கட்டுத் திட்டத்தால் கிராமமே இடம்பெயர, வடுகப்பட்டியில் வாழ்வைத் தொடங்கினார். நூல்களின் மீதுகொண்ட மோகமும், திரை இசைமீது கொண்ட தாகமும் சிறுவயதிலேயே அவரைப் புடம் போட்டன. தனது உயர்கல்வியை பச்சையப்பன் கல்லூரியிலே தொடர்ந்தபோது கவிதைமீது கொண்டகாதல் மேலும் வளர்ந்தது. அவரது பதினேழாவது வயதுவரை புனைந்த கவிதைகளைத் திரட்டி பத்தொன்பதாவது வயதில் "வைகறை மேகங்கள்" என்னும் தொகுதியாக வெளியிட்டார். இக்கவிதைகள் தமிழிலக்கணத்தில் ஊறிய மரபு தழுவியவை. இத்தொகுதிக்கு கண்ணதாசன் அணிந்துரை எழுதியுள்ளார். புதுக்கவிதை சார்ந்த தொகுதியான "திருத்தி எழுதிய தீர்ப்புக்கள்" எனும் இரண்டாவது கவிதை நூலோடு இயக்குனர் பாரதிராஜாவைச் சந்தித்து தனது திறமையினை எடுத்துரைத்தார். அதன்பயனாக பாரதிராஜாவின் "நிழல்கள்" திரைப்படத்தில் கவிஞரின் முதற்பாடலாக "பொன்மாலைப் பொழுது" இளையராஜாவின் இசையில் இடம்பெற்றது. தொடர்ந்து இளையராஜாவோடு இணைந்து இசையுலா வந்தார். பாரதிராஜா-வைரமுத்து-இளையராஜா-நடிகர் திலகம் கூட்டணியில் உருவான "முதல்மரியாதை" திரைப்படம் கவிஞருக்குத் தேசிய விருதை பெற்றுக்கொடுத்தது. 1985 களின் பிற்பகுதியில் இளையராஜா-வைரமுத்துவிடம் ஏற்பட்ட மனக்கசப்பு இன்றுவரை தீராமல் தொடர்கிறது. இளையராஜாவைப் பிரிந்ததினால் ஏற்பட்ட பின்னடைவை A. R. ரகுமான்மூலம் சரிசெய்து மீண்டும், "கருத்தம்மா", "மின்சாரக் கனவு" என்னும்இரு திரைப்படங்களிலும் தேசிய விருது பெற்றார். வாழுங்கவிஞர்களில் வளமான கவிஞன் மட்டுமல்ல வசதியான கவிஞனும் வைரமுத்துதான்.

"ஆற்றுத் தூநீர் ஆரல் உண்டு
குருகு பறக்கும் தீம்புனல் நாடன்
கற்றை நிலவு காயும் காட்டிடை
என்கை பற்றி இலங்குவளை நெகிழ்த்து
மேனி வியர்ப்ப மெல்லிடை ஒடித்து
வாட்கண்மயங்க உண்டதை மீண்டும்
பசலை உண்ணும் பாராய் தோழி"

இப்பாடலைப் புனைந்தது கபிலரோ இளநாகனாரோ அல்ல, சங்ககாலச் சொற்களைக் கையாண்டு, அக்காலச் செய்யுள் மரபையும்,பொருள் மரபையும் பின்பற்றி வைரமுத்து இதனைப் புனைந்துள்ளார். அவரது கவித்துவத்திற்கும், தமிழ் இலக்கியப் பரிச்சயத்திற்கும் இது நல்லதொரு எடுத்துக் காட்டாகும். சங்க இலக்கியந்தொட்டு சமீபகால இலக்கியம் வரையும்' வைரமுத்துவின் திரையிசைப்பாடல்களில் செல்வாக்கு செலுத்துகின்றன.

தலைவனைப் பிரிந்திருக்கின்ற தலைவியின் மேனியிலே தோழிமார் சந்தனமிடுகின்றபோது சிவந்த நெருப்பின் சாறுபிழிந்து பூசுவதுபோல் உணர்வேற்படுகின்றது. பசுமையான தமிழை ஆராய்கின்ற நந்திவர்மன்மீது தலைவி கொண்ட தீராத காமத்தை நத்திக்கலம்பகம்

"செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுந் சீதச்
சந்தனமென்றாரோ தடவினார் - பைந்தமிழை
யாய்கின்ற கோனந்தி யாகந் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மெய்"

என்று சுட்டுகின்றது. இவ்வரிகளையே வைரமுத்து "அந்திமழை பொழிகிறது" பாடலில்

"நெஞ்சுபொறு கொஞ்சம் இரு
தாவணி விசிறிகள் வீசுகிறேன்
மன்மத அம்புகள் தைத்த இடங்களில்
சந்தனமாய் என்னைப் பூசுகிறேன்"

என்று பயன்படுத்துகின்றனர்.

வெவ்வேறு திசைகளில் பிறந்த இரு உள்ளங்கள் ஒரே நேர்கோட்டில் சந்தித்த அதிசயத்தை செப்புலம் சேர்ந்த நீராக குறுந்தொகை குறிப்பிடுகின்றது.

"யாயும் ஞாயும் யாராகியதோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழியறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சங் தாங் கலந்தனவே"

சான்றோர் வியந்துரைக்கும் இச்சங்கப்பாடலை, சராசரிப் பாமரனின் செவிகளிட்டு அறிமுகப்படுத்த "பாட பேதம்" செய்து "நறு முகையே நறு முகையே" என்ற பாடலில் பயன்படுத்துகின்றனர்.

"யாயும் ஞாயும் யாராகியரோ நெஞ்சு நேர்ந்ததென்ன
யானும் நீயும் எவ்வழி அறிவும் உறவு சேர்ந்ததென்ன
ஒரேயொரு தீண்டல் செய்தாய் உயிர்க்கொடி பூத்ததென்ன
செம்புலம் சேர்ந்த நீர்த்துளிபோல்
அன்புடை நெஞ்சம் கலந்ததென்ன"

காலைப் பொழுதின் அழகை எடுத்தியம்பவந்த கம்பன், மூங்கில் இலைகளில் உறங்கிக் கிடக்கின்ற பனித்துளிகளை கதிரவன் தன்னகத்தே ஈர்த்துக்கொள்ளும் விதத்தை

"மூங்கில் இலைமீது தூங்கும் பனி நீரே
தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே" என்று பாடுகிறான்

இதே பாடல்தான்

"புல்வெளி புல்வெளிமீது பனித்துளி பனித்துளி ஒன்று
தூங்குது தூங்குது பாரம்மா அதைச் சூரியன்

சூரியன் வந்து செல்லமாய் செல்லமாய் இங்கு
எழுப்புது எழுப்புது ஏனம்மா

என வைரமுத்துவினால் வார்த்தைகள் மாற்றப்பட்டு உள்ளடக்கம் மாறாமல் உலாவருகிறது.

அன்னைமொழி விடுத்து அந்நியமொழியில் பாடல் இசைக்கின்ற பாடலுக்கு தமிழ்ப்பாடல்களின் சிறப்பை உணர்த்துகிறாள் ஒருத்தி. பாரதியின் பாடல்களில் தன்னையிழந்த பாடகன் பின்னர் அவளது பருவ அழகாலும் பாதிக்கப்படுகிறான். முளைவிட்ட மோகமுள்ள பாரதியின் பாடல்களால் பாடஎண்ணி வார்த்தைகளுக்கு வடிவம் மாற்றுகிறார் வைரமுத்து.

"மோகத்தைக் கொன்றுவிடு அல்லால் என்
மூச்சை நிறுத்திவிடு"

என்ற பாரதியின் வரிகள்

"மோகம் என்னும் மாயைப்பேயை நானும்
கொன்று போட வேண்டும்
இல்லையென்றபோது எந்தன் மூச்சு
நின்றுபோக வேண்டும்"

என்று மாற்றம் பெறுகிறது. தலைவன் வரும்வழியை எதிர்பார்த்தே தலைவியின் கண்கள் ஒளி இழக்கின்றன. அவன் பிரிந்து சென்ற நாட்களை எண்ணி எண்ணியே விரல்கள் தேய்கின்றன. இது திருவள்ளுவரின் கற்பனை.

"வாளாற்றுப் புற்கென்ற கண்ணும் அவன் சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்" (குறள் - 1261)

இத்திருக்குறட் கருத்தினை திரையிசைப்பாடல் ஒன்றிலே வைரமுத்து நுழைக்கின்றார்.

"மாலை சூடும் தேதி எண்ணிப் பத்துவிரலும் தேயும்"

காமமும் தும்மலும் தமக்குரிய தருணத்திலே வெளிப்பட்டுவிடும். அவற்றை அடக்கிவைக்க முடியாது என்பதைத் திருக்குறள்,

"மறைப்பேன் மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றிவிடும்" (குறள் - 1253)

என்கிறது.

"துடிக்கின்ற காதல் தும்மலைப் போன்றது
எப்பவும் வரலாம் எவர் கண்டார்"

என்கிறது கவிஞரின் திரைப்பாடல்.

குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள் அழகிய சந்தங்களைக் கொண்டமைந்தவை. மெட்டுக்களுக்குக் கட்டுப்பட்ட திரைப்பாடல் புனையும் கவிஞர்,

"இந்திரையோ இவள் சுந்தரியோ தெய்வ
ரம்பையோ மோகினியோ"

என்ற குற்றாலக் குறவஞ்சியின் மெட்டோடு உள்ளம் ஒட்டுப்பட்டு எழுதிய பாடலாக அமைவது,

"என்னவளே அடி என்னவளே எந்தன்
இதயத்தைத் தொலைத்து விட்டேன்" என்ற பாடல்.

தமிழிலக்கிய மரபின் தொடர்ச்சியும், வளர்ச்சியும் கற்பனை வீச்சுக்களையும், சொல்லாட்சிகளையும் கவிஞரின் பல்வேறு பாடல்களிலே இனங் காணலாம். அற்றைத் திங்கள் அந்நிலவில், சூடித்தந்த சுடர்க்கொடியே, சுட்டுவிழி, நகுமோ, குறுக்கு சிறுத்தவளே, பசலை ஊர்தல் போன்ற இலக்கியச் சொற்கள் யாவும் இவரது திரையிசைப்பாடல்களில் உலா வருகின்றன.

வைரமுத்துவை அதிகம் பாதித்த மேலைநாட்டுக் கவிஞன் கலீல் ஜிப்ரான். அக்கவிஞன் வரைந்த "முறிந்த சிறகுகள்" கவிதைத் தொகுதியை வாசித்துவிட்டு உறக்கமின்றித் தவித்ததாக வைரமுத்து தன் கட்டுரையொன்றில் எழுதியிருக்கிறார். அந்த லெபனான் மண்ணின் கவிப்புயலின் வரிகள் கூட நம் கவிஞரிடம் செல்வாக்குச் செலுத்துகின்றன.

"மழை ஒரு சங்கீதம் பாடுகிறது
எல்லோரும் தான் கேட்கிறார்கள்
சிலர்தான் புரிந்து கொள்கிறார்கள்"

என்ற கலீல் ஜிப்ரானின் வரிகளில் உள்ளம் துள்ளுகிறது. வான் சிறப்புத் தந்த வள்ளுவனும், "மாமழை போற்றுதும்" இயம்பிய இளங்கோவும், மழையழைத்த படலம் படித்த உமறுப்புலவனும் மழையை இதயத்தோடு ஒட்டாத இறையியல் தன்மைமிக்க இயற்கைப் பொருளாகத்தான் பார்த்தார்கள். ஆனால் கலீல் ஜிப்ரானோ முருகியல் உணர்வோடல்லவா மூழ்கிவிடுகிறான்.

"மழை கவிதை கொண்டு வருது யாரும்
கத வடைக்க வேண்டாம் - ஒரு
கறுப்புக்கொடி காட்டியாரும்
குடை பிடிக்க வேண்டாம்"
"அந்த மேகம் சுரந்த பாலில் ஏன்
நனைய மறுக்கிறாய்"

"இயற்கை அன்னை படைத்த பெரிய "ஷவர்" இது" என்ற கவிஞரின் வரிகளிலெல்லாம் கலீஸ் ஜிப்றான் நிறைந்திருக்கிறான்.

வாழ்வியலுக்கு ஆடை கட்டிப் பார்க்கின்ற கவிதைகளைவிட, நிர்வாண ஞானத்தின் நித்தியம் விளக்கும் தத்துவப் பாடல்களே இதயத்தின் ஆழத்தைத் தொடுகின்றன. அதனால்தான் கண்ணதாசன் என்ற நிலாவுக்கு மாதம் முழுவதும் திரையுலகிலே பௌர்ணமி அந்தஸ்துக் கிடைத்தது. வைரமுத்து தத்துவத்தின் சிகரம் தொடவில்லை என்றாலும் அர்த்தம் பொதிந்த வார்த்தைகளோடு "அகரம்" எழுதத் தொடங்கியுள்ளார் என்பது நிஜம்.

"சொந்தமே ஒரு வானவில் அதன் வர்ணம் கொஞ்சநேரம்"

"எரிகின்ற தீபம் ஒளிதரும் போதும்
விளக்கின் அடியில் இருள்வட்டம் போடும்"

"உயிரில் உயிர்கள் ஜனனம்
ஜனனம் இருந்தால் மரணம்
இயற்கை தானடா ஏன் சலனம்"

"கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்"

"உடம்பு என்பது உண்மையில் என்ன
கனவுகள் வாங்கும் பைதானே"

"விதைப்பவன் மனிதனடா அறுப்பவன் ஒருவனடா"
போன்ற திரைப்பாடல் வரிகள்

எல்லாம் கவிஞனின் தத்துவஞான வித்துவத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டுக்களாக விளங்குகின்றன.

தமிழ்த் திரையிசையில் வித்தியாசமான சிந்தனைகளுக் கெல்லாம் வித்தூன்றியவராகவும் வைரமுத்து மிளிர்கின்றார். பெண்களை வர்ணிக்கும்போது காலங்காலமாகக் கையாளும் கற்பனைகளைத் தாண்டிச் சிந்திக்கிறார்.

"புடவை அணிந்து வந்த பூவே"
"இரட்டைக்கால் பூக்கள்"
"இரத்த ஓட்டம் பாய்கின்ற தங்கம்"
"பிட்டி கே. ஜி (50 k.g) தாஜ்மகால்"
"பூக்களால் செய்த புத்தகம்"

என்னும் எழில்மிகு வர்ணனைகளை எல்லாம் அள்ளி வீசியிருக்கிறார். அந்திமாலையின் வர்ணனைப் பாடலோடு திரையுலகில் அடியெடுத்து வைத்ததாலோ என்னவோ கவிஞரின் இயற்கை அழகு எடுத்தியம்பும் பாடல்கள் எல்லாம் அட்டகாசமான கற்பனைத்தளங்களைக் கொண்டமைந்துள்ளன.

"பூ கொடியின் புன்னகை
அலை நதியின் புன்னகை
மழை முகிலின் புன்னகை
.....

அந்தப் பௌர்ணமி என்பது ஒரு மாதத்தின் புன்னகை" என்று இயற்கையின் புன்னகையை எடுத்தியம்பும்போது இதயம் சிலிர்க்கின்றது.

"இலைகளில் காதல் கடிதம் வண்டு எழுதும் பூஞ்சோலை"

"மலர்கள் பனித்துளியில் முகங்கள் பார்க்கும்"

"நனைந்த மலர்களுக்கு குளிரெடுக்காதோ
வண்டுகள் பறந்துவந்து தலைதுவட்டாதோ"

"வானமகள் நாணுகிறாள், வேறு உடை பூணுகிறாள்"

மனிதர்கள் இன்னும் போதுமான அளவுக்கு புலன்களைப் பயன்படுத்தவில்லை என்பதை புலப்படுத்தும் வைரவரிகளில் ஒரு கவிஞனின் மேதா விலாசம் மேலோங்கி நிற்கிறது: இயற்கையினைப் பற்றிப் பாடும்பொழுது இமயத்தின் உச்சத்தில் கற்பனைகளை எடுத்தியம்புகின்றனர்.

காதலின் மேன்மையிலே கவிஞர்கள் கரைந்து போகிறார்கள். கலந்து போகிறார்கள், கவிதையாகிப் போகிறார்கள். பூவிலும் மென்மையானவளாகத் தன்னவளைக் காதலன் கண்டுணர்கின்றான். இவ்வாறாக பெண்மையின் மென்மையினை எடுத்தோதுகின்ற வரிகளை எவ்வளவு இலாவகமாக வைரமுத்து செதுக்கியிருக்கிறார்.

"வருட வரும் பூங்காற்றை எல்லாம் கொஞ்சம்
வடிகட்டி அனுப்பி வைப்பேன்"
"உனது நிழல் தரை விழுந்தால்
என்மடியில் ஏந்திக் கொள்வேன்"
"மெல்லினங்கள் பாடுகண்ணே
வல்லினங்கள் வாய்வலிக்கும்"

தனது கற்பனாசக்தி மூலம் இயற்கையின் நிகழ்வொன்றுக்கு கவிஞன் விளக்கமளிக்கின்ற தன்மையினை தமிழிலக்கணம் தற்குறிப்பேற்ற அணி எனக் கொள்கிறது. வானத்திலே முகில்கள் ஓடித்திரிவதும், பின்னர் ஒன்றிணைந்து மழையெனப் பொழிவதும் இயற்கை நிகழ்வு. வைரமுத்து இதற்குப் புதுவிதமான விளக்கமளிக்கிறார்.

"முகிலினங்கள் அலைகிறதே
முகவரிகள் தொலைந்தனவோ..?
முகவரிகள் தவறியதால்
அழுதிடுமோ அதுமழையும்?"

பாமரமக்களின் வாழ்வியலில் இருந்து புறப்படுகின்ற இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. கிராமிய மக்களின் வழக்குச் சொற்கள், வாழ்வியல் முறைகள், உணர்வு ரீதியான பிரதிபலிப்புகள் அனைத்தையும் தன்னுள்ளடக்கியதாக நாட்டார் பாடல்கள் அமைந்து காணப்படுகின்றன. நயமான நாட்டார் வழக்கியற் கற்பனை ஊற்றுக்களும் கவிஞரின் திரையிசையிலே தெவிட்டாத உணர்வுடன் பிறவாகமெடுத்துள்ளன.

"ஆசவச்சேன் ஒம்மேல - மச்சான்
அரளி வச்சேன் கொல்லையிலே
ஆதரிச்சா நல்லதையா - இல்ல
அரளி வெத உள்ளதையா"

"எலக்கணம் படிக்கவில்லை
தலக்கணமும் எனக்கு இல்ல"

"ஊத்துமலைத் தண்ணீரே - என்
உள்ளங்கை சக்கரையே"

வைரமுத்துவின் சில சொல்லோவியங்கள் சிந்தையிலே விந்தை செய்கின்றன. பூவுக்குள் பூகம்பம், கள்ளூறும்

உன்பார்வை, தீயின் ஓவியம், இனிக்கின்ற விஷம் போன்றன தக்க எடுத்துக்காட்டுக்கள்.

"செந்தமிழ் நாடென்னும் போதிலே இன்பத்தேன் வந்து பாயுது காதிலே" என்ற பாரதி பாடலிலே நாவுக்குரிய இனிமைச் சுவை காதுக்கு உரியதாக கற்பனை செய்யப்பட்டிருக்கின்றது. இதனைப் புலன்மாற்று உத்தி என்பர். ஒருவனும் ஒருத்தியும் உள்ளம் ஒன்றிக் கூடியபோது பிறந்த பேரின்பத்தை இன்னவாறு இருந்தது என எடுத்தியம்ப முடியாத நிலையில் அதனை அகம் என்று சுட்டுகிறோம். அவ்வின்பத்தின் தன்மையை கவிஞர் எடுத்தியம்ப முற்படுகிறார்.

"நீ என்னைத் தழுவிக் கொண்டால் - எந்தன்
நெற்றிக்குள் இனிக்குமடி"

இங்கு நெற்றிக்கும் இனிக்கும் உணர்வு வார்த்தைகளுக்கு உட்படாதது அனுபவத்தின் அந்தப்புரத்தில் ஆட்சி செய்கின்றது.

"கண்ணில் வரும் காட்சி எல்லாம்
கண்மணியே உறுத்தும்
காணாத உண்ணுருவம் கண்ணுக்குள்ள இனிக்கும்"

என்னும் புலன் மற்று உத்திய புதுமெருகுடன் பூத்து வருகின்றது.

திரையிசைப் பாடல்கள் என்னும் ரோசாச் செடியில் பூக்கள் மட்டுமே பூத்துக் குலுங்கவில்லை. முட்கள் கூட அவன் முகவரி சொல்லுகின்றன.

"என்னைப்பத்தி நீ என்ன நினைக்கிற
உன்னைப்பத்தி நான் ஒன்றும் நினைக்கல்ல"

எனும் வகையிலமைந்த இலக்கியத்தரமற்ற – ஏனோ தானோ - வரிகளுக்குக் கூட வைரமுத்து சொந்தக்காரராக இருக்கிறார். மேலும்

"கொட்டகை வளர்ந்த பொறகு நாட்டில
குத்தம் குறைஞ்சிருக்கு"

என்றவாறாக சமுதாய உணர்வற்ற - கோமாளித்தன மான கேவலமான முன்னுதாரண வார்த்தைகள் தான்.

"சொல்லடி சிவசக்தி, எனை சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்" என பாரதியும், "நான் நிரந்தரமானவன் அழிவதில்லை எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை" என கண்ணதாசனும் தம்முடைய சிறப்புக்களை எடுத்துரைக்கும்போது உயர்ந்த கவிதா நிலையில் இருந்திருக்கிறார்கள். ஆனால் வைரமுத்துவோ சாதாரண மனித நிலையில் இருந்தவாறே தற்பெருமை பேசுகிறார்.

"பாட்டுக்கட்டும் நம்ம வைரமுத்தைக் கேட்டு
பராதிராஜா சொன்ன கிராமத்தைக் காட்டு"

"கண்ணதாசன் சொன்னாங்கோ - வைரமுத்து
சொன்னாங்கோ"

இவ்வாறான வரிகள் திட்டமிட்டுக் கட்டப்பட்டிருப்பது தெரிகிறது. இவற்றை தவிர்த்திருக்கலாம்.

"அடுக்களை துடைப்பதும் படுக்கையை விரிப்பதும்
அது பெண்ணின் தொழிலில்லையே
தரித்திரம் துடைக்கவும் சரித்திரம் படைக்கவும்
வருவதில் பிழையில்லையே"

என்ற பெண்ணியச் சிந்தனையின் பிதாமகன், பின்னர் எழுதிய வரிகளில் பெண்களை வெறுமனே இன்பநுகர்ச்சிப் பொருளாகவே பார்க்கிறார்.

"ஏழு மணிக்கு மேல நீயும் இன்ப லட்சுமி"

"அடி பள்ளித் தாமரையே உன்பாதம் கண்டேனே
உன்பட்டுத் தாவணி சரியச் சரிய மீதம் கண்டேனே"

என்றவாறான வரிகளிலே ஒரு நல்ல கவிஞன் காணாமல் போயிருக்கிறான்.

தமிழ்மொழி ஆழமான கற்பனைச் செறிவோடு, அர்த்தம் செறிந்த வார்த்தைகளையும் கொண்டிருக்கிறது. சில சொற்கள் பெயராகவும், வினையாகவும் செயற்படும் வல்லமை மிக்கன. சங்கமம் படத்தில் வரும் மார்கழித் திங்கள் அல்லவா...? பாடலில்

"நம் காதல் ஜோதி கலையும் ஜோதி"

என்று எழுதியிருக்கிறார். பாடலை எழுதிய நோக்கம், நம் காதலும் ஜோதி, கலையும் ஜோதி என்பதை வெளிப்படுத்தவே. ஆனால் அவ்வரி நம் காதல் ஜோதி, கலைந்து விடும் ஜோதி என்ற பொருளையும் தந்து விடுகிறது. எனவே இவ்வாறான இடங்களை மிக அவதானமாகக் கையாள வேண்டியது அவசியமாகின்றது.

இருபத்தொராம் நூற்றாண்டில் தமிழ் சினிமாப் பாடல்கள் சொற்கூட்டங்களின் ஓசைப்பவனியாகவும், முக்கலும் முனகலும் ஓலமும் கலந்ததாகவும், வாத்தியங்களுக்கும் வார்த்தைகளுக்குமான இடைவெளியை அதிகரித்ததாகவும், கவிதைப் பொருளை விட வேறு பொருள் நோக்கி எழுதப்பட்டதாகவுமே இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே திரையிசைப் பாடல்களின் மூலம் மக்கள் மனதில் இடம்பிடித்த இறுதிக்கவிஞன் என்ற பெருமையும் வைரமுத்துவிற்கு சாகாவரமளித்த சஞ்சீவியாகிறது.

தேசவழமைச் சட்டத்தின் குறைநிறைகள்

தேசவழமை, பல நூற்றாண்டுகளாக இலங்கையின் வடபகுதியின் மக்களை வழி நடத்தி வந்துள்ள சட்ட வழமை நெறியாகும். காலாகாலமாக சமூக மாற்றங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து நின்றிருக்கும் தேசவழமைச் சட்டம் பழைமையான வழக்காற்று சட்டங்களில் ஒன்று. அன்றைய சமுதாயக் கோட்பாடுகளுக்கு சட்டவலுக் கொடுத்து, தர்க்கரீதியாக வழமையில் இருந்த, தேசவழமை நெறிமுறைகளைக் கோவைப்படுத்தும் முயற்சி முதன்முதலாக டச்சு அரசினால் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் டச்சு அரசின் தேசாதிபதியாக விருந்த சைமன்ஸ் *(1)* இட்ட கட்டளையின் பேரில் திரு. கிளாய்ஸ் ஜசாக்ஸ் *(2)* என்பவர் 1707ம் ஆண்டில் தேசவழமை நெறிகளை டச்சு மொழியில் கோவைப்படுத்தினார். திரு. ஜசாக்ஸின் வேண்டுகோளுக்கமைய திரு. ஜான் பைரஸ் *(3)* அக்கோவையைத் தமிழில் மொழி பெயர்த்தார். 1707 முதல் 1796 வரை டச்சு நீதிமன்றங்கள் தேசவழமைச் சட்டத்தின்படி நீதி வழங்கின. 1796ம் ஆண்டில் இலங்கையைக் கைப்பற்றிய பிரித்தானியரும் டச்சு அரசில் பின்பற்றப்பட்ட சட்டங்களையும் வழக்காற்று முறைமைகளையும் தொடர்ந்து பின்பற்றுவது எனத் தீர்மானித்தனர். எனவே தேசவழமைச் சட்டமும் தொடர்ந்து அமுலில் இருந்தது.


பிரித்தானிய ஆட்சியின்கீழ் பிரதம நீதியரசராக இருந்த சேர் அலெக்சான்டர் ஜோன்ஸ்றன் *(4)* யாழ்ப்பாணத்திற்கு முதன்முறை சென்றபோது யாழ்ப்பாண மக்கள் தேசவழமைச் சட்டத்திற்கு அளிக்கும் மதிப்பைக் கண்டு அதிர்ந்து போனார். தேசவழமைச் சட்டத்தினை யாழ்ப்பாண மக்கள் உண்மையிலேயே போற்றித் துதிக்கிறார்கள் என்பதனை அறிந்து கொண்ட பிரதம நீதியரசர், திரு. ஜசாக்ஸ் தயாரித்த தேசவழமைக் கோவை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் எனவும் அம்மொழிபெயர்ப்பின் பிரதிகள் சகல நீதிபதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் எனவும் பணிப்புரைகள் வழங்கினார். அதுமட்டுமல்லாமல் கோவையின் தமிழ் மொழி பெயர்ப்பின்பின் பிரதிகளை பனை ஓலைச் சுவடிகளில் பதிப்பித்து கிராமத் தலைவர்களுக்கும் விநியோகிக்க வழி செய்ததுடன் அத்தலைவர்கள் தேசவழமை விதிகளைத் தங்களின் கிராமங்களிலுள்ள மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும் எனவும் பிரதம நீதியரசர் ஜோன்ஸ்றன் உத்தரவிட்டார்.

படிப்படியாக எங்கள் நாடு அடிமைத்தளையிலிருந்து மீளும் போது 1925ம் ஆண்டில் சட்டசபையில் மாண்புமிகு கே. பாலசிங்கம் விடுத்த வேண்டுகோளை யடுத்து தேசவழமைச் சட்டத்தினை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அரசாங்க ஆணைக்குழு ஒன்று



கந்தையா நீலகண்டன்
சட்டத்தரணி

உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்



1852 2002

150 ஆண்டுகள் நிறைவு
சிறப்பிதழ்

அமைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு தனது அறிக்கையினை 1929ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் சமர்ப்பித்தது. 1931ம் ஆண்டு அக்டோபர் திங்களில் மேலும், ஓர் அனுபந்த அறிக்கையினையும் அந்த ஆணைக்குழு சமர்ப்பித்தது.

தேசவழமைச் சட்டத்தின் குறைநிறைகளை ஆராய முற்படும் வேளையில் தேசவழமை ஆணைக்குழு ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு விதந்துரைத்த சிபார்சுகள் யாவை என்பதனையும் பார்ப்பது பொருத்தமானது மட்டுமல்லாமல் அவசியமானதாகும். அவையாவன :-

(1) தேசவழமைச் சட்டம், தேடிய தேட்டத்தினைத் தம்பதியினரின் பொதுச் சொத்தாகவே கருதியது. தம்பதியினரில் ஒருவர் இறந்தால் வாழ்கின்ற தம்பதிக்கு அரைவாசியும் இறந்த தம்பதியின் வாரிசுகளுக்கு மிகுதி அரைவாசியும் சேரும். அந்த முறையினை மாற்றி, தேடிய தேட்டம் தம்பதியினரின் மணவாழ்வின்போது பொதுச் சொத்தாகக் கருதத் தேவையில்லை என்றும் அப்படியான சொத்தைத் தேடிக்கொண்ட தம்பதியின் அல்லது எந்தத் தம்பதியின் சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்திலிருந்து அத் தேடிய தேட்டம் பெறப்பட்டதோ, அத்தம்பதியின், தனிப்பட்ட சொத்தாகவே அது அவரின் வாழ்நாளில் அனுபவிக்கப்பட்டு, அவரின் மரணத்தின் பேரில் மட்டும் அச்சொத்தின் அரைவாசிப்பங்கு வாழ்கின்ற தம்பதிக்கும் மிகுதி அரைவாசியும் (மரண சாசனம் மூலமோ வேறு வழியில் விட்டு வைக்காவிடில்) இறந்த தம்பதியின் வாரிசுரிமைக்காரருக்கும் சென்றடைய வேண்டும் எனவும் ஆணைக்குழு விதந்துரைத்தது.

(2) தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட எவருக்கும் வடமாகாணத்திற்கு வெளியே சொத்துக்கள் இருந்தால் அவையும் தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்பட வேண்டியனவையா? என்ற சந்தேகத்தையும் போக்கும் வகையில், அவ்வண்ணம் வெளியே இருக்கும் சொத்துக்களும் திருமண உரிமைகளையும் வாரிசுரிமைகளையும் பொறுத்தமட்டில் அவை யாவும் தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்டவையாக இருக்க வேண்டும் எனவும் ஆணைக்குழு சிபார்சு செய்தது.

(3) ஒரு தம்பதி இறந்து விட்டால் அவரின் சொத்துக்களை புத்திரிமாருக்கு மட்டும் கொடுக்கும் உரிமை வாழ்கின்ற தம்பதிக்கோ வேறொரு குடும்ப உறுப்பினருக்கோ இருக்க வேண்டுமா- என்ற பிரச்சினையை ஆராய்ந்த ஆணைக்குழு ஒரு தம்பதியின் மரணத்தின் பேரில் பிள்ளைகளுக்குப் போய்ச்சேரும் பங்குகளை மாற்றும் உரிமை வாழ்கின்ற தம்பதிக்கோ வேறொரு குடும்ப உறுப்பினருக்கோ வழங்கப்படக் கூடாது என்ற முடிவுக்கே ஆணைக்குழு வந்தது.

(4) மற்ற வாரிசுரிமையாளர்கள் இல்லாதவிடத்து தகப்பன் வழி பாட்டனுக்கும் பாட்டிக்கும் உரிமை சேருகின்ற போது, யாரிடமிருந்து அந்தச் சொத்து வந்ததோ அவருக்கே மீண்டும் அது சேரவேண்டும் என்பதே தேசவழமை முறை. ஆனால் 1911ம் ஆண்டில் இயற்றப்பட்ட திருமண உரிமைகளும் வாரிசுரிமைகளும் (யாழ்ப்பாணம்) கட்டளைச்சட்ட *(5)* த்தின் 29ம் பிரிவு, அந்த மீண்டும் சேரும் உரிமையைப் பறித்துவிட்டது என்ற குறை சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் அந்த 29ம் பிரிவு மாற்றப்பட வேண்டியதில்லை என ஆணைக்குழு முடிவு செய்தது.

(5) சொரியலாய் பங்குகள் உள்ள காணிகளைப் பொறுத்த மட்டுமே கொள்வனவு முன்னுரிமை இருக்க வேண்டும் எனவும் பங்குதாரர்களும் விற்க விரும்புவரின் வாரிசுரிமைக்காரர்களுக்கும் (மூன்று தலைமுறைகளுக்கு மட்டுமே) அந்த உரிமை கொடுக்கப்பட வேண்டும் எனவும் ஆணைக்குழு சிபார்சு செய்தது.

(6) பிள்ளை சுவீகரிப்பு சம்பந்தமாக தேசவழமை சட்டத்திலிருக்கும் அம்சம் நீக்கப்பட வேண்டும்.

(7) ஒற்றி ஈடு சம்பந்தமாக எந்தவித மாற்றமும் செய்யப்படக்கூடாது.

திருமண உரிமைகளும் வாரிசுரிமைகளும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டம் 1911ல் இயற்றப்பட்டு 1947ல் திருத்தப்பட்டது. 1947ம் ஆண்டில் தேசவழமை கொள்வனவு முன்னுரிமைக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. இயற்றப்பட்ட சட்டங்களுக்குக் *(6)* கட்டுப்பட்டதே வழக்காற்று நெறியான தேசவழமைச் சட்டம். இலங்கைச் சட்டங்களின் தொகுப்பின் (1980ம் ஆண்டின் மீட்டல்) பின்வரும் அத்தியாயங்களில் தேசவழமைச் சட்டத்தை இயற்றப்பட்ட சட்டவுருவில் காணலாம்.

(1) திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டம் *(5)*

(2) தேசவழமை கொள்வனவு முன்னுரிமைக் கட்டளைச் சட்டம் *(7)*

முதலாவது 70ம் அத்தியாயமாகவும் இரண்டாவது 74ம் அத்தியாயமாகவும் மேற்குறிப்பிட்ட தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. தேசவழமை சட்டவிதி *(8)* அதே தொகுப்பில் 73ம் அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இந்த விதி தேசாதிபதி சைமன்ஸ் அவர்களின் பணிப்பின் பேரில் தயாரிக்கப்பட்ட தேசவழமைக் கோவையை உள்ளடக்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடபகுதி நீதிமன்றங்களும் இந்நாட்டின் மேன்முறையீட்டு மன்றங்களும் தேசவழமை சட்ட நெறிகளுக்கு வியாக்கியானங்கள் தந்து அளித்த பல தீர்ப்புக்களையும் திரட்டி திரு. முத்துக்கிருஷ்ணா வெளியிட்ட தேசவழமை நூலும், இந்நூற்றாண்டின்

நடுப்பகுதியில் கலாநிதி எச். டபிள்யூ. தம்பையா எழுதிய "யாழ்ப்பாணத் தமிழர்களின் சட்டங்களும் வழமை நெறிகளும்" என்ற நூலும் தேசவழமைச் சட்டத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. காலத்துக்காலம் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகள் மூலம் தேசவழமைச் சட்டம், ரோமன் டச்சுச்சட்டத்தினதும் ஆங்கிலச் சட்டத்தினதும் தாக்கங்களுக்கும் உள்ளானது.

தேசவழமை போன்ற வழக்காற்றுச் சட்டம் ஒன்றின் அம்சங்கள் எவையேனும் பின்பற்றப்படாது விடப்பட்டால் காலப்போக்கில் அவை சட்டவலு விழந்து *(9)* விட்டவையாகும் என்பது பொதுச் சட்டநியதி. அவ்வண்ணம் தேசவழமையிலும் பல அம்சங்கள் காலப்போக்கில் பின்பற்றப்படாத வழமைகளும் (வழக்காறுகளும்) பழக்க வழக்கங்களும் ஆகிவிட்டதால் அவை சட்டவலுவிழந்துவிட்டன. ஆனால் தேசவழமை போன்ற ஒரு பரந்த சட்டத்தில் எவை எவை அவ்வாறு சட்டவலுவிழந்துவிட்டன எனக் குறிப்பிட்டுக் கூறுவது கடினமாதலால் தேசவழமை ஆணைக்குழுவோ இலங்கைச் சட்டங்களை 1938லும் 1956லும் 1980லும் தொகுத்தவர்களோ அந்த முயற்சியில் இறங்கத் துணியவில்லை.

இந்த வரலாற்றுப் பின்னணியில் வளர்ந்து இன்று வடமாகாணத் தமிழர்களையும் அவர்களின் சொத்துக்கள் யாவற்றையும் (அந்த மாகாணத்திலிருந்தாலென்ன அதற்கு வெளியே இருந்தாலென்ன - அசைவுள்ள அசைவற்றவை யையும்) ஆளுகின்ற தேசவழமைச் சடடத்தின் குறை நிறைகளை வெவ்வேறு தலைப்புகளில் சிறியேன்தன் சிற்றறிவிற்கு எட்டிய மட்டில் ஆராய முற்படுகிறேன்.

தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட நபர்கள்

வடமாகாணத்தில் வசிக்கின்ற தமிழ்க் குடிகள் யாவரும் தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்டவர்கள். வியாபாரம் அல்லது தொழில் நிமித்தம் ஒரு யாழ்ப்பாணத் தமிழர் வடமாகாணத்திற்கு வெளியே நீண்டகாலம் வசித்தாலும் கூட அவர் யாழ்ப்பாணக் குடிமகன் என்ற நிலையை இழக்கமாட்டார். இந்த விடயத்தில் இன்று நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தவல்ல *(10)* தீர்ப்பு 1988ம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் பதினைந்தாம் நாளன்று உயர்நீதிமன்றம் சிவஞானலிங்கம் - எதிர் - சுந்தரலிங்கம் வழக்கில் வழங்கிய தீர்ப்பாகும். (1988) 1 - ஸ்ரீ லங்கா சட்ட அறிக்கைகள் 86ம் பக்கத்தில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள இவ்வழக்கில் "தேசவழமை யாரை ஆளுகின்றது" என்ற வினாவிற்கு விடைதந்து பிரதம நீதியரசர் சர்வானந்தா எழுதிய தீர்ப்பில், "ஒரு வடமாகாணத் தமிழ்க்குடி அவன் எங்கிருந்தாலும் அவனின் சொத்துக்கள் இலங்கையின் எப்பகுதியில் இருந்தாலும் தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்டவன் ஆவான்" எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒரு வடமாகாணத் தமிழ்க் குடிக்கும் அவனின் சொத்துக்களுக்கும் தேசவழமையின் ஆட்சியில்லை என எவரும் வாதிட முற்பட்டால் அக்குடிமகன் அத்தகைய குடிமகன் நிலையைத் துறந்து விட்டான் என்று நிரூபிப்பது அவ்வாதத்தை வைப்பவரின் பொறுப்பு, என்பதே இத்தீர்ப்பின் அடிப்படைக் கருத்து.

இன்று வடமாகாணத் தமிழர் பலர் இலங்கையின் ஏனைய மாகாணங்களில் மட்டுமல்லாமல் பிறநாடுகளுக்கும் சென்று தொழில் பார்ப்பதுடன் பல ஆண்டுகளாக அங்கு வசிக்கிறார்கள். இந்நிலையில் அவர்கள் தேசவழமையின் ஆட்சிக்குட்பட்டவர்களா? என்ற வினா பல சமயங்களில் எதிர்காலத்தில் எழலாம்.

இன்றைய அதிகாரப் பரவலாக்கல் கொள்கையின் காரணமாக வடகிழக்கு மாகாணங்கள் இரண்டும் ஒரு மாகாணமாக இணைந்துள்ளன. இரு மாகாணங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் ஒரே மாகாண மக்களாக வாழக்கூடிய வாய்ப்பே பெரும்பாலும் இருக்கின்றது. "யாழ்ப்பாணப் பட்டணம்" என்று ஆரம்பகாலத்தில் குறிப்பிடப்பட்டதே இன்றைய வடமாகாணம். இந்த மாகாண அமைப்பு மாறுகின்ற நிலையில் மாறிய மாகாணத்தில் வாழும் யாவருக்கும் ஏற்புடையதாக ஒரே சட்டம் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழக்கூடிய வாய்ப்பும் உண்டு. எனவே தேசவழமையால் ஆளப்படும் நபர்கள் யாவர் என்பதைத் தெட்டத் தெளிவாக, மாறிவரும் சூழ்நிலைகளுக்கும் அமைப்புகளுக்கும் ஏற்புடையதாக, வரையறுப்பது அவசியமாகும்.

தேச வழமையின் ஆட்சிக்குட்பட்ட சொத்துக்கள்

தேசவழமையின் ஆட்சிக்குட்பட்ட நபர்களின் சொத்துக்கள் யாவும் தேசவழமையின் ஆட்சிக்குட்பட்டவை. அவை வடமாகாணத்திலோ அன்றி அதற்கு வெளியேயோ உள்ளவையாகவும் அசைவானவையாகவோ அசைவற்றவையாகவோ இருக்கலாம். சிவஞானலிங்கம் - எதிர் சுந்தரலிங்கம் வழக்கில் பிரதம நீதியரசர் சர்வானந்தா சுட்டிக் காட்டியவண்ணம், தேசவழமை ஓர் ஆள்சார்பு *(11)* சட்டமேயன்றி இடச்சார்பு *(12)* சட்டமல்ல. இது தேசவழமைச் சட்டத்தின் நிறைகளில் ஒன்று என்றே சொல்ல வேண்டும். தேசவழமைச் சட்டத்தின் ஆளுமைக்கு உட்பட்ட ஒருவருக்கு சொத்துக்கள் சில யாழ்ப்பாணத்திலும் வேறு சில கொழும்பிலும் இருக்கலாம். யாழ்ப்பாணத்திலிருக்கும் சொத்துக்கள் மட்டும் தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்படும் என்றும் கொழும்பிலிருக்கும் சொத்துக்கள் ரோமன் டச்சுச் சட்டத்தினால் ஆளப்படும் என்ற நிலையிலிருந்தால் அதனால் ஏற்படக்கூடிய குழப்பங்களும் கஷ்டங்களும் சொல்லொணாத வையாக இருந்திருக்கும்.

திருமணமான ஒரு பெண் பூரண உரிமையற்றிருத்தல்

திருமணமான ஒரு பெண் தேசவழமைச் சட்டத்தின் கீழ் பூரண உரிமையற்றவளாக - பராயமடையாத ஒரு பிள்ளையைப் போன்று - கணிக்கப் பெறுவதும், அவளைக் கணவனின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்ட

பாவையாகக் கருதுவதும் தேசவழமைச் சட்டத்தின் ஒரு பெரும்குறையாக இருக்கின்றது. தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்படுகின்ற மனைவி ஒருத்தியின் நிலையினைச் சுருங்கக்கூறின் பின்வரும் விடயங்களை எடுத்துக்காட்டலாம்-

(அ) தேசவழமைத் தம்பதிகளின் திருமண உரிமைகளை இன்று பாதிக்கும் சட்டம் திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச்சட்டம். அச்சட்டத்தின்படி தனது தனிப்பட்ட சொத்துக்களில் அசைவுள்ளவையை மட்டும் கணவனின் சம்மதமின்றி விற்கவோ வேறு விதத்தில் அவற்றை ஈடுபடுத்தவோ முடியும். ஆனால் அசைவற்ற சொத்தானால் கணவனின் சம்மதமின்றி அவள் அதனை விற்கவோ வேறு விதத்தில் ஈடுபடுத்தவோ முடியாது. ஆனால் மரணசாதனம் மூலம் அவள் தான் விரும்பியபடி தன் சொத்துக்கள் எவற்றையும் விட்டுச் செல்லலாம். கணவனின் சம்மதம் தேவையானதைவிட அத்தகைய சம்மதம் பெறுவது அசாத்தியம் என்றால் அச்சட்டத்தின் 8ம் பிரிவின் கீழ் மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று தன் சொத்துக்களை (அசைவுள்ளனவாயினும்) விற்கவோ அல்லது வேறு முறையில் ஈடுபடுத்தவோ முடியும். ஒரு நீதிமன்றத்தின் சட்டபூர்வமான தீர்ப்புக் கட்டளைப்படி கணவன் - மனைவி பிரிந்திருந்தால் திருமணமாகாத பெண் போன்று கணவனின் சம்மதமோ நீதிமன்றத்தின் அனுமதியோ இன்றி இந்த மனைவி தன் சொத்துக்களை தான் விரும்பிய வண்ணம் என்னவும் செய்யலாம்.

(ஆ) வேறு ஒப்பந்தங்களிற்கும் கணவனின் சம்மதமின்றி சட்ட பூர்வமாகக் கட்டுப்படும் உரிமை ஒரு தேசவழமை மனைவிக்கு இல்லை. அவளின் சுயநன்மைக்காக அல்லது பொது வர்த்தகர் என்ற ரீதியில் அல்லது வீட்டவசிய தேவைகளுக்காக அந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டால், கணவனின் சம்மதம் பெறப்படாவிட்டாலும், சட்டபூர்வமானவையாகச் செல்லுபடியாகும். தம்பதிகள் சட்டப்படி பிரிந்திருந்தால் இந்தக் கட்டப்பாடும் இல்லை.

(இ) ஒரு நீதிமன்றத்தில் வழக்கின் எந்தக் கட்சியாகவும் ஒரு தேசவழமை மனைவி கணவனுடனேயன்றித் தனியே வழக்காட முடியாது. (இக்கட்டுப்பாடு ஒரு விவாகரத்து அல்லது விவாகப் பிரிவு வழக்கிற்குப் பொருந்தாது)

(ஈ) தன் மனைவியைப் பராமரிப்பது கணவனின் பொறுப்பாகும். ஆனால் சுகவீனமான அல்லது தன்னைத்தானே பராமரிக்க முடியாத கணவனைப் பராமரிக்கும் பொறுப்பினை தனிப்பட்ட சொத்துள்ள (பொதுச் சட்டத்தினால் ஆளப்படும்) மனைவிக்கு திருமணமான பெண்களின் சொத்துக் கட்டளைச் சட்டம் (13) சுமத்தியிருக்கின்றது. தேசவழமைச் சட்டத்தினால் ஆளுமைக்குட்பட்ட மனைவிக்கு அப்படியான பொறுப்பில்லை.

இப்படியான வழமைநெறி பிறந்தகால கட்டத்திலே இருந்த சமுதாயநிலை வேறு; இன்றைய நிலை வேறு. அன்றைய தேசவழமை மனைவி கல்வியறிவற்ற பேதையாக, உலகறிவு இல்லாத மடந்தையாக இருந்திருப்பாள். இன்று தேசவழமை மனைவிமார் பலர் சட்டத்தரணிகளாகத் தொழில் பார்க்கிறார்கள். அத்தகைய பெண் சட்டத்தரணிகள் மற்றவர்களுக்கு (ஆடவர்களுக்கும் கூட) பின்னவரின் சட்ட உரிமைகளைப் பற்றி ஆலோசனை வழங்குகிறார்கள்; ஒப்பந்தங்கள், உறுதிகள் தயாரித்து அத்தாட்சிப் படுத்துகிறார்கள்; ஏனையோருக்காக நீதிமன்றங்களில் வழக்காடுகிறார்கள். அவ்வாறான பெண் சட்த்தரணிகளில் ஒருவர் இன்று நீதிபதியாகவும் பொறுப்பேற்று இருக்கிறார் எனவும் அறிகிறேன். இந்தநிலையில் தேசவழமை மனைவிமாரை இன்னும் பராயமறியாப் பாலகர் நிலைக்குத் தள்ளி கணவர்களின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக்குதல் நியாயமானதாகாது. நம் நாட்டின் அரசியலமைப்பும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனமும் மட்டுமல்ல பாட்டுக்கொரு புலவன் பாரதிமுதல் இன்றைய தமிழிலக்கியங்கள் கூட பெண்ணை ஆணுக்கு நிகராகக் கணிக்கின்ற இன்றைய கால கட்டத்தில், தேசவழமை இன்னும் ஒரு மணமான பெண்ணை பராயமற்ற பிள்ளை நிலைக்குத் தள்ளுவது எவ்விதத்திலும் நீதியாகாது என்பதை எவரும் ஏற்பர். எனவே தேசவழமைச் சட்டத்தின் இந்த அம்சம் பொருத்தமான முறையில் திருத்தப்பட வேண்டும்.

முதுசொமும் உரிமையும்

தனது பெற்றோரின் அல்லது ஏறுவரிசையிலுள்ள முன்னோரிடமிருந்து ஒருவருக்குக் கிடைக்கும் சொத்து, "முதுசொம்" எனவும் அவ்வாறல்லாத உறவினர்களிடமிருந்து அவர்களின் மரணத்தில் வந்து சேரும் சொத்து "உரிமை" எனவும் தேசவழமைச் சட்டம் வகித்திருக்கின்றது. இப்படியாகக் கிடைத்த முதுசொம், உரிமை உட்பட தேடிய தேட்டமல்லாத சொத்துக்களின் உரிமையாளர், தனது சொந்தப் பிள்ளைகளை விட்டு இறந்தால் அவை அப்பிள்ளைகளைச் சேர்ந்தடையும். ஆனால் அவருக்குப் பிள்ளைகளில்லாமல் இருந்தால், பெற்றோருக்கு அல்லது ஏனைய உறவினர்களுக்கு (அல்லது அவர் தம் வாரிசுக்கு) வந்த வழியே மீண்டும் போய்ச் சேரும். இது தேசவழமையின் நிறைகளில் ஒன்று என்றே கூறுவேன். இலங்கையின் பொதுச் சட்டமான ரோமன் டச்சுச் சட்டத்தின் கீழ் அப்படியான சொத்தக்களின் அரைவாசிப் பங்கு இறந்தவரின் கணவனுக்கோ மனைவிக்கோ சேர்ந்தடைகிறது. அப்படியான ஓர் உதாரணத்தைக் கூறுகிறேன். 1979ம் ஆண்டில் செல்வி பெரரா திரு சில்வாவைத் திருமணம் செய்தார். செல்வி பெரரா அவரின் தாய் தந்தையிடமிருந்து ஏராளமான

சொத்துக்கள் முதுசொமாகச் சேர்ந்து இருந்தன. அந்த இளம் பெண் மரணசாசனம் எழுதவேண்டும் என்பதைக் கனவிலும் யோசித்திருக்க முடியாது. 1981ம் ஆண்டில் அவள் பிள்ளைச் செல்வம் எதுவுமின்றி திடீரென இறந்துவிட்டாள். அவளின் பொருட் செல்வங்களில் அரைவாசி திரு. சில்வாவிற்குச் சென்றடைகிறது. 1983ம் ஆண்டில் திரு. சில்வா செல்வி பண்டாவை மறுமணம் செய்து கொள்கிறார். இந்த இரண்டாம் மனைவி முதலாம் மனைவியின் சொத்துக்களை இன்று அனுபவிக்கிறாள். 'இது தான் நீதியா- நியாயமா-' என பெரரா குடும்பத்தினர் அங்கலாய்க்கின்றனர். அப்படியான ஒரு நிலை தேசவழமைச் சட்டத்தின் கீழ் எழமாட்டாது.

சீதனம்

திருமணத்தின்போது ஒரு பெண்ணால் புதிய குடும்பத்திற்குக் கொண்டுவரப்படும் சொத்தே சீதனமாகும். அப்பெண்ணின் திருமணத்தின் போதோ முன்போ பின்போ, பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது வேறு உறவினர், இப்பெண் புதுக்குடும்ப வாழ்வை ஆரம்பிக்க வழிவகுக்கும் வகையில் அன்பளிக்கும் இச்சொத்து, அப்பெண்ணின் வாரிசுரிமையைப் பாதிக்கும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சீதனம் பெற்ற ஒரு பெண்ணுக்கு தன் பெற்றோரின் சொத்தில் வாரிசு உரிமை கிடையாது. ஆனால் அவள் தான் பெற்ற சீதனத்தையும் இறந்த பெற்றோரின் சொத்துக்களுடன் சேர்த்து மற்றச் சகோதரங்களுடன் பகிர்ந்து கொள்ள முன் வந்தால், அவளும் சீதனம் பெறாத ஒரு பிள்ளைபோன்று வாரிசுரிமை பெறலாம். இப்படிச் சீதனத்தையும் சேர்த்து வாரிசு உரிமைபெறும் *(14)* வசதி போதிய சீதனம் பெறாத பெண்ணுக்கு வாரிசுரிமை வழங்கும் நோக்குடனே உள்ளது என்றே கூறலாம்.

சீதனம் ஒரு சமூகக்கேடு என்பது இன்றைய சமுதாயத்தின் கருத்து. "சீதனம் பெற்றுத்தான் திருமணம் செய்" எனத்தேசவழமை கட்டாயப் படுத்தவில்லை. சீதனம் பெறப்பட்டால், கொடுக்கப்பட்டால், அப்படியான சீதனச் சொத்து என்ன நெறிமுறைகளுக்கு அமைய இருக்கும் என்பதனையே தேசவழமை வரையறுக்கின்றது. சீதனத்திற்கு எதிரானவர்கள் தேசவழமையைக் கண்டிக்கத் தேவையில்லை. சமுதாயம் சீதனமுறையை ஒழித்துவிட்டால் தேசவழமைச் சட்டத்திலுள்ள சீதனம் பற்றிய வழக்காறுகள் சட்டவலுவற்றுப் போய்விடும். முதுசொம், உரிமைச் சொத்துக்களுக்கு வாரிசுரிமை பற்றி நான் மேலே எடுத்துக்கூறிய நிறை சீதனச் சொத்துக்கும் பொருந்தும்.

தேடிய தேட்டம்

திருமண வாழ்வின் போது பெறுமதியான பிரதிபலனுக்கு *(15)* கணவனால் அல்லது மனைவியினால் தேடப்பட்ட சொத்துக்களும் திருமண வாழ்வில் உழைத்த இலாபங்களும் நன்மைகளும் தேடிய தேட்டமாகும். ஆனால் அச்சொத்து எந்தவொரு தம்பதியின் தனிப்பட்ட சொத்துரிமையை இழந்து பிரதியாகப் பெறப்பட்டதாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அது தேடிய தேட்டமாகாது; அந்தத் தம்பதியின் தனிப்பட்ட சொத்தாகும். எந்தத் தம்பதி உழைத்துத் தேடிய தேட்டமானாலும் அச்சமயம் திருமணத்தினால் இணைக்கப்பட்டுள்ள மற்றத் தம்பதிக்கும் அச் சொத்தில் சரிசமபங்கு கிடைக்கும்.

தேசவழமையின் தேடிய தேட்டச் சட்டக் கோட்பாடு காலத்திற்குக் காலம் மாறி வந்திருக்கின்றது. ஆரம்பகாலத்தில் தேசவழமைச் சட்டத்தின் கீழ் தேடிய தேட்டம், மணவாழ்வில் கணவன் அல்லது மனைவியின் தனிப் பெயரில் உழைத்த அல்லது தேடிய சொத்தானாலும் கூட, அ∴து இருவரினதும் பொதுச் சொத்தாக, இருவருக்கும் சரிசம பங்குள்ள சொத்தாக, ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1911ம் ஆண்டில் இயற்றப்பட்ட திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டம் இந்நிலையை மாற்றியது. அந்த மாற்றம் தேசவழமைக்கு ஒவ்வாதது எனச் சுட்டிக்காட்டப்பட்டதன் பேரில் 1947ம் ஆண்டில் அந்தச் சட்டம் திருத்தப்பட்டது.

இந்த மாற்றங்களின் காரணமாக, தேடிய தேட்டச் சொத்தில் தம்பதியினருக்கு உள்ள உரிமைபற்றி நீதிமன்றங்களில் பலமுறை சர்ச்சைகள் எழுந்தன. 1986 கொழும்பு மேன்முறையீட்டுச் சட்டறிக்கை 1ம் தொகுதியில் 458ம் பக்கத்தில் அறிக்கை செய்யப்பட்டுள்ள மாணிக்கவாசகர் - எதிர் - கந்தசாமி வழக்கில் அன்றைய பிரதம நீதியரசர் சர்வானந்தா இப்பிரச்சினையை அலசி ஆராய்ந்து வழங்கிய தீர்ப்பில் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

(1) தேசவழமைச் சட்டத்தின் கீழ் தேடிய தேட்டச் சொத்துக்கு இரு தம்பதியினரும் கூட்டு உரிமையாளர்கள். அவர்களில் ஒருவர் அச்சொத்தின் அரைவாசிக்கு மேலான பங்கெதுவையும் நன்கொடை கொடுக்க முடியாது.

(2) திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டத்தின் 20ம் பிரிவு, தேடிய தேட்டக் கோட்பாட்டை அகற்றவோ புதிய சட்டத்தை இயற்றவோ இல்லை. ஆனால் வழக்கில் இருந்த வழமை நெறியை மட்டுமே பிரகடனப்படுத்தியது. எனவே அப்பிரிவுக்கு செய்யப்பட்ட எந்த விதமான மாற்றமும் அந்த வழமை நெறியை மாற்றியதாகக் கருத முடியாது.

(3) ஒரு தம்பதியினால் தேடப்பட்ட அல்லது பெறப்பட்ட தேடிய தேட்டச் சொத்தின் அரைவாசிப் பங்குக்கு அவ்வாறு தேடப்பட்ட அல்லது பெறப்பட்ட கணமே, மற்றத் தம்பதி உரிமையாளர் ஆகிவிடுவதுடன், தேடிய தேட்டத்தைத் தேடிய தம்பதி மரண சாசனம் அல்லது வேறுவகையில் மிகுதி அரைவாசிப் பங்கையும் விட்டுச் செல்லாது மரணமானால், அந்த மிகுதி அரைவாசியின் அரைப் பங்குக்கும் வாரிசுரிமையும் பெறுகிறார்.

(4) மணவாழ்வில் பெறுபவை அல்லது தேடப்பட்டவை எல்லாம் தேடிய தேட்டம் என ஆரம்ப காலத்தில் தேசவழமையின் கீழ் இருந்த சட்ட ஊகத்தை *(16)* த் திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச்சட்டம் அகற்றிவிட்டது. எனவே இன்று எவரும் ஒரு சொத்தினைத்தேடிய தேட்டம் எனக் கோரினால் அப்படிக் கோருபவர் அதனை நிரூபிக்க வேண்டும்.

(5) ஒருவரின் மரணத்தின் மீது ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கிடைக்கும் பணம் தேடிய தேட்டம் அல்ல.

பிரதம நீதியரசரின் தீர்ப்பிலிருந்த மூன்று விடயங்கள் இங்கு கவனத்திற்கு எழுகின்றன.

(அ) ஆரம்ப காலத்திலிருந்து தேசவழமைச் சட்டப்படி தேடிய தேட்டம் தேடியதுமே இரு தம்பதியினருக்கும் சமபங்கான உரிமையாகின்றது. இந்தக் கோட்பாட்டினை, பின்வந்த இயற்றப்பட்ட சட்டங்கள் மாற்றவில்லை. தனக்கென்ற தனிப்பாணியில் தர்க்க ரீதியாகப் பிரதம நீதியரசர் சர்வானந்தா, இக்கூற்றினைச் செவ்வனே எடுத்து விளக்கியிருக்கிறார். அதே சமயம், திருமண உரிமைகளும், வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டத்தின் 20ம் பிரிவின் காரணமாக, தேடிய தேட்டத்தின் அரைவாசிப் பங்கினை வாழ்நாளில் உரியதாகப் பெறும் தம்பதியினரில் ஒருவர் மரணசாசனம் அல்லது வேறுவழியில் அப்பங்கினை விட்டுச் செல்லாது மரணமானால், அந்த அரைப் பங்கில் அரைவாசி வாழ்ந்து கொண்டிருக்கும் தம்பதிக்குச் சென்றடையும் என்ற முடிவுக்குப் பிரதம நீதியரசர் வந்திருக்கிறார். அவரின் சட்டவியாக்கியானம் சரியானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தச் சட்டவிதி நியாயமானதா? என்ற வினா எழுகின்றது. இவ்விதி திருத்தப்பட்டு ஆரம்ப காலத் தேசவழமையின்படி தேடிய தேட்டத்தின் அரைவாசிப் பங்கு ஒரு தம்பதிக்கும் மற்றது மற்றத் தம்பதிக்கும் செல்ல வேண்டும். வாரிசுரிமை வழங்கப்படத் தேவையில்லை. 1930ம் ஆண்டில் தேசவழமை ஆணைக்குழு செய்த அறிக்கையில், "தேடிய தேட்டம் இரு தம்பதியினராலும் பொதுச் சொத்தாக உரிமை பாராட்டப்பட்டு அவர்களில் ஒருவர் மரணமான பின் இறந்தவரின் அரைவாசிப்பங்கு அவரின் வாரிசுரிமையாளருக்குச் சென்றடைய வேண்டும் என்பதே தேசவழமை விதி" எனவும் அப்படியான பொதுச் சொத்துக் கோட்பாடு மாற்றப்பட்டு தேடிய தேட்டத்தினைத் தேடியவரின் தனிப்பட்ட சொத்தாகவே அ∴து அவரின் வாழ்நாள் முழுவதும் இருந்து அவரின் மரணத்தின் மீது அதன் அரைப் பங்கு வாழ்கின்ற தம்பதிக்கும் மிகுதி வாரிசுரிமையாளருக்கும் சென்றடைய வேண்டும் எனவும், அதன்படி சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு விதந்துரைத்தது. இந்த சிபாரிசினைச் செய்யும் போது ஆணைக்குழு கூறியிருப்பதாவது "இங்கிலாந்துச் சட்டமும் எங்கள் சட்டமும் மணமான பெண்களின் சொத்து உரிமைகளைப் பெருப்பிக்கும் வழியில் சென்று கொண்டிருப்பதனை இந்த சிபார்சு அங்கீகரிக்கின்றது. கணவனும் மனைவியும் கூட்டாகச் சேர்ந்து செய்த முயற்சிகளின் பயனாகவே வழக்கமாக தேடிய தேட்டம் எழுகின்றது, என்ற நல்லதொரு காரணத்தின் பேரிலேயே இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த உரிமையையும் இந்த மாற்றம் பேணும்". திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டத்திற்கு மாற்றங்கள் செய்யப்பட்டபோது அம்மாற்றங்களின் விளைவு, தேடிய தேட்டத்தினைத் தேடும் தம்பதியின் சொத்தாகவே அ∴து அவரின் மரணம் வரை இருக்கும் எனவும் அவரின் மரணத்தின் மீது அரைவாசி வாழ்கின்ற தம்பதிக்குப் போய்ச்சேரும் என்ற அடிப்படையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆனால் பிரதம நீதியரசர் சர்வானந்தா சமீபத்தில் மேற்குறிப்பிட்ட மாணிக்கவாசகர் - எதிர் - கந்தசாமி வழக்கில் இதனைச் சுட்டிக் காட்டும் வரை தேடிய தேட்டம் இன்றும் தம்பதியினரின் பொதுச் சொத்தாகவே கணிக்கப்பட வேண்டும் என்பதே சட்டநிலை என்பதனை ஒருவரும் உணரவில்லை. அப்படியான நிலை தொடரும்போது முதலில் இறக்கும் தம்பதியினரின் வாரிசுரிமைக்காரருக்கு கால்வாசி மட்டும் போய்ச்சேரும். வாழ்நாளில் அரைவாசிக்கு உரிமை பெறும் வாழ்கின்ற தம்பதி மற்றத் தம்பதியின் மரணத்தின் மீது அன்னாரின் அரைவாசியில் அரைப் பாகத்தையும் பெறுகிறார். இது நியாயமானதல்ல - தேசவழமையின் கொள்கைக்கு ஒவ்வாததும் ஆகும். மேலும் தேடிய தேட்டம் ஒரு மகத்தான - தனித்துவம் மிக்க - சட்டக் கோட்பாடு என்பதனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எங்கள் நாகரிகம் இன்று மேலைத்தேய நாகரிகத்தின் தாக்கத்திற்குள்ளானாலும் எங்களின் வாழ்க்கைமுறை - சட்ட விதிகளை வழமை நெறிகள் எங்கள் நாகரிகத்தைக் கட்டிக் காப்பவையாக - பேணுபவையாக அமைய வேண்டும். தாலி கட்டியதுமே கணவனும் மனைவியும் உருவத்தால் இருவரானாலும் உள்ளத்தால் ஒருவரே என்ற பண்பைப் பேணும் வகையில் மணவாழ்வில் தம்பதியினர் தேடுகின்ற செல்வம் பொதுச் சொத்தாகவே இருக்க வேண்டும். ஒரு தம்பதியே அதனைத் தேடினாலும் மற்றத் தம்பதிக்கும் சரிசம பங்கு உடன் கிடைக்க வேண்டும். அத்தம்பதியின் மரணத்தின் பின் அந்த அரைவாசி அவரின் வாரிசுரிமையாளருக்குச் சென்றடையலாம். வாழ்கின்ற தம்பதி மிகுதி அரைவாசிக்கும் தொடர்ந்து உரிமையாளராக இருக்கலாம். அந்த முறையிலே சட்டம் திருத்தப்பட வேண்டும்,

இன்று தேசவழமையில் இருக்கும் குறை ஒன்று அவ்வண்ணம் போக்கப்பட வேண்டும்.

(ஆ) தம்பதியினர் இருவரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து தேடுகின்ற செல்வமும் தேடிய தேட்டம் சார்பாகவே எந்தச் சட்ட ஊகமும் இருக்க வேண்டும். மணவாழ்வில் தேடிய செல்வம் எதுவும் தேடிய தேட்டமல்ல, தனிப்பட்ட சொத்தே என யாரும் கோரினால் அப்படிக் கோருபவர் அதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்புக்காளாவார். அது நிரூபிக்கப்படாவிட்டால் அப்படியான சொத்து தேடிய தேட்டமாகவே கருதப்பட வேண்டும். இதற்கமைய சட்டம் திருத்தப்பட்டு, தேடிய தேட்டத்தின் மகிமை பேணப்பட வேண்டும்.

(இ) அடுத்ததாக, ஆயுள் காப்புறுதியில் இருந்து வரும் பணம் தேடிய தேட்டமாகப் பிரகடனப்படுத்தப் பட வேண்டும். காப்புறுதியிலிருந்து பணம் மரணத்தின் பின் கிடைத்தாலும் கூட அதற்கான கட்டணங்கள் மணவாழ்வின் போது தேடிய தேட்டப் பொருளிலிருந்து செலுத்தப்பட்டிருக்கலாம். எனவே நியாயமான நீதியான முறையிலே இந்த அம்சமும் திருத்தப்பட வேண்டும்.

கொள்வனவு முன்னுரிமை

தேசவழமையின் மகிமைகளை மறைத்து இருக்கும் சில குறைகளைப் பெருப்பிக்க முயலும் சிலர், தேசவழமையின் கொள்வனவு முன்னுரிமை அம்சத்தினையிட்டுத் தவறான பிரசாரம் செய்வதை நாங்கள் கேட்டிருக்கின்றோம். "ஓரக் கண்ணனைப் பழிக்கின்றான் ஒற்றைக் கண்ணன்" என்ற பழமொழிதான் எனக்கு ஈண்டு ஞாபகத்திற்கு வருகின்றது. கொள்வனவு முன்னுரிமை சொரியலாய் ஒருவருக்கு மேற்பட்டவரால் உரிமை பாராட்டக்கூடிய காணிகளுக்கே உண்டு.

கொள்வனவு முன்னுரிமையை இடசார்பான சட்டமாகக் கொள்ளலாம். ஏனெனில் வடமாகாணத்திலுள்ள காணிகளையே இச்சட்டம் ஆளுகின்றது.

தேசவழமைக் கொள்வனவு முன்னுரிமை பற்றிய இன்றைய சட்டவிதிகளை தேசவழமை கொள்வனவு முன்னுரிமைக் கட்டளைச் சட்டத்தில் காணலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பங்குதாரர்களுக்கு சொரியலாய் ஒரு காணி உரியதென்றால் அக்காணியை மூன்றாம் பேரின் கைக்கு மாறாமல் வழிவகுக்கும் நோக்குடன் எழுந்ததே இந்தக் கொள்வனவு முன்னுரிமைக் கோட்பாடு. அப்படியான ஒரு சொரியல் காணியின் எந்தப் பங்கையும் கொள்வனவு செய்வதில், மற்றவர்களை விட, ஏனைய பங்குதாரர்களுக்கும் தன்பங்கை விற்க விரும்பும் பங்குதாரரின் வாரிசுரிமைக்காரருக்கும், முன்னுரிமை உண்டு. பழைய தேசவழமைப்படி அயற்காணி உரிமையாளருக்கும் ஒற்றிஈடு எடுத்தவர்களுக்கும்கூட இந்த உரிமை இருந்தது. ஒற்றி உரிமையாளருக்கும் இருந்த உரிமை தேசவழமைக் கோவையினை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது ஏற்பட்ட தவறினால் அகற்றப்பட்டது. அயற்காணி உரிமையாளருக்கு இருந்த உரிமையினை இயற்றப்பட்ட சட்டம் நீக்கியது. எனைய பங்குதாரரும் விற்கவிரும்பும் பங்குதாரரின் (மூன்று தலைமுறைகளுக்குட்பட்ட) வாரிசுரிமையாளரும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் விதிகளுக்கமைய தங்களின் கொள்வனவு உரிமையைப் பிரயோகிக்கலாம்.

"அன்பற்ற மாமியாருக்குக் கால் பட்டாலும் குற்றம், கைபட்டாலும் குற்றம்" என்பது பிறிதொரு பழமொழி. அந்தப் பாங்கிலே தேசவழமைக் கொள்வனவு உரிமையைச் சாடுவது இன்று சகஜமான செயலாயிற்று. சொரியலாய் பங்குதாரர்களுக்கு உரிய ஒரு காணியின் ஒரு சொரியல் பங்கை ஒரு பங்குதாரர் ஓர் அன்னியருக்கு விற்றால் அதனால் மேலும் பிரச்சினைகளும் சர்ச்சைகளுமே எழும். எனவேதான் சொரியல் காணியில் அன்னியரும் பங்குதாரராய் வராது கட்டுப்படுத்தும் இம்முன்னுரிமை நல்லதோர் அம்சம் என்பது என் கருத்து. சொரியலான காணியைப் பிரிவிடுதல் செய்யலாம். பிரிக்கப்பட்டதும் அக்காணிக்கு கொள்வனவு முன்னுரிமைச் சட்டம் செல்லுபடியாகாது. இந்த நிலையில் கொள்வனவு முன்னுரிமைச் சட்டத்தினைத் திருத்த வேண்டிய அவசியமில்லை.

நிறைவு

அன்றைய சமுதாய சூழ்நிலையில் பிறந்து காலமாற்றங்களுக்கு ஈடு கொடுத்து இன்றும் வடபகுதி தமிழ் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் தேசவழமைச் சட்டத்தின் மகிமை மேலும் மேலும் சிறக்கும் வகையில் குறைகளைக் களைந்து நிறைகளை மெச்சி அதன் புகழ் பரவ ஆண்டவனை வேண்டி இக்கட்டுரையினை நிறைவு செய்கிறேன்.

கட்டுரையில் பாவிக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களும் சில தமிழ் சொற்களின் ஆங்கிலக் கருத்துகளும் -

(1) Simons
(2) Claasz Isaacsz
(3) Jan Pirus
(4) Sir Alexander Johnstone
(5) Matrimonial rights and Inherifance (Jaffna) ordinance
(6) Statutes
(7) Thesawalamai Pre-emption ordinance
(8) Tesawalamai Regulation
(9) Obsolete
(10) Binding
(11) Personal
(12) Local
(13) Married Women's Property Ordinance
(14) Collation
(15) Valuable Consideration
(16) Presumption

Mankind – Past, Present and Future

The human species, **Homo sapiens** (Man who thinks) has existed on earth for about 500 million years. The most important feature that makes him different and superior to all other forms of life is his ability to think, especially his capacity for abstract thought and creativity. To explain, no animal can build a motor car, paint a picture or write poetry or short stories. In fact man is the only animal that has developed the power of speech.

However, though these capabilities were there in his brain from the beginning, it was only during the last 100,000 years that they began to be expressed in human life and action. The first concrete evidence of man's creative powers are seen in cave paintings seen in parts of Europe and in India (Ajantha paintings). These paintings are estimated to be about 30,000 years old.

Much of human success has depended on man's ability to communicate with fellow human beings and develop social life. Communication was first by signs and then by speech. When did man begin to speak? No one really knows. The more permanent form of transferring information was by writing. The most ancient writings are the hieroglyphics seen in the pyramids of Egypt, dated at about 5000 years.

Through most of human history, man was a hunter/ gatherer, like the monkeys and apes of today. He took little from his environment, left behind little waste and made no changes in his environment. He wandered from place to place and did not have permanent places of residence. About 10,000 years ago he learnt the basic principles of agriculture and also took up life as a herdsman. He began to grow his own food and established little settlements around his crops.

I do not wish to trace, further, the development of human society. What we need to understand is that anything once discovered, understood or developed is transferred from generation to generation, through speech and written word, and becomes an integral part of human heritage. Knowledge and understanding is built on already existing data bases. Therefore, the growth of man's understanding of nature and natural phenomena has been geometric and explosive. Technology, the application of knowledge and understanding, has undergone parallel and explosive development.



PROF. K. D. ARULPRAGASAM
Vice Chairman,
National Education Commission
Member, University Grants Commission.

Special Souvenir
to commemorate
150 years of

1852 2002

American Mission College
Uduppiddy

At the beginning of the twentieth century, the state of Science and Technology was rather elementary. The structure of the atom was unknown. We did not understand the nature of light. Einstein had yet to propose the Theories of Relativity. Was the Universe a Steady State system or had there been a Big Bang which produced an Expanding Universe? In the realm of Biology, the Theory of Evolution was still under debate. The Principles of Inheritance, though explained decades earlier, had yet to be rediscovered. Was life created by God or did it originate on its own?

As the twentieth Century progressed, landmark ideas emerged and Technology advanced. The motor car, the airplane, propeller driven followed by the jet planes. The principle of the rocket put forward in the twenties was applied in the late fifties to rockets which fired man into the Space Age. Meanwhile, the understanding of the basic structure of the atom and of the immense quantity of energy bound within the atom led to the development of the atom bomb and later the hydrogen bomb. We use nuclear energy for power generation, as well.

Along another line, understanding of Heredity grew. Acceptable theories of the Origin of Life were proposed and the process of Organic Evolution came to be the cornerstone of Biology. The discovery of the structure of DNA and its recognition as the molecule that carries the blueprint of life was an immense leap forward. In the half century since then Molecular Biology and Genetic Engineering have become frontier areas of Science and Technology. Test tube babies and Foster Mothers have become commonplace. Genetic Engineering is used routinely to introduce genes from one organism to another. Human insulin is now produced by an industrial process that uses the common bacterium ***Escherichia coli***, which carries the human insulin gene. The **Human Genome Project** has sequenced the entire 3 billion base pairs that make up the human genome. Work is in progress to identify the 50 odd thousand human genes.

Few understand the overriding influence of the computer chip and the Computer age that developed thereafter on all branches of Science and Technology. The advance of Technology parallels and supports the further advance of Science. Without computers the immense quantity of data to be stored, retrieved, analysed and converted to understanding would not have been possible. Computers also control operations from things of little significance and complexity to the operation of the Hubble Space Telescope and spacecraft on interplanetary missions. Of course, everyone now knows of the Information Highway created by the combination of computers and telecommunication Technology. Who is there who has not heard of the Internet and e-mail?

The stage is now set for the explosive growth of Science and Technology in the 21st Century. At one end of the spectrum we are looking at the Microcosm, the world inside the Atom and the world of Molecular Biology. At the other end of the spectrum we are looking at the Macrocosm, the entire Universe itself through the Hubble Telescope and a wide array of other sophisticated instruments in space.

It is now possible to clone many animals, by-passing normal reproductive processes. Cloning of human beings is already within our reach. It is possible to grow human embryos outside a womb and to produce specific organs to order, hands and ears and hearts and lungs. Superconductivity for use under practical conditions is a decade or two ahead of us. As we run out of fossil fuels, the search for other sources of energy will intensify. Can the Hydrogen Fusion reaction be carried out under controlled conditions? Hydrogen forms over 99% of the Universe. If energy from that source, including fuel cells, can be harnessed mankind would have solved his energy problems for ever.

The developments in Science and Technology during the last century have taken place at terrible cost to man, nature and the environment. Natural populations do not increase beyond the capacity of the resources needed to support them. The human growth curve has been exponential. Population reached the 6 billion mark towards the end of the 20th Century. This number is far beyond the carrying capacity of the Earth System. Major global problems have emerged because man makes large and far reaching changes in his environment to suit his own life style.

Today our survival is threatened by Global Warming, Sea Level Rise, Ozone Depletion, Deforestation, the Water Crisis and Desertification, Garbage, Toxic and Nuclear Wastes. Ahead of the rising generations of the new millennium lies a world of great promise and opportunity. Also, there lie immense challenges, such as those referred to above which have to be met and overcome. These are the legacies that we of the twentieth Century leave behind. Can mankind survive and prosper?

The Eight Flowers of Offering

Eightfold are the flowers pleasing the Lord, Non-violence first, Control over the Senses next, Compassion on all Creatures, the especial is Forbearance, Peace, Next Mediation, again Penance, and Truth above all, Eight-fold are the flowers pleasing the Lord.

1. **Ahimsa:**

   The first flower of Ahimsha (non-violence). Non-violence means not causing harm to any living creature by thought, word and deed.

2. **Sense Control:**

   The second is the flower of Indriyanigraha (sense control). All spiritual practices will prove futile if one lacks sense control. Control of the senses is very essential for one and all. Lack of sense control is the main cause for all the unrest and agitation that you find in the world today. How can one control senses? First of all, one should exercise control over the tongue.

   "Oh tongue, ever sensitive to sweetness, I tell you truly that which is sweet and yet yields perfect health.....all these are enclosed in the sweet words Govinda, Damodara and Madhava."

   You must hold your tongue on a leash as it always craves for a variety of delicacies." Oh tongue, how many of bags rice, wheat and vegetables have you devoured; How many delicacies have you consumed; Fie on you if you are still not satisfied". Bhikshannam Deha Raakshaartham (a morsel of food is enough). You should eat for the sake of satisfying the hunger and sustaining the body. So, do not give undue importance to taste. Likewise, tell your eyes to see God instead of watching unscarred things on the Television or Video. Teach your ears to listen to the stories of the Lord instead of listening to vain gossip.

   "Oh ears, you are interested in listening to vain gossip and tales about others, but you pay least attention when the wonderful stories of the Lord are narrated."

   (Telugu Song)

   Think for a while, how you are benefited by listening to unscarred things. In fact, you are polluting your heart in the progress. All that you see and hear



V. KAMALANATHAN B. Sc.
Member, Executive Committe
P.P.A. (Colombo Branch)

Special Souvenir
to commemorate
150 years of

1852 2002

American Mission College
Uduppiddy

get imprinted on your heart. Once your heart is polluted, your life will become meaningless. The other day, while speaking to the devotees from Visakapatnam, I made a mention of this Human heart like a pen. The colour of the letters that you write will be same as the colour of the ink in the pen. Likewise, when you fill the heart with love, all that you think, say and do will be suffused with love. God expects you to fill your hearts with love and lead a sacred life.

3. **Daya (Compassion):**

The third is the flower of Daya(compassion) towards all living creatures. The Bhagavadgita says, Adveshta Sarva Bhutaanaam(do not hate anybody). Live in amity with everyone.

4. **Kshama (Forbearence):**

The fourth is the flower of Kshama(forbearance). This is very important. The Pandavas suffered a lot at the hands of Kauravas. But never did Dharmaja lose his sense of forbearance, even when Draupadi was being humiliated by the Kauravas. It was such sense of forbearance that protected the Pandavas and made them an ideal to the rest of the word. This flower of forbearance is very dear to the Lord. God will be pleased with you and confer boons on you only when you offer Him the 'flowers', which are dear to Him. No benefit accrues from offering some flowers, which will fade away.

5. **Santhi (Peace):**

The fifth is the flower of Santhi(peace). One should remain peaceful through all the vicissitudes of life. Only then can one attain Divine grace. Great devotees like Thyagaraja, Tukaram and Draupadi underwent many hardships. They bore all sufferings with patience. Thyagaraja said, "One cannot attain happiness without inner peace." Man needs peace at the physical, mental and spiritual levels. Peace is not present in the external world. It is present within. You are the embodiment of peace. In the worldly life, there are bound to be many hardships, but one should not be perturbed. One should bear all sufferings with fortitude and patience. Human life is given not merely to enjoy the worldly pleasures like birds and beasts. Life becomes meaningful only when one experiences the peace that originates from the heart.

6. **Thapas (Penance):**

The sixth is the flower of Thapas(penance). Penance does not mean living in the forest on fruits and tubers, meditating on God. In fact, such a life can be called a life of Thamas(Dullness), not Thapas. True penance lies in controlling one's emotions in thought, word and deed arising out of Sathwic, Rajasic and Thamasic qualities. One should contemplate on God all the time and achieve harmony of thought, word and deed. Manasyekam Vachasyekam Mahatmanam (he is a noble one whose thoughts, words and deeds are in complete harmony). Do not be carried away by pain or pleasure. The Bhagavadgita teaches, Sukha, Dukhe, Samedruthwa Labhalabhau Jayajayau (one should be even-minded in happiness or sorrow, gain or loss, victory or defeat). One should discharge one's duty and serve the society without any expectation of reward. Such even mindless and desire less state is true penance.

7. **Dhyana (Meditation):**


